# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஏப்ரல் 2026

www.tnpscthervupettagam.com



SHANKAR IAS ACADEMY™
Best Academy for Civil Services Exam Coaching
SINCE 2004

107/255, AL - Block, 4th Avenue,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள் ............ 9**
**தமிழ்நாடு செய்திகள் ............ 23**
தமிழ்-பிராமி கல்வெட்டு கண்டுபிடிப்பு ............ 23
தமிழ்நாடு பருவநிலை அமைப்பு - Champions of Change ............ 23
தமிழ்நாட்டில் PE-VC முதலீடுகள் சரிவு ............ 23
தமிழ்நாடு டிஜிபி பதவிக்காலம் ............ 24
சாத்தான்குளம் காவலில் நிகழ்ந்த மரண வழக்குத் தீர்ப்பு ............ 24
இரட்டை ரோபோடிக் அறுவை சிகிச்சை ............ 24
சாத்தான்குளம் வழக்கில் ஸ்ரீஹரன் வெற்றிடம் ............ 25
தமிழ்நாடு கந்துவட்டி புகார் வலைத்தளம் ............ 25
தேர்தலில் தமிழ்நாட்டின் முதலமைச்சர்கள் ............ 26
சிவாஜி மற்றும் அப்சல் கான் குறித்த கல்வெட்டுகள் ............ 26
தமிழ்நாடு அரசியல் மாற்றம் 1967 ............ 27
தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 ............ 27
தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு நிலவரம் ............ 28
பனையூர் தொல்லுயிர் எச்சங்கள் - ஹோலோசீன் காலம் ............ 28
தமிழ்நாட்டின் வலுவான பொருளாதார வளர்ச்சி ............ 29
நீதித்துறை அதிகாரிகளின் ஓய்வு வயது ............ 29
வரலாற்றுக்கு முந்தைய கால பாறை ஓவியம் - நீலகிரி ............ 30
**தேசியச் செய்திகள் ............ 30**
புதிய தொலைக்காட்சி மதிப்பீட்டுக் கொள்கை 2026 ............ 30
இந்திய எரிசக்தி புள்ளிவிவரங்கள் 2026 ............ 31
சாம்ராட் சம்ப்ரதி அருங்காட்சியகம் மற்றும் குறைக்கடத்தி ஆலை ............ 31
சிந்தாடா ஆனந்த் Vs ஆந்திரப் பிரதேச அரசு ............ 32
மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 – முதல் டிஜிட்டல் கணக்கெடுப்பு ............ 32
IRCC சான்றிதழ்கள் - இந்தியா ............ 32
ஜன் விஸ்வாஸ் மசோதா 2026 ............ 33
RUPPகளுக்கான பொதுவான தேர்தல் சின்னங்கள் ............ 33
தேசிய PNG இயக்கம் 2.0 ............ 34
E20 எரிபொருள் அறிமுகம் ............ 34
சாதனா சப்தா 2026 – தேசிய திறன் மேம்பாட்டு முன்னெடுப்பு ............ 35
FCRA திருத்த மசோதா 2026 ............ 35
இந்தியப் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி 2025–26 ............ 35
நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து - NCERT ............ 36
திவால்நிலை மற்றும் நொடித்தல் சட்டத் திருத்த மசோதா 2026 ............ 36
இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன் ............ 36

உள்நாட்டு எரிவாயு எதிர்கால விலையின் மீதான வர்த்தகம்....37
INS சுனைனா – IOS சாகர் கடல்சார் திட்டம்....37
இடதுசாரி தீவிரவாதம் – 2026 புள்ளிவிவரங்கள்....37
ஜியோ பார்சி திட்டம்....38
சேத்தக் திட்டம்....38
துறைமுகங்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க சரக்கு கையாளுதல்....39
ASISSE கணக்கெடுப்பு....39
தலைமைத் தேர்தல் ஆணையர் நீக்க தீர்மானம்....39
கனிமச் சலுகை விதிகள் திருத்தம்....40
சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் திட்டம் 2026....40
போஷன் பக்வாடா 2026....41
ஆரோக்ய வன் முன்னெடுப்பு....41
NSTFDC வெள்ளி விழா....41
மாநிலங்களவை நியமன உறுப்பினர் - ஹரிவன்ஷ்....42
மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPF) பொது நிர்வாகச் சட்டம் 2026....42
ECOSOC தேர்தல் 2026 - இந்தியா....42
சூரியசக்தி உற்பத்தியில் சாதனை வளர்ச்சி....43
திறன் விளைவுகள் நிதித் திட்டம்....43
அலுமினியம் பாரத் முன்னெடுப்பு....44
CPA மண்டலம் VII மாநாடு 2026....44
முந்த்ரா துறைமுக ஆட்டோமொபைல் ஏற்றுமதி....44
நீதிபதி யஷ்வந்த் வர்மா ராஜினாமா....45
சிந்தி மொழியில் இந்திய அரசியலமைப்பு....45
வாக்குரிமை குறித்து உச்ச நீதிமன்றம் 2026....46
இந்தியாவில் காப்புரிமை விண்ணப்பங்கள் 2025–26....46
இந்தியப் பெருங்கடல் மாநாடு 2026....46
சரத்து 142ன் கீழான உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள்....47
ஸ்டார்ட்அப் இந்தியா நிதியங்களுக்கான நிதி 2.0....47
e-SafeHER முன்னெடுப்பு....47
மக்களவை விரிவாக்க முன்மொழிவு....48
131-வது அரசியலமைப்பு திருத்த மசோதா, 2026....48
தொகுதி மறுவரையறை மசோதா, 2026....49
அரசியலமைப்பு (131வது திருத்த) மசோதா, 2026....49
மாநிலங்களவை துணைத் தலைவர்கள் குழு....51
131-வது அரசியலமைப்பு திருத்த மசோதா, 2026 – தோல்வி....51
கே.ஜி. பாலகிருஷ்ணன் ஆணையம் நீட்டிப்பு....52
கோகோ தன்னிறைவு இலக்கு 2040....52
மகளிர் இட ஒதுக்கீடுச் சட்டம் 2023....53
தொகுதி மறுசீரமைப்பு மசோதா, 2026 – முக்கிய அம்சங்கள்....53
தொகுதி மறுசீரமைப்பற்ற மகளிர் இட ஒதுக்கீடு மசோதா....54
வரதட்சணைச் சட்டப் பாதுகாப்பு குறித்து உச்ச நீதிமன்ற கருத்து....54

சமுத்ர சாஹாஸ் பயணம் ....................55
இந்தியாவின் ஊக்க மருந்து தடுப்பு நடவடிக்கைகள்....................55
பாரத் கடல்சார் காப்பீட்டுத் தொகுப்பு....................55
RELIEF திட்ட விரிவாக்கம் 2026 ....................56
PMGSY-III திட்டம் நீட்டிப்பு....................56
விஸ்வ சூத்ரா முன்னெடுப்பு ....................57
நதிப் படுகை மேலாண்மைத் திட்ட விரிவாக்கம் ....................57
NSS சுகாதார கணக்கெடுப்பு 2025....................57
சட்ட விரோதமாக புலம்பெயர்ந்தோர்களுக்கான புதிய நாடுகடத்தல் கொள்கை....................58
இந்தியாவின் உணவு தானிய இருப்பு மற்றும் உற்பத்தி....................58
இந்தியாவின் கடல் உணவுகள் ஏற்றுமதி....................59
மாவட்ட அளவிலான இரத்த தான மையம்....................59
அடல் ஓய்வூதியத் திட்ட பதிவு வளர்ச்சி ....................59
இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி அதிகரிப்பு ....................60
இணையவழி விளையாட்டுகளுக்கான விதிகள் 2026....................60
வேளாண் நுண்ணறிவு அமைப்பு....................61
இந்தியா-தென் கொரியா உத்திசார் தொலைநோக்குத் திட்டம் 2026–2030....................61
தேர்தலுக்குப் பிந்தைய வாக்குப்பதிவு ஆய்வு ....................61
ஆம் ஆத்மி கட்சி எம்.பி.க்களின் கட்சித் தாவல் விவகாரம்....................62
ஐ.என்.எஸ் சுதர்சினி ....................62
சரத்து 21ன் கீழ் நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாக பயணம் செய்வதற்கான உரிமை ....................63
பிற்கால கர்ப்பக் கலைப்புக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி....................63
தீவிர சிகிச்சைப் பிரிவு (ICU) குறித்து இந்தியாவின் தரநிலைகள் ....................63
யுனெஸ்கோ பாலின உள்ளடக்க முன்னெடுப்பு....................64
16வது பைரவ் படைப்பிரிவு....................64
இந்தியாவின் ராணுவச் செலவினம் 2025....................65
**சர்வதேசச் செய்திகள் ....................65**
WTO MC14 அமைச்சர்கள் மாநாடு 2026....................65
Atoms4NetZero முன்னெடுப்பு ....................65
குடியுரிமை உரிமைகள் போராட்டம் 2026....................66
அவசரகால தட்டம்மை தடுப்பூசி இயக்கம் – வங்காள தேசம் ....................67
நீர் மாசு கண்காணிப்புப் பட்டியலில் PFAS சேர்ப்பு....................67
PHC உச்சிமாநாடு 2026....................68
உலகளாவியப் பட்டினி அபாய எச்சரிக்கை 2026....................68
வெளியுறவுக் கொள்கையில் மேட்மேன் கோட்பாடு ....................69
அமெரிக்க அரசியலமைப்பின் 25வது திருத்தம் ....................69
ஹங்கேரி தேர்தல் மற்றும் ஆர்பனின் ஆட்சி....................69
எதிர்கால COP-இன் தொலைநோக்கு மாநாடு ....................70
முதல் BRICS சுகாதார செயற்குழு கூட்டம் 2026....................70
பாக்ஸ் சிலிக்கா முன்னெடுப்பு – பிலிப்பைன்ஸ் ....................71
கடன் வாங்குவோர் தளம்....................71

உலகளாவிய கடல்சார் பாதுகாப்பு முன்னெடுப்பு ........ 72
AZEC Plus கூட்டம் ........ 72
RELOS ஒப்பந்தம் ........ 72
எதிர்காலத் தலைமுறையினருக்கான புகையிலைத் தடை - இங்கிலாந்து ........ 73
ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தங்கள் - ஜோர்டான் ........ 73
பொருளாதாரச் செய்திகள் ........ 74
ஆரஞ்சு பொருளாதாரம் ........ 74
RBI - பணப்பரிமாற்றத் தொலைநோக்கு 2028 ........ 74
வருமான வரிச் சட்டம் 2025 ........ 74
இரண்டு அடுக்கு அங்கீகார விதி - RBI ........ 75
காப்பீட்டுத் துறையில் Ind AS ........ 75
முக்கியத்துவம் வாய்ந்த காப்பீட்டு நிறுவனங்கள் ........ 76
வங்கிகளில் CASA விகிதம் சரிவு ........ 76
தெற்காசிய வளர்ச்சியில் இந்தியா முதன்மை ........ 77
இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி வளர்ச்சி ........ 77
இந்தியாவில் சில்லறைப் பணவீக்கம் - மார்ச் 2026 ........ 77
RBI உட்கர்ஷ் 2029 கட்டமைப்பு ........ 78
6வது பெரிய பொருளாதாரம் - இந்தியா ........ 78
6வது மிகப்பெரிய பொருளாதாரம் - இந்தியா ........ 79
மின்னணு வழி பணப்பிடித்தம் தொடர்பான விதிமுறைகள் 2026 ........ 79
வங்கித் துறையில் AI அபாயங்களை மதிப்பிடுவதற்கான குழு ........ 80
DPI@2047 திட்டம் ........ 80
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 81
உயிரி-கருப்புக்கீல் தொழில்நுட்பம் ........ 81
செலஸ்டே செயற்கைக்கோள் திட்டம் ........ 81
ஆர்டெமிஸ் II நிலவுப் பயணம் ........ 81
மித்ரா திட்டம் ........ 82
மதராஸ் முள்ளெலி மரபணு ஆய்வு ........ 82
அசாதாரண சூரிய மண்டலம் கண்டுபிடிப்பு ........ 82
PFBR செயல்பாட்டு நிலை ........ 83
குவாண்டம் தகவல் தொடர்பு சாதனை ........ 83
விண்வெளிப் பயண தூரத்தில் சாதனை - ஆர்ட்டெமிஸ் II ........ 84
ஆர்ட்டெமிஸ் II நிலவுத் திட்டம் ........ 84
பிரபஞ்ச விரிவாக்க அளவீட்டு முரண்பாடு ........ 84
செயலற்ற கருந்துளை மீள்துவக்கம் ........ 85
அமெரிக்காவின் விண்வெளி அணு உலைத் திட்டம் ........ 85
ஜீனோம் இந்தியா திட்டம் ........ 85
நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கி ........ 86
நிலவில் புதிய கனிமம் ........ 86
பின்லாந்தின் அணுக்கழிவு பெட்டகம் ........ 86
காது கேளாமையை சரி செய்யும் முதல் மரபணு சிகிச்சை ........ 87

சீனாவின் தியாங்காங் விண்வெளித் திட்டம் ....87
வேலா மீப்பேரடைத் தொகுப்பு வரைபடமாக்கல் ....88
பூஜ்ஜிய-உமிழ்வு நிலக்கரி எரிபொருள் மின்கலம் ....88
**சுற்றுச்சூழல் செய்திகள் ....89**
குஜராத்தில் கானமயில் ....89
திடக் கழிவு மேலாண்மை விதிகள், 2026 ....89
புல்வெளிக் கழுகுகளுக்கான உலகளாவிய செயல்பாட்டுத் திட்டம் 2026-2035 ....90
CMS COP15 – புதிய இனங்கள் பாதுகாப்பு ....90
பவசாகரா பரிந்துரை மையம் ....90
ஐநா உடன்படிக்கையின் கீழ் பனி ஆந்தைக்கு பாதுகாப்பு ....91
கௌராமி மீன் புதைபடிவங்கள் கண்டுபிடிப்பு ....91
சத்தீஸ்கரில் கலைமான்களின் மீட்சி ....91
தார் பந்துகள் மேலாண்மை விதிகள் 2026 ....92
ஜம்மு-காஷ்மீர் ஏரிகளின் சுற்றுச்சூழல் நெருக்கடி ....92
புதிய கடல்வாழ் நூற்புழு இனங்கள் ....92
ஆழ்கடல் விலங்கினங்களுக்கான தேசிய களஞ்சியம் ....93
வெள்ளை உள்ளான் பறவை இடப்பெயர்வு ....93
அண்டார்டிக் உயிரினங்கள் மீதான பருவநிலை மாற்ற விளைவு ....93
தஞ்சாவூரில் வெண்கழுத்து நாரை ....94
வெண்முதுகு பிணந்தின்னிக் கழுகு பாதுகாப்பு ....94
முதல் வனவிலங்கு குற்ற வழக்கு ....95
இந்திய வௌவால்கள் அறிக்கை - 2024-25 நிலை ....95
பல்லுயிர்த்தன்மை சட்டம் குறித்த NBA வழிகாட்டுதல்கள் ....96
சல்வீன் நதியில் ஆர்சனிக் மாசுபாடு ....96
ரந்தம்பூரில் அரிய வகை பெரும் பூனைகளின் சங்கமம் ....96
டால்பின் நண்பர்கள் முன்னெடுப்பு ....97
பாராசிங்கா வனவிலங்கு சரணாலயம் - சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலம் ....97
நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு 2026 ....98
பிச்சாவரம் சதுப்புநிலச் சூழலமைப்பு - நுண்நெகிழி மாசுபாடு ....98
அடிமட்ட அளவிலான பல்லுயிர் திட்டம் ....99
ஆமைகளின் வலசை ....99
செர்னோபில் பேரழிவு - 40 ஆண்டுகள் ....99
**அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ....100**
உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கை 2026 ....100
இந்தியாவில் சுகாதாரத்தின் மீது பருவநிலை மாற்றத்தின் தாக்கம் ....100
பெண்களின் கடன் சந்தை குறித்த அறிக்கை ....101
இந்தியாவில் நிலம் சார்ந்த சமத்துவமின்மை ....101
உலகளாவிய மேம்பாட்டு நிதியளிப்பு அறிக்கை 2026 ....101
மத்திய கிழக்கு மோதலின் ஆசிய-பசிபிக் மீதான தாக்கங்கள் ....102
அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு குறித்த சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) அறிக்கை ....102
ISSAR அறிக்கை 2025 ....103

உலகளாவிய மின்சார மதிப்பாய்வு 2026 ....103
அதிக மீத்தேன் வெளியிடும் குப்பைக்கிடங்குகள் 2025 ....104
ஐ.நா ESCAP பொருளாதார ஆய்வு 2026 ....104
தீவிர வெப்பம் மற்றும் விவசாய அறிக்கை 2026 ....104
மாநிலச் செய்திகள் ....105
முதியோர் ஆதரவு மசோதா 2026 - தெலுங்கானா ....105
பலிராஜ்கர் அகழ்வாராய்ச்சி ....105
வர்க்கலா – பூஜ்ஜியக் கழிவு முன்னெடுப்பு ....106
அமராவதி - தலைநகர் மசோதா ....106
கிக் தொழிலாளர்கள் மசோதா 2026 - தெலங்கானா ....106
ஆந்திரப் பிரதேசத்தின் நிரந்தரத் தலைநகரம் – அமராவதி ....107
பதவி உயர்வுக்கான பரிசீலனை உரிமை - அடிப்படை உரிமை ....107
நமோ ஆளில்லா விமான தீதி திட்டத்தின் கீழ் பெண் விமானிகள் ....108
பாதுகாப்பான சுத்திகரிக்கப்பட்ட நீர் மறுபயன்பாட்டுக் கொள்கை 2026 ....108
மேகாலயா செயற்கைக்கோள் இணைய வசதி ஏற்பு ....109
எலிஃபண்டா தீவில் 1500 ஆண்டுகள் பழமையான நீர்த்தேக்கம் ....109
அறிவிக்கப்பட வேண்டிய நோய் - புற்றுநோய் ....109
புதுச்சேரி தேர்தல் 2026 - 'நிலா' ....110
சிக்கிமின் முதல் சமூக வானொலி ....110
அமராவதி திட்டத்திற்கு உலக வங்கி நிதி ....110
லாஞ்சியா சௌரா சமூகம் ....111
கர்நாடகாவின் மாதவிடாய் விடுப்புக் கொள்கை ....111
விளையாட்டிற்கான மரபணு திட்டம் ....112
அதிகாரப்பூர்வ மொழிகள் அவசரச் சட்டம்- மேகாலயா ....112
ஒன்றியப் பிரதேசங்களில் மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டம் ....112
நீர் நடுநிலை ரயில்வே பணிமனை ....113
கர்நாடகா ரோஹித் வெமுலா மசோதா 2026 ....113
பஞ்சாப் சமய அவமதிப்புத் தடுப்புச் சட்டம் 2026 ....113
ஒடிசாவில் 3D சில்லு பேக்கேஜிங்/பொதிகட்டுதல் அலகு ....114
தங்கச் சுரங்கத் திட்டம் ....114
சந்தை தலையீட்டுத் திட்டம் - உருளைக்கிழங்கு கொள்முதல் ....114
ஒடிசாவில் கடல்சார் இடஞ்சார்ந்த திட்டம் ....115
எழுச்சிமிகு கிராமங்கள் திட்டம்-II - கதுவா கிராமங்கள் ....115
காளான் உற்பத்தித் திட்டம் 2026 ....116
விர்லி கண்டார் அகழ்வாராய்ச்சி ....116
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....116
முதல் பால் புதுமையரான நாடாளுமன்ற உறுப்பினர் - மேனகா குருசாமி ....116
மொஹ்சினா கித்வாய் மறைவு ....117
பாடகி ஆஷா போஸ்லே மறைவு ....117
மாநிலங்களவை துணைத் தலைவர் – ஹரிவன்ஷ் ....117
சம்ரித் கிராம் முன்னெடுப்பு – WSIS விருது ....117

பிரேக் த்ரூ விருதுகள் 2026 ....118
கோல்ட்மேன் சுற்றுச்சூழல் விருது 2026 ....118
நாதெண்ட்லா பாஸ்கர் ராவ் மறைவு ....119
UNIDO GEM விருது - குண்டூர் ....119
உலகளாவிய அங்கீகாரம் - இந்திய சீஸ்/பாலாடைக்கட்டி ....119
விளையாட்டுச் செய்திகள் ....120
2025-ஆம் ஆண்டின் சிறந்த பாரா வில்வித்தை வீராங்கனை ....120
கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகள் 2026 ....120
ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் 2026 ....120
ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் 2026 ....121
OmegaBall விளையாட்டு அறிமுகம் ....121
லாரியஸ் உலக விளையாட்டுப் போட்டிக்கான விருதுகள் 2026 ....121
ISSF ஜூனியர் உலகக் கோப்பை 2026 ....122
முக்கிய தினங்கள் ....122
சர்வதேச கழிவுகளற்ற  தினம் 2026 – மார்ச் 30 ....122
உத்கல் திவாஸ் 2026 - ஏப்ரல் 01 ....122
இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நிறுவன தினம் 2026 - ஏப்ரல் 01 ....123
சர்வதேச கண்ணிவெடி விழிப்புணர்வு தினம் 2026 - ஏப்ரல் 04 ....123
உலக சுகாதார தினம் 2026 - ஏப்ரல் 07 ....123
1994 ருவாண்டா இனப்படுகொலை குறித்த சர்வதேச நினைவு நாள் 2026 - ஏப்ரல் 07 ....124
கண் பார்வை இழப்பு தடுப்பு வாரம் 2026 - ஏப்ரல் 1-7 ....124
இராணுவ மருத்துவப் படை ஸ்தாபன தினம் 2026  – ஏப்ரல் 03 ....124
CRPF வீர தினம் 2026 - ஏப்ரல் 09 ....125
சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம் 2026 - ஏப்ரல் 12 ....125
தேசிய பாதுகாப்பான தாய்மை தினம் 2026 - ஏப்ரல் 11 ....125
ஜாலியன் வாலாபாக் படுகொலை தினம் 2026 - ஏப்ரல் 13 ....126
சமத்துவ தினம்/ பீம் ஜெயந்தி 2026 - ஏப்ரல் 14 ....126
இமாச்சல தினம் 2026 - ஏப்ரல் 15 ....126
உலக இரத்த உறையாமை பாதிப்பு தினம் 2026 - ஏப்ரல் 17 ....127
சியாச்சின் தினம் 2026 – ஏப்ரல் 13 ....127
உலக இரத்த ஒட்டுண்ணி நோய் தினம் 2026 – ஏப்ரல் 14 ....127
தேசிய தீயணைப்பு சேவை தினம் 2026 – ஏப்ரல் 14 ....127
உலகப் பாரம்பரிய தினம் 2026 – ஏப்ரல் 18 ....128
உலக கல்லீரல் தினம் 2026 - ஏப்ரல் 19 ....128
குடிமைப் பணிகள் தினம் - ஏப்ரல் 21 ....128
உலகப் புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம் 2026 ....129
ஆய்வக விலங்குகளுக்கான உலக தினம் 2026 - ஏப்ரல் 24 ....129
தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் 2026 - ஏப்ரல் 24 ....129
உலக மலேரியா தினம் 2026 - ஏப்ரல் 25 ....130
தொழில்துறையில் பெண்களுக்கான சர்வதேச தினம் 2026 - ஏப்ரல் 21 ....130

**இதரச் செய்திகள் .......... 130**

கிரேக்கத்தில் 200 பழங்காலத் தளங்கள் .......... 130

மகாத்மா ஜோதிராவ் பூலே - 200வது பிறந்தநாள் .......... 131

9,000 ஆண்டுகள் பழமையான நீருக்கடியில் உள்ள தளம் கண்டுபிடிப்பு .......... 131

முதல் பானிபட் போரின் 500 ஆண்டுகள் நிறைவு .......... 131

பனிக்கால 'ஜாம்பி' புழு உயிர்ப்பு .......... 132

# TNPSC துளிகள்

- "Driving Progress, Attaining New Heights" என்ற கருத்துருவுடன் 2026-ஆம் ஆண்டுக்கான வேளாண்-உணவு அமைப்புகளில் பெண்கள் குறித்த உலகளாவிய மாநாடு புது தில்லியில் தொடங்கியது.
- சிலி-அர்ஜென்டினா எல்லையில் 6,893 மீட்டர் உயரத்தில் உள்ள உலகின் மிக உயர்ந்த எரிமலையான நெவாடோ ஓஜோஸ் டெல் சலாடோவின் உச்சியை அடைந்த இரண்டாவது இந்தியப் பெண் என்ற பெருமையை அர்பிதா பத்ரா பெற்றார்.
- பசுமை ரயில் போக்குவரத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக, இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயிலின் முதல்கட்ட சோதனைகள் வெற்றிகரமாக நிறைவடைந்தன.
- வேகமான மற்றும் பாதுகாப்பான சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்த, ஷிங்கன்சென் அமைப்பை அடிப்படையாகக் கொண்ட உலகின் முதல் சரக்கு-மட்டும் ஏற்றிச் செல்லும் புல்லட் ரயிலை ஜப்பான் அறிமுகப்படுத்தியது.
- கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், கொச்சியில் இந்தியக் கடற்படை IMEX (IONS கடல்சார் நடவடிக்கை) TTX 2026 பயிற்சியை நடத்தியது.
- உயிரித் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு சபையின் - ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவின் (BRIC-RAB) தொடக்கக் கூட்டம் ஃபரிதாபாத்தில் உள்ள பிராந்திய உயிரித் தொழில்நுட்ப மையத்தில் நடைபெற்றது.
- ரஷ்யாவின் முக்கிய பால்டிக் எண்ணெய் ஏற்றுமதி மையமான உஸ்ட்-லுகா துறைமுகம், உக்ரைனின் ஆளில்லா விமான தாக்குதலுக்குப் பிறகு மீண்டும் சேதம் அடைந்தது.
    - நாளொன்றுக்கு சுமார் 7,00,000 பீப்பாய் எண்ணெய் ஏற்றுமதியைக் கையாள்கின்ற இந்தத் துறைமுகம் ரஷ்யாவின் மிகப்பெரிய பெட்ரோலிய ஏற்றுமதி முனையங்களில் ஒன்றாகும்.
- பியானோவின் 88 விசைகளைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆண்டின் 88-வது நாளில் அனுசரிக்கப்படுகின்ற உலக பியானோ தினம் 2026 ஆம் ஆண்டு மார்ச் 29 அன்று கொண்டாடப்பட்டது.
- 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதித்ததன் மூலம், இத்தகையக் கட்டுப்பாட்டை விதித்த தென்கிழக்கு ஆசியாவின் முதல் நாடாக இந்தோனேசியா திகழ்கிறது.
- கடலோர மற்றும் தீவுப் பாதுகாப்புத் தயார்நிலையை வலுப்படுத்துவதற்காக, இந்திய ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகிய மூன்று படைகளும் இணைந்து தீப் சக்தி நடவடிக்கையைத் நடத்தின.
- வான்வழி சாதனைகளுக்காகவும், ஹாட் ஏர் பலூனில் அதிக உயரத்தில் பறந்து உலக சாதனை படைத்ததற்காகவும் அறியப்பட்ட ரேமண்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும், பத்ம பூஷன் விருது பெற்றவருமான விஜய்பத் சிங்கானியா (87), மும்பையில் காலமானார்.
- இந்தியா தனது 11வது திறந்தவெளி உரிமக் கொள்கைச் சுற்றைத் தொடங்க உள்ள நிலையில் இதன் மூலம், சுமார் 21 எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொகுதிகள் ஆய்வுக்காக வழங்கப் பட உள்ளன.
    - உள்நாட்டு எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஹைட்ரோ கார்பன் ஆய்வு மற்றும் உரிமக் கொள்கையின் ஒரு பகுதியாக இந்தக் கொள்கை அமைந்துள்ளது.

- வன்முறையற்றத் தன்மை, கருணை மற்றும் உரையாடல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையில், 20-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற 'உலக பௌத்த அமைதி மாநாடு 2026' ஹைதராபாத்தில் நடைபெற்றது.
- கடல்சார் பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துவதற்காக, 'திட்டம் 17A'-வின் கீழ் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐந்தாவது நீலகிரி-வகை போர்க்கப்பலான INS துனகிரியை இந்திய கடற்படை பெற்றுக்கொண்டது.
- சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையானது (RGGGH), சிறுநீர்ப்பை நரம்புகளைக் கட்டுப்படுத்தும் கருவியைப் பொருத்தி சிறுநீரகப் பிரச்சினைகளுக்குச் சிகிச்சையளிக்கக் கூடிய வகையில் தென்னிந்தியாவின் முதல் சாக்ரல் நியூரோமாடுலேஷன் (SNM) அறுவை சிகிச்சையைச் செய்துள்ளது.
- கார்டன் ரீச் ஷிப்பில்டர்ஸ் அண்ட் இன்ஜினியர்ஸ் லிமிடெட் நிறுவனமானது (GRSE), ஏவுகணை போர்க்கப்பலான துனகிரி, கடலோர மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான ஆய்வுக் கப்பலான சன்ஷோதக் மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு கப்பலான அக்ரே ஆகிய மூன்று முக்கிய கப்பல்களை இந்திய கடற்படைக்கு வழங்கியுள்ளது.
- இந்திய கடற்படை, ஆழமற்ற மற்றும் கடலோரப் பகுதிகளில் நீர்மூழ்கி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக உள்நாட்டிலேயே கட்டப்பட்ட இரண்டாவது கப்பலான மல்வான்-ஐப் பெற்றுள்ளது.
- 11 அடுத்த தலைமுறை கடலோர ரோந்துக் கப்பல்கள் (NGOPV) திட்டத்தின் முதல் கப்பலான INS ஷாச்சி கோவாவில் தொடங்கப்பட்டது.
- ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாராவில் உள்ள மஹி அணைக்கு அருகில் அமையவுள்ள மஹி பன்ஸ்வாரா அணுமின் திட்டத்திற்கான அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்கு அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய கடற்படையானது, நான்கு பெரிய ஆய்வுக் கப்பல்களில் கடைசி கப்பலான கடல்சார் வரைபடங்கள் மற்றும் ஹைட்ரோகிராஃபிக் ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் சன்ஷோதக்-ஐப் பெற்றுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று பீகார் மாநிலம் நாளந்தா மாவட்டத்தில் உள்ள மா ஷீட்லா கோவிலில் ஏற்பட்ட நெரிசலில் 8 பேர் உயிரிழந்தனர்.
- மக்களவை சபாநாயகர் பூர்வாஞ்சல் பிராந்தியத்தின் மண் மற்றும் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கலாச்சார விழாவான பூர்வாஞ்சல் மஹோத்சவ் மாட்டி-9 விழாவில் உரையாற்றினார்.
- துணைத் குடியரசுத் தலைவர் மற்றும் சட்ட அமைச்சரால் 'நியாய சேது' என்ற AI சாட்பாட் அறிமுகப்படுத்தப்பட்டது.
    - 'நியாய சேது' என்பது குடிமக்கள் சட்டங்களை எளிதில் புரிந்துகொள்ள உதவும் குரல்வழி மற்றும் பன்மொழி செயற்கை நுண்ணறிவு சட்ட உதவியாளராகும்.
- சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, இந்தியத் தேர்தல் ஆணையமானது (ECI) சந்தீப் ராய் ரத்தோரை ஜி. வெங்கட்ராமனுக்குப் பதிலாக காவல்துறை தலைமை இயக்குநராகவும் (DGP) மற்றும் காவல் படைத் தலைவராகவும் (HoPF) நியமித்துள்ளது.
    - தேர்தல் தொடர்பான அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்று நடத்துவதற்காக, இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு 'தேர்தல் டிஜிபி'யை நியமித்த போதிலும், மாநிலத்தில் நிரந்தரமான 'படைத் தலைவரே' (HoPF) இல்லாத காரணத்தினால், திரு. ரத்தோர் டிஜிபியாக நியமிக்கப்பட்டார்.

- தேசியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் (NCBC) தலைவராக நிரஞ்சன் ஜோதி மற்றும் உறுப்பினராக கிரண் உமேஷ் மஹல்லே ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.
- மதியிறுக்கப் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு, அங்கீகாரம் மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 2 அன்று உலக மதியிறுக்க பாதிப்பு விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு, “Autism and Humanity – Every Life Has Value” என்பதாகும்.
- 4 முதல் 60 வயது வரை உள்ளவர்களுக்கு, நான்கு வகையான டெங்கு வைரஸ்களுக்கும் எதிராகப் பாதுகாப்பு அளிக்கும் 'Qdenga' (TAK-003) தடுப்பூசிக்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.
- வருமான வரித் தாக்கல், இணக்கம், மின்னணு வழி-சரிபார்ப்பு மற்றும் குறைகளைத் தீர்க்க உதவும் வகையில் கர் சாத்தி என்ற செயற்கை நுண்ணறிவு சார்ந்த சாட்பாட் தளத்தை வருமான வரித்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மியான்மர் நாட்டின் நாடாளுமன்றத்தால் அந்நாட்டின் அதிபராக மின் ஆங் ஹ்லேங் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- 2027 ஆம் ஆண்டு இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்புக்கான தூதராக பிரபல மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக்கை இந்திய அரசு நியமித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான தீன் தயாள் உபாத்யாய் மற்றும் நானாஜி தேஷ்முக் பஞ்சாயத்து சதத் விகாஸ் புரசுகார் விருதுகளில் திரிபுராவின் செபாஹிஜாலா (சிறந்த மாவட்ட பஞ்சாயத்து), காஞ்சாபாரி (ஆரோக்கியமான பஞ்சாயத்து - முதலிடம்), மற்றும் வைகுந்தபூர் (பெண்கள் நட்புசார் பஞ்சாயத்து - மூன்றாமிடம்) ஆகிய மூன்று பஞ்சாயத்துகள் முதன்மையான விருதுகளை வென்றுள்ளன.
- குடியரசுத் துணைத் தலைவர் C. P. ராதாகிருஷ்ணன், சம்விதான் சதனிலுள்ள 58 சுவரோவியங்களை இந்தியாவின் நாகரிகச் சின்னங்களாக விளக்குகின்ற, சுதா மூர்த்தி எழுதிய “Tides of Time” என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
- 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 அன்று வட அட்லாண்டிக் ஒப்பந்தம் கையெழுத்தானதை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் ஏப்ரல் 4 அன்று நாட்டோ (NATO) தினம் அனுசரிக்கப் படுகிறது.
- இந்தியாவின் கடல்சார் பாரம்பரியம் மற்றும் முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில் ஏப்ரல் 5, 2026 அன்று தேசிய கடல்சார் தினம் கொண்டாடப்படுகிறது.
    - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Maritime India – Empowering Progress" என்பதாகும்.
- அமைதி மற்றும் தார்மீக விழுமியங்களை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 5 அன்று சர்வதேச மனசாட்சி தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Together for Peace: From Conscience to Collective Action" என்பதாகும்.
- ஒடிசா மற்றும் உத்தரகாண்ட் மாநிலக் காவல்துறையினருக்கு இந்தியாவின் உயரிய கௌரவமான குடியரசுத் தலைவரின் காவல்துறை வண்ண விருது வழங்கப் பட்டு உள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் இந்தியக் கடற்படையின் 'புராஜெக்ட் 17A' திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நான்காவது போர்க்கப்பலான INS தாராகிரி என்ற அதிநவீன மறைந்து தாக்கும் போர்க்கப்பலை மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

- இந்தியாவின் 3வது அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலான INS அரிதாமன் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.
- மும்பையில் நடைபெற்ற ஏலத்தில் ₹167.20 கோடிக்கு விற்பனையான ராஜா ரவி வர்மாவின் "யசோதாவும் கிருஷ்ணரும்" என்ற ஓவியம் இந்தியாவில் அதிக விலைக்கு விற்கப்பட்ட ஓவியம் என்ற சாதனையைப் படைத்துள்ளது.
- குழந்தைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 2-ம் தேதி 'சர்வதேச குழந்தைகள் புத்தக தினம்' கொண்டாடப்படுகிறது.
- அமைதி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதில் விளையாட்டின் பங்கை முன்னிலைப் படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 6 ஆம் தேதி 'சர்வதேச வளர்ச்சி மற்றும் அமைதிக்கான விளையாட்டு தினம்' அனுசரிக்கப்படுகிறது.
  - 2026-ம் ஆண்டிற்கான கருத்தரு, "Sport: Building Bridges, Breaking Barriers" என்பதாகும்.
- உணவு மற்றும் உயிரித்தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தில் BIRAC (உயிரித்தொழில்நுட்பத் தொழில் ஆராய்ச்சி உதவி மன்றம்)-BioNEST காப்பகம்/வளர்ப்பு மையத்தை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திறந்து வைத்தார்.
- பாதுகாப்புத்துறை கொள்முதல் சபையானது (DAC), காதக் திட்டத்தின் கீழ் இந்திய விமானப் படைக்காக மறைந்து தாக்கும் திறன் கொண்ட ஆளில்லா போர் விமானங்களை (UCAVs) கொள்முதல் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.
  - காதக் UCAV என்பது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (DRDO) உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒரு ஆளில்லா போர் விமானம் ஆகும், இது முன்னதாக AURA (தன்னிச்சையான ஆளில்லா ஆய்வக விமானங்கள்) என்று அழைக்கப்பட்டது.
- இந்திய ரயில்வேதுறையானது, நாடு முழுவதும் சரக்கு போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக ஜவஹர்லால் நேரு துறைமுக முனையத்திலிருந்து தாத்ரி வரை இணைக்கும் 1,506 கி.மீ நீளமுள்ள மேற்கத்திய பிரத்தியேக சரக்கு வழித் தடத்தை நிறைவு செய்துள்ளது.
- உலக அளவில் சீனா மிகப்பெரிய மெட்ரோ வலையமைப்பைக் கொண்டுள்ளது (~11,000 கி.மீ), இதனைத் தொடர்ந்து அமெரிக்கா (~1,400 கி.மீ) மற்றும் இந்தியா (~1,100 கி.மீ) ஆகிய நாடுகள் உள்ளன.
- ஒடிசாவின் பூரியில் முன்மொழியப்பட்ட ஸ்ரீ ஜெகந்நாத் சர்வதேச விமான நிலையம், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்து முதற் கட்ட வனத்துறை அனுமதியைப் பெற்றுள்ளது.
  - இந்தத் திட்டத்திற்காக சுமார் 27.886 ஹெக்டேர் வனப்பகுதியை மாற்றியமைக்க 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று அனுமதி வழங்கப்பட்டது.
- கேரட்டின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 4 அன்று சர்வதேச கேரட் தினம் 2026 கொண்டாடப்படுகிறது.
- 1971 ஆம் ஆண்டு ஐக்கியப் பேரரசில் நடைபெற்ற முதல் உலக ரோமானி காங்கிரஸைக் குறிக்கும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 8 அன்று சர்வதேச ரோமானி தினம் கொண்டாடப் படுகிறது.

- உத்தரப் பிரதேச மாநிலம் சஹாரன்பூரில் உள்ள தபால் பயிற்சி மையத்தின் 75 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் ஒரு நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.
- 2025-26 ஆம் நிதியாண்டில் 6.05 கிகாவாட் (GW) என்ற மிக உயர்ந்த காற்றாலை மின் உற்பத்தித் திறன் கூடுதலை இந்தியா பதிவு செய்துள்ள நிலையில் நாட்டின் மொத்த காற்றாலை மின் திறன் 56 கிகாவாட்டைக் கடந்துள்ளது.
- CBI (மத்தியப் புலனாய்வுப் பிரிவு) முன்னாள் இயக்குனர் ஆர்.கே. ராகவனின் சுய சரிதையான "A Road Well Travelled" சென்னையில் வெளியிடப்பட்டது.
- பழங்குடியின கலாச்சாரம், கைவினைப்பொருட்கள் மற்றும் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக மத்தியப் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப் பட்ட பாரத் பழங்குடியினர் திருவிழா 2026 ஆனது புதுதில்லியில் நடைபெற்றது.
- உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் வீராங்கனையான திவ்யா சிங், நேபாளத்தில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 5,364 மீட்டர் உயரத்தில் உள்ள எவரெஸ்ட் அடிவார முகாமுக்கு 14 நாட்களில் மிதிவண்டியில் சென்று சாதனை படைத்தார்.
- பாங்காக் நகரில் நடைபெற்ற உலக பாரா வில்வித்தை தொடரின் இறுதிப் போட்டியில், சர்வதேச வில்வித்தை போட்டியில் தங்கம் வென்ற உலகின் முதல் நான்கு உடல் உறுப்புகளையும் இழந்த (quadruple amputee) வீராங்கனை என்ற பெருமையை பாயல் நாக் பெற்றார்.
- மனிதன், விலங்கு மற்றும் சுற்றுச்சூழலின் ஆரோக்கியத்தை இணைத்து உலகளாவிய சுகாதார ஒத்துழைப்பை மேம்படுத்தும் 2026 ஆம் ஆண்டின் 'One Health' உச்சி மாநாடானது, G7 தலைமையின் கீழ் பிரான்சின் லியோன் நகரில் நடைபெற்றது.
- 2026 ஆம் ஆண்டின் இந்திய தடகளத் தொடரில், முரளி ஸ்ரீசங்கர் 8.15 மீட்டர் தூரம் தாண்டி ஆண்களுக்கான நீளம் தாண்டுதலில் வெற்றி பெற்றார்.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது தமிழகத்தில் அதிரடி மாற்றங்களை மேற் கொண்டுள்ளதன்படி தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளராக எம். சாய் குமார் அவர்களும், காவல்துறை தலைமை இயக்குநராக (ஆயுதப்படை மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை - DVAC) சந்தீப் மிட்டல் அவர்களும் நியமிக்கப்பட்டு உள்ளனர்.
- ஐக்கிய அரபு அமீரகம் உலகின் முதல் 10G (10 ஜிகாபிட்) U6GHz இணையச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பிர்லா மேலாண்மை தொழில்நுட்ப நிறுவனம் (BIMTECH) நடத்திய 'ஹெர்ம்ஸ் உரையாடல் 6.0' என்ற விவாதப் போட்டியில் ரோஹ்டக் இந்திய மேலாண்மை கழகம் வெற்றி பெற்றுள்ளது.
- இந்திய வம்சாவளி அறிவியலாளரான தீப் ஜரிவாலா, அமெரிக்காவின் UT-ORNL பல்கலைக்கழகத்தின் குவாண்டம் சாதனங்களுக்கான ஆளுநர் இருக்கைப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஒலிம்பிக் பதக்கம் வென்ற பிளாங்கா விளாசிக், பெங்களூருவில் நடைபெறவுள்ள உலக 10K பெங்களூரு 2026 ஓட்டப் பந்தயத்தின் உலகளாவிய தூதராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமையின் (IRENA) அறிக்கையின்படி, புதுப்பிக்கத் தக்க எரிசக்தி திறனில் (2026 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி 274.68 ஜிகாவாட்) சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியா உலகளவில் 3-வது இடத்தை பிடித்துள்ளது.

- ₹1 டிரில்லியன் (ஒரு லட்சம் கோடி) விற்றுமுதலைத் தாண்டிய முதல் இந்திய FMCG (வேகமாக நகரும் நுகர்வோர் பொருட்கள்) நிறுவனம் என்ற பெருமையை அமுல் பெற்றுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் அமையவுள்ள கமலா (1,720 மெகாவாட்) நீர்மின் திட்டத்திற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
    - இத்திட்டமானது மாநில அரசுடன் இணைந்து NHPC (தேசிய நீர்மின் சக்தி கழகம்) மூலம் உருவாக்கப்பட உள்ளது.
- போபால் மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் பாஸ்போர்ட் விண்ணப்ப தாரர்களுக்காக பிரெய்லி மற்றும் சைகை மொழிச் சேவைகளை அறிமுகப்படுத்தி உள்ளது.
    - இது மாற்றுத் திறனாளிகளுக்காக இந்தியப் பாஸ்போர்ட் அலுவலகங்களில் முன்னெடுக்கப் பட்ட முதல் முன்னெடுப்பு ஆகும்.
- சாமுவேல் ஹானிமனின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், ஆண்டுதோறும் ஏப்ரல் 10-ஆம் தேதி உலக ஹோமியோபதி தினம் கொண்டாடப்படுகிறது.
    - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Homoeopathy for Sustainable Health" என்பதாகும்.
- ஜேம்ஸ் பார்கின்சனின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், ஆண்டுதோறும் ஏப்ரல் 11-ஆம் தேதி உலக நடுக்குவாத நோய் தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Bridge the care gap" என்பதாகும்.
- எகிப்தில் நடைபெற்ற இந்தியா மற்றும் எகிப்து இடையேயான கூட்டு சிறப்புப் படை ராணுவப் பயிற்சியான சைக்ளோன் பயிற்சியின் 4வது பதிப்பில் இந்திய ராணுவம் பங்கேற்றது.
- மெட்டா நிறுவனமானது புகைப்படங்களிலிருந்து கலோரிகளை கணக்கிடவும், கேள்விகளுக்கு பதிலளிக்கவும் மற்றும் பொருட்களின் அமைவிடங்களை காட்சிப்படுத்தவும் தனது சூப்பர் இன்டலிஜென்ஸ் லேப்ஸின் முதல் செயற்கை நுண்ணறிவு மாதிரியான மியூஸ் ஸ்பார்க் -ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.
- உத்தரப்பிரதேசத்தின் கோரக்பூரில் அமைந்துள்ள, செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த நகர்ப்புற வெள்ள மேலாண்மைப் பிரிவானது; நிகழ்நேர உணரிகளையும் மாதிரிகளையும் பயன்படுத்தி வெள்ளத்தை முன்கூட்டியே கணிக்கும் இந்தியாவின் முதலாவது AI-சார்ந்த நகர்ப்புற வெள்ள முன்னறிவிப்பு அமைப்பாக உள்ளது.
- குஜராத் ஜாம்நகரில் வனவிலங்கு மற்றும் கால்நடை அறிவியலுக்கான உலகின் முதல் உலகளாவிய பல்கலைக்கழகத்தை வன்தாரா நிறுவனம் தொடங்கியது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் அஞ்சாவ் மாவட்டத்தில் (ஹவாய் கிராமம்) பிரம்ம புத்திரா நதியின் துணை நதியான லோஹித் நதியின் குறுக்கே அமைக்கப் படும் 1,200 மெகாவாட் கலை-II திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க சுற்றுச்சூழல் அமைச்சக குழு பரிந்துரைத்துள்ளது.
- ராஜஸ்தானில் உள்ள பொக்ரான் துப்பாக்கிச் சூடு பயிற்சி தளத்தில் இந்திய ராணுவம் பிரம்மாஸ்திரா பயிற்சியை மேற்கொண்ட நிலையில் இதில் AH-64E அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் துல்லியமான தாக்குதல்களை நடத்தி தங்களின் போர் திறன்களை வெளிப்படுத்தின.
- 1952 ஆம் ஆண்டில் சென்னையில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியை வீழ்த்தி இந்தியாவின் முதல் டெஸ்ட் வெற்றியைப் பதிவு செய்த அணியின் உறுப்பினரான முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரான சி.டி. கோபிநாத் தனது 96வது வயதில் காலமானார்.

- வடக்கு சிக்கிமில் நிலச்சரிவு காரணமாக சிக்கித் தவித்த சுற்றுலாப் பயணிகளை மீட்பதற்காக இந்திய ராணுவம் ஹிம் சேது நடவடிக்கையை வெற்றிகரமாக முடித்தது.
- அமேசான் வெப் சர்வீசஸ், ஆப்பிள், கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் ஆகியவற்றுடன் இணைந்து ஆந்த்ரோபிக் நிறுவனமானது சைபர் பாதுகாப்பு பலவீனங்களைக் கண்டறியவும் மென்பொருள் அமைப்புகளைப் பாதுகாக்கவும் செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்துகின்ற கிளாஸ்விங் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் ககன்யான் திட்டத்திற்கான இரண்டாவது ஒருங்கிணைந்த வான்வழிப் பரிசோதனையை (IADT-02) இஸ்ரோ வெற்றிகரமாக முடித்தது.
- எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் அமெரிக்கரான ஜிம் விட்டேக்கர் தனது 97 வயதில் காலமானார்.
- பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதற்காக தெலுங்கானாவில் உள்ள வாரங்கல் மற்றும் அதிலாபாத் ஆகிய இடங்களில் விமான நிலையங்களை உருவாக்குவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தான் இடையே ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒரு கூட்டு ராணுவப் பயிற்சியான DUSTLIK பயிற்சியின் 7வது பதிப்பு உஸ்பெகிஸ்தானில் தொடங்கியது.
- மலிவான இறக்குமதிகளைத் தடுத்து உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக, வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT) இயற்கை தேன் மீதான குறைந்தபட்ச இறக்குமதி விலையை (MIP) ஒரு டன்னுக்கு $1,400 ஆக 2026 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை நீட்டித்துள்ளது.
- அறுவடைத் திருநாளாகவும், புத்தாண்டாகவும் மேஷ சங்கராந்தி அன்று ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 13 அல்லது 14 ஆம் தேதிகளில் பைசாகி தினம் கொண்டாடப் படுகிறது
  - மேலும் இது ரோங்காலி பிஹு (அசாம்), புத்தாண்டு (தமிழ்நாடு), விஷு (கேரளா) மற்றும் நபா பர்ஷா (மேற்கு வங்காளம்) எனவும் அனுசரிக்கப்படுகிறது.
- குவாண்டம் அறிவியல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14 அன்று உலக குவாண்டம் தினம் கொண்டாடப்படுகிறது.
  - ஏப்ரல் 14 (4.14) என்ற தேதியானது குவாண்டம் இயற்பியலில் பயன்படுத்தப்படும் பிளாங்க் மாறிலியைக் (Planck's constant) குறிக்கிறது.
- அமெரிக்காவின் சியாட்டிலில் சுவாமி விவேகானந்தரின் முழு உருவ வெண்கலச் சிலை திறக்கப்பட்டது, இந்த சிலையானது அமெரிக்காவில் அவருக்கு வைக்கப்பட்ட முதல் சிலையாகும்.
- ராஞ்சியில் நடைபெற்ற இந்திய தடகளத் தொடரில் ஆடவருக்கான நீளம் தாண்டுதலில் தருண் பாயாசிங் 7.46 மீட்டர் தாண்டி வெற்றி பெற்றார்.
- ராட்டர்டாம் மாரத்தானில் சவான் பர்வால் 2:11:58 என்ற நேரத்தில் பந்தயத்தை முடித்து, 1978 ஆம் ஆண்டில் ஷிவ்நாத் சிங் படைத்த 2:12:00 என்ற இந்தியாவின் பழமையான மாரத்தான் சாதனையை முறியடித்தார்.
- லக்னோவில் உள்ள இன்டெக்ரல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான AIU தேசிய மாதிரி நீதிமன்றப் போட்டியில் பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் வெற்றி பெற்றது.

- கடற்படை செயல்பாடுகள் மற்றும் கடல்சார் பாதுகாப்பை மறு ஆய்வு செய்வதற்காக, பாதுகாப்பு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தளபதிகள் மாநாட்டின் 2026 ஆம் ஆண்டின் முதல் பதிப்பை இந்திய கடற்படை புதுடெல்லியில் நடத்த உள்ளது.
- உலகெங்கிலும் கலையின் வளர்ச்சி, பரவல் மற்றும் ரசனையை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15 அன்று உலக கலை தினம் கொண்டாடப்படுகிறது.
- கிர்கிஸ்தானின் பிஷ்கெக்கில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் சுஜீத் கல்கல் (65 கிலோ ஃப்ரீஸ்டைல் பிரிவு) மற்றும் அபிமன்யு மாண்ட்வால் (70 கிலோ ஃப்ரீஸ்டைல் பிரிவு) ஆகியோர் தங்கப் பதக்கங்களை வென்றனர்.
- இந்தியா-நேபாள இணைப்பை மேம்படுத்தவும், ரூபாய்டிஹா-நேபாள்கஞ்ச் வழித் தடம் வழியாக வர்த்தகத்தை அதிகரிக்கவும் தேசிய நெடுஞ்சாலை-927 இல் 4 வழிச் சாலை பராபங்கி-பஹ்ரைச் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- மாநிலங்களவைக்கு பரிந்துரைக்கப்பட்டதை அடுத்து பதவியிலிருந்து விலகிய நிதிஷ் குமாருக்குப் பதிலாக, பீகார் மாநில முதலமைச்சராக சாம்ராட் சவுத்ரி பதவியேற்றார்.
  - இதன் மூலம் இப்பதவியை வகிக்கும் பாரதிய ஜனதா கட்சியின் முதல் தலைவர் என்ற பெருமையை இவர் பெறுகிறார்.
- இஸ்ரேலின் மொசாட் அமைப்பின் புதிய தலைவராக ரோமன் கோஃப்மேன் நியமிக்கப் பட்டுள்ளார்.
- குரல் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குரல் சார்ந்த கோளாறுகளைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் சிகிச்சையளிப்பதை ஊக்குவிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 16 ஆம் தேதி உலக குரல் தினம் கடைபிடிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “Caring for Our Voices” என்பதாகும்.
- சீனாவின் நிங்போவில் நடைபெற்ற 2026 ஆசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆயுஷ் ஷெட்டி வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- ஆந்திரப் பிரதேச முதலமைச்சர், 1S மற்றும் 1Q என பெயரிடப்பட்ட இரண்டு அமைப்புகள் உட்பட, இந்தியாவின் முதல் உள்நாட்டு குவாண்டம் கம்ப்யூட்டிங் சோதனைக் களங்களை தொடங்கி வைத்தார்.
- 125 ஆண்டுகளில் ஆஸ்திரேலிய ராணுவத்தின் தலைவராகச் செயல்படும் முதல் பெண்ணாக சூசன் கோயலை ஆஸ்திரேலியா நியமித்துள்ளது.
- லியோடாங் மற்றும் ஷாண்டோங் தீபகற்பங்களுக்கு இடையே உள்ள போஹாய் நேர்ச்சந்தியைக் கடந்து, டாலியன் மற்றும் யாண்டாய் நகரங்களை இணைக்கும் வகையில், 120 கி.மீ நீளமுள்ள கடலடி அதிவேக ரயில் சுரங்கப்பாதையை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.
- OpenAI தனது இணையப் பாதுகாப்புக்கான நம்பகமான அணுகல் திட்டத்தை விரிவுபடுத்தி, தீம்பொருள் பகுப்பாய்வு மற்றும் பாதிப்பைக் கண்டறிதல் போன்ற தற்காப்பு சைபர் பாதுகாப்புப் பணிகளுக்கான பிரத்தியேக மாடலான GPT-5.4-Cyber-ஐ அறிமுகப் படுத்தியுள்ளது.
- விஸ்டன் கிரிக்கெட்டர்ஸ் அல்மனாக் புத்தகத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த கிரிக்கெட் வீரர்களாக மிட்செல் ஸ்டார்க் (ஆஸ்திரேலியா) மற்றும் தீப்தி ஷர்மா (இந்தியா) ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.
- பெங்களூரு மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் (CARI) அதன் மருத்துவ ஆய்வகத்திற்காக ISO 15189:2022 அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

- ஆயுர்வேத அறிவியலில் ஆராய்ச்சிக்கான மத்திய சபையின் (CCRAS) கீழ் இந்த அங்கீகாரத்தைப் பெறும் முதல் நிறுவனம் இதுவாகும்.

❖ தாக்கம் மற்றும் தலைமைத்துவத்தின் அடிப்படையில் உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்களை அங்கீகரிக்கும் 2026 ஆம் ஆண்டிற்கான TIME100 பட்டியலை டைம் இதழ் வெளியிட்ட நிலையில் இதில் ஷி ஜின்பிங் (14வது முறை), டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருடன், இந்திய ஆளுமைகளான சுந்தர் பிச்சை, விகாஸ் கண்ணா மற்றும் ரன்பீர் கபூர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

❖ கோதுமை மற்றும் நெல்லுக்கான உலகளாவியப் பண்ணை நிலைத்தன்மை மதிப்பீடு (FSA) 3.0 சான்றிதழை பெற்று உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறும் இந்தியாவின் முதல் நிறுவனமாக ITC நிறுவனம் மாறியது.

❖ குஜராத்தின் தோலேராவில் டாடா குறைக்கடத்தி உற்பத்தி தனியார் துறை நிறுவனத்திற்கான முதல் குறைக்கடத்தி சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு (SEZ) இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

❖ இந்திய கிராண்ட்மாஸ்டர் ஆர். வைஷாலி 2026 ஆம் ஆண்டிற்கான FIDE மகளிர் கேண்டிடேட்ஸ் போட்டியில் வெற்றி பெற்று, மகளிர் உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்திற்கான போட்டியாளராகத் தகுதி பெற்றுள்ளார்.

❖ உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்நாட்டுப் பாதுகாப்பு கட்டமைப்பை மிகவும் நன்கு வலுப்படுத்துவதற்காக, மத்திய ஆயுதக் காவல் படைகளுக்காக (CAPFs) அர்ப்பணிக்கப் பட்ட இந்தியாவின் முதல் உயர்மட்ட மாநாட்டிற்கு பிரதமர் தலைமை தாங்குவார்.

❖ 2025-26 ஆம் நிதியாண்டில் மொத்த வர்த்தகம் 151.1 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும், வர்த்தகப் பற்றாக்குறை சாதனை அளவாக 112.6 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் பதிவாகி அமெரிக்காவை முந்தி, இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதாரராக சீனா உருவெடுத்துள்ளது.

❖ சென்னையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த ரயில் பெட்டித் தொழிற்சாலை (ICF), 'வந்தே பாரத்' தளத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தியாவின் முதல் அதிவேக 'வந்தே பாரத்' சரக்கு EMU (மின்சாரப் பல அலகு ரயில்) முன்மாதிரியை, சோதனை ஓட்டங்களுக்காக வெளியிடவுள்ளது.

❖ வர்த்தகம், தளவாடங்கள், தொழில்துறை மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் சுமார் ₹12,000 கோடி முதலீட்டில் உருவான மாபெரும் விரைவுச் சாலைத் திட்டமான டெல்லி-டெஹ்ராடூன் பொருளாதார நடைபாதையை பிரதமர் திறந்து வைத்தார்.

❖ உலகம் முழுவதும் தெருக்களில் வசிக்கும் அல்லது வேலை செய்யும் குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உரிமைகள் மாநாட்டின் (CRC) கீழ் அவர்களின் உரிமைகளை மேம்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 12-ஆம் தேதி சர்வதேச தெருவோரக் குழந்தைகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Protect, not Punish" என்பதாகும்.

❖ உள்நாட்டு கிரிக்கெட் வீரர்களுக்கு நிதி நிலைத்தன்மையை வழங்குவதற்காக, 2026-27 ஆம் ஆண்டுப் பருவத்தில் இருந்து ஒரு கட்டமைக்கப்பட்ட வீரர் ஒப்பந்த முறையை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் அமைப்பாக மும்பை கிரிக்கெட் சங்கம் உருவெடுத்துள்ளது.

❖ பாலிவுட் நடிகை சயானி குப்தாவுக்கு 2026 ஆம் ஆண்டிற்கான ஹார்வர்ட் தெற்காசிய "ஆண்டின் சிறந்த நபர்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

- இந்திய மொழிகளில் தொழில்நுட்பக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் கற்றலை மேம்படுத்துவதற்காக அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE), VAANI 3.0 (இந்திய மொழிகளின் முன்னேற்றம் மற்றும் வளர்ப்பிற்கான வீரியமிக்கப் பரிந்துரைப்பு) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- 1925 ஆம் ஆண்டு பாரிஸில் சர்வதேச பயில்நிலை வானொலி சங்கம் உருவாக்கப் பட்டதைக் குறிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 18 அன்று உலகளவில் சர்வதேச பயில்நிலை வானொலி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- மும்பையில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான மிஸ் சாகே இந்தியா பட்டத்தை மும்பையைச் சேர்ந்த தொழில்முனைவோரும் கதக் கலைஞருமான நிஷிதா யோகேஷ் அந்தர்கர் வென்றுள்ளார்.
- பெங்களூரு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் (BWSSB) ISO 50001:2018 ஆற்றல் மேலாண்மை அமைப்பு சான்றிதழைப் பெற்றுள்ள நிலையில் எரிசக்தி மேலாண்மைக்காக இந்த உலகளாவியச் சான்றிதழைப் பெறும் இந்தியாவின் முதல் குடிநீர் வாரியம் என்ற பெருமையை இது பெற்றுள்ளது.
- ஐ.நா. சீன மொழி தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 20 அன்று அனுசரிக்கப்படுகிறது, இது ஐக்கிய நாடுகள் அமைப்பில் கலாச்சாரப் பன்முகத் தன்மை மற்றும் பன்மொழிப் பயன்பாட்டை ஊக்குவிப்பதுடன் சீன மொழி அதன் ஆறு அதிகாரப் பூர்வ மொழிகளில் ஒன்றாகும்.
- இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் சி. பி. ராதாகிருஷ்ணன் 2026 ஆம் ஆண்டு இலங்கைக்குத் தனது முதல் இருதரப்புப் பயணத்தை மேற் கொண்டதோடு இந்திய வீட்டு வசதித் திட்டத்தின் (இந்தியா ஆதரவளிக்கும் வீட்டு வசதித் திட்டம்) கீழ் கட்டப்பட்ட வீடுகளை ஒப்படைத்தார்.
- IIT மெட்ராஸ் ஆராய்ச்சிப் பூங்காவில் தாவர செல் நொதித்தல் தொடர்பான இந்தியாவின் முதல் சிறப்பு மையத்தை அமைக்க ஹெர்பலைஃப் இந்தியா மற்றும் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் மெட்ராஸ் (IIT Madras) ஆகியவை இணைந்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- அமெரிக்காவின் கேப் கனாவெரல் விண்வெளிப் படை நிலையத்திலிருந்து ஏவப்பட்ட, மறுபயன்பாடு செய்யப்பட்ட நியூ கிளென் முதல் நிலை உந்துவிசையின் முதல் தரையிறக்கத்தை ப்ளூ ஆரிஜின் நிறுவனம் வெற்றிகரமாக நிகழ்த்தியது.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக என்று ஐக்கிய நாடுகள் சபையால் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 22 அன்று சர்வதேச அன்னை பூமி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- நிலையான வளர்ச்சியில் படைப்பாற்றல் மற்றும் புதுமைகளின் பங்கை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 21 அன்று உலகப் படைப்பாற்றல் மற்றும் கண்டுபிடிப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Harnessing Creativity for Global Progress" என்பதாகும்.
- ஸ்டோர்ஃப்ரெண்ட்லி ஆசியாவின் இணை நிறுவனர் ஆர்தர் லா உலகப் பொருளாதார மன்றத்தால் (WEF) 2026 ஆம் ஆண்டின் இளம் உலகளாவிய தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ஆப்பிள் நிறுவனமானது 15 ஆண்டுகளுக்குப் பிறகு பதவி விலகும் டிம் குக்கிற்குப் பதிலாக, ஜான் டெர்னஸை புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) நியமித்து உள்ளது.

- ❖ இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் (IARI) இயக்குனர் டாக்டர் செருகுமல்லி சீனிவாச ராவ், பருவநிலையைத் தாங்கும் வேளாண்மை குறித்த தனது பணிக்காக ஹைதராபாத்தில் 9வது பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் விருதைப் பெற்றார்.
- ❖ ஆங்கில மொழி மற்றும் அதன் உலகளாவிய முக்கியத்துவத்தை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 23 அன்று ஐ.நா ஆங்கில மொழி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ ஸ்பானிஷ் மொழி மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 23 அன்று ஐ.நா ஸ்பானிஷ் மொழி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ DRDO நிறுவனம் செயற்கை நுண்ணறிவால் இயங்கக் கூடிய, நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல்களைக் கண்டறிவதற்காக ப்ரஜ்னா எனும் அமைப்பை உருவாக்கி, உள்துறை அமைச்சகத்திடம் ஒப்படைத்தது.
- ❖ கொள்கை உரையாடல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, அப்சர்வர் ரிசர்ச் ஃபவுண்டேஷன் (ORF) மற்றும் வளரும் நாடுகளுக்கான ஆராய்ச்சி மற்றும் தகவல் அமைப்பு (RIS) ஆகியவை இணைந்து புது தில்லியில் தொடக்க பிரிக்ஸ் (BRICS) கல்வி மன்றத்தை தொடங்கின.
- ❖ பெட்ரோகிளிஃப்ஸ் (பாறைகளில் செதுக்கப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய வேலைப் பாடுகள்) எனப்படும் பழமையான பாறைச் சிற்பங்களைப் பாதுகாப்பதற்காக, இந்தியாவின் முதல் பெட்ரோகிளிஃப் பாதுகாப்புப் பூங்காவிற்கான அடிக்கல் சிந்து நதிக்கரையில் உள்ள லடாக்கில் நாட்டப்பட்டது, லடாக்கில் இதுபோன்று சுமார் 400 இடங்கள் உள்ளன.
- ❖ இங்கிலாந்து விலங்கியல் நிபுணரும், எழுத்தாளரும், தொலைக்காட்சித் தொகுப்பாளருமான டெஸ்மண்ட் மோரிஸ் அயர்லாந்தில் தனது 98 வயதில் காலமானார், மனிதர்களை விலங்கு ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக விளக்கும் 'The Naked Ape' என்பது இவரது புகழ்பெற்ற புத்தகமாகும்.
- ❖ உலகளாவிய எல்லை மேலாண்மை ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான கடல்சார் பாதுகாப்பு, கடலோரக் கண்காணிப்பு, நாடுகடந்த அச்சுறுத்தல்கள் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்ற ஆஸ்திரியாவின் வியன்னாவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான உலக எல்லைப் பாதுகாப்பு காங்கிரஸில் இந்தியா பங்கேற்றது.
- ❖ காட்சிக் கலையின் ஒரு வடிவமான சிற்பக்கலை பற்றிய விழிப்புணர்வையும் பாராட்டையும் மேம்படுத்தும் வகையில் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று (ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமை) சர்வதேச சிற்பக்கலை தினம் அனுசரிக்கப் படுகிறது.
- ❖ கோன்யாக் பழங்குடியினர் சமீபத்தில் ஏப்ரல் 1 முதல் 6 ஆம் தேதி வரை கோஹிமாவில் புத்தாண்டு, வசந்த காலத்தின் வருகையைக் குறிக்கின்ற ஓலியாங் பண்டிகையைக் கொண்டாடினர்.
- ❖ பசுமை இந்தியா சவால் மூலம் காடு வளர்ப்பு மற்றும் பருவநிலை நடவடிக்கைகளில் ஆற்றிய பணிகளுக்காக, இங்கிலாந்தில் நடைபெற்ற உலகளாவிய பருவநிலை தலைவர்கள் மாநாட்டில் முன்னாள் எம்.பி ஜே. சந்தோஷ் குமார் "குளோபல் கிரீன் ஐகான்/உலகளாவிய பசுமை சின்னம்" என கௌரவிக்கப்பட்டார்.
- ❖ கொல்கத்தாவைச் சேர்ந்த சதுரங்க வீரர் அரோன்யக் கோஷ், 2026 பாங்காக் சதுரங்க கிளப் ஓபனில் தனது இறுதித் தகுதியை எட்டிய பிறகு, இந்தியாவின் 95வது கிராண்ட்மாஸ்டர் ஆனார்.

- மத்தியப் புலனாய்வுத் துறையானது (CBI) அத்துறையின் அறிவிப்புகள் உண்மையானதா அல்லது போலியானதா என்பதை குடிமக்கள் சரிபார்க்கவும், இணையவழி மோசடிகளைத் தவிர்க்கவும் உதவும் ஒரு செயற்கை நுண்ணறிவு கருவியான 'அபய்' என்ற செயற்கை நுண்ணறிவு சாட்பாட்டை அறிமுகப்படுத்தியது.
- வந்தே மாதரத்தின் 150 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் கலாச்சார அமைச்சகமானது "VM ஃபிரேம்ஸ்" என்ற தேசியத் திரைப்பட உருவாக்கப் போட்டியைத் தொடங்கியுள்ளது.
  - இது ரீல்ஸ், செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான திரைப்படங்கள் மற்றும் குறும்படங்கள் மூலம் தேசபக்தி மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெங்குயின்களைக் கொண்டாடுவதற்கும் அவற்றின் பாதுகாப்பு குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்கும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 25 அன்று உலக பெங்குயின் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஷேகா ஏரி பறவைகள் சரணாலயம் இந்தியாவின் 99-வது ராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது
  - அலிகாரில் இருந்து சுமார் 17 கி.மீ தொலைவில் அமைந்து உள்ள ஒரு நன்னீர் ஈரநிலமான இது மேல் கங்கை கால்வாய் கட்டப்பட்ட பிறகு 1852-ஆம் ஆண்டில் உருவானது.
- 4-வது இந்தியா-இலங்கை டைவிங் பயிற்சில் (DIVEX 2026) கலந்து கொள்வதற்காக ஐஎன்எஸ் நிரீக்சக் கப்பல் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- மத்திய ஆசியாவிலேயே முதன்முறையாக, சர்வதேச பாராலிம்பிக் குழுவால் ஏற்பாடு செய்யப்படும் 13-வது உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் 2027, ஜூன் மாதம் தாஷ்கண்டில் நடைபெறவுள்ளது.
- பெடெக்ஸ் (FedEx) மற்றும் மதராஸ் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT Madras) ஆகியவை இணைந்து இந்தியாவின் முதல் நகரத்திற்கு உள்ளேயான ஆளில்லா விமானத்தின் மூலம் விநியோகச் சோதனைகளை பெங்களூருவில் நடத்தின.
- உலகளவில் கண்டுபிடிப்புகளைப் பாதுகாப்பதிலும், படைப்பாற்றலை ஊக்குவிப்பதிலும் அறிவுசார் சொத்துரிமையின் பங்கை எடுத்துரைக்கும் வகையில், உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 26-ஆம் தேதி உலக அறிவுசார் சொத்துரிமை தினத்தை கொண்டாடுகிறது.
  - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு "IP and Sports: Ready, Set, Innovate" என்பதாகும்.
- அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள அமெரிக்க ராணுவப் போர் கல்லூரியின் சர்வதேச புகழவையின் பட்டியலில் 2026 ஆம் ஆண்டில் உபேந்திர திவேதி சேர்க்கப்பட்டுள்ள நிலையில் இந்த கௌரவத்தைப் பெறும் மூன்றாவது இந்திய ராணுவத் தளபதி இவராவார்.
- 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடகப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் சட்டத்தை துருக்கி நிறைவேற்றியுள்ளது, இதன்படி யூடியூப் (YouTube), இன்ஸ்டாகிராம் மற்றும் டிக்டாக் போன்ற தளங்களில் வயது சரி பார்ப்பு, பெற்றோர் கட்டுப்பாடுகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களை அகற்றுதல் ஆகியவை கட்டாயமாக்கப்பட்டுள்ளன.
- எவரெடி இண்டஸ்ட்ரீஸ் இந்தியா நிறுவனமானது, இந்தியாவின் முதல் கார மின்கலன் உற்பத்தி நிலையத்தை 2026 ஆம் ஆண்டில் ஜம்முவில் செயல்பாட்டிற்கு கொண்டு வந்தது.

- நீர்ப் பாதுகாப்பு மற்றும் பருவநிலைச் சவால்களுக்கான உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் புதுமையான தீர்வுகளை ஊக்குவிப்பதற்காக, 9வது இந்திய சர்வதேச நீர் வாரத்தை (IIWW-2026) புது தில்லியில் தொடங்கப்பட்டுள்ளது.
    - இது ஜல் சக்தி அமைச்சகத்தால் "Climate Resilient Water Management" என்ற கருத்துருவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- அலுவலக ஆதரவுப் பணியாளர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், ஏப்ரல் 22 அன்று (ஏப்ரல் மாதத்தின் கடைசி முழு வாரத்தின் புதன்கிழமை) நிர்வாகத் தொழில் முறைப் பணியாளர்கள் தினம் அனுசரிக்கப்பட்டது.
- முன்னாள் ராணுவத் தளபதி எம்.எம். நரவனே, இந்திய ஆயுதப் படைகளின் அதிகம் அறியப்படாத கதைகள் மற்றும் மரபுகள் குறித்த ‘The Curious and the Classified’ என்ற புனைகதை அல்லாத புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் (CEA) அசோக் லஹிரி, சுமன் பெரிக்கு பதிலாக நிதி ஆயோக்கின் துணைத் தலைவராக நியமிக்கப்பட உள்ளார்.
    - போபால் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் கோபர்தன் தாஸ், இதன் உறுப்பினராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.
- முதலாம் உலகப் போரில் பங்கேற்ற சுமார் 33,000 இந்திய வீரர்களின் பெயர்கள் ஈராக்கின் பாஸ்ராவில் உள்ள பாஸ்ரா நினைவிடத்தில் டிஜிட்டல் பலகைகள் மூலம் சேர்க்கப் பட்டுள்ளன.
    - நீண்ட காலமாக வரலாற்றில் விடுபட்டிருந்ததைச் சரிசெய்யும் வகையில், காமன்வெல்த் போர் கல்லறைகள் ஆணையத்தால் இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- அசாமில் நிலத்தடியில் வாழும் 'கிட்சாக் நகனா' எனப்படும் புதிய பார்வையற்ற மீன் இனம் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
    - அசாமின் கோல்பாரா மாவட்டத்தில் உள்ள ஒரு கிணற்றில் கண்டுபிடிக்கப்பட்ட இது, வடகிழக்கு இந்தியாவில் காணப்பட்ட முதல் நிலத்தடி நீரில் வாழும் மீன் ஆகும்.
- அன்றாட வாழ்வில் வடிவமைப்பின் முக்கியத்துவம் மற்றும் தாக்கத்தை உணர்த்தும் வகையில் ஏப்ரல் 27 ஆம் தேதி அன்று உலக வடிவமைப்பு தினம் அனுசரிக்கப்பட்டது.
- உலக சுகாதார நிறுவனமானது, பிறந்த குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான முதல் மலேரியா சிகிச்சை மருந்தான ஆர்டெமிதர்-லுமெஃ பாண்ட்ரைனுக்கு முன்-அங்கீகாரம் அளித்துள்ளது, இந்த மருந்தானது 2 முதல் 5 கிலோ எடை கொண்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பான அளவாக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- தூய்மையான எரிசக்திக்கு ஆதரவளிக்கும் வகையில், மின்கலங்கள், அரிய வகை காந்தங்கள் மற்றும் தொழில்துறை கழிவுகளை செயலாக்கும் இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த லித்தியம்-இரும்பு பேட்டரிகள் மற்றும் அரிய வகை காந்தங்களுக்கான மறுசுழற்சி ஆலை உத்தரப் பிரதேசத்தின் சிக்கந்திராபாத்தில் அமைக்கப் பட்டுள்ளது.
- 4-வது இந்தியா-ஆப்பிரிக்கா மன்ற உச்சி மாநாடானது ஆப்பிரிக்க ஒன்றிய ஆணையத்துடன் இணைந்து 2026 ஆம் ஆண்டு மே 31 அன்று புது தில்லியில் நடைபெற உள்ள நிலையில் இந்த மாநாட்டின் சின்னம், கருத்துரு மற்றும் இணையதளம் ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன.

- இந்த உச்சிமாநாட்டின் கருத்துரு “IA SPIRIT: India Africa Strategic Partnership for Innovation, Resilience, and Inclusive Transformation” என்பதாகும்.

❖ அரசு மருத்துவமனைகளில் அதிக அளவில் மக்கள் சிகிச்சை பெற்று வருவதன் மூலம், பொது சுகாதாரப் பயன்பாட்டில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடத்தில் உள்ளது.

❖ தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பத் (ICT) துறையில் பெண்கள் தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தின் நான்காவது வியாழக்கிழமை (2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 23) அன்று சர்வதேச 'தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பத்தில் பெண்களுக்கான தினம்' கொண்டாடப் படுகிறது.

- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "AI for Development: Girls shaping the digital future" என்பதாகும்.

❖ நடனம் மற்றும் அதன் கலாச்சார மதிப்பு குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 29 அன்று சர்வதேச நடன தினம் கொண்டாடப் படுகிறது.

❖ தலைமைப் பதிவாளர் அலுவலகம் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகமானது, 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக 1855 என்ற உதவி எண்ணை ஆனது நாடு முழுவதும் செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது.

❖ இந்தியாவின் கைவினை மரபுகளை மேம்படுத்தவும், நெசவாளர்களுக்கு ஆதரவளிக்கவும் இந்திய மத்திய குடிசைத் தொழில் கழகம் தனது முதல் பாரம்பரிய ஆடை வடிவமைப்பான “சோல் த்ரெட்ஸ்” (Soul Threads) என்பதை அறிமுகப்படுத்தி உள்ளது.

❖ தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் (NCDC) ஆதரவுடன் செயல்படும் அரசாங்க ஆதரவு பெற்ற 'பாரத் டாக்ஸி' செயலியானது, கார்கள், ஆட்டோக்கள் மற்றும் இருசக்கர வாகனங்களுக்கு கமிஷன் இல்லாத, நியாயமான கட்டணத்திலான சேவைகளை வழங்குகிறது.

❖ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஆனது, SMILE (விளிம்புநிலை மக்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் தொழில்முனைவு ஆதரவு) திட்டத்தின் கீழ், நிகழ் நேரத் தரவுகள் சேகரிப்பு, கண்காணிப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக SMILE – இரவலர் கணக்கெடுப்பு அலைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ 2016 ஆம் ஆண்டு மேற்கு வங்க மாநிலம் சிலிகுரியில் நடத்திய பிறகு, 2026 ஆம் ஆண்டிற்கான தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் (SAFF) மகளிர் சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா கோவாவில் நடத்த உள்ளது,.

- இதற்கு முன்னதாக, 1999 ஆம் ஆண்டு கோவாவில் ஆடவருக்கான SAFF சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது.

❖ அமைதி, ஒத்துழைப்பு மற்றும் உலகளாவிய முடிவெடுப்பதை மேம்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபையில் நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளின் பங்கை அங்கீகரிக்கும் விதமாக, ஆண்டுதோறும் ஏப்ரல் 25 அன்று சர்வதேசப் பிரதிநிதிகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

❖ பணியிட விபத்துகளைத் தடுப்பதையும், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணி நிலைமைகளை உறுதி செய்வதையும் ஊக்குவிப்பதற்காக, சர்வதேச தொழிலாளர் அமைப்பால் (ILO) ஆண்டுதோறும் ஏப்ரல் 28 அன்று பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான உலக தினம் அனுசரிக்கப்படுகிறது.

- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Good psychosocial working environments: A pathway to thriving workers and strong organizations" என்பதாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்-பிராமி கல்வெட்டு கண்டுபிடிப்பு

- திருப்பூர் மாவட்டம் குமாரிக்கல் பாளையத்தில் இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை (ASI) மேற்கொண்ட ஆய்வில், தமிழ்-பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த எழுத்துக்கள் காலத்தால் கி.மு. 1-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி.பி. 1-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையிலானவை என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பானை ஓடு பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஒரு கருப்பு-சிவப்பு நிறச் சேமிப்பு ஜாடியின் துண்டாகும்.
- இந்த எழுத்துக்களில் “இரும்பொறை” என்று வாசிக்கப்பட்டுள்ளதால் இது சங்க கால சேர மன்னர்களுடன் தொடர்புடையது.
- இந்த அகழ்வாராய்ச்சி தளத்தில் இரும்புக்காலம் மற்றும் ஆரம்பகால வரலாற்று மனித குடியிருப்புகள் மற்றும் ஈமச் சின்னங்கள் இருப்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
- சிவப்பு நிறப் பானை ஓடுகள், கருப்பு-சிவப்பு பானை ஓடுகள் மற்றும் ஓவியம் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள் போன்றவை பிற கண்டுபிடிப்புகளாகும்.
- இங்குள்ள 26 அடி உயர நடுகல் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அறிவிக்கப் படலாம்.

## தமிழ்நாடு பருவநிலை அமைப்பு - Champions of Change

- தமிழ்நாடு பசுமை பருவநிலை நிறுவனம் (Tamil Nadu Green Climate Company) எர்த்ஷாட் பரிசு வழங்கிய உலகளாவிய அறிக்கையில் அங்கீகாரம் பெற்றுள்ளது.
- “Champions of Change” என்ற தலைப்பிலான அந்த அறிக்கை, 11 உலகளாவிய பொதுத் துறை பருவநிலை கண்டுபிடிப்புகளை முன்னிலைப்படுத்துகிறது.
- இந்நிறுவனத்தின் CARES (நெகிழ்வுத்தன்மை மிக்க சூழலமைப்புகள் மற்றும் சமூகங்களுக்கான பருவநிலை நடவடிக்கை) என்ற முன்னெடுப்பு, “இயற்கையைப் பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுத்தல்” பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஈரநிலங்கள், காடுகள் மற்றும் கடலோரப் பகுதிகளில் பருவநிலை மாற்றத் திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- இந்த அங்கீகாரம் பருவநிலை நிர்வாகத்தில் ஒஸ்லோ, பொகோட்டா மற்றும் லண்டன் போன்ற முன்னணி உலகப் பகுதிகளுக்கு இணையாக தமிழ்நாட்டை நிலை நிறுத்துகிறது.

## தமிழ்நாட்டில் PE-VC முதலீடுகள் சரிவு

- 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் (Q1 2026) தமிழ்நாட்டில் தனியார் பங்கு மற்றும் துணிகர மூலதன (PE-VC) முதலீடுகள் கடுமையாகச் சரிந்துள்ளன.
- 2026 முதல் காலாண்டில், PE-VC நிறுவனங்கள் 19 ஒப்பந்தங்கள் மூலம் $221 மில்லியன் முதலீடு செய்துள்ளன.

- 2025 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் (Q1 2025), 18 ஒப்பந்தங்கள் மூலம் $2,081 மில்லியன் முதலீடு செய்யப்பட்டு மிக அதிகமாக இருந்தது.
- ஏஞ்சல் முதலீடுகள் 2025 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் 9 ஆக இருந்த நிலையில், 2026 ஆம் ஆண்டில் 6 ஆகக் குறைந்துள்ளது.
- ஒரு தேசியப் போக்கின் ஒரு பகுதியாக உள்ள இந்த வீழ்ச்சியில் இந்தியாவில் ஒட்டு மொத்த முதலீடுகள் 22% சரிந்துள்ளன.

## தமிழ்நாடு டிஜிபி பதவிக்காலம்

- இந்தியத் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டின் புதிய காவல்துறைத் தலைவரை நியமித்ததைத் தொடர்ந்து, அவரது பதவிக்காலம் குறித்த விவாதம் எழுந்துள்ளது.
- சந்தீப் ராய் ரத்தோர், காவல்துறை இயக்குநர் (DGP) மற்றும் காவல்துறைப் படைத் தலைவராக (HoPF) நியமிக்கப்பட்டார்.
- இந்த நியமன உத்தரவில் அவர் எவ்வளவு காலம் இந்தப் பதவியில் இருப்பார் என்பது குறிப்பிடப்படவில்லை.
- முன்னதாக பிரகாஷ் சிங் வழக்கில், டிஜிபி பதவிக்கு குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் பதவிக் காலம் இருக்க வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியிருந்தது.
- ஆனால், இந்த விதி ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) மூலம் செய்யப் படும் நியமனங்களுக்கு மட்டுமே பொருந்தும்.
- தேர்தலுக்குப் பிறகு அமையும் புதிய அரசு, அவரைத் தொடரச் செய்வதா அல்லது மாற்றுவதா என்பதை முடிவு செய்யலாம்.

## சாத்தான்குளம் காவலில் நிகழ்ந்த மரண வழக்குத் தீர்ப்பு

- சாத்தான்குளம் காவலில் நிகழ்ந்த மரண வழக்கில் ஒன்பது காவல்துறையினருக்கு மதுரை விசாரணை நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.
- மத்தியப் புலனாய்வுத் துறையின் (CBI) விசாரணையில், ஒன்பது காவல்துறையினரும் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் என உறுதி செய்யப்பட்டது.
- குற்றவாளிகளுக்கு ₹1 கோடிக்கும் மேல் அபராதமும் நீதிமன்றம் விதித்துள்ளது.
- சென்னை உயர் நீதிமன்றம் இந்த வழக்கை தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டதுடன், இது கொலை என்பதற்கான முதற்கட்ட ஆதாரங்களையும் கண்டறிந்தது.
- இந்த வழக்கு "அரியவற்றில் அரியது" எனக் கருதப்பட்டு, அதிகபட்சத் தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

## இரட்டை ரோபோடிக் அறுவை சிகிச்சை

- சென்னையில் உள்ள ஒரு நோயாளிக்கு அறுவை சிகிச்சை நிபுணர் 1,500 கி.மீ தொலைவில் இருந்து அறுவை சிகிச்சையை செய்த ரோபோடிக் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
- இரைப்பை அமிலப் பின்னடைவு நோய் (GERD) பாதிப்புள்ள 23 வயது நோயாளிக்கு பெருங்குடியில் உள்ள ஜெம் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

- வெவ்வேறு இடங்களில் உள்ள மருத்துவர்கள் இணைந்து செயல்பட அனுமதிக்கின்ற இரண்டு முனையங்களைக் கொண்ட ரோபோடிக் அமைப்பைப் பயன்படுத்தி இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.
- ஒரு அறுவை சிகிச்சை நிபுணர் வாபியிலிருந்து (குஜராத்) இயக்கிய அதே வேளையில், மற்றொருவர் சென்னையில் நிகழ்நேரத்தில் உதவினார்.
- இதுவே இந்தியாவின் முதல் நீண்ட தூர இரட்டை-முனைய ரோபோடிக் தொலைதூர அறுவை சிகிச்சை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாத்தான்குளம் வழக்கில் ஸ்ரீஹரன் வெற்றிடம்

- சாத்தான்குளம் காவல் நிலைய மரண வழக்கில் மதுரை நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ள நிலையில் இது "ஸ்ரீஹரன் வெற்றிடத்தை" முன்னிலைப்படுத்துகிறது.
- 2020 ஆம் ஆண்டில் கடுமையான காவல்துறை சித்திரவதை காரணமாக தந்தையும் மகனும் காவலில் கொல்லப்பட்டதை இந்த வழக்கு உள்ளடக்கியது.
- மரண தண்டனை வழங்குவதற்காக பச்சன் சிங் எதிர் பஞ்சாப் மாநில வழக்கில் கூறப்பட்ட "அரிதினும் அரிதான" விதியை விசாரணை நீதிமன்றம் பயன்படுத்தியது.
- இந்திய ஒன்றியம் Vs வி. ஸ்ரீஹரன் வழக்கின்படி, விசாரணை நீதிமன்றங்கள் தண்டனை குறைப்பு (முன்கூட்டியே விடுதலை) இல்லாமல் குறிப்பிட்ட காலத்திற்கான ஆயுள் தண்டனையை வழங்க முடியாது.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (CrPC) பிரிவு 433A-இன் கீழ், தண்டனை குறைப்புக்கு முன்பு ஆயுள் தண்டனைக்கு குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் சிறை வாசத்தை நிர்ணயிக்கிறது.
- இந்த விதியின் காரணமாக நீதிபதிக்கு, ஆயுள் தண்டனை (குறைந்தபட்சம் 14 ஆண்டுகள்) அல்லது மரண தண்டனை ஆகிய இரண்டு தெரிவுகள் மட்டுமே இருந்தன.
- 14 ஆண்டுகளுக்கும் மரண தண்டனைக்கும் இடையிலான இந்த இடைவெளி "ஸ்ரீஹரன் வெற்றிடம்" என்று அழைக்கப்படுகிறது, இதில் விசாரணை நீதிமன்றங்களுக்கு நடுத்தர அளவிலான தண்டனை வழங்க எந்த வாய்ப்பும் இல்லை.
- கடுமையான குற்றங்களுக்காக இந்திய உச்ச நீதிமன்றமானது "சிறப்பு வகை தண்டனைகளை" (தண்டனை குறைப்பு இல்லாமல் 20-30 ஆண்டுகள் சிறை போன்றவை) உருவாக்கியது.
- ஆனால் இந்திய உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் போன்ற உயர் நீதிமன்றங்கள் மட்டுமே இந்த விருப்பத்தைப் பயன்படுத்த முடியும், விசாரணை நீதிமன்றங்களால் பயன்படுத்த முடியாது.

## தமிழ்நாடு கந்துவட்டி புகார் வலைத்தளம்

- கந்துவட்டியால் பாதிக்கப்பட்டவர்கள் புகார்களை அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு இணையதளம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த வலைத்தளமானது தமிழ்நாடு பணத்தைக் கடனாக வழங்கும் நிறுவனங்கள் (கட்டாய நடவடிக்கைகளைத் தடுத்தல்) சட்டம், 2025 இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

- பணத்தைக் கடனாக வழங்குவதை முறைப்படுத்துவதையும், கட்டாய, நியாயமற்ற மற்றும் சட்டவிரோதமான முறையில் பணத்தை வசூலிக்கும் நடைமுறைகளைத் தடுப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த வலைத்தளம் பதிவு செய்தல், புதுப்பித்தல், தாக்கல் செய்தல் மற்றும் குறை தீர்த்தல் போன்ற சேவைகளை வழங்குகிறது.
- இது விவசாயிகள், பெண்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் போன்ற கடன் பெறுபவர்களை சட்டவிரோதமாக நடந்துகொள்ளும் கந்துவட்டிக்காரர்களிடமிருந்து பாதுகாக்கிறது.
- கட்டாய வசூல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ₹5 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப் படலாம்.

## தேர்தலில் தமிழ்நாட்டின் முதலமைச்சர்கள்

- தமிழ்நாட்டு வாக்காளர்கள் பலமுறை முதலமைச்சர்களையும் தோற்கடித்து, வலுவான தேர்தல் பொறுப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளனர்.
- 1952 ஆம் ஆண்டில், முதலமைச்சர் பி.எஸ். குமாரசுவாமி ராஜா (காங்கிரஸ்) ஸ்ரீவில்லிபுத்தூரில் சுயேட்சை வேட்பாளர் டி.கே. ராஜாவிடம் தோல்வியடைந்தார்.
- 1967 ஆம் ஆண்டில், காங்கிரஸை தோற்கடித்து திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) ஆட்சிக்கு வந்தது; ஸ்ரீபெரும்புதூரில் முதலமைச்சர் எம். பக்தவத்சலம் 8,926 வாக்குகள் வித்தியாசத்தில் டி. இராஜரத்தினத்திடம் தோல்வியடைந்தார்.
- அதே 1967 ஆம் ஆண்டுத் தேர்தலில், முன்னாள் முதலமைச்சர் கே. காமராஜர் விருதுநகரில் பி. சீனிவாசனிடம் 1,285 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்த நிலையில் இது காங்கிரஸ் ஆதிக்கத்தின் வீழ்ச்சியைக் குறித்தது.
- 1967 ஆம் ஆண்டிற்குப் பிறகு, கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக பதவியிலிருந்த எந்த முதலமைச்சரும் தேர்தலில் தோல்வியடையவில்லை, இருப்பினும் 1996 ஆம் ஆண்டில், கடுமையான ஆட்சி எதிர்ப்பு அலை காரணமாக, முதலமைச்சர் ஜெ. ஜெயலலிதா பர்கூர் தொகுதியில் 8,366 வாக்குகள் வித்தியாசத்தில் இ.ஜி. சுகவனத்திடம் (திமுக) தோல்வியடைந்தார்.
- ஜானகி ராமச்சந்திரன் முதலமைச்சரான பிறகு ஆண்டிப்பட்டியில் போட்டியிட்ட தனது ஒரே தேர்தலில் தோல்வியடைந்தார்.
- மு. கருணாநிதி சட்டமன்றத் தேர்தலில் ஒருபோதும் தோல்வியடைந்ததில்லை (13 முறை வென்றுள்ளார்), மற்றும் எம்.ஜி. ராமச்சந்திரனும் எந்தத் தேர்தலிலும் தோல்வி அடைந்ததில்லை.
- மு.க. ஸ்டாலின் மற்றும் எடப்பாடி கே. பழனிசாமி ஆகியோர் முதலமைச்சர்களாக ஆவதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களில் தோல்வியடைந்துள்ளனர்.

## சிவாஜி மற்றும் அப்சல் கான் குறித்த கல்வெட்டுகள்

- பிரகதீஸ்வரர் கோயில் கல்வெட்டுகள் சிவாஜி மற்றும் அப்சல் கானுக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க போரை விவரிக்கின்றன.

- மராத்தி மொழியில் எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டுகள், விநாயகர் சன்னதிக்கு அருகிலுள்ள தென்மேற்குச் சுவர்களில் அமைந்துள்ளன.
- இவை இரண்டாம் சரபோஜி மன்னரின் காலத்தைச் சேர்ந்தவை மற்றும் போன்ஸ்லே வம்சத்தின் வரலாற்றைப் பதிவு செய்கின்றன.
- மகாராஷ்டிராவின் ஜவாலி கோட்டையில் நடந்த சந்திப்பின் போது சிவாஜி, புலி நகத்தைப் பயன்படுத்தி அப்சல் கானை எவ்வாறு கொன்றார் என்பதை அவை விவரிக்கின்றன.
- மருது சகோதரர்களுக்கு எதிரான போரின் போது ஆங்கிலேயர்களுக்கு இரண்டாம் சரபோஜி அளித்த ஆதரவையும் இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.
- மேலும், டேனிஷ் மிஷனரியான பிரடெரிக் கிறிஸ்டியன் ஸ்வார்ட்ஸ் மற்றும் தஞ்சாவூரில் மராத்தியர்களின் ஆட்சி குறித்த குறிப்புகளும் இவற்றில் இடம் பெற்று உள்ளன.

## தமிழ்நாடு அரசியல் மாற்றம் 1967

- 1967 ஆம் ஆண்டுத் தேர்தலின் மூலம் திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) தமிழ்நாட்டில் முதல்முறையாக ஆட்சி அமைத்தது.
- சுதந்திர இந்தியாவில் ஒரு மாநிலக் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸைத் தோற்கடித்து ஆட்சிக்கு வந்தது அதுவே முதல் முறையாகும்.
- முன்னதாக 1962 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் காஞ்சிபுரம் தொகுதியில் சி.என். அண்ணாதுரை அவர்கள், எஸ்.வி. நடேச முதலியாரிடம் சுமார் 10,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்திருந்தார்.
- 1967 ஆம் ஆண்டில், அண்ணாதுரை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை; மாறாக தென் சென்னை மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- சட்டமன்றத்தில் திமுக அமோக பெரும்பான்மையைப் பெற்ற பிறகு, அண்ணாதுரை முதலமைச்சரானார்; பின்னர் சட்ட மேலவை உறுப்பினரானார்.
- 1967 ஆம் ஆண்டு முதல், எந்த ஒரு தேசியக் கட்சியும் தமிழ்நாட்டில் தனித்து ஆட்சி அமைக்கவில்லை.

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026

- தமிழ்நாடு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 அன்று சட்டமன்றத் தேர்தலில் தனது அதிகபட்ச வாக்குப்பதிவு சதவீதத்தைப் பதிவு செய்தது.
- மாநிலம் சுமார் 84.69% வாக்குப்பதிவை (தற்காலிகமானது) எட்டிய நிலையில் இது அதன் தேர்தல் வரலாற்றில் மிக உயர்ந்ததாகும்.
- 234 சட்டமன்றத் தொகுதிகளில் காலை 7 மணி முதல் 4.85 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர்.
- 17வது தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இத்தேர்தல் நடைபெற்றது.
- சிறப்பு தீவிர திருத்தம் (SIR) (வாக்காளர் பட்டியல் திருத்தம்) 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாக்காளர்களின் அளவைக் குறைத்தது என்பதுடன் அதிக வாக்குப் பதிவில் இது முக்கியப் பங்கு வகித்தது.

## தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு நிலவரம்

- இந்தியத் தேர்தல் ஆணையமானது இம்முறை சாதனை அளவிலான வாக்களிப்புப் பதிவாகியுள்ள அதே வேளையில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையில் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத மிகக் குறைந்த அளவிலான வளர்ச்சியே ஏற்பட்டு உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.
- தமிழ்நாடு தனது மாநில வரலாற்றில் மிகவும் அதிகப்படியானதாக 85.15% என்ற எக்காலத்திற்குமான அதிகபட்ச வாக்குப்பதிவை பதிவு செய்துள்ளது.
- இருந்த போதிலும், வாக்குப்பதிவு விகிதத்திற்கும் தேர்தல் முடிவுகளுக்கும் இடையே ஒரு சீரான முறை எதுவும் இல்லை.
- 2021-ஆம் ஆண்டை விட பதிவான வாக்குகளின் அதிகரிப்பு சுமார் 5.5% ஆகும், இது கடந்த 15 ஆண்டுகளில் மிகக்குறைந்த உயர்வாகும்.
- முந்தைய அதிகரிப்புகள் 6.22% (2021), 18.5% (2016), மற்றும் 11.4% (2011) ஆக இருந்தன.
- இந்த அதிக வாக்குப்பதிவிற்கு முக்கிய காரணம் வாக்காளர் பட்டியலின் சிறப்பு தீவிர திருத்த (SIR) பணியே ஆகும்.
- சிறப்பு தீவிர திருத்த (SIR) பயிற்சியின் காரணமாக நிகர அளவில் சுமார் 68 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்.
- இந்த மாநிலம் ஒட்டுமொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை பதிவு செய்திருந்தாலும், அது சுமார் 24.8 லட்சம் மட்டுமே இருந்ததுடன் இது 31.1 லட்சம் (2016–2021) மற்றும் 64.8 லட்சம் (2011–2016) என்பதை விடக் குறைவு.
- பெண்களின் வாக்குப்பதிவு (85.76%) ஆண்களின் வாக்குப்பதிவை (83.57%) விட அதிகமாக இருந்ததுடன் இது பெண்களின் அதிக பங்கேற்பை காட்டுகிறது.
- சுமார் 2.93 கோடியில் 2.51 கோடி பெண்கள் வாக்களித்தனர், அதேசமயம் 2.8 கோடியில் 2.34 கோடி ஆண்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர்.
- கரூர் மற்றும் வீரபாண்டி தொகுதிகளில் அதிகபட்சமாக தலா 93.40% வாக்குகள் பதிவாகியுள்ளன.
- தமிழ்நாடு முழுவதும் உள்ள 75,064 வாக்குச்சாவடிகளில் எங்கும் மறுவாக்குப் பதிவு பரிந்துரைக்கப்படவில்லை.

## பனையூர் தொல்லுயிர் எச்சங்கள் - ஹோலோசீன் காலம்

- தூத்துக்குடி மாவட்டம் பனையூரில் காணப்பட்ட தொல்லுயிர் எச்சங்கள் ஹோலோசீன் காலத்தை (சுமார் 8,000–12,000 ஆண்டுகளுக்கு முந்தையது) சேர்ந்தவை என ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- இந்திய விலங்கியல் ஆய்வகம் (ZSI) கள ஆய்வு மற்றும் அறிவியல் பகுப்பாய்வுகளின் அடிப்படையில் இந்த ஆய்வை மேற்கொண்டது.
- மன்னார் வளைகுடா அருகே கண்டெடுக்கப்பட்ட இந்தத் தொல்லுயிர் எச்சங்களில், முக்கியமாக இருவோட்டு உயிரினங்கள் மற்றும் வயிற்றுக்காலிகள் (gastropods) உள்ளிட்ட நான்கு பிரிவுகளைச் சேர்ந்த 104 மாதிரிகள் அடங்கும்.
- பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நீடிக்கும் சுற்றுச்சூழல் தொடர்ச்சியைக் காட்டும் விதமாக இந்த உயிரினங்கள் தற்போதைய கடல்வாழ் உயிரினங்களை ஒத்திருக்கின்றன.

- இந்தத் தொல்லுயிர் எச்சங்கள் மிதமான நீரோட்டம் மற்றும் வெப்பமான வெப்ப மண்டல நிலைமைகளுடன் கூடிய ஆழமற்ற கடல் மற்றும் முகத்துவாரச் சூழலைக் குறிக்கின்றன.

## தமிழ்நாட்டின் வலுவான பொருளாதார வளர்ச்சி

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் தரவுகளின்படி, 2025-26 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 10.83% என்ற அதிக உண்மையான பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 11.19% வளர்ச்சியைத் தொடர்ந்து, இது தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக எட்டப்பட்ட இரட்டை இலக்க வளர்ச்சியாகும், மேலும் இது அகில இந்திய சராசரியான 7.4%-ஐ விட அதிகமாகும் (அடிப்படை ஆண்டு: 2011-12).
- 2021-22 முதல் 2025-26 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், மாநிலம் சராசரியாக 9.07% வளர்ச்சியை எட்டியுள்ளது, இது 5.21% (2016-17 முதல் 2020-21 வரை) மற்றும் 7.18% (கோவிட் காலத்திற்கு முந்தைய காலம்) ஆகியவற்றை விட அதிகமாகும்.
- மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP), 2024-25 ஆம் ஆண்டில் ₹31.19 லட்சம் கோடியாக இருந்த நிலையில், 2025-26 ஆம் ஆண்டில் 13.16% பெயரளவு வளர்ச்சி விகிதத்துடன் (பணவீக்கத்தையும் உள்ளடக்கியது) ₹35.29 லட்சம் கோடியாக உயர்ந்து உள்ளது.
- இந்தியாவின் இரண்டாவது பெரிய மாநிலப் பொருளாதாரமாகத் திகழும் தமிழ்நாடு, 15.91% (2021-22), 14.47% (2022-23), 13.34% (2023-24), 15.98% (2024-25) என்ற அளவில் தொடர்ந்து அதிக பெயரளவு வளர்ச்சியைக் கொண்டுள்ளது.
- இரண்டாம் நிலைத் துறை 15%, சேவைத் துறை 8.5%, மற்றும் முதன்மைத் துறை 6% என வளர்ச்சி அடைந்துள்ளதோடு இவை அனைத்தும் தேசிய சராசரியை விட அதிகமாகும்.
- வேளாண் துறை 2023-24 ஆம் ஆண்டில் –1.96% மற்றும் 2024-25 ஆம் ஆண்டில் –1.83% என்ற எதிர்மறை வளர்ச்சிக்குப் பிறகு, 2025-26 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 9% வளர்ச்சியுடன் வலுவான மீட்சியைக் காட்டியுள்ளது.
- மாநிலத்தின் தனிநபர் வருமானம் ₹4.08 லட்சத்தை எட்டியுள்ள நிலையில் இது கர்நாடகாவுக்கு (₹4.33 லட்சம்) அடுத்தபடியாக இரண்டாவது இடமாகும்.

## நீதித்துறை அதிகாரிகளின் ஓய்வு வயது

- நீதித்துறை அதிகாரிகளின் ஓய்வு வயதை 60-லிருந்து 61 அல்லது 62 ஆக உயர்த்துவதற்கான முன்மொழிவைத் தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருகிறது.
- இந்த முன்மொழிவு கீழ்நிலை நீதிமன்றங்களில் உள்ள நடுவர்கள், முன்சீப்கள், சார்பு நீதிபதிகள், அமர்வு நீதிபதிகள் மற்றும் மாவட்ட நீதிபதிகளை உள்ளடக்கியதாகும்.
- தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஏற்கனவே நீதித்துறை அதிகாரிகளின் ஓய்வு வயதை உயர்த்தியுள்ளதால், இதுவும் நடைமுறைப்படுத்தப்பட அதிக வாய்ப்புள்ளது.
- தெலுங்கானா மாநில நீதித்துறை (பணி மற்றும் இடமாற்றம்) விதிகள், 2023-இன் மூலம் தெலுங்கானா ஓய்வு வயதை 61 ஆக உயர்த்தியது, அதே சமயம், ஆந்திரப் பிரதேசம் 2024 ஆம் ஆண்டு நவம்பர் 1 முதல் அமலுக்கு வரும் வகையில் 60-லிருந்து 61 ஆக உயர்த்தியது.

- ஓய்வு பெறும் வயதை 58-இல் இருந்து 60 ஆக உயர்த்திய அகில இந்திய நீதிபதிகள் சங்க வழக்கு மற்றும் அதனைத் தொடர்ந்து 1993 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளை இந்த முன்மொழிவு மேற்கோள் காட்டுகிறது.
- ஊதியம், படிகள் மற்றும் பணி நிலைமைகள் குறித்த முதல் தேசிய நீதித்துறை ஊதியக் குழுவின் (ஷெட்டி கமிஷன்) பரிந்துரைகளையும் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.
- பி.வி. ரெட்டி தலைமையிலான இரண்டாவது தேசிய நீதித்துறை ஊதியக் குழு (2017), இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான பணி நிலைமைகள் இருக்க வேண்டியதன் அவசியத்தையும், தேங்கி நிற்கும் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அனுபவம் வாய்ந்த நீதிபதிகளைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டியதன் தேவையையும் வலியுறுத்தியது.
- கீழ்நிலை நீதித்துறையில் இந்தியாவின் ஓய்வு வயதான 60 என்பது, ஐக்கிய பேரரசு, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான் மற்றும் கனடா (இங்கு 70-75 வயதாக உள்ளது) போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் உலகிலேயே மிகக் குறைவான ஒன்றாகும்.

### வரலாற்றுக்கு முந்தைய கால பாறை ஓவியம் - நீலகிரி

- நீலகிரி மாவட்டத்தில் வரலாற்றுக்கு முந்தைய கால பாறை ஓவியங்கள் உள்ள இடம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- கோத்தகிரி அருகே வெள்ளரிக்கோம்பை கிராமத்தில் அமைந்துள்ள "ஊர் பாறை" என்று அழைக்கப்படும் இந்த இடம் இருளர் மற்றும் குரும்பர் பழங்குடியினருக்கு புனிதமான இடமாகும்.
- கடினமான மலைப்பகுதியில் கள ஆய்வின் போது, 'யாக்கை' பாரம்பரிய அறக்கட்டளை ஆராய்ச்சியாளர்களால் இது மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- மனித உருவங்கள், நீளமான வடிவங்கள் மற்றும் சடங்கு குறியீடுகள் உட்பட காவி நிறத்திலான சுமார் 30 உருவங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- இது வரலாற்றுக்கு முந்தைய செயல்பாடுகளின் வெவ்வேறு காலகட்டங்களைக் குறிக்கின்ற வகையில் இந்த ஓவியங்கள் பல கட்டங்களையும் அடுக்குகளையும் காட்டுகின்றன.
- கடல் மட்டத்திலிருந்து சுமார் 1100 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்த இடத்தை, முக்கியமாக கோடைக்காலத்தில் பாரம்பரிய கொடி ஏணிகளைப் பயன்படுத்தி மட்டுமே அணுக முடியும்.

## தேசியச் செய்திகள்

### புதிய தொலைக்காட்சி மதிப்பீட்டுக் கொள்கை 2026

- பார்வையாளர்களின் அளவீட்டில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்த தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் புதிய தொலைக்காட்சி மதிப்பீட்டுக் கொள்கையை அறிவித்துள்ளது.
- அதிக முகமைகளை அனுமதிக்கவும், இத்துறையில் போட்டியை அதிகரிக்கவும் நிகர மதிப்புத் தேவை ₹20 கோடியிலிருந்து ₹5 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- நியாயமான மற்றும் பாரபட்சமற்ற மதிப்பீடுகளை உறுதிப்படுத்த, வாரிய உறுப்பினர்களில் குறைந்தது 50% பேர் சுயேச்சையானவர்களாகவும், ஒளிபரப்பாளர்கள் அல்லது விளம்பரதாரர்களுடன் தொடர்பு இல்லாதவர்களாகவும் இருக்க வேண்டும்.
- துல்லியமான தொலைக்காட்சி பார்வையாளர் தரவைச் சேகரிக்க, மீட்டர்கள் பொருத்தப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை குறுகிய காலத்தில் 80,000 ஆகவும், பின்னர் 1.2 லட்சமாகவும் உயர்த்தப்படும்.
- உட்புற மற்றும் வெளிப்புற என இரட்டைத் தணிக்கை முறை அறிமுகப் படுத்தப் பட்டு உள்ளது.
- தரவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முகமைகள் DPDP (டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்பு) சட்டம், 2023-ஐப் பின்பற்ற வேண்டும்.
- 2014 வழி காட்டுதல்களுக்கு மாற்றாக அமையும் இக்கொள்கை நம்பகமான தொலைக் காட்சி பார்வையாளர் அளவீட்டு முறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## இந்திய எரிசக்தி புள்ளிவிவரங்கள் 2026

- தேசியப் புள்ளிவிவர அலுவலகம் "இந்திய எரிசக்தி புள்ளிவிவரங்கள் 2026" என்ற வெளியீட்டை வெளியிட்டது.
- இது நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற எரிசக்தி ஆதாரங்களின் இருப்பு, திறன், உற்பத்தி, நுகர்வு மற்றும் இறக்குமதி-ஏற்றுமதி குறித்த தரவுகளை வழங்குகிறது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் மொத்த முதன்மை எரிசக்தி விநியோகம் 2.95% அதிகரித்து 9,32,816 KToe-ஐ எட்டியது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 47,04,043 மெகாவாட்டை எட்டியது என்ற நிலையில் இதில் சூரிய ஆற்றல் சுமார் 71% என்ற அதிகபட்ச பங்கைக் கொண்டுள்ளது.
- நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 2,29,346 மெகாவாட்டாக அதிகரித்து உள்ளது மற்றும் மின் உற்பத்தியும் சீரான வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- தனிநபர் எரிசக்தி நுகர்வு அதிகரித்துள்ளது என்பதோடு மேலும் மின் கடத்துதல் மற்றும் விநியோக இழப்புகள் சுமார் 22%-லிருந்து 17%-ஆகக் குறைந்துள்ளன.
- நிலக்கரி தொடர்ந்து முதன்மையான எரிசக்தி ஆதாரமாக இருந்தது அதே நேரத்தில் மொத்த இறுதி எரிசக்தி நுகர்வு இக்காலகட்டத்தில் 30%-க்கும் அதிகமாக அதிகரித்து உள்ளது.
- எரிசக்தி துறைக்கான கடன் ஓட்டம் 2021 ஆம் ஆண்டில் ₹1,688 கோடியாக இருந்த நிலையில் 2025 ஆம் ஆண்டில் அது ₹10,325 கோடியாக கணிசமாக அதிகரித்துள்ளது.

## சாம்ராட் சம்ப்ரதி அருங்காட்சியகம் மற்றும் குறைக்கடத்தி ஆலை

- பிரதமர் குஜராத்தில் சாம்ராட் சம்ப்ரதி அருங்காட்சியகம் மற்றும் ஒரு குறைக்கடத்தி ஆலையைத் திறந்து வைத்தார்.
- காந்திநகரில் உள்ள கோபாவில் அமைந்துள்ள சாம்ராட் சம்ப்ரதி அருங்காட்சியகம் ஆனது சமண வரலாறு மற்றும் பேரரசர் சம்ப்ரதிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

- மேம்பட்ட திறன்கொண்ட ஆற்றல் தொகுதிகளை தயாரிப்பதற்காக சானந்தில் கெய்ன்ஸ் குறைக்கடத்தி ஆலை திறக்கப்பட்டது.
- இந்த ஆற்றல் தொகுதிகளானது வாகனங்கள் மற்றும் தொழில் துறை அமைப்புகளில் திறமையான மின் கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்தப் படுகின்றன.

## சிந்தாடா ஆனந்த் Vs ஆந்திரப் பிரதேச அரசு

- கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய ஒரு நபர், பட்டியலிடப்பட்ட சாதியினர் அந்தஸ்தைக் கோர முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- மாதிகா சமூகத்தைச் சேர்ந்த ஒரு போதகர் தொடர்பான 'சிந்தாடா ஆனந்த் Vs ஆந்திரப் பிரதேச அரசு' என்ற வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
- தற்போதைய சட்டத்தின்படி, பட்டியலிடப்பட்ட சாதியினர் அந்தஸ்து என்பது இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் பௌத்தர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று நீதிமன்றம் கூறியது.
- இந்திய அரசியலமைப்பின் சரத்து 341-இன் கீழ் பட்டியலிடப்பட்ட சாதியினர் பற்றி வரையறுக்கப் பட்டுள்ளன.
- பல தலித் கிறிஸ்தவர்கள் தங்களைப் பட்டியலிடப்பட்ட சாதியினர் பிரிவில் சேர்க்கக் கோரி வருவதால் இந்த விவகாரம் முக்கியத்துவம் பெறுகிறது.
- முன்னதாக ரங்கநாத் மிஸ்ரா ஆணையம், மதமாற்றம் செய்த தலித்துகளுக்கும் பட்டியலிடப் பட்ட சாதியினர் அந்தஸ்தை நீட்டிக்க பரிந்துரை செய்திருந்தது.

## மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 – முதல் டிஜிட்டல் கணக்கெடுப்பு

- இந்தியா தனது முதல் முழுமையான டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்பை 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் நடத்த உள்ளது.
- இது தொடக்கத்திலிருந்து 16-வது கணக்கெடுப்பாகவும், 1947 சுதந்திரத்திற்குப் பிறகு 8-வது கணக்கெடுப்பாகவும் அமையும்.
- முதன்முறையாக அலைபேசி செயலிகள் மற்றும் சுய-கணக்கெடுப்பு முறை பயன்படுத்தப் படும்; இதன் மூலம் குடிமக்கள் 16 மொழிகளில் இணையவழியில் விவரங்களைச் சமர்ப்பிக்கலாம்.
- இந்தக் கணக்கெடுப்பு 'மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948' மற்றும் 'மக்கள் தொகை கணக்கெடுப்பு விதிகள் 1990'-இன் கீழ் நடத்தப்படும்.
- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரை வீட்டுப் பட்டியல் தயாரிப்பு மற்றும் 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு என இவை இரண்டு கட்டங்களாக நடத்தப்படும்.
- இதற்கான அதிகாரப்பூர்வ குறிப்புத் தேதி 2027 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆகும்; ஆனால் பருவநிலை காரணமாக சில மலைப்பகுதிகளில் குறிப்புத் தேதியானது 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 1, ஆக இருக்கும்.

## IRCC சான்றிதழ்கள் - இந்தியா

- நகோயா நெறிமுறையின் கீழ் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட இணக்கச் சான்றிதழ்களை (IRCCs) வழங்குவதில் இந்தியா உலக அளவில் முதலிடம் பிடித்துள்ளது.

- இந்தியா 3,561 IRCC-களை வழங்கியுள்ளது, இது உலகளவில் வழங்கப்பட்ட மொத்த சான்றிதழ்களில் 56 சதவீதத்திற்கும் அதிகமாகும்.
- இந்த IRCC சான்றிதழ்கள், மரபணு வளங்களைப் பயன்படுத்துவதற்கான முன்னறிவிப்பு மற்றும் பரஸ்பர ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை உறுதிப்படுத்துகின்றன.
- நகோயா நெறிமுறையானது உயிரியல் வளங்களிலிருந்து கிடைக்கும் நன்மைகளை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் பகிர்ந்துகொள்வதை உறுதி செய்கிறது.
- இந்தியாவின் இந்தச் சாதனைக்கு 2002 ஆம் ஆண்டின் உயிரியல் பன்முகத்தன்மைச் சட்டம் மற்றும் அதன் வலுவான செயல்பாட்டு முறை ஆகியவை முக்கியக் காரணமாகும்.
- தேசிய பல்லுயிர் ஆணையம், மாநில பல்லுயிர் வாரியங்கள் மற்றும் பல்லுயிர் மேலாண்மைக் குழுக்கள் இணக்க நடவடிக்கைகளில் உதவுகின்றன.
- இந்த நெறிமுறையில் உள்ள 142 நாடுகளில் 34 நாடுகள் மட்டுமே IRCC-களை வழங்கியுள்ளன, அதில் இந்தியா உலகளவில் முன்னணியில் உள்ளது.

## ஜன் விஸ்வாஸ் மசோதா 2026

- சட்ட விதிகளை சீர்திருத்துவதற்காக 'ஜன் விஸ்வாஸ் (திருத்தச் சட்ட) மசோதா 2026'-ஐ மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதா சிறு குற்றங்களை குற்றமற்றதாக்குவதையும், தொழில் செய்வதை எளிதாக்குவதையும் மற்றும் வாழ்க்கை முறையை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 23 மத்திய அமைச்சகங்களால் நிர்வகிக்கப்படும் 79 மத்திய சட்டங்களைத் திருத்த முன்மொழிகிறது.
- மொத்தம் 784 விதிகள் திருத்தப்பட்டுள்ளன; இதில் 717 விதிகள் குற்றமற்றதாக்கப் பட்டுள்ளன மற்றும் 67 விதிகள் எளிதான வாழ்க்கைக்காக மாற்றப்பட்டுள்ளன.
- இது சிறு குற்றங்களுக்கான சிறைத் தண்டனைக்கு பதிலாக, குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப பண ரீதியான அபராதங்களை மாற்றீடு செய்கிறது.
- பழைய சட்டங்களை எளிமைப்படுத்துதல், நீதிமன்ற வழக்குகளைக் குறைத்தல் மற்றும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட நிர்வாகத்தை மேம்படுத்துவதில் இந்த மசோதா கவனம் செலுத்துகிறது.

## RUPPகளுக்கான பொதுவான தேர்தல் சின்னங்கள்

- இந்தியத் தேர்தல் ஆணையமானது (ECI) தேர்தல் சின்னங்கள் (இடஒதுக்கீடு மற்றும் ஒதுக்கீடு) (திருத்த) ஆணை, 2026-இன் கீழ், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் (RUPPs) பொதுவான சின்னங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கான விதிகளைத் தளர்த்தியுள்ளது.
- ஒரு மாநிலத்தில் நடந்த கடந்த இரண்டு தேர்தல்களில் ஏதேனும் ஒன்றில் குறைந்தது 1% செல்லுபடியாகும் வாக்குகளைப் பெற்றிருந்தால், அந்த RUPPகள் பொதுவான சின்னத்தைத் தக்க வைத்துக் கொள்ளலாம்.

- முன்னதாக, கட்சிகள் கடந்த தேர்தலில் 1% வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் முந்தைய இரண்டு தேர்தல்களிலும் ஒரே சின்னத்தில் போட்டியிட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது.
- இந்தத் திருத்தம், அரசியலமைப்பின் சரத்து 324 மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 ஆகியவற்றின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.
- இது உண்மையான அரசியல் கட்சிகளை ஊக்குவிக்கவும், தீவிரமற்ற கட்சிகளை அமைப்பிலிருந்து நீக்கவும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேர்தல் சின்னங்கள், தேர்தல் சின்னங்கள் (இடஒதுக்கீடு மற்றும் ஒதுக்கீடு) ஆணை, 1968-இன் கீழ் ஒதுக்கப்படுகின்றன.

## தேசிய PNG இயக்கம் 2.0

- நாடு முழுவதும் எரிவாயு இணைப்புகளை விரிவாக்கும் நோக்கில், தேசிய PNG (குழாய் மூலம் விநியோகிக்கப்படும் இயற்கை எரிவாயு) இயக்கம் 2.0-ஐ அரசாங்கம் 2026 ஆம் ஆண்டு 30 ஜூன் வரை நீட்டித்துள்ளது.
- வீடுகள், வணிக நிறுவனங்கள், விடுதிகள் மற்றும் உணவகங்களில் PNG இணைப்புகளை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மார்ச் மாதத்தில் 3.1 லட்சத்திற்கும் அதிகமான இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் 2.7 லட்சத்திற்கும் அதிகமான புதிய இணைப்புகள் சேர்க்கப்பட்டு வருகின்றன.
- உள்நாட்டு PNG இணைப்புகளை விரைவுபடுத்துமாறு நகர எரிவாயு விநியோக நிறுவனங்களுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.
- பெட்ரோல், டீசல், LPG மற்றும் PNG ஆகியவற்றின் போதுமான இருப்பு நாடு முழுவதும் பராமரிக்கப்படுகிறது.
- இந்த முன்னெடுப்பு தூய்மையான எரிபொருள் பயன்பாட்டை ஊக்குவிக்கிறது மற்றும் சுற்றுச்சூழல் மாசு மற்றும் பாரம்பரிய எரிபொருட்கள் மீதான சார்பைக் குறைக்கிறது.

## E20 எரிபொருள் அறிமுகம்

- தூய்மையான மற்றும் நிலையான போக்குவரத்தை ஊக்குவிக்க அரசாங்கம் E20 எரிபொருள் ஆணையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- E20 எரிபொருள் என்பது வாகனங்களில் பயன்படுத்தப்படும் 20% எத்தனால் மற்றும் 80% பெட்ரோல் கலந்த கலவையாகும்.
- E20 எரிபொருளின் குறைந்தபட்ச ஆக்டேன் மதிப்பீடு 95 RON (ஆய்வுக்கான ஆக்டேன் எண்) ஆகும், இது சாதாரண பெட்ரோலை மதிப்பீட்டை விட அதிகம்.
- எத்தனால் ($C_2H_5OH$) என்பது கரும்பு, மக்காச்சோளம் மற்றும் தானியங்கள் போன்ற பயிர்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் ஒரு புதுப்பிக்கத்தக்க உயிரி எரிபொருள் ஆகும்.
- இது பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைக்க உதவுகிறது மற்றும் எஞ்சின் செயல் திறனை மேம்படுத்துகிறது.
- இந்த முன்னெடுப்பு கச்சா எண்ணெய் இறக்குமதி மீதான தேவையைக் குறைத்து நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துகிறது.

## சாதனா சப்தா 2026 – தேசிய திறன் மேம்பாட்டு முன்னெடுப்பு

- கர்மயோகி திட்டத்தின் கீழ், திறன் மேம்பாட்டு ஆணையத்தால் சாதனா சப்தா 2026 நடத்தப்படும்.
- Sādhana என்பதன் விரிவாக்கம் தேசிய முன்னேற்றத்திற்காக தகவமைப்பு மேம்பாடு மற்றும் மனிதநேயத் திறன்களை வலுப்படுத்துதல் என்பதாகும்.
- இது 100-க்கும் மேற்பட்ட அமைச்சகங்கள், 30-க்கும் மேற்பட்ட மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் 250-க்கும் மேற்பட்ட ஆட்சிப் பணிப் பயிற்சி நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு நாடு தழுவிய திறன் மேம்பாட்டு முன்னெடுப்பாகும்.
- விக்சித் பாரத் 2047-இன் இலக்குகளை அடைய அரசு ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதில் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது.
- இது தொழில்நுட்பம், பாரம்பரியம் மற்றும் உறுதியான முடிவுகள் ஆகிய மூன்று சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டது.
- இது விதிகளின் அடிப்படையிலான நிர்வாகத்திலிருந்து, கடமைகளின் அடிப்படையிலான நிர்வாகத்திற்கு மாறுவதை ஊக்குவிக்கிறது.

## FCRA திருத்த மசோதா 2026

- வெளிநாட்டுப் பங்களிப்பு (முறைப்படுத்தல்) சட்டம், 2010-இல் திருத்தம் செய்ய, வெளிநாட்டுப் பங்களிப்பு (முறைப்படுத்தல்) திருத்த மசோதா, 2026 ஆனது மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- தேசிய நலன் மற்றும் பாதுகாப்பைப் பாதுகாப்பதற்காக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் (NGOs) பெறும் வெளிநாட்டு நிதியை முறைப்படுத்துவதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- FCRA பதிவு ரத்து செய்யப்படும்போது அல்லது ஒப்படைக்கப்படும்போது, நிதி மற்றும் சொத்துக்களை நிர்வகிக்க ஒரு பிரத்யேக அதிகாரியை நியமிக்க இது முன்மொழிகிறது.
- வெளிநாட்டுப் பங்களிப்புகளைச் சரியாக நிர்வகிக்க இந்த அதிகாரியை நியமிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கும்.
- இது வழிபாட்டுத் தலங்களின் மதத் தன்மையை பிரிவு 16A(7)-இன் கீழ் பராமரிப்பதை உறுதி செய்கிறது.
- FCRA பதிவு மீண்டும் வழங்கப்பட்டால், நிறுவனங்கள் தங்கள் சொத்துக்களின் மீதான கட்டுப்பாட்டை மீண்டும் பெற இது அனுமதிக்கிறது.

## இந்தியப் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி 2025–26

- 2025–26 ஆம் நிதியாண்டில் இந்தியாவானது ₹38,424 கோடி மதிப்பிலான பாதுகாப்பு ஏற்றுமதியைச் செய்து சாதனை படைத்துள்ளதாக பாதுகாப்புத துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இது முந்தைய ஆண்டின் ₹23,622 கோடியிலிருந்து 62.66% வளர்ச்சியாகும்.
- மொத்த ஏற்றுமதியில் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் (DPSUs) 54.84% பங்கையும், தனியார் துறை 45.16% பங்கையும் வழங்கியுள்ளன.
- பொதுத்துறை நிறுவனங்களின் ஏற்றுமதி 151% வளர்ச்சியடைந்துள்ளது, அதே சமயம் தனியார் துறை ஏற்றுமதி 14% அதிகரித்துள்ளது.

## நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து - NCERT

- தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் சபையானது (NCERT), மத்திய கல்வி அமைச்சகத்தால் ஒரு தனித்துவமான பிரிவின் கீழ் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.
- பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) நிபுணர் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் இந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் NCERT இப்போது ஆராய்ச்சித் திட்டங்கள், முனைவர் பட்டப் (PhD) படிப்புகள் மற்றும் புதுமையான கல்வித் திட்டங்களைத் தொடங்க முடியும்.
- NCERT என்பது இந்தியாவில் பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்காக 1961 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்காகப் பாடப்புத்தகங்கள், ஆராய்ச்சி மற்றும் கொள்கைகளை உருவாக்குகிறது.

## திவால்நிலை மற்றும் நொடித்தல் சட்டத் திருத்த மசோதா 2026

- இந்திய நாடாளுமன்றம், திவால்நிலை மற்றும் நொடித்தல் சட்ட (திருத்த) மசோதா, 2026-ஐ நிறைவேற்றியுள்ளது.
- தாமதங்களைக் குறைக்கவும், தீர்வு செயல்முறைகளை மேம்படுத்தவும் 2016-ஆம் ஆண்டின் திவால்நிலை மற்றும் திவாலாகுதல் சட்டத்தில் இந்த மசோதா திருத்தங்களை மேற்கொள்கிறது.
- நலிவடைந்த நிறுவனங்களை மீட்டெடுக்கவும், வணிக மதிப்பைத் தக்க வைக்கவும், திவால் கட்டமைப்பை வலுப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒரு முக்கிய மாற்றமாக, சந்தேகத்திற்குரிய பணப் பரிவர்த்தனைகளைத் விசாரிக்கும் காலமானது திவால் மனு தாக்கல் செய்வதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை என அதிகரிக்கப்பட்டுள்ளது.
- வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த, கடன் வழங்குநர்களின் குழுவானது தீர்வு விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணங்களைக் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.

## இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன்

- 2025-ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் இந்தியா உலகளவில் 3-வது இடத்தில் உள்ளதாக சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை (IRENA) தெரிவித்து உள்ளது.
- ஓராண்டில் சுமார் 45 GW கூடுதலாகச் சேர்க்கப்பட்டு, இந்தியாவின் மொத்த புதுப்பிக்கத் தக்க எரிசக்தித் திறன் சுமார் 250.5 GW-ஐ எட்டியுள்ளது.
- இதில் சூரிய ஆற்றல் சுமார் 37 GW பங்களிப்புடன் மிகப்பெரியப் பங்களிப்பாளராக உள்ளது, அதைத் தொடர்ந்து காற்றாலை எரிசக்தி வளர்ச்சி பெற்றுள்ளது.
- காற்றாலை மின்சாரம் சுமார் 6.3 GW சேர்க்கப்பட்டுள்ள அதே நேரத்தில் நீர்மின் உற்பத்தித் திறனும் அதிகரித்துள்ளது.
- 2030-ஆம் ஆண்டிற்குள் 500 GW புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை எட்டுவதற்கான இந்தியாவின் இலக்கிற்கு இது வலு சேர்க்கிறது.

## உள்நாட்டு எரிவாயு எதிர்கால விலையின் மீதான வர்த்தகம்

- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமானது (SEBI) இந்தியாவின் முதல் உள்நாட்டு அளவுகோல் அடிப்படையிலான இயற்கை எரிவாயு எதிர்கால விலையின் மீதான வர்த்தகத்தைத் தொடங்க, தேசியப் பங்குச் சந்தைக்கு (NSE) அனுமதி வழங்கி உள்ளது.
- இவை இந்திய எரிவாயுப் பரிமாற்றகத்தால் (IGX) உருவாக்கப்பட்ட GIXI (இந்திய எரி வாயு குறியீடு) உடன் இணைக்கப்பட்டுள்ளன.
- எரிவாயு எதிர்கால விலையின் மீதான வர்த்தகம் என்பது வாங்குபவர்களும் விற்பனையாளர்களும் எதிர்கால விநியோகத்திற்காக ஒரு குறிப்பிட்ட விலையில் முன் கூட்டியே உடன்படும் ஒப்பந்தங்களாகும்.
- இது உலகளாவிய மற்றும் உள்நாட்டு எரிவாயு விலைகளுக்கு இடையிலான வேறுபாட்டினால் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.
- இது எரிவாயு உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நிலையான மற்றும் கணிக்கக்கூடிய விலையைப் பெற உதவும்.
- இந்தியா தனது மொத்த எரிசக்தி பயன்பாட்டில் இயற்கை எரிவாயுவின் பங்கினை தற்போதுள்ள 7%-லிருந்து 2030 ஆம் ஆண்டிற்குள் 15%-ஆக உயர்த்த இலக்கு வைத்து உள்ளது.

## INS சுனைனா – IOS சாகர் கடல்சார் திட்டம்

- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்தச் செய்வதற்காக, சாகர் திட்டத்தின் கீழ் INS சுனைனா கப்பல் ஈடுபடுத்தப் பட்டுள்ளது.
- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பு, கப்பல் போக்குவரத்து சுதந்திரம் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- 16 வெளிநாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இதில் பங்கேற்கின்றனர் மற்றும் இந்தக் கப்பல் கூட்டுப் பயிற்சி மற்றும் நல்லுறவு நடவடிக்கைகளுக்காக கொழும்பு, சிங்கப்பூர், ஜகார்த்தா, புக்கெட், சிட்டகாங், யாங்கூன், மாலே மற்றும் கொச்சி போன்ற துறைமுகங்களுக்குச் செல்லும்.
- இப்பயிற்சி கப்பல் செலுத்துதல், தீயணைப்பு, சேதக் கட்டுப்பாடு மற்றும் தேடுதல் மற்றும் பிடிப்பு (VBSS) உள்ளிட்ட பல்வேறு திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இடதுசாரி தீவிரவாதம் – 2026 புள்ளிவிவரங்கள்

- மத்திய உள்துறை அமைச்சகம் 2026 ஆம் ஆண்டில் இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப் பட்ட மாவட்டங்களின் வகைப்பாட்டை மாற்றியமைத்துள்ளது.
- "மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள்" என்ற பழைய வகைப்பாட்டிற்குப் பதிலாக, தற்போது “LWE பாதிக்கப்பட்ட,” “கவனத்திற்குரிய மாவட்டங்கள்” மற்றும் “மரபு மற்றும் உத்வேக மாவட்டங்கள்” என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- 2024–25 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மொத்த எண்ணிக்கை 38 ஆக மாற்றமின்றி உள்ளது.

- 2005 ஆம் ஆண்டில் 200-க்கும் மேற்பட்ட மாவட்டங்களாக இருந்த "சிவப்பு வழித்தடம்", 2026 ஆம் ஆண்டில் வெறும் 2 மாவட்டங்களாக வெகுவாகக் குறைந்துள்ளது.
- சத்தீஸ்கரின் பிஜாப்பூர் மற்றும் ஜார்கண்டின் மேற்கு சிங்பம் ஆகிய இரண்டு மாவட்டங்கள் மட்டுமே தற்போது "LWE பாதிக்கப்பட்ட" மாவட்டங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- சத்தீஸ்கரின் கான்கேர் மாவட்டம் "கவனத்திற்குரிய மாவட்டமாக" வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- 9 மாநிலங்களில் உள்ள மொத்தம் 35 மாவட்டங்கள் "மரபு மற்றும் உத்வேக மாவட்டங்கள்" பிரிவின் கீழ் வருகின்றன.
- இடதுசாரி தீவிரவாதத்தை எதிர்கொள்வதற்கான தேசியக் கொள்கை மற்றும் செயல் திட்டம் 2015 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## ஜியோ பார்சி திட்டம்

- சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தின் உலகளாவிய பார்சி பதிவு இயக்கத்தின் மூலம் சுமார் 300 புதிய பதிவுகள் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, ஜியோ பார்சி திட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.
- இந்தியாவில் பார்சி மக்களின் மக்கள் தொகை குறைவதைத் தடுப்பதற்காக, 2013-14 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- கருவுறுதல் சிகிச்சை, கர்ப்பகால பராமரிப்பு மற்றும் குடும்ப ஆதரவு சேவைகள் போன்ற அறிவியல் ரீதியான உதவிகள் மூலம் மக்கள் தொகையை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தகுதியுள்ள பார்சி தம்பதிகளுக்கு நேரடிப் பணப்பரிமாற்றம் (DBT) மூலம் நிதி உதவி வழங்கப் படுகிறது.
- மாநில அரசுகள் மற்றும் பார்சி நிறுவனங்களின் ஆதரவுடன், பயோ மெட்ரிக் சரிபார்ப்பு முறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## சேத்தக் திட்டம்

- எல்லைச் சாலைகள் அமைப்பு (BRO), ராஜஸ்தானின் பிகானேரில் சேத்தக் திட்டத்தின் 47வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- இந்தியாவின் மேற்கு எல்லைப் பகுதிகளில் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளை மேம்படுத்தவும் பராமரிக்கவும் 1980-ஆம் ஆண்டில் இது நிறுவப்பட்டது.
- இது ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்களில் செயல்படுகிறது, குறிப்பாக இந்திய-பாகிஸ்தான் எல்லைக்கு அருகிலான சாலை இணைப்பை மேம்படுத்துகிறது.
- இத்திட்டத்தின் கீழ் சுமார் 4,000 கி.மீ-க்கும் அதிகமான சாலைகள் மற்றும் பாதுகாப்பு ஆதரவுக்காக 214 கி.மீ நீளமுள்ள பாதுகாப்பு அகழிகள் மற்றும் வரப்புகள் அமைக்கப் பட்டுள்ளன.
- இது படைகள் மற்றும் உபகரணங்களின் விரைவான நடமாட்டத்திற்கு உதவுவதன் மூலம் தேசியப் பாதுகாப்பையும் பிராந்திய வளர்ச்சியையும் வலுப்படுத்துகிறது.

## துறைமுகங்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க சரக்கு கையாளுதல்

- இந்தியாவின் முக்கிய துறைமுகங்களானது 2025–26 ஆம் நிதியாண்டில் 904 மில்லியன் டன் என்ற இலக்கை விட அதிகம் மற்றும் 7.06% வளர்ச்சியைப் பெற்றுள்ள சாதனை அளவான 915.17 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டுள்ளன.
- சிறப்பாகச் செயல்பட்ட துறைமுகங்களில் தீன்தயாள் துறைமுக ஆணையம் (160.11 MT), பாரதீப் துறைமுக ஆணையம் (156.45 MT) மற்றும் ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையம் (102.01 MT) ஆகியவை அடங்கும்.
- மோர்முகாவ் துறைமுக ஆணையம் மற்றும் கொல்கத்தா கப்பல்துறை அமைப்பு ஆகியவற்றில் அதிவேக வளர்ச்சி காணப்பட்டது.
- சிறந்த உள்கட்டமைப்பு, மேம்படுத்தப்பட்ட இணைப்பு, டிஜிட்டல் அமைப்புகள் மற்றும் கப்பல் சென்று திரும்பும் சராசரி நேரம் ஆகியவை இந்த வளர்ச்சிக்குக் காரணங்கள் ஆகும்.
- இந்தியா 12 முக்கிய துறைமுகங்களைக் கொண்டுள்ளது, இவை வளர்ந்து வரும் உலகளாவிய வர்த்தகத்திற்குப் பெரும் ஆதரவாக உள்ளன.

## ASISSE கணக்கெடுப்பு

- தேசியப் புள்ளியியல் அலுவலகம் (NSO) 2024-25 ஆம் ஆண்டிற்கான முதலாவது ASISSE கணக்கெடுப்பைத் தொடங்கியது.
- ASISSE (பதிவு செய்யப்பட்ட சேவைத் துறை நிறுவனங்களின் ஆண்டு ஆய்வு) என்பது பதிவு செய்யப்பட்ட சேவைத் துறை நிறுவனங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை (LLP) நிறுவனங்களின் தரவுகளைச் சேகரிக்கிறது.
- இது வர்த்தகம், போக்குவரத்து, விருந்தோம்பல், தகவல் தொழில்நுட்பம் (IT), கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளை உள்ளடக்கியது.
- இந்த ஆய்வு சரக்கு மற்றும் சேவை வரி வலையமைப்புத் (GSTN) தரவைப் பயன்படுத்துகிறது மற்றும் சுமார் 21 லட்சம் நிறுவனங்களை உள்ளடக்கியது.
- இது 2008-ஆம் ஆண்டின் புள்ளிவிவரச் சேகரிப்புச் சட்டம் மற்றும் 2023-ஆம் ஆண்டின் ஜன் விஸ்வாஸ் சட்டத்தின் கீழ் நடத்தப்படுகிறது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 50%-க்கும் மேல் பங்களிக்கும் சேவைத் துறையை துல்லியமாக அளவிட இது உதவுகிறது.

## தலைமைத் தேர்தல் ஆணையர் நீக்க தீர்மானம்

- தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) ஞானேஷ் குமாரை நீக்குவதற்கான தீர்மானத்தை மாநிலங்களவைத் தலைவர் மற்றும் மக்களவைத் தலைவர் ஆகியோர் நிராகரித்தனர்.
- இந்தத் தீர்மானத்தில் 130 மக்களவை உறுப்பினர்களும், 63 மாநிலங்களவை உறுப்பினர்களும் கையெழுத்திட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் 12 அன்று சமர்ப்பித்தனர்.
- தலைமைத் தேர்தல் ஆணையரை நீக்கும் முறை அரசியலமைப்பின் சரத்து 324(5)-இன் படி, உச்ச நீதிமன்ற நீதிபதியை நீக்கும் முறைக்கு இணையானது.
- தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்களின் நீக்கம், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளின் நீக்கத்திற்குப் பின்பற்றப் படும் அதே நடைமுறையையே பின்பற்றுகிறது.

- அவைத் தலைவர்கள், 1968 ஆம் ஆண்டு நீதிபதிகள் (விசாரணை) சட்டத்தின் 3 ஆம் பிரிவை மேற்கோள் காட்டினர்.
- நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது திறமையின்மை மட்டுமே நீக்கத்திற்கான காரணங்களாக இருக்க முடியும்.
- இந்தத் தீர்மானத்தில் குறைந்தபட்சம் 100 மக்களவை அல்லது 50 மாநிலங்களவை உறுப்பினர்கள் கையெழுத்திட வேண்டும் மற்றும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சிறப்புப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.
- இரு அவைகளிலும் ஒப்புதல் அளித்த பிறகு, இறுதி நீக்க உத்தரவு குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப்படும்.

## கனிமச் சலுகை விதிகள் திருத்தம்

- சுரங்க குத்தகை விதிகளை எளிமையாக்குவதற்காக மத்திய சுரங்க அமைச்சகம் கனிமச் சலுகை விதிகளில் திருத்தங்களை அறிவித்துள்ளது.
- இது ஆழமான கனிமங்களின் சுரங்க குத்தகை அல்லது கலப்பு உரிமம் வைத்து இருப்பவர்களுக்கு, அருகிலுள்ள பகுதிகளை ஒருமுறை சேர்த்துக் கொள்ள அனுமதிக்கிறது.
- ஏற்கனவே உள்ள சுரங்க குத்தகையில் சிறு கனிமங்கள் உட்பட தொடர்புடைய பிற கனிமங்களைச் சேர்க்க இது வழிவகை செய்கிறது.
- மாநில அரசு, விண்ணப்பம் செய்த 30 நாட்களுக்குள் இத்தகையச் சேர்க்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.
- 2025-ஆம் ஆண்டின் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்கு முறை) சட்டத்திற்கு முன்னதாக, சிறு கனிமங்களுக்காக வழங்கப்பட்ட குத்தகைகளில் முக்கிய கனிமங்களைச் சேர்ப்பதற்கான விதிகளையும் இது வழங்குகிறது.

## சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் திட்டம் 2026

- இந்தியாவின் தேர்தல் முறையை உலகளாவியப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக்காட்டும் வகையில், இந்தியத் தேர்தல் ஆணையம் IEVP 2026 திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ஒரு வெளிநாட்டுத் தொடர்புத் திட்டமான இதில் வெளிநாட்டுத் தேர்தல் அதிகாரிகள் இந்தியாவுக்கு வருகை தந்து, உலகின் மிகப்பெரிய ஜனநாயகத் தேர்தல் நடத்தப் படும் முறையை நேரடியாகப் பார்வையிடுவார்கள்.
- தேர்தல்களில் வெளிப்படைத்தன்மை, நேர்மை, வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் நவீனத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு ஆகியவற்றை விளக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இரண்டு கட்டங்களாக நடைபெறும் இத்திட்டத்தின் கீழ், பிரதிநிதிகள் அசாம், கேரளா, புதுச்சேரி, மேற்கு வங்காளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்குச் செல்வார்கள்.
- அவர்கள் வாக்குச் சாவடிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கைச் சோதனை (VVPAT) ஆகியவற்றின் செயல்பாடுகளைப் பார்வையிடுவார்கள்.

- அடிமட்ட அளவிலான தேர்தல் நிர்வாகத்தைப் புரிந்து கொள்ள, முதன்மைத் தேர்தல் அதிகாரிகள் (CEO) மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுடனான (DEO) சந்திப்புகள் நடத்தப்படும்.

## போஷன் பக்வாடா 2026

- இந்தியா முழுவதும் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 முதல் 23 ஆம் தேதி வரை 8-வது போஷன் பக்வாடாவை அரசு அனுசரித்து வருகிறது.
- ஊட்டச்சத்து விளைவுகளை மேம்படுத்துவதற்காக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- "Maximizing Brain Development in the First Six Years of Life" என்பது இதன் கருத்துருவாகும்.
- இது ஆரம்பகால குழந்தைப் பருவ ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தை, குறிப்பாக முதல் 1,000 நாட்களை முன்னிலைப்படுத்துகிறது.
- தாய் மற்றும் குழந்தை ஊட்டச்சத்து, ஆரம்பகாலத் தூண்டுதல், விளையாட்டு அடிப்படையிலான கற்றல் மற்றும் திரை நேரத்தைக் குறைத்தல் ஆகியவை முக்கிய கவனம் செலுத்தப்படும் பகுதிகளாகும்.

## ஆரோக்ய வன் முன்னெடுப்பு

- நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் மருத்துவ குணமுடைய மரங்களை நடுவதற்காக 'ஆரோக்ய வன்' என்ற முன்னெடுப்பை இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) தொடங்கியுள்ளது.
- பல்லுயிர் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பின் மீள்திறனை மேம்படுத்தும் வகையில், மருத்துவ தாவரங்களைக் கொண்ட பசுமை வழித்தடங்களை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் முதல் கட்டத்தில், பல்வேறு மாநிலங்களில் உள்ள 17 நிலப்பரப்புகளில் (62.8 ஹெக்டேர்) சுமார் 67,000 மரங்கள் நடப்பட உள்ளன.
- வேளாண்-பருவநிலை தகுதியின் அடிப்படையில் வேம்பு, நெல்லி, நாவல் போன்ற சுமார் 36 வகையான மரக்கன்றுகள் நடப்படும்.

## NSTFDC வெள்ளி விழா

- தேசியப் பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSTFDC) தனது 25வது ஸ்தாபன தினத்தை ஏப்ரல் 10 அன்று புதுதில்லியில் கொண்டாடியது.
- பழங்குடியின சமூகங்களுக்கான நிதி உள்ளடக்கம் மற்றும் வருமான வாய்ப்புகளை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- NSTFDC ஆனது 2001 ஆம் ஆண்டில் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தின் கீழ் ஒரு பொதுத்துறை நிறுவனமாக (PSU) நிறுவப்பட்டது.
- இது இந்தியாவில் உள்ள பழங்குடியினரின் (STs) சமூக-பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காக செயல்படுகிறது.
- சுயவேலைவாய்ப்புக்காக சலுகைக் கடன்கள் மற்றும் திறன் மேம்பாட்டு ஆதரவை இக்கழகம் வழங்குகிறது.

- இது மாநில வழிகாட்டும் முகமைகள் மூலம் செயல்படுகிறது மற்றும் இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக் கூட்டமைப்பின் (TRIFED) உதவியுடன் பழங்குடியினரின் தயாரிப்புகளை சந்தைப்படுத்த ஆதரவளிக்கிறது.

## மாநிலங்களவை நியமன உறுப்பினர் - ஹரிவன்ஷ்

- புதுதில்லியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களால் பரிந்துரைக்கப் பட்டதையடுத்து, மாநிலங்களவை நியமன உறுப்பினராக ஹரிவன்ஷ் நாராயண் சிங் பதவியேற்றார்.
- நாடாளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவையில் இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமூக சேவை போன்ற துறைகளில் உள்ள அனுபவத்திற்காக குடியரசுத் தலைவரால் நியமன உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- ரஞ்சன் கோகோய் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்ப இவர் பரிந்துரைக்கப் பட்டார்.
- இவரது இரண்டாவது பதவிக்காலம் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 அன்று முடிவடைந்த நிலையில், 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 அன்று மீண்டும் பதவியேற்றார்.
- ஐக்கிய ஜனதா தால் கட்சியின் மூத்த தலைவரான இவர், முதன்முதலில் 2018 ஆம் ஆண்டில் மாநிலங்களவை துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPF) பொது நிர்வாகச் சட்டம் 2026

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களின் ஒப்புதலுக்குப் பிறகு, மத்திய ஆயுதக் காவல் படைகள் (பொது நிர்வாகம்) சட்டம், 2026-ஐ அரசு அறிவித்துள்ளது.
- இச்சட்டம் மத்திய ஆயுதக் காவல் படைகளில் (CAPF) ஆள்சேர்ப்பு மற்றும் சேவை விதிகளுக்கு ஒரே மாதிரியான அமைப்பை உருவாக்குகிறது.
- இது CRPF (மத்திய ரிசர்வ் போலீஸ் படை), BSF (எல்லைப் பாதுகாப்புப் படை), CISF (மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப் படை), ITBP (இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படை) மற்றும் SSB (சஷஸ்த்ர சீமா பால்) போன்ற படைகளை உள்ளடக்கியது.
- காவல்துறைத் தலைவர் பதவிகளில் 50 சதவீதமும், கூடுதல் கூடுதல் தலைமை இயக்குநர் பதவிகளில் குறைந்தபட்சம் 67 சதவீதமும் இந்தியக் காவல் பணி (IPS) அதிகாரிகளை அயற்பணியில் நியமிப்பதன் மூலம் நிரப்பப்படும்.
- முந்தைய சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகளை மீறி விதிகளை வகுக்க இச்சட்டம் மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- தேசியப் பாதுகாப்பு, எல்லை மேலாண்மை மற்றும் உள்நாட்டுச் சட்ட அமலாக்கத்தில் CAPF முக்கியப் பங்கு வகிக்கிறது.

## ECOSOC தேர்தல் 2026 - இந்தியா

- 2026 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக சபைத் (ECOSOC) தேர்தலில் இந்தியா போட்டியின்றி நான்கு இடங்களை வென்றுள்ளது.
- பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான குழுவிற்கு (CESCR) பிரீத்தி சரண் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆணையம் (CSTD), அரசு சாரா நிறுவனங்களுக்கான குழு (NGOs) மற்றும் திட்டம் மற்றும் ஒருங்கிணைப்புக்கான குழு (CPC) ஆகியவை பிற அமைப்புகளில் அடங்கும்.
- தேர்தல்கள் ஆனது வாக்கெடுப்பு இன்றி, ஒருமனதாக நடைபெற்றன.
- ECOSOC என்பது 1945 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 54 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. வின் முக்கிய அமைப்பாகும்.
- இது ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது.

## சூரியசக்தி உற்பத்தியில் சாதனை வளர்ச்சி

- 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியா இதுவரை இல்லாத அளவாக 45 ஜிகாவாட் (GW) சூரியசக்தித் திறனைக் கூடுதலாகச் சேர்த்துப் பதிவு செய்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மட்டும் 6.65 GW சூரியசக்தித் திறன் சேர்க்கப் பட்டுள்ள நிலையில் இது ஒரு மாதத்தில் சேர்க்கப்பட்ட மிக அதிகபட்ச அளவு ஆகும்.
- ராஜஸ்தான், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் சூரியசக்தி வளர்ச்சியில் முன்னணியில் உள்ளன.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனில் பிரேசிலை பின்னுக்குத் தள்ளி உலகளவில் இந்தியா மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.
- மொத்த மின் உற்பத்தியில் புதைபடிவமற்ற எரிபொருட்களின் பங்களிப்பு 29.2% ஆக உள்ளது என்ற நிலையில் 2025 ஆம் ஆண்டில் புதைபடிவமற்ற மூலங்களிலிருந்து 50% நிறுவப்பட்ட திறனை இந்தியா எட்டியுள்ளது.

## திறன் விளைவுகள் நிதித் திட்டம்

- இந்தியாவில் இளைஞர்களின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காக திறன் விளைவுகள் நிதியை உருவாக்குவதற்கான பிரச்சாரத்தை இந்திய அரசு தொடங்கி உள்ளது.
- இது நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் குறைந்த வருமானம் கொண்ட பின்னணியில் உள்ள இளைஞர்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிதியானது, வேலைவாய்ப்பு மற்றும் பணியில் நீடித்திருத்தல் போன்ற சரி பார்க்கப்பட்ட வேலை முடிவுகளுடன் நிதி உதவியை இணைக்கும் 'விளைவு அடிப்படையிலான நிதியளிப்பு' (OBF) முறையைப் பயன்படுத்துகிறது.
- திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் (MSDE) கீழ் செயல்படும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால் (NSDC) இது வழிநடத்தப்படும்.
- இது அரசு, தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களின் நிதியுதவியை ஒருங்கிணைக்கும் ஒரு கலப்பு நிதி மாதிரியைப் பின்பற்றுகிறது.
- இது வேலைவாய்ப்பை மையமாகக் கொண்ட திறன் மேம்பாட்டுத் திட்டங்களை விரிவுபடுத்துவதற்காக திறன் தாக்கப் பத்திரம் (2021) பெற்ற வெற்றியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## அலுமினியம் பாரத் முன்னெடுப்பு

- இந்தியாவின் அலுமினியத் துறையை வலுப்படுத்துவதற்காக 'அலுமினியம் அச்சேற்ற உற்பத்தியாளர்கள் சங்கம்' (ALEMAI) 'அலுமினியம் பாரத்' என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- இது அலுமினிய மதிப்புச் சங்கிலியை மேம்படுத்துவதையும், உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கத்தை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்துறை 10 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை ஆதரிக்கும் வேளையில் உற்பத்தி வீழ்ச்சி மற்றும் குறைந்த திறன் பயன்பாடு போன்றவற்றை எதிர் கொள்கிறது.
- அதிக மூலப்பொருள் மற்றும் எரிசக்தி செலவுகள், குறைவான பழைய இரும்பு / கழிவுகள் கிடைப்பது மற்றும் மலிவான இறக்குமதி ஆகியவை இதில் உள்ள சவால்கள் ஆகும்.
- இத்துறையை மேம்படுத்துவதற்காக ALEMAI அமைப்பு 'அலுமினியம் பாரத் 2026' என்ற நிகழ்வை குஜராத்தின் காந்திநகரில் நடத்தவுள்ளது.

## CPA மண்டலம் VII மாநாடு 2026

- காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் (CPA) இந்தியப் பிராந்திய மண்டலம் VII-இன் 2026-ஆம் ஆண்டுக்கான மாநாடு கோவாவில் நிறைவடைந்தது.
- இந்த மாநாடானது உள்ளடக்கிய நிர்வாகம் மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தியது.
- CPAன் கீழ் நடைபெற்ற இம்மாநாட்டில், மண்டலம் VII-ஐச் சேர்ந்த மாநிலங்களின் 51 சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.
- நீலப் பொருளாதாரம், கடலோர மேம்பாடு, வர்த்தகம் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவை குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.
- 1911 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு லண்டனைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் CPA, நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் சட்டமன்றங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.

## முந்த்ரா துறைமுக ஆட்டோமொபைல் ஏற்றுமதி

- ஒரே கப்பலில் சாதனை அளவாக 6,008 கார்களை ஏற்றி அனுப்பியதன் மூலம், இந்தியாவின் மிகப்பெரிய ஆட்டோமொபைல் ஏற்றுமதி மையமாக முந்த்ரா துறைமுகம் உருவெடுத்துள்ளது.
- அதானி போர்ட்ஸ் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலம் (APSEZ) நிறுவனத்தால் இயக்கப்படும் இத்துறைமுகம், தளவாடத் துறையில் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டி உள்ளது.
- இது அதிவேகமாக வாகனங்களை ஏற்றுவதற்கும் கையாளுதல் செலவுகளைக் குறைப்பதற்கும் உதவுகின்ற 'ரோல்-ஆன்/ரோல்-ஆஃப்' (RoRo) முனையத்தைப் பயன் படுத்துகிறது.
- இந்தச் சாதனை, வலுவான உற்பத்தி மற்றும் உலகளாவிய தேவையால் உந்தப்படும் இந்தியாவின் வளர்ந்து வரும் ஆட்டோமொபைல் ஏற்றுமதியை எடுத்துக்காட்டுகிறது.
- ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா ஆகியவை முக்கிய ஏற்றுமதி இடங்களாகும்.

## நீதிபதி யஷ்வந்த் வர்மா ராஜினாமா

- புது தில்லியில் தன்னை பதவியிலிருந்து நீக்குவதற்கான நாடாளுமன்ற பதவிநீக்க நடவடிக்கைகள் நடந்து வரும் நிலையில், அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா ராஜினாமா செய்தார்.
- அவர் தனது ராஜினாமா கடிதத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிடம் சமர்ப்பித்தார்.
- நீதிபதிகள் (விசாரணை) சட்டம், 1968-இன் கீழ் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவால் அமைக்கப்பட்ட நீதிபதிகள் விசாரணைக் குழுவிலிருந்து இது ஒரு "நியாயமற்ற" விசாரணை என்று கூறி அவர் விலகினார்.
- விசாரணை செயல்முறை மற்றும் பதவி நீக்க நடவடிக்கைகளை சவால் செய்து அவர் தாக்கல் செய்த மனுக்களை உச்ச நீதிமன்றமும் தள்ளுபடி செய்தது.
- உயர் நீதிமன்ற நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்வதற்கு இந்திய அரசியலமைப்பின் 124(4)வது சரத்துடன் இணைத்து வாசிக்கப்படும் 218வது சரத்தின் கீழ், நிரூபிக்கப் பட்ட தவறான நடத்தை அல்லது இயலாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் மட்டுமே ஒரு நீதிபதியை பதவியிலிருந்து நீக்க முடியும்.
- நீதிபதிகள் (விசாரணை) சட்டம், 1968ன் படி, பதவிநீக்கம் செய்ய நாடாளுமன்றத்தில் மக்களவையில் குறைந்தபட்சம் 100 நாடாளுமன்ற உறுப்பினர்கள் (MPs) அல்லது மாநிலங்களவையில் 50 உறுப்பினர்கள் கையெழுத்திட்ட தீர்மானம் தேவை.
- அதைத் தொடர்ந்து ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, இறுதியாக இரு அவைகளிலும் சிறப்புப் பெரும்பான்மையுடன் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.
- பதவி விலகும் பட்சத்தில், பணியிலிருந்து ஓய்வு பெறும் ஒரு நீதிபதிக்கு வழங்கப்படும் அதே ஓய்வூதியப் பலன்களைப் பெற ஒரு நீதிபதி தகுதியுடையவர் ஆவார்.
- அவரது பதவி விலகலுடன், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மீதான எதிர்கால நடவடிக்கை, இது வரை கண்டிராத ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைகிறது.
- இருப்பினும், பதவி நீக்கத் தீர்மானத்தின் அச்சுறுத்தல் முடிவுக்கு வந்தாலும், அரசாங்கம் மற்ற சட்ட வழிமுறைகளைக் கருத்தில் கொள்ளலாம் ஆனால் அதற்கு நீதித் துறையின் ஒப்புதல் தேவைப்படலாம்.
- ஒரு நீதிபதியின் குற்றத்தை (அவர் பதவியில் இருந்த காலத்திலிருந்து அவர் செய்த செயல்களுக்காக) எந்தவொரு நீதிமன்றமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமானால், வழக்குத் தொடர இந்தியத் தலைமை நீதிபதி அதற்கு அனுமதியை வழங்க வேண்டும்.

## சிந்தி மொழியில் இந்திய அரசியலமைப்பு

- 2026 ஆம் ஆண்டில் குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் இந்திய அரசியலமைப்பின் சிந்தி மொழிப் பதிப்பை வெளியிட்டார்.
- சுதந்திரத்திற்குப் பிறகு, தேவநாகரி எழுத்துருவில் சிந்தி மொழியில் அரசியலமைப்பு வெளியிடப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- சிந்தி மொழி 1967-ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு, இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

## வாக்குரிமை குறித்து உச்ச நீதிமன்றம் 2026

- ❖ வாக்களிக்கும் உரிமையும், தேர்தலில் போட்டியிடும் உரிமையும் ஒரு சட்ட ரீதியான உரிமையே தவிர, அடிப்படை உரிமை அல்ல என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- ❖ ராஜஸ்தானில் கூட்டுறவு சங்கத் தேர்தல் தொடர்பான வழக்கில் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 அன்று இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
- ❖ மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 போன்ற சட்டங்களால் இந்த உரிமைகள் நிர்வகிக்கப்படுகின்றன என்று நீதிமன்றம் கூறியது.
- ❖ அரசியலமைப்பின் பகுதி III இன் கீழ் உள்ள அடிப்படை உரிமைகளைப் போலன்றி, சட்ட ரீதியான உரிமைகள் சட்டங்களால் உருவாக்கப்படுகின்றன மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியும்.
- ❖ கூட்டுறவுத் தேர்தல்களுக்கான தகுதி விதிகளை (துணை விதிகள்) நீதிமன்றம் உறுதி செய்தது, அவை சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும் என்று கூறியது.
- ❖ கூட்டுறவுச் சங்கங்களின் உள் விவகாரங்களில் வெளிப்படையான சட்ட விரோதச் செயல்கள் இருந்தால் ஒழிய நீதிமன்றங்கள் தலையிடக் கூடாது என்றும் அது கூறியது.

## இந்தியாவில் காப்புரிமை விண்ணப்பங்கள் 2025–26

- ❖ 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியாவில் காப்புரிமை விண்ணப்பங்கள் 30.2% அதிகரித்து 1,43,729 ஆக உயர்ந்துள்ளது.
- ❖ இந்தியா இப்போது உலகில் காப்புரிமை தாக்கல் செய்யும் 6வது பெரிய நாடாக உள்ளது.
- ❖ சுமார் 69% விண்ணப்பங்கள் உள்நாட்டு விண்ணப்பதாரர்களிடமிருந்து வந்துள்ளன, இது "இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டது" என்பதை நோக்கிய மாற்றத்தைக் காட்டுகிறது.
- ❖ தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் இதில் முக்கியப் பங்களிப்பை வழங்கியுள்ளன.
- ❖ காப்புரிமை தாக்கல்கள் 45,444-இல் (2016-17) இருந்து 1,43,729 (2025-26) ஆக அதிகரித்து உள்ளது.
- ❖ இந்த நடைமுறையானது 1970 ஆம் ஆண்டின் காப்புரிமைச் சட்டத்தால் நிர்வகிக்கப் படுகிறது.

## இந்தியப் பெருங்கடல் மாநாடு 2026

- ❖ இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பை மையமாகக் கொண்ட 2026 ஆம் ஆண்டிற்கான 9வது இந்தியப் பெருங்கடல் மாநாடு மொரிஷியஸில் நிறைவடைந்தது.
- ❖ கடல்சார் முக்கியப் பாதைகளில் உள்ள கவலைகளைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தையும், நிலைத் தன்மைக்கான நம்பகமான கூட்டாண்மைகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் இந்தியா வலியுறுத்தியது.
- ❖ 40க்கும் மேற்பட்ட நாடுகளின் பங்கேற்புடன் இந்தியா ஃபவுண்டேஷன் அமைப்பால் இந்த மாநாடானது 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

- இது சாகர் தொலைநோக்குப் பார்வையின் கீழ் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் ஒத்துழைப்புக்கான ஒரு முக்கிய மன்றமாகும்.
- முக்கிய கடல் வழிகள் மற்றும் பாதைகளைக் கொண்ட இந்த பிராந்தியம், உலகளாவிய வர்த்தகம், எரிசக்தி வழிகள் மற்றும் கடல்சார் பாதுகாப்பிற்கு முக்கியமானதாகும்.

## சரத்து 142ன் கீழான உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள்

- இந்திய அரசியலமைப்பின் 142-வது சரத்தைப் பயன்படுத்தி உச்ச நீதிமன்றம் ஒரு திருமணத்தை ரத்து செய்துள்ளது.
- முழுமையான நீதியை வழங்குவதற்கான எந்தவொரு உத்தரவையும் பிறப்பிக்க சரத்து 142 நீதிமன்றத்தை அனுமதிக்கிறது.
- பணத்தைப் பெற்றுக்கொண்டு பரஸ்பர விவாகரத்து ஒப்பந்தத்திலிருந்து பின் வாங்கியது மற்றும் குடும்ப வன்முறை வழக்கைப் பதிவு செய்தது தொடர்பான வழக்கு இதுவாகும்.
- மத்தியஸ்தத்தின் மூலம் செய்யப்படும் ஒப்பந்தங்கள் சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தக் கூடியவை என்றும், அவற்றைத் தவறாகப் பயன்படுத்த முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்றும், அவை முறை அற்றவை என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.
- அனைத்து வழக்குகளையும் ரத்து செய்த நீதிமன்றம், மீதமுள்ள தீர்வுத் தொகையைச் செலுத்துமாறு உத்தரவிட்டது.

## ஸ்டார்ட்அப் இந்தியா நிதியங்களுக்கான நிதி 2.0

- ₹10,000 கோடி நிதியுடன் ஸ்டார்ட்அப் இந்தியா நிதியங்களுக்கான நிதி (FoF) 2.0 திட்டத்தை இந்திய அரசு அறிவித்துள்ளது.
- இது மூலதனத்தைத் திரட்டுவதையும், குறிப்பாக தனியார் முதலீடு குறைவாக உள்ள துறைகளில் உள்ள புத்தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2016 ஆம் ஆண்டு ஸ்டார்ட்அப் இந்தியா திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்களுக்கான நிதியங்களுக்கான நிதி (FFS) 1.0 இன் அடிப்படையில் உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த நிதியானது இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தில் (SEBI) பதிவு செய்யப்பட்ட மாற்று முதலீட்டு நிதிகளில் (AIFs) முதலீடு செய்யப்படும்.
- இத்திட்டத்தை இந்திய சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI) செயல்படுத்தும்.
- இது அதிநவீன தொழில்நுட்பம், ஆரம்ப கட்டப் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புதுமையான உற்பத்தித் துறைகளில் முக்கிய கவனம் செலுத்துகிறது.

## e-SafeHER முன்னெடுப்பு

- கிராமப்புறப் பெண்களுக்காக e-SafeHER என்ற இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வுத் திட்டத்தை இந்திய அரசு தொடங்கியுள்ளது.

- இது மூன்று ஆண்டுகளில் ஒரு மில்லியன் பெண்களுக்கு டிஜிட்டல் சூழலை பாதுகாப்பாகப் பயன்படுத்தப் பயிற்சியளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) தகவல் பாதுகாப்பு கல்வி மற்றும் விழிப்புணர்வு (ISEA) திட்டத்தின் கீழ் வருகிறது, மேலும் இதனை ரிலையன்ஸ் அறக்கட்டளையுடன் இணைந்து C-DAC செயல்படுத்துகிறது.
- இது இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் நடைமுறைகளைப் பரப்புவதற்காக சைபர் சகிக்களை உருவாக்கும்.
- கடைக்கோடி மக்களுக்கும் டிஜிட்டல் விழிப்புணர்வை ஏற்படுத்த, சுய உதவிக் குழுக்கள் (SHGs) மூலமாக சமூகம் சார்ந்த அணுகுமுறையை இது பின்பற்றுகிறது.
- இத்திட்டம் மத்தியப் பிரதேசம் மற்றும் ஒடிசாவில் முதலில் தொடங்கப்பட்டு, படிப் படியாக நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்.
- இது பாதுகாப்பான டிஜிட்டல் பரிவர்த்தனைகள், இணையவழி அபாயங்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் பெண்களை டிஜிட்டல் முறையில் உள்ளடக்குதல் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.

## மக்களவை விரிவாக்க முன்மொழிவு

- அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மக்களவை தொகுதி களின் எண்ணிக்கையை 543-லிருந்து 850 இடங்களாக விரிவுபடுத்த இந்திய அரசு முன்மொழிந்துள்ளது.
- மக்கள் தொகை வளர்ச்சியைச் சிறப்பாகப் பிரதிபலிக்கும் வகையில், மாநிலங்களுக்கு 815 இடங்களும், ஒன்றியப் பிரதேசங்களுக்கு 35 இடங்களும் இந்த முன்மொழிவில் அடங்கும்.
- இது நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதோடு தொடர்புடையது.
- தொகுதி மறுவரையறைக்குப் பிறகு 2029 பொதுத் தேர்தலிலிருந்து இந்த மாற்றங்கள் செயல்படுத்தப்பட வாய்ப்புள்ளது.
- தொகுதி மறுவரையறையானது மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகளை மீண்டும் வரையறுக்கும், இதில் 2011 ஆம் ஆண்டு அல்லது புதுப்பிக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவைப் பயன்படுத்துவது குறித்து விவாதம் நிலவுகிறது.
- அரசியலமைப்பின் 81-வது சரத்து ஆனது மக்களவையின் இயைபு மற்றும் இட ஒதுக்கீட்டை வரையறுக்கிறது.
- கடைசியாக 2002 ஆம் ஆண்டில் 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட்டது.
- இந்த முன்மொழிவுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் மாநிலங்களின் ஒப்புதல் தேவை.

## 131-வது அரசியலமைப்பு திருத்த மசோதா, 2026

- அரசியலமைப்பு (131-வது திருத்த) மசோதா, 2026 மக்களவையை விரிவுபடுத்தவும், முன்கூட்டியே மகளிர் இடஒதுக்கீட்டைச் செயல்படுத்தவும் முன்மொழிகிறது.

- ❖ இது மக்களவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 543-லிருந்து 850-ஆக (மாநிலங்களில் இருந்து 815 + ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து 35) அதிகரிக்க முன்மொழிகிறது.
- ❖ 2026 மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு முன்னதாக சமீபத்திய தரவுகளைப் பயன்படுத்தி தொகுதி மறுவரையறை செய்ய அனுமதிக்கும் வகையில், இது அரசியலமைப்பு ப்பிரிவுகள் 81, 82 மற்றும் 334A ஆகியவற்றை திருத்துகிறது.
- ❖ தொகுதி மறுவரையறைக்குப் பிறகு பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு (1/3) இட ஒதுக்கீட்டை உடனடியாக நடைமுறைப்படுத்த இது வழிவகை செய்கிறது.
- ❖ ஒரு புதிய தொகுதி மறுவரையறை ஆணையம் தொகுதிகளை மறுவரையறை செய்யும்; அதன் உத்தரவுகள் சட்டப்பூர்வமானவை மற்றும் அவற்றை எதிர்த்து நீதிமன்றத்தில் முறையீடு செய்ய முடியாது.

## தொகுதி மறுவரையறை மசோதா, 2026

- ❖ 2029 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்னதாக தேர்தல் தொகுதிகளை மறுவரையறை செய்வதற்காக 2026 ஆம் ஆண்டு தொகுதி மறுவரையறை மசோதா முன்மொழியப் பட்டுள்ளது.
- ❖ சமீபத்திய மக்கள் தொகை தரவுகளைப் பயன்படுத்தி மக்களவை மற்றும் மாநிலச் சட்டப் பேரவைகளின் எல்லைகளை மறுவரையறை செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பிறகு (2026 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது) தொகுதி மறுவரையறைக்கு விதிக்கப்பட்ட தடையை இது நீக்கும்.
- ❖ இந்தச் செயல்முறை அரசியலமைப்பின் 82 மற்றும் 170 வது சரத்துகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- ❖ ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையிலான தொகுதி மறுவரையறை ஆணையம், தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் மாநிலத் தேர்தல் ஆணையர்களுடன் இணைந்து இப்பணியை மேற்கொள்ளும்.
- ❖ "ஒரு நபர், ஒரு வாக்கு, ஒரே மதிப்பு" என்ற அடிப்படையில் சமமான மக்கள் தொகை பிரதிநிதித்துவத்தை இந்த ஆணையம் உறுதி செய்யும்.
- ❖ இதன் உத்தரவுகள் சட்டப்பூர்வமானவை மற்றும் எந்த நீதிமன்றத்திலும் இதனை எதிர்த்து முறையீடு செய்ய முடியாது.

## அரசியலமைப்பு (131வது திருத்த) மசோதா, 2026

- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான அரசியலமைப்பு (131வது திருத்த) மசோதா, 251 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மற்றும் 185 பேரின் எதிர்ப்புடன் வாக்கெடுப்புக்குப் பிறகு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 அன்று மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ இது மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் மேக்வாலால், தொகுதி மறுசீரமைப்பு மசோதா, 2026 மற்றும் ஒன்றியப் பிரதேசச் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2026 ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட ஒரு தொகுப்பாக அறிமுகப்படுத்தப் பட்ட நிலையில் மற்ற இரு மசோதாக்களும் இந்தத் திருத்தத்தையே சார்ந்துள்ளன.

- இம்மசோதா அரசியலமைப்பின் 81, 82, 170, 332 மற்றும் 334A ஆகிய சரத்துகளில் திருத்தங்களை மேற்கொள்ள முன்மொழிகிறது.
- இது மக்களவையின் பலத்தை அதிகபட்சமாக 850 உறுப்பினர்களாக உயர்த்த இலக்கு வைத்துள்ளது; இதில் மாநிலங்களில் இருந்து 815 வரையிலும் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து 35 வரையிலும் அடங்கும்.
- முன்னதாக, சரத்து 81 ஆனது மக்கள்தொகையின் அடிப்படையில் மக்களவையின் பலத்தை மாநிலங்களில் இருந்து 530 உறுப்பினர்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து 20 உறுப்பினர்கள் என வரம்பிற்குள் வைத்திருந்தது.
- 1976 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்த, மக்கள்தொகை அடிப்படையிலான இட மறுசீரமைப்பு மீதான நீண்டகாலத் தடையை இது நீக்குகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்குப் பிறகு வரும் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்புக்காகக் காத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்குவதன் மூலம், தொகுதி மறு சீரமைப்பை உடனடியாக மேற்கொள்ள இது அனுமதிக்கிறது.
- இட ஒதுக்கீட்டிற்கான மக்கள்தொகை, நாடாளுமன்றத்தால் தீர்மானிக்கப்படும் ஒரு மக்கள்தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டது என இது கூறுகிறது.
- தொகுதி மறுசீரமைப்புப் பொறுப்பை நாடாளுமன்றத்தின் முடிவிற்கு விடுவதற்குப் பதிலாக, மறுசீரமைப்பு ஆணையத்திடம் இது தெளிவாக வழங்குகிறது.
- அரசியலமைப்பின் 170-வது சரத்தின் கீழ் மாநிலச் சட்டமன்றங்களில் புதிய இட மறு சீரமைப்பு மற்றும் தொகுதிகளை மறுவரையறை செய்ய இது வழி வகை செய்கிறது.
- 2026 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பிறகு தொகுதி மறுசீரமைப்பை ஒத்தி வைத்த சரத்து 170-இன் மூன்றாவது நிபந்தனையை இது நீக்குகிறது.
- மாநிலங்களுக்குள் உள்ள தொகுதி எல்லைகள் புதுப்பிக்கப்பட்ட மக்கள்தொகை தரவுகளின் அடிப்படையில் மறுவரையறை செய்யப்படுவதை இது உறுதி செய்கிறது.
- தொகுதி மறுசீரமைப்புக்குப் பிறகு உடனடியாக மக்களவை மற்றும் மாநிலச் சட்ட மன்றங்களில் பெண்களுக்கான மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த இது உதவுகிறது.
- 2023 ஆம் ஆண்டின் 106வது திருத்தச் சட்டத்தால் கொண்டுவரப்பட்ட தாமத நிபந்தனையை நீக்க, சரத்து 334A-ஐ இது திருத்துகிறது.
- நாடாளுமன்றத்தால் நீட்டிக்கப்படா விட்டால், 106வது திருத்தம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பெண்களுக்கான இடஒதுக்கீடு தொடரும் என்று இது கூறுகிறது.
- எதிர்காலத் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் பெண்களுக்கான ஒதுக்கப்பட்ட தொகுதிகள் சுழற்சி முறையில் வருவதை இது உறுதி செய்கிறது.
- மாநிலச் சட்டமன்றங்களில் பட்டியலிடப்பட்ட பழங்குடியினரின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க இது பாதுகாப்புகளை வழங்குகிறது.
- குறிப்பாக அருணாச்சலப் பிரதேசம், மேகாலயா, மிசோரம், திரிபுரா மற்றும் நாகாலாந்து போன்ற வடகிழக்கு மாநிலங்களில் பழங்குடியினருக்கான இடங்கள் குறைக்கப் படாமல் இருப்பதை உறுதி செய்ய இது சரத்து 332-ஐ திருத்துகிறது.

## மாநிலங்களவை துணைத் தலைவர்கள் குழு

- மாநிலங்களவை தனது அவையின் சுமூகமான செயல்பாட்டிற்காக துணைத் தலைவர்கள் குழுவை மறுசீரமைத்துள்ளது.
- பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தினேஷ் சர்மா, எஸ். பாங்னான் கொன்யாக், கன்ஷியாம் திவாரி, பூலோ தேவி நேதம், மு. தம்பிதுரை மற்றும் சஸ்மித் பத்ரா உட்பட ஆறு உறுப்பினர்கள் இதற்காகப் பரிந்துரைக்கப்பட்டனர்.
- தலைவர் மற்றும் துணைத் தலைவர் இல்லாத நேரங்களில் இக்குழுவின் உறுப்பினர்கள் அவைக்குத் தலைமை தாங்கி, விவாதங்களையும் ஒழுங்கையும் நிர்வகிப்பார்கள்.
- மாநிலங்களவையின் தலைவர் இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர் ஆவார், மேலும் துணைத் தலைவர் இந்த அவையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்.
- இக்குழு நிரந்தரமான அரசியலமைப்புப் பதவி அல்ல, உறுப்பினர்கள் சுழற்சி மற்றும் தற்காலிக அடிப்படையில் பணியாற்றுகின்றனர்.
- இந்த அமைப்பு நாடாளுமன்ற நடவடிக்கைகளின் தொடர்ச்சி, நெகிழ்வுத் தன்மை மற்றும் சுமூகமான செயல்பாட்டை உறுதி செய்கிறது.

## 131-வது அரசியலமைப்பு திருத்த மசோதா, 2026 – தோல்வி

- அரசியலமைப்பு (நூற்று முப்பத்து ஒன்றாவது திருத்தம்) மசோதா, 2026-ஐ மக்களவை நிராகரித்தது.
- அவைக்கு வந்து வாக்களித்த 528 உறுப்பினர்களில், 298 பேர் மசோதாவுக்கு ஆதரவாகவும் 230 பேர் எதிராகவும் வாக்களித்த வேளையில் யாரும் வாக்கெடுப்பை புறக்கணிக்கவில்லை, இதன் மூலம் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறத் தவறி இந்த மசோதா தோல்வியடைந்தது.
- ஒரு அரசியலமைப்பு திருத்த மசோதா நிறைவேறுவதற்கு சிறப்புப் பெரும்பான்மையை (அவைக்கு வந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு) பெறுவது கட்டாயமாகும்.
- இந்தத் தோல்விக்குப் பிறகு, தொகுதி மறுசீரமைப்பு மசோதா 2026 மற்றும் ஒன்றியப் பிரதேசச் சட்டங்கள் (திருத்தம்) மசோதா 2026 ஆகியவற்றை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு திரும்பப் பெற்றார்.
- இந்த மூன்று மசோதாக்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றும், இவற்றை தனித்தனியாகப் பரிசீலிக்க முடியாது என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
- மூன்று மசோதாக்களையும் ஒன்றாக இணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சி. வேணுகோபால், இது நாடாளுமன்ற விதிகளுக்கும் நடைமுறைக்கும் எதிரானது எனக் கூறினார்.
- இந்த நடவடிக்கையை ஆதரித்துப் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் இவ்வாறு மசோதாக்களை இணைப்பதற்கு முன்மாதிரிகள் இருப்பதாகவும், மகளிர் இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதற்கு இது அவசியம் என்றும் கூறினார்.
- மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு 48 மணி நேரத்திற்கும் குறைவான கால அவகாசத்திலேயே அதன் வரைவுகள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டதால், போதிய நேரமின்மை காரணமாக எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

- சரியான வாக்கு எண்ணிக்கையை உறுதி செய்வதற்காக, மசோதா அறிமுக நிலையிலேயே குரல் வாக்கெடுப்புக்குப் பதிலாக வாக்குப் பிரிப்பு முறை மூலமான வாக்கெடுப்பை நடத்த எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.
- வாக்குப்பிரிப்பு வாக்கெடுப்பு என்பது ஒரு மசோதாவுக்கு ஆதரவான மற்றும் எதிரான வாக்குகளின் சரியான எண்ணிக்கையை பதிவு செய்வதாகும்; இது வழக்கமாக சர்ச்சைக்குரிய சட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- மோடி அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு திருத்த மசோதா ஒன்று தோல்வியடைவது கடந்த 12 ஆண்டுகளில் இதுவே முதல் முறை ஆகும்.

## கே.ஜி. பாலகிருஷ்ணன் ஆணையம் நீட்டிப்பு

- கே.ஜி. பாலகிருஷ்ணன் தலைமையிலான விசாரணை ஆணையத்தின் பதவிக் காலத்தை 2026 ஆம் ஆண்டு ஜூன் 10 வரை மத்திய அரசு மூன்றாவது முறையாக நீட்டித்துள்ளது.
- பிற மதங்களுக்கு மாறிய தலித்துகளுக்கான பட்டியலிடப்பட்ட இனத்தவர் (SC) அந்தஸ்து குறித்து ஆராய்வதற்காக இந்த ஆணையம் 2022 ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது.
- இது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது.
- இந்த நீட்டிப்பானது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 முதல் ஜூன் 10 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
- இப்பிரச்சனை அரசியலமைப்பின் 341வது சரத்தின் கீழான, அரசியலமைப்பு (பட்டியலிடப் பட்ட சாதிகள்) ஆணை, 1950 உடன் தொடர்புடையதாகும்.
- தற்போதைய நிலையில், பட்டியல் இனத்தவர் அந்தஸ்து இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் பௌத்தர்களுக்கு மட்டுமே வரையறுக்கப் பட்டுள்ளது.

## கோகோ தன்னிறைவு இலக்கு 2040

- தற்சார்பு இந்தியா/ஆத்மநிர்பார் பாரத் திட்டத்தின் கீழ் 2040 ஆம் ஆண்டிற்குள் கோகோ உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கான வழிகாட்டுதல் திட்டத்தை இந்தியா தொடங்கியுள்ளது.
- ஆண்டுக்கு 866 மில்லியன் டாலர்களைத் தாண்டும் கோகோ இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உற்பத்தியை அதிகரிப்பதற்காக 2026-28 ஆம் ஆண்டுகளில் கோகோவுக்கான தேசிய இயக்கம் தொடங்கப்படும்.
- ஆரம்ப கட்டமாக சுமார் 250 ஹெக்டேர் பரப்பளவில் பல்மரபுவழி விதைத் தோட்டங்கள் உருவாக்கப்படும்.
- விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதையும், கோகோ சாகுபடியை 1 லட்சம் ஹெக்டேர் வரை விரிவுபடுத்துவதையும் இந்த வழிகாட்டுதல் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.
- உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, 2040 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய கோகோ பதப்படுத்தும் மையமாக மாறுவதையும் இந்தியா இலக்காகக் கொண்டு உள்ளது.

## மகளிர் இட ஒதுக்கீடுச் சட்டம் 2023

- ❖ நாரி சக்தி வந்தன் ஆதினியம் 2023 சட்டமானது மத்திய அரசால் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.
- ❖ சட்டம் அமலுக்கு வரும் தேதியாக 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 16-ஐ மத்திய அரசு அறிவித்தது.
- ❖ இது நிறைவேற்றப்பட்ட ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டமாகும், இருப்பினும் இது செயல்படத் தொடங்குவதற்கு முறையான அறிவிக்கை தேவைப்படுகிறது.
- ❖ சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வராமல், உத்தேசிக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்தத்தை செயல்படுத்த முடியாது.
- ❖ சட்டம் நடைமுறைக்கு வந்திருந்தாலும், தற்போதைய அவையில் மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த முடியாது.
- ❖ இதனைச் செயல்படுத்துவது அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்புடன் தொடர்புடையது.
- ❖ 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பைத் தொடர்ந்து தொகுதி மறு சீரமைப்புப் பணிகளுக்குப் பிறகே இந்த இடஒதுக்கீடு அமல்படுத்தப்படும்.
- ❖ அனைத்து நடைமுறைகளும் முடிவடைந்த பிறகு, 2034 ஆம் ஆண்டு வாக்கில் இந்தச் சட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தொகுதி மறுசீரமைப்பு மசோதா, 2026 – முக்கிய அம்சங்கள்

- ❖ உத்தேசிக்கப்பட்டுள்ள தொகுதி மறுசீரமைப்பு மசோதா 2026, தொகுதிகளை மறு வரையறை செய்வதற்கான தொகுதி மறுசீரமைப்பு ஆணையத்தின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளை கோடிட்டுக் காட்டுகிறது.
- ❖ மத்திய அரசால் தொகுதி மறுசீரமைப்பு ஆணையம் அமைக்கப்படுவதற்கு இந்த மசோதா வகை செய்கிறது.
- ❖ உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய அல்லது முன்னாள் நீதிபதி இந்த ஆணையத்திற்குத் தலைமை தாங்குவார்.
- ❖ தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) அல்லது தேர்தல் ஆணையத்தால் பரிந்துரைக்கப் படும் ஒரு தேர்தல் ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலத்தின் மாநிலத் தேர்தல் ஆணையர் ஆகியோர் இதன் உறுப்பினர்களாக இருப்பார்கள்.
- ❖ ஒவ்வொரு மாநிலத்திற்கும் 5 மக்களவை உறுப்பினர்கள் மற்றும் 5 சட்டமன்ற உறுப்பினர்கள் என 10 இணை உறுப்பினர்கள் இதில் இருப்பார்கள்; இவர்கள் இந்த ஆணையத்திற்கு உதவுவார்கள், ஆனால் அவர்களுக்கு வாக்குரிமை இருக்காது.
- ❖ மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கான மக்களவை இடங்களின் ஒதுக்கீடு, மாநிலச் சட்டப்பேரவைகளின் மொத்த பலம், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்தல் ஆகியவற்றை இந்த ஆணையம் முடிவு செய்யும்.
- ❖ பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) மற்றும் பெண்களுக்கான தனித் தொகுதிகளையும் இது அடையாளம் காணும்.
- ❖ இறுதி செய்யப்படுவதற்கு முன்பாக, பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகளுக்காக வரைவு முன்மொழிவுகள் வெளியிடப்படும்.

- இந்திய அரசிதழில் அறிவிக்கப்பட்ட பிறகு, ஆணையத்தின் உத்தரவுகள் சட்டப் பூர்வமான அங்கீகாரத்தைப் பெறும், மேலும் அவற்றை எந்த நீதிமன்றத்திலும் எதிர்த்து முறையீடு செய்ய முடியாது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் குறிப்பிடும் தேதியிலிருந்து இந்த உத்தரவுகள் நடைமுறைக்கு வரும்.
- இறுதி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு நடைபெறும் தேர்தல்களுக்கு இந்தப் புதிய தொகுதி எல்லைகள் பொருந்தும்.
- இந்த ஆணையம் ஒரு உயர்மட்ட அமைப்பாகும், இதன் முடிவுகள் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தக் கூடியவை மற்றும் இறுதியானவை.
- இதன் உத்தரவுகள் மக்களவை மற்றும் மாநிலச் சட்டப்பேரவைகளில் சமர்ப்பிக்கப் படும், ஆனால் அவர்களால் அதில் எந்த மாற்றங்களையும் செய்ய முடியாது.

## தொகுதி மறுசீரமைப்பற்ற மகளிர் இட ஒதுக்கீடு மசோதா

- திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பி. வில்சன், 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 அன்று மாநிலங்களவையில் தனிநபர் அரசியலமைப்பு திருத்த மசோதாவைத் தாக்கல் செய்தார்.
- மக்கள்தொகை கணக்கெடுப்பு அல்லது தொகுதி மறுசீரமைப்புக்காக காத்திருக்காமல் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு வழங்க இந்த மசோதா வழிகோருகிறது.
- மக்களவையின் தற்போதைய 543 இடங்களுக்குள்ளேயே இடஒதுக்கீட்டைச் செயல்படுத்த இது முன்மொழிகிறது.
- மேலும், குறிப்பிட்ட காலத்திற்குப் பதிலாக பெண்களுக்கான இடஒதுக்கீட்டை நிரந்தரமாக்கவும் இது பரிந்துரைக்கிறது.
- அரசியலமைப்பு (106 வது திருத்தம்) சட்டம் 2023 உடன் இடஒதுக்கீட்டை இணைப்பதை இந்த மசோதா எதிர்க்கிறது.
- தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான அரசியலமைப்பு (131வது திருத்தம்) மசோதா 2026 தோல்வியடைந்ததையடுத்து இது கொண்டுவரப்பட்டுள்ளது.

## வரதட்சணைச் சட்டப் பாதுகாப்பு குறித்து உச்ச நீதிமன்ற கருத்து

- பாதிக்கப்பட்டவர்களாக வரதட்சணை கொடுப்பவர்கள் மீது சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர முடியாது என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இந்தத் தீர்ப்பு 1961 ஆம் ஆண்டின் வரதட்சணைத் தடைச் சட்டத்தை விளக்குகிறது; இச்சட்டம் வரதட்சணை கொடுப்பதையும் வாங்குவதையும் தடை செய்தாலும், பாதிக்கப் பட்டவர்களுக்கே பாதுகாப்பை வழங்குகிறது.
- பிரிவு 7(3)-இன் கீழ், சமூக அழுத்தம் அல்லது நிர்ப்பந்தத்தின் பேரில் செயல்பட்டு, பின்னர் புகார் அளிக்கும் வரதட்சணை கொடுப்பவர்கள் பாதிக்கப்பட்ட நபர்களாகவே கருதப் படுவார்கள்.
- இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களைத் தண்டிப்பது சட்டத்தின் நோக்கத்தை சிதைத்து விடும் என்றும், வரதட்சணைக் கொடுமை வழக்குகளைப் புகாரளிப்பதைத் தடுக்கும் என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

- வரதட்சணை கொடுத்ததை ஒப்புக் கொண்டதற்காக மணப்பெண்ணின் குடும்பத்தினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிய மனுவைத் தள்ளுபடி செய்தபோது இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## சமுத்ர சாஹாஸ் பயணம்

- சமுத்ர சாஹாஸ் பாய்மரப் படகுப் பயணம் மும்பையின் மார்வேயிலிருந்து கொடி அசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டது.
- பீரங்கிப் படையின் 200வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்திய ராணுவத்தின் பீரங்கிப் படையினரால் மேற்கொள்ளப்படும் முதல் ஆழ்கடல் பாய்மரப் பயணமாக இது அமைந்துள்ளது.
- இந்தப் பயண வழியானது மும்பை, விஜய்துர்க் மற்றும் கோவா ஆகியவற்றை உள்ளடக்கி நான்கு கட்டங்களாக நடைபெறுகிறது.
- இந்தப் பயணத்திற்காக மாலுமிகள் 21 அடி நீளமுள்ள கடற்பறவை ரகப் படகுகளைப் பயன்படுத்தினர்.
- இந்தப் பயணமானது சத்ரபதி சிவாஜியின் கடல்சார் பாரம்பரியத்தைக் கௌரவிக்கிறது.

## இந்தியாவின் ஊக்க மருந்து தடுப்பு நடவடிக்கைகள்

- உலக ஊக்கமருந்து தடுப்பு முகமையின் (WADA) உலகளாவிய ஊக்கமருந்து தடுப்பு நுண்ணறிவு மற்றும் புலனாய்வு வலையமைப்பின் (GAIIN) மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது.
- இந்தியா ஊக்க மருந்து பரிசோதனைகளை 2019 ஆம் ஆண்டில் சுமார் 4,000 என்பதில் இருந்து கடந்த ஆண்டு சுமார் 8,000 ஆக அதிகரித்துள்ளது.
- சாதகமற்ற பகுப்பாய்வு முடிவுகள் (AAF) 5.6% இலிருந்து 2% க்கும் கீழாகக் குறைந்து உள்ளது.
- தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமை (NADA) பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் டிஜிட்டல் பிரச்சாரங்கள் மூலம் விழிப்புணர்வை பரப்புகிறது.
- ஊக்கமருந்து பயன்பாட்டைத் தடுக்க உலகளாவிய ஒத்துழைப்பு, உளவுத்துறை பகிர்வு மற்றும் வலுவான விசாரணைகள் குறித்து இம்மாநாட்டில் நாடுகள் விவாதித்தன.

## பாரத் கடல்சார் காப்பீட்டுத் தொகுப்பு

- ₹12,980 கோடி உத்தரவாதத்துடன் பாரத் கடல்சார் காப்பீட்டுத் தொகுப்பிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது சேதம், சரக்கு இழப்பு மற்றும் போர் போன்ற அபாயங்களுக்கு கப்பல்களுக்கு காப்பீடு வழங்கும்.
- உலகளாவிய கப்பல் போக்குவரத்தில் அதிகரித்து வரும் அபாயங்கள் மற்றும் அதிக காப்பீட்டு செலவுகள் காரணமாக இத்திட்டம் தேவைப்பட்டது.
- பாதுகாப்பான வர்த்தகத்திற்காக இந்தியக் கப்பல்களையும், இந்தியாவுடன் தொடர்பு உடைய கப்பல்களையும் இது உள்ளடக்கும்.

- இந்தத் திட்டம் 10 ஆண்டுகள் செயல்படும், மேலும் இது 15 ஆண்டுகளாக நீட்டிக்கப் படலாம்.
- இது வெளிநாட்டுக் காப்பீட்டாளர்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்தும்.

### RELIEF திட்ட விரிவாக்கம் 2026

- இந்தியா தனது RELIEF (ஏற்றுமதி எளிதாக்கத்திற்கான மீள்திறன் மற்றும் தளவாட இடைக்கீடுகள்) திட்டத்தை எகிப்து மற்றும் ஜோர்டான் நாடுகளை உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தியுள்ளது.
- மேற்கு ஆசிய வர்த்தகப் பாதைகளில் ஏற்பட்ட இடையூறுகளால் பாதிக்கப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்தத் திட்டமானது 2026 ஆம் ஆண்டு மார்ச் 19 அன்று தொடங்கப்பட்டது.
- ஏற்றுமதி காப்பீட்டு ஆதரவை வழங்குவதற்காக இந்திய ஏற்றுமதி கடன் உத்தரவாத கழகத்தின் (ECGC) மூலம் இது செயல்படுத்தப்படுகிறது.
- சரக்கு கட்டண உயர்வு, காப்பீட்டுப் பிரீமியங்கள் மற்றும் போர் தொடர்பான வர்த்தக அபாயங்களை ஈடுசெய்வதன் மூலம் இத்திட்டம் ஏற்றுமதியாளர்களுக்கு உதவுகிறது.
- சூயஸ் கால்வாய் மற்றும் மேற்கு ஆசிய வழித்தடங்கள் போன்ற உலகளாவிய வர்த்தகப் பாதைகளில் எகிப்து மற்றும் ஜோர்டான் முக்கியப் பங்கு வகிப்பதால் அவை இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்த விரிவாக்கம் இந்தியாவின் ஏற்றுமதித் திறனை வலுப்படுத்துவதையும், நிலையான சர்வதேச விநியோகச் சங்கிலிகளை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### PMGSY-III திட்டம் நீட்டிப்பு

- பிரதம மந்திரி கிராம சடக் யோஜனா-III (PMGSY-III) திட்டத்தை 2028 ஆம் ஆண்டு மார்ச் வரை மத்திய அமைச்சரவை நீட்டித்துள்ளது.
- கிராமப்புறங்களில் அனைத்து காலநிலைகளுக்கும் ஏற்ற சாலைகளை அமைத்து மேம்படுத்துவதன் மூலம் கிராமப்புற இணைப்பை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறந்த அணுகல் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இது கிராமங்களை கிராமிய வேளாண் சந்தைகள் (GrAMs), பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளுடன் இணைக்கிறது.
- PMGSY-III திட்டத்தின் திருத்தப்பட்ட மொத்த ஒதுக்கீடு ₹83,977 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.
- மலைப்பாங்கான மற்றும் தொலைதூரப் பகுதிகளில் தடையற்ற இணைப்பை உறுதி செய்வதற்காக 161 நீண்ட தூர பாலங்கள் கட்டுவதும் இதில் அடங்கும்.
- இணைப்பு இல்லாத கிராமப்புறக் குடியிருப்புகளுக்கு அனைத்து காலநிலைகளுக்கும் ஏற்ற சாலை வசதியை வழங்குவதற்காக 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் PMGSY தொடங்கப்பட்டது.
- PMGSY-III திட்டம் புதிய சாலைகளை உருவாக்குவதை மட்டும் அல்லாமல், தற்போதுள்ள கிராமப்புற சாலைகள் மற்றும் முக்கிய இணைப்புப் பாதைகளை மேம்படுத்துவதில் முக்கியமாக கவனம் செலுத்துகிறது.

## விஸ்வ சூத்ரா முன்னெடுப்பு

- இந்தியக் கைத்தறிகளை உலகளவில் மேம்படுத்துவதற்காக ஜவுளி அமைச்சகம் "விஸ்வ சூத்ரா - உலகிற்கான இந்தியாவின் நெசவுகள்" என்ற திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இது தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (NIFT) இணைந்து வளர்ச்சி ஆணையர் (கைத்தறி) அலுவலகத்தால் உருவாக்கப்பட்டது.
- இது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 30 கைத்தறி நெசவுகளைக் காட்சிப்படுத்துகிறது.
- ஒவ்வொரு நெசவும் 30 வெவ்வேறு நாடுகள் மற்றும் கலாச்சாரங்களின் வடிவமைப்புகளால் ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தியக் கைவினைஞர்களுக்கான சர்வதேச அங்கீகாரத்தையும் சந்தை வாய்ப்புகளையும் அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்திய அரசாங்கத்தின் "உள்ளூருக்கான குரல்" (Vocal for Local) பிரச்சாரத்தை ஊக்குவிக்கிறது.
- இது ஜவுளித் துறையில் 5F (பண்ணை, நார், தொழிற்சாலை, ஃபேஷன், வெளிநாடு) மதிப்புச் சங்கிலியை ஆதரிக்கிறது.

## நதிப் படுகை மேலாண்மைத் திட்ட விரிவாக்கம்

- 2026-31 ஆம் ஆண்டிற்கான நதிப் படுகை மேலாண்மைத் (RBM) திட்டத்தை ₹2,183 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்த இந்திய அரசு முன்மொழிந்துள்ளது.
- இது 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு மத்திய துறை திட்டமாகும்.
- ஜல் சக்தி துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள நீர்வளத் துறையால் இது செயல்படுத்தப் படுகிறது.
- இது பிரம்மபுத்திரா மற்றும் சிந்துப் பகுதிகள் போன்ற நதிப் படுகைகளில் முக்கிய கவனம் செலுத்துகிறது.
- வெள்ளக் கட்டுப்பாடு, மண் அரிப்பு மேலாண்மை மற்றும் நீர்வளத் திட்டமிடல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்திய நீர் ஆணையம் (CWC) மற்றும் தேசிய நீர் மேம்பாட்டு முகமை (NWDA) போன்ற நிறுவனங்கள் இதில் அடங்கும்.
- இது படுகை திட்டமிடல், வடிகால் மேம்பாடு மற்றும் சமூகம் சார்ந்த நீர் மேலாண்மை ஆகியவற்றை ஆதரிக்கிறது.

## NSS சுகாதார கணக்கெடுப்பு 2025

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், தேசிய மாதிரி கணக்கெடுப்பின் (NSS) 80வது சுற்றின் கீழ் 'குடும்ப சமூக நுகர்வு: சுகாதாரம்' என்ற கணக்கெடுப்பை வெளியிட்டது.
- சுமார் 13.1% மக்கள் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர், இது 2017-18 ஆம் ஆண்டில் இருந்த 7.5% ஐ விட அதிகமாகும்; இது 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியவர்களிடையே மிக அதிகமாக உள்ளது.

- மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் விகிதம் சுமார் 2.9% ஆக இருந்தது, இது முதியவர்கள் மற்றும் சிறு குழந்தைகளிடையே அதிகமாக காணப்படுகிறது.
- மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்கள் சுமார் 96%-ஐ எட்டியுள்ளது, இது வலுவான தாய்மை சுகாதார பாதுகாப்பைக் காட்டுகிறது.
- சுகாதாரக் காப்பீட்டுப் பரவல் சுமார் 44-47% ஆக அதிகரித்துள்ளதோடு இது முக்கியமாக அரசு திட்டங்கள் மூலமாகவே நிகழ்ந்துள்ளது.
- தொற்று நோய்கள் குறைந்துள்ளன, அதே சமயம் 30 வயதிற்குப் பிறகு நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்கள் அதிகரித்துள்ளன.

## சட்ட விரோதமாக புலம்பெயர்ந்தோர்களுக்கான புதிய நாடுகடத்தல் கொள்கை

- சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தோர்களைக் கண்டறிந்து வெளியேற்றுவதை விரைவு படுத்துவதற்காக, உள்துறை அமைச்சகம் (MHA) புதிய நாடுகடத்தல் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மாவட்ட அளவிலான சிறப்புப் படைகளை அமைப்பதையும், சந்தேகத்திற்குரிய வெளிநாட்டினரின் சரிபார்ப்பிற்கான 90 நாள் காலக்கெடுவையும் கட்டாயமாக்குகிறது.
- குடும்பங்கள் பிரிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், அடிப்படை வசதிகளுடன் கூடிய தடுப்புக் காவல் மையங்கள் அமைக்கப்படும்.
- இதன்படி சட்ட விரோத ஆவணங்கள் ரத்து செய்யப்படுவதுடன் புலம்பெயர்ந்தோர்கள் குடி வரவுப் பணியகத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.
- அமலாக்கம் மற்றும் கண்காணிப்பை வலுப்படுத்தும் குடியேற்றம் மற்றும் வெளி நாட்டினர் சட்டம், 2025-இன் ஆதரவுடன் இக்கொள்கை செயல்படுகிறது.

## இந்தியாவின் உணவு தானிய இருப்பு மற்றும் உற்பத்தி

- இந்தியாவின் உணவு தானிய இருப்பு, தேவையான கையிருப்பு அளவை விட மூன்று மடங்கு அதிகமாக உள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.
- இந்தியாவில் 222 லட்சம் மெட்ரிக் டன் (LMT) கோதுமை மற்றும் 380 LMT அரிசி உட்பட மொத்தம் 602 LMT உணவு தானியங்கள் இருப்பில் உள்ளன.
- உணவுப் பாதுகாப்பு, விலை நிலைப்படுத்தல் மற்றும் பொது விநியோக முறையின் (PDS) மூலம் விநியோகத்தை உறுதி செய்வதற்காக அரசாங்கத்தால் இடையக இருப்பு பராமரிக்கப்படுகிறது.
- பருப்பு வகைகள் (25.68 மில்லியன் டன் (MT)) மற்றும் சிறுதானியங்கள் உற்பத்தியில் இந்தியா முதலிடத்திலும், அரிசி, கோதுமை, பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் 2-வது இடத்திலும் உள்ளது.
- தோட்டக்கலை உற்பத்தி 362.08 MT-ஐ எட்டியுள்ளது, இது உணவு தானிய உற்பத்தியை விட அதிகமாக உள்ளதோடு அதிக மதிப்புள்ளப் பயிர்களை நோக்கிய மாற்றத்தையும் காட்டுகிறது.
- 2020 ஆம் நிதியாண்டில் (FY) 34.5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக (USD) இருந்த விவசாய ஏற்றுமதி 2025 நிதியாண்டில் 51.1 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளதோடு இதில் பதப்படுத்தப்பட்ட உணவின் பங்கு 20.4% ஆகும்.

- மசாலா பொருட்கள் மற்றும் தேங்காய் உற்பத்தியிலும் இந்தியா முன்னணியில் உள்ளதோடு கரும்பு, பருத்தி மற்றும் தேயிலை உற்பத்தியிலும் 2-வது இடத்தில் உள்ளது.

## இந்தியாவின் கடல் உணவுகள் ஏற்றுமதி

- கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (MPEDA) தரவுகளின்படி, 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் கடல் உணவுகள் ஏற்றுமதி சாதனை அளவாக ₹72,325.82 கோடியை எட்டியுள்ளது.
- வலுவான உலகளாவிய தேவையைக் காட்டும் வகையில், ஏற்றுமதி அளவும் 19.32 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.
- உறைந்த இறால் ₹47,973.13 கோடியுடன் அதிகப் பங்கை அளித்து, முக்கிய ஏற்றுமதிப் பொருளாகத் திகழ்கிறது.
- அமெரிக்காவிற்கான ஏற்றுமதி குறைந்துள்ளது, ஆனால் சீனா, ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் தென்கிழக்கு ஆசியா ஆகிய பகுதிகளில் வளர்ச்சி அதிகரித்துள்ளது.
- ஏற்றுமதியை ஆதரிக்கும் முக்கிய துறைமுகங்களில் விசாகப்பட்டினம், ஜவகர்லால் நேரு துறைமுகம், கொச்சி, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகியவை அடங்கும்.

## மாவட்ட அளவிலான இரத்த தான மையம்

- 2026 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு இரத்த தான மையமாவது நிறுவ சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளில் உள்ள இடைவெளிகளைக் காட்டும் வகையில், சுமார் 10% மாவட்டங்களில் இரத்த தான மையம் இல்லாமல் உள்ளது.
- இந்த மதிப்பாய்வு உரிமமளித்தல், இரத்தம் சேகரித்தல், TTI-களுக்கான (இரத்தமாற்றம் மூலம் பரவும் தொற்றுகள்) சோதனை, சேமிப்பு மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- பல மையங்களில் eRaktKosh மற்றும் BBMS (இரத்த வங்கி மேலாண்மை அமைப்பு) போன்ற டிஜிட்டல் அமைப்புகள் முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை.
- பாதுகாப்பான இரத்த அணுகல், பூஜ்ஜிய TTIகள் ஆகியவற்றை உறுதி செய்வது மற்றும் இந்தியா முழுவதும் தன்னார்வ இரத்த தானத்தை ஊக்குவிப்பது ஆகியவை இதன் இலக்காகும்.

## அடல் ஓய்வூதியத் திட்ட பதிவு வளர்ச்சி

- அடல் ஓய்வூதியத் திட்டம் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நிலவரப்படி மொத்தம் 9 கோடிப் பதிவுகளைக் கடந்துள்ளது.
- இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து அதிகபட்ச வருடாந்திரச் சேர்க்கையாக 2025-26 ஆம் நிதியாண்டில், 1.35 கோடி புதிய சந்தாதாரர்களைப் பதிவு செய்து சாதனை படைத்துள்ளது.
- அடல் ஓய்வூதியத் திட்டம் 2015 ஆம் ஆண்டு மே 9 அன்று தொடங்கப்பட்டது.

- இத்திட்டம் முக்கியமாக அமைப்பு சாராத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு ஓய்வுக்குப் பிறகு சமூகப் பாதுகாப்பை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- இது ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தால் (PFRDA) கட்டுப் படுத்தப் படுகிறது.
- பங்களிப்பு அளவின் அடிப்படையில் 60 வயதிற்குப் பிறகு நிலையான மாதாந்திர ஓய்வூதியத்தை இத்திட்டம் உறுதி செய்கிறது மற்றும் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துகிறது.

## இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி அதிகரிப்பு

- 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி 2.1% அதிகரித்து ₹3.16 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.
- ஆயத்த ஆடைகள் (RMG) 2.9% வளர்ச்சியடைந்து ₹1.39 லட்சம் கோடியுடன் இதில் மிகப் பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளன.
- மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஜவுளிகள் 3.6% அதிகரித்துள்ள அதே நேரத்தில் கைவினைப் பொருட்கள் 6.1% என்ற அதிகபட்ச வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.
- ஐக்கிய அரபு அமீரகம், இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான் மற்றும் எகிப்து உட்பட 120-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி விரிவடைந்துள்ளது.
- RoSCTL (மாநில மற்றும் மத்திய வரிகள் மற்றும் தீர்வைகளுக்கான தள்ளுபடி) மற்றும் RoDTEP (ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான வரிகள் மற்றும் தீர்வைகளைத் திரும்பப் பெறுதல்) போன்ற அரசு திட்டங்களால் இந்த வளர்ச்சி ஊக்கமளிக்கப் பட்டு உள்ளது.

## இணையவழி விளையாட்டுகளுக்கான விதிகள் 2026

- இந்திய அரசு 2026-ஆம் ஆண்டிற்கான இணையவழி விளையாட்டுகளுக்கான மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை விதிகளை அறிவித்துள்ளது, இது அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வருகிறது.
- இந்த விதிகள் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குபடுத்துவதையும், பயனர்களைப் பாதுகாப்பதையும் மற்றும் நிதி அமைப்பைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- விளையாட்டுகளை இணையவழிப் பண விளையாட்டுகள், சமூக விளையாட்டுகள் அல்லது இ-ஸ்போர்ட்ஸ் (e-sports) என வகைப்படுத்த தெளிவான வழிமுறையை இவை வழங்குகின்றன.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் தலைமையில் 6 உறுப்பினர்களைக் கொண்ட ஒழுங்குமுறை அமைப்பாக இந்திய இணையவழி விளையாட்டுகளுக்கான ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது.
- பயனர்களின் பாதுகாப்பு அம்சங்கள், குறை தீர்க்கும் வழிமுறைகள், வெளிப்படைத் தன்மை மற்றும் மேல்முறையீட்டு வழிமுறையுடன் கூடிய அபராதங்கள் ஆகியவற்றை இந்த விதிகள் கட்டாயமாக்குகின்றன.

## வேளாண் நுண்ணறிவு அமைப்பு

- ரோபார் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT Ropar) இந்தியாவின் முதல் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட வேளாண் நுண்ணறிவு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த அமைப்பில் Swan (மேம்பட்ட வானிலை நிலையங்கள்), கிரிஷி நுண்ணறிவு அழைப்பு மையங்கள் மற்றும் அன்னம் அரட்டை இயந்திரம் (ACE) ஆகியவை அடங்கும்.
- இது ANNAM.AI திட்டத்தின் கீழ் விவசாயத்திற்கான செயற்கை நுண்ணறிவு (AI) சிறப்பு மையத்தால் (CoE) உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த சுற்றுச்சூழல் அமைப்பு செயற்கை நுண்ணறிவு (AI), இணைய உலக இணைப்பு (IoT), பருவநிலை அறிவியல் மற்றும் பன்மொழி ஆலோசனை அமைப்புகளை ஒருங்கிணைக்கிறது.
- முடிவெடுத்தல் மற்றும் பண்ணை உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் உள்ளிட்ட முழுமையான விவசாய மதிப்புச் சங்கிலியை ஆதரிக்கும் வகையில் இது வடிவமைக்கப் பட்டுள்ளது.

## இந்தியா-தென் கொரியா உத்திசார் தொலைநோக்குத் திட்டம் 2026–2030

- தென் கொரிய அதிபர் லீ ஜே மியுங் இந்தியா வந்திருந்தபோது, இந்தியாவும் தென் கொரியாவும் கூட்டு உத்திசார் தொலைநோக்கு (2026-2030) திட்டத்தை வெளியிட்டன.
- பாதுகாப்பு, வர்த்தகம், தொழில்நுட்பம், இந்தோ-பசிபிக் பாதுகாப்பு மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு ஆகியவற்றில் உறவுகளை வலுப்படுத்துவதை இந்தத் தொலைநோக்கு திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஆழமான பிராந்திய கூட்டாண்மைக்காக இந்தியாவின் 'கிழக்கு நோக்கிய செயல் கொள்கையை' கொரியாவின் 'புதிய தெற்கத்திய கொள்கையுடன்' ஒருங்கிணைக்கிறது.
- இந்தியா-கொரியா டிஜிட்டல் பாலம், விண்வெளி ஒத்துழைப்பு (ISRO-KASA) மற்றும் விநியோகச் சங்கிலியை பன்முகப் படுத்துதல் ஆகியவை இதன் முக்கிய முயற்சிகளில் அடங்கும்.
- இரு நாடுகளும் விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தை (CEPA) மேம்படுத்தவும், ISA (சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு) மற்றும் GGGI (உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனம்) மூலம் பருவநிலை ஒத்துழைப்பை மேம்படுத்தவும் ஒப்புக் கொண்டன.

## தேர்தலுக்குப் பிந்தைய வாக்குப்பதிவு ஆய்வு

- தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் தேர்தலுக்குப் பிந்தைய ஆய்வை இந்தியத் தேர்தல் ஆணையம் நிறைவு செய்துள்ளதோடு இதில் மறு வாக்குப் பதிவுக்கான எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.
- படிவம் 17A (வாக்காளர்களின் பதிவு) மற்றும் தேர்தல் தொடர்பான பிற ஆவணங்களின் ஆய்வு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று நடத்தப்பட்டது.
- இந்த ஆய்வு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 234 சட்டமன்றத் தொகுதிகளையும், மேற்கு வங்கத்தில் உள்ள 152 தொகுதிகளையும் உள்ளடக்கியது.

- பார்வையாளர்கள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முன்னிலையில் இந்த செயல்முறை மேற்கொள்ளப்பட்டது.
- மேற்கு வங்கத்தில் 44,000-க்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளும், தமிழ்நாட்டில் 75,000-க்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளும் சரிபார்க்கப்பட்டன.
- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் ஒப்புகைச் சீட்டு இயந்திரங்கள் (VVPAT) ஆகியவை கடுமையான கண்காணிப்பின் கீழ் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளன.

## ஆம் ஆத்மி கட்சி எம்.பி.க்களின் கட்சித் தாவல் விவகாரம்

- ஆம் ஆத்மி கட்சியின் (AAP) பலத்தில் மூன்றில் இரண்டு பங்கை விட அதிகமான ஏழு மாநிலங்களவையைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாரதிய ஜனதா கட்சிக்கு (BJP) தாவியுள்ளனர்.
- இந்த நடவடிக்கையை சட்டவிரோதமானது மற்றும் அரசியலமைப்புக்கு முரணானது என்று கூறியுள்ள ஆம் ஆத்மி கட்சி, அவர்களை தகுதி நீக்கம் செய்யக் கோரவுள்ளது.
- அக்கட்சி, இந்திய அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணையைச் சுட்டிக்காட்டியது; இவ்வட்டவணையானது பிளவுகளை அங்கீகரிப்பதில்லை என்பதோடு, மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நடைபெறும் இணைப்புகளை மட்டுமே அனுமதிக்கிறது.
- தகுதி நீக்கம் குறித்த முடிவை எடுக்கும் அதிகாரம் மாநிலங்களவைத் தலைவரிடம் (இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர்) உள்ளது.
- 1985 ஆம் ஆண்டின் 52-வது திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்ட கட்சித் தாவல் தடைச் சட்டமானது அரசியல் கட்சி உறுப்பினர்களின் தாவல்களைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது; தானாக முன்வந்து கட்சி உறுப்பினர் பதவியைத் துறப்பது அல்லது கட்சியின் கொறடா உத்தரவை மீறுவது ஆகிய காரணங்களுக்காக உறுப்பினர்கள் தகுதி நீக்கம் செய்யப்படலாம்.

## ஐ.என்.எஸ் சுதர்சினி

- ஐ.என்.எஸ் சுதர்சினி லாஸ் பால்மாஸிற்கு தனது முதல் பயணத்தை மேற்கொண்டது, இதன் மூலம் இந்த தீவுக் கூட்டத்தை அடைந்த முதல் இந்தியக் கடற்படைக் கப்பல் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- இந்தப் பயணம் இந்தியாவின் கடற்படை ராஜதந்திரத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைவதோடு, கப்பலின் தற்போதைய "லோக்யான் 26" ஆனது உலகளாவிய பயிற்சி மற்றும் மக்கள் தொடர்புப் பயணத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளது.
- 2012 ஆம் ஆண்டில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்தப் பாய்மரப் பயிற்சிக் கப்பல், கடற்படை மாணவர்களுக்குக் கடற்பயணம், பாய்மரங்களைக் கையாளுதல் மற்றும் கடலில் நீண்டகாலம் தாக்குப் பிடிக்கும் திறன் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப் பயன்படுத்தப் படுகிறது.
- துறைமுகத்தில் தங்கியிருக்கும் இந்த நேரத்தில், ஸ்பெயின் கடற்படை அதிகாரிகளுடனான தொழில்முறை கலந்துரையாடல்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் மற்றும் உள்ளூர் சமூகத்தினருக்கான மக்கள் தொடர்பு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன.

- இந்தப் பயணம் ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் அட்லாண்டிக் கடல் வழிகளில் இந்தியாவின் கடற்படை ராஜதந்திரத்தையும், மென்திறன் சார்ந்த பரவலையும் பிரதிபலிக்கிறது.

## சரத்து 21ன் கீழ் நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாக பயணம் செய்வதற்கான உரிமை

- தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாகப் பயணம் செய்வது, அரசியலமைப்புச் சரத்து 21-இன் கீழ் வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதி என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- சாலைப் பாதுகாப்பு என்பது வெறும் நிர்வாகப் பிரச்சினை மட்டுமல்ல, அது அரசின் அரசியலமைப்புச் சட்டம் சார்ந்த கடமை என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- தேசிய நெடுஞ்சாலைகள் மொத்த சாலைகளில் சுமார் 2% மட்டுமே இருந்தாலும், சாலை விபத்து இறப்புகளில் கிட்டத்தட்ட 30% இங்குதான் நிகழ்கின்றன.
- விபத்துகளைக் குறைப்பதற்காக, நெடுஞ்சாலை நிலங்களில் உள்ள அங்கீகாரமற்ற தாபாக்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை நீதிமன்றம் தடை செய்துள்ளது.
- முறையான வசதிகளுடன் கூடிய குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர, நெடுஞ்சாலைகளில் கனரக வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.
- மேலும், சிறப்பான கண்காணிப்பு, ரோந்துப் பணிகள் மற்றும் விரைவான நடவடிக்கைக்கு ஆம்புலன்ஸ் போன்ற அவசரகாலச் சேவைகளை மேம்படுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## பிற்கால கர்ப்பக் கலைப்புக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி

- 15 வயது சிறுமியின் 31 வார கர்ப்பத்தைக் கலைக்க இந்திய உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- இனப்பெருக்க சுயாட்சி என்பது அரசியலமைப்புச் சரத்து 21-இன் கீழ் வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதி என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- தேவையற்ற கர்ப்பத்தை தொடர ஒரு சிறுமியை வற்புறுத்துவது கண்ணியம், தனி உரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை மீறுவதாகும் என நீதிமன்றம் தெரிவித்து உள்ளது.
- அச்சிறுமியின் கடுமையான மன உளைச்சல் மற்றும் அவரது நல்வாழ்வுக்கான ஆபத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- மருத்துவ ரீதியான கர்ப்பக் கலைப்புச் சட்டம் பொதுவாக 24 வாரங்கள் என்ற வரம்பை நிர்ணயித்திருந்தாலும், இந்த வழக்கில் நீதிமன்றம் விதிவிலக்கு அளித்துள்ளது.
- குறிப்பாக விதிவிலக்கான சூழ்நிலைகளில், ஒரு பெண்ணுக்குத் தனது உடலின் மீதான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை இத்தீர்ப்பு வலியுறுத்துகிறது.

## தீவிர சிகிச்சைப் பிரிவு (ICU) குறித்து இந்தியாவின் தரநிலைகள்

- இந்தியா முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கான (ICU) குறைந்தபட்ச தரநிலைகளை இந்திய உச்ச நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது.

- நாடு முழுவதும் ஒரே மாதிரியான ICU உள்கட்டமைப்பு, பணியாளர்கள் மற்றும் நோயாளிகளின் கவனிப்பை உறுதி செய்வதை இந்த வழிகாட்டுதல்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- ஒவ்வொரு ICU-விலும் ஆக்ஸிஜன் விநியோகம், செயற்கை சுவாசக் கருவிகள், கண்காணிப்புக் கருவிகள், இதயத் துடிப்பு சீராக்கிகள் மற்றும் தடையில்லா மின்சார வசதி போன்ற அத்தியாவசிய வசதிகள் இருக்க வேண்டும்.
- 24 மணி நேரமும், பயிற்சி பெற்ற மருத்துவர்கள், கடுமையான நோய்த் தொற்றுக் கட்டுப்பாடு மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளுக்கு 1:1 என்ற செவிலியர்-நோயாளி விகிதம் ஆகியவற்றை இந்த விதிமுறைகள் கட்டாயமாக்குகின்றன.
- நகர்ப்புற மற்றும் கிராமப்புற மருத்துவமனைகளில் தரமான சிகிச்சையை வழங்குவதற்காக ICU-க்கள் வெவ்வேறு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் செயல்திட்டங்களைச் சமர்ப்பிக்கவும், இவற்றைச் செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளைக் கண்டறியவும் அறிவுறுத்தப் பட்டுள்ளன.

## யுனெஸ்கோ பாலின உள்ளடக்க முன்னெடுப்பு

- ஆசியாவின் முதல் பாலின உள்ளடக்கம் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான யுனெஸ்கோ இருக்கையை புனேவில் உள்ள சிம்பயோசிஸ் திறன் மற்றும் தொழில் முறை பல்கலைக்கழகம் (SSPU) நிறுவியுள்ளது.
- யுனெஸ்கோவுடன் இணைந்து நடைபெற்ற "Women Leading the Future of Work" என்ற சர்வதேச மாநாட்டில் இந்த முன்னெடுப்பு அறிவிக்கப்பட்டது.
- இந்த யுனெஸ்கோ இருக்கையானது, வளர்ந்து வரும் துறைகளில் பாலின உள்ளடக்கம் மற்றும் குறிப்பாக சிறுமிகள் மற்றும் பெண்களுக்கான திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது.
- ரோபோட்டிக்ஸ், ஆட்டோமேஷன், குறைகடத்தி தொழில்நுட்பம், மேம்பட்ட உற்பத்தி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்பம் போன்ற எதிர்காலத் திறன்களில் சுமார் 10,000 சிறுமிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 16வது பைரவ் படைப்பிரிவு

- இந்திய ராணுவம் 16வது பைரவ் படைப்பிரிவை உருவாக்கியுள்ளது.
- இது பெலகாவியில் உள்ள மராட்டிய இலகுரக காலாட்படை படைப்பிரிவு மையத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- பைரவ் படைப்பிரிவு என்பது விரைவான பதிலடி மற்றும் விரைவான இடம் மாறும் தன்மை கொண்ட நடவடிக்கைகளுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு இலகுரக கமாண்டோ காலாட்படை பிரிவாகும்.
- உளவு பார்த்தல் மற்றும் தந்திரோபாயப் பணிகளுக்காக ஒவ்வொரு பிரிவிலும் சுமார் 250 சிறப்புப் பயிற்சி பெற்ற வீரர்கள் உள்ளனர்.
- இது வழக்கமான காலாட்படைக்கும் சிறப்புப் படைகளுக்கும் (உயரடுக்குப் போர் பிரிவுகள்) இடையே ஒரு பாலமாக செயல்படுகிறது.

### இந்தியாவின் ராணுவச் செலவினம் 2025

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமானது 2025 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் பாதுகாப்புச் செலவினங்களை வெளியிட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் $92.1 பில்லியன் ராணுவச் செலவினத்துடன் இந்தியா உலகளவில் 5வது இடத்தைப் பிடித்துள்ள நிலையில் இது 2024 ஆம் ஆண்டை விட 8.9% அதிகமாகும்.
- அதிகரித்த செயல்பாட்டுச் செலவுகள், அதிகரித்த ராணுவக் கொள்முதல் மற்றும் 2025-இல் பாகிஸ்தானுடனான பதற்றங்கள் ஆகியவை இந்த செலவின அதிகரிப்புக்குக் காரணமாகும்.
- இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 2.3% ஐ பாதுகாப்பிற்காகச் செலவிட்டுள்ள அதே சமயம் பாகிஸ்தான் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 2.9% ஐ செலவிட்டுள்ளது.
- உலகளாவிய ராணுவச் செலவினம் 2025-ஆம் ஆண்டில் சாதனை அளவாக $2,887 பில்லியனை எட்டியதுடன் இது தொடர்ந்து 11-வது ஆண்டாக ராணுவச் செலவினம் அதிகரிப்பதைக் குறிக்கிறது.
- அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளே அதிகமாக செலவு செய்யும் நாடுகளாகும், இவற்றுடன் இந்தியா மற்றும் ஜெர்மனி ஆகிய இரு நாடுகளும் இணைந்து, உலகளாவிய மொத்தச் செலவினத்தில் சுமார் 58% பங்கைக் கொண்டுள்ளன.

## சர்வதேசச் செய்திகள்

### WTO MC14 அமைச்சர்கள் மாநாடு 2026

- உலகளாவிய வர்த்தக விதிகளைத் தீர்மானிப்பதற்கான உலக வர்த்தக அமைப்பின் (WTO) 14-வது அமைச்சர்கள் மாநாடு கேமரூனின் யாவுண்டேவில் நிறைவடைந்தது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடுகின்ற உலக வர்த்தக அமைப்பின் மிக உயர்ந்த முடிவெடுக்கும் அமைப்பாகும்.
- மீன்வள மானியங்கள் குறித்த பேச்சுவார்த்தைகள் நீட்டிக்கப்பட்டன; அதேசமயம் வருவாய் இழப்பு மற்றும் நியாயத் தன்மை குறித்த கவலைகள் காரணமாக இந்தியா சில விதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தது.
- மின்னணு-வணிக தடையுத்தரவு மற்றும் வளர்ச்சிக்கான முதலீட்டு வசதி (IFD) குறித்த விவாதங்களும் தொடர்ந்தன.

### Atoms4NetZero முன்னெடுப்பு

- Atoms4NetZero என்பது நாடுகள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதை ஆதரிப்பதற்கான ஒரு உலகளாவிய முன்னெடுப்பு ஆகும்.
- இது ஜனவரி 2025-இல் COP27 (ஐக்கிய நாடுகள் பருவநிலை மாற்ற மாநாடு) நிகழ்வின் போது சர்வதேச அணுசக்தி முகமையால் (IAEA) தொடங்கப்பட்டது.

- ❖ நாடுகள் தங்களின் தேசிய எரிசக்தித் தேவைகளில் தூய்மையான, நம்பகமான மற்றும் நிலையான மின் உற்பத்திக்காக அணுசக்தியை ஒருங்கிணைக்க உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது கார்பன் உமிழ்வைக் குறைத்தல், மின்சார உற்பத்தியில் கார்பன் பயன்பாட்டை நீக்குதல் மற்றும் அனைத்து துறைகளிலும் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- ❖ எரிசக்தி திட்டமிடலுக்காக MESSAGE (ஆற்றல் வழங்கல் உத்தி மாற்றுகளும் அவற்றின் பொதுவான சுற்றுச்சூழல் தாக்கங்களும் குறித்த மாதிரி) மற்றும் FRAMES (ஆற்றல் அமைப்புகளின் மாதிரியாக்கத்திற்கான கட்டமைப்பு) போன்ற மேம்பட்ட மென்பொருள் கருவிகளை இது பயன்படுத்துகிறது.
- ❖ உலகளாவிய மின்சார உற்பத்தியில் சுமார் 10% மற்றும் குறைந்த கார்பன் மின்சார உற்பத்தியில் 25% அணுசக்தி மூலம் கிடைக்கிறது.

## குடியுரிமை உரிமைகள் போராட்டம் 2026

- ❖ 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று, அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் நேரடி வாதங்களில் கலந்து கொண்ட முதல் பதவியில் இருக்கும் அமெரிக்க குடியரசுத் தலைவர் என்ற பெயரை டொனால்ட் ட்ரம்ப் பெற்றார்.
- ❖ பிறப்புரிமைக் குடியுரிமை தொடர்பான தனது நிர்வாக உத்தரவை ரத்து செய்த கீழ் நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக ட்ரம்ப் தாக்கல் செய்த மேல்முறையீட்டை நீதிமன்றம் விசாரிப்பதோடு இந்த வருகை தொடர்புடையது.
- ❖ அமெரிக்காவில் பிறப்புரிமைக் குடியுரிமை என்பது அமெரிக்க அரசியலமைப்பின் 14-வது திருத்தத்தின் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- ❖ இந்தத் திருத்தம் (1868), அமெரிக்காவில் பிறந்த அல்லது இயற்கைமுறை குடியுரிமை பெற்ற மற்றும் அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட அனைத்து நபர்களும் அமெரிக்கா மற்றும் அவர்கள் வசிக்கும் மாநிலத்தின் குடிமக்கள் என்று கூறுகிறது.
- ❖ இந்தக் கொள்கையின்படி, பெற்றோரின் குடியேற்றம் அல்லது குடியுரிமை நிலை எதுவாக இருந்தாலும், அமெரிக்க மண்ணில் பிறக்கும் எவருக்கும் தானாகவே குடியுரிமை கிடைக்கும்.
- ❖ வெளிநாட்டு தூதரக அதிகாரிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு இதில் விலக்கு உண்டு ஏனெனில் அவர்கள் இராஜதந்திர விலக்குரிமையைக் கொண்டு உள்ளனர் மற்றும் அமெரிக்க அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்கள் அல்ல.
- ❖ தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முதல் நாளில் கையெழுத்திடப்பட்ட ட்ரம்பின் நிர்வாக உத்தரவு, பிறப்புரிமைக் குடியுரிமையைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ சட்டவிரோதமாக அல்லது தற்காலிகமாக நாட்டில் இருக்கும் பெற்றோருக்கு அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்படாது என்று அந்த உத்தரவு அறிவித்தது.
- ❖ குறைந்தபட்சம் ஒரு பெற்றோராவது அமெரிக்க குடிமகனாகவோ அல்லது சட்டப்பூர்வ நிரந்தர குடியிருப்பாளராகவோ இல்லாவிட்டால், குடியுரிமை அங்கீகாரத்தை மறுக்குமாறு இது மத்திய முகமைகளுக்கு உத்தரவிட்டது.

- இந்த நிர்வாக உத்தரவு 14-வது திருத்தத்தை மீறுவதாகவும், குடியுரிமை மற்றும் குடியேற்றச் சட்டங்கள் மீதான காங்கிரஸின் அரசியலமைப்பு அதிகாரத்தைச் சீர்குலைப்பதாகவும் விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.
- இந்த நிர்வாக உத்தரவு அரசியலமைப்பிற்கு விரோதமானது என்பதால் மூன்று அமெரிக்க மாவட்ட நீதிமன்றங்களால் நாடு முழுவதும் முடக்கப்பட்டுள்ளது.
- பிறப்புரிமைக் குடியுரிமைக்கான அரசியலமைப்பு உத்தரவாதங்களை இந்த நிர்வாக உத்தரவு மீற முடியுமா என்பதை உச்ச நீதிமன்றம் தற்போது ஆய்வு செய்து வருகிறது.
- நீதிமன்றம் பிறப்புரிமைக் குடியுரிமையை உறுதிப்படுத்தினால், அதை அரசியலமைப்புத் திருத்தச் செயல்முறை மூலம் மட்டுமே மாற்ற முடியும்.
- அரசியலமைப்பைத் திருத்துவதற்கு அமெரிக்க காங்கிரஸின் இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஒப்புதலும், நான்கில் மூன்று பங்கு மாநில சட்டமன்றங்களின் அங்கீகாரமும் தேவை.
- இத்தகைய அரசியலமைப்புத் திருத்தச் செயல்முறை நீண்டது மற்றும் நிறைவடைய பல ஆண்டுகள் ஆகலாம்.

## அவசரகால தட்டம்மை தடுப்பூசி இயக்கம் – வங்காள தேசம்

- வேகமாகப் பரவி வரும் தட்டம்மை நோயைக் கட்டுப்படுத்த வங்காள தேசம் அவசரகால தடுப்பூசி இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.
- தட்டம்மை என்பது 'பாராமிக்ஸோவைரஸ்' குடும்பத்தைச் சேர்ந்த வைரஸால் ஏற்படும் மிகவும் தொற்றும் தன்மை கொண்ட காற்றுவழி நோயாகும்.
- இது இருமல், தும்மல் மற்றும் அசுத்தமான காற்று அல்லது மேற்பரப்புகள் மூலம் பரவுகிறது மற்றும் இதனால் இரண்டு மணி நேரம் வரை தொற்றுத் தன்மையுடன் இருக்கக் கூடும்.
- அதிக காய்ச்சல், இருமல், சளி, கண்கள் சிவத்தல் மற்றும் தோல் தடிப்பு போன்றவை பொதுவான அறிகுறிகளாகும்; இது முக்கியமாகத் தடுப்பூசி போடாத குழந்தைகளைப் பாதிக்கிறது.
- தட்டம்மை-ரூபெல்லா (MR) தடுப்பூசி நீண்ட காலப் பாதுகாப்பை வழங்குகிறது, மேலும் நோய் எதிர்ப்பு சக்தி அளிப்பதே மிகவும் பயனுள்ள கட்டுப்பாட்டு நடவடிக்கையாகும்.

## நீர் மாசு கண்காணிப்புப் பட்டியலில் PFAS சேர்ப்பு

- ஐரோப்பிய ஒன்றியம் (EU) அதன் நீர் மாசுக் கண்காணிப்புப் பட்டியலில் PFAS (பெர்- மற்றும் பாலிஃப்ளூரோஅல்கைல் பொருட்கள்)-ஐ சேர்த்துள்ளது.
- இவை "அழியா ரசாயனங்கள்" என்று அழைக்கப்படுகின்றன ஏனெனில் இவை சுற்றுச் சூழலில் எளிதில் சிதைவடையாது.
- இதில் PFOS (பெர்ஃப்ளூரோஆக்டேன் சல்போனிக் அமிலம்) மற்றும் PFOA (பெர்ஃப்ளூரோ ஆக்டானாயிக் அமிலம்) போன்ற தீங்கு விளைவிக்கும் கலவைகள் அடங்கும்.
- PFAS பொதுவாக ஒட்டாத சமையல் பாத்திரங்கள், உணவுப் பொட்டலங்கள் மற்றும் தொழில்துறை பொருட்களில் காணப்படுகின்றன.

- இந்த ரசாயனங்கள் நீர், மண் மற்றும் காற்றில் கலந்து, உயிரினங்களின் உடலில் ஒரு கட்டத்தில் சேமிக்கப்படுகின்றன.
- PFAS பாதிப்பானது புற்றுநோய், ஹார்மோன் சமநிலையின்மை மற்றும் கருவுறுதல் குறைபாடு போன்ற உடல்நலப் பிரச்சினைகளுடன் தொடர்புடையது.

## PHC உச்சிமாநாடு 2026

- நோய்களைக் குறைப்பதற்கான உலகளாவிய உறுதிப்பாட்டைப் புதுப்பிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டிற்கான சுகாதாரமான நகரங்களுக்கான கூட்டமைப்பு (PHC) உச்சி மாநாடு நடைபெற்றது.
- 55 நகரங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்ற இந்த உச்சி மாநாடானது பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்றது.
- PHC என்பது தொற்றாத நோய்கள் (NCDs) மற்றும் காயங்களைத் தடுப்பதற்காகப் பணியாற்றும் 74 நகரங்களின் கூட்டமைப்பாகும்.
- இக்கூட்டமைப்பில் இந்தியாவின் மும்பை, அகமதாபாத் மற்றும் பெங்களூரு ஆகிய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- தொற்றாத நோய்கள் (NCDs) என்பவை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவாத, நீண்ட கால பாதிப்பை ஏற்படுத்தும் நோய்களாகும்.
- இதய நோய்கள், புற்றுநோய்கள், சுவாச நோய்கள் மற்றும் நீரிழிவு நோய் ஆகியவை முக்கியத் தொற்றாத நோய்களாகக் கருதப்படுகின்றன.
- உலகளாவிய இறப்புகளில் 80%க்கும் அதிகமானவை தொற்றாத நோய்கள் மற்றும் காயங்களாலேயே ஏற்படுகின்றன.

## உலகளாவியப் பட்டினி அபாய எச்சரிக்கை 2026

- சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வங்கி மற்றும் உலக உணவுத் திட்டம் (WFP) ஆகியவை அதிகரித்து வரும் உலகளாவியப் பட்டினி அபாயம் குறித்து எச்சரித்து உள்ளன.
- எண்ணெய், எரிவாயு மற்றும் உரங்களின் விலை உயர்வு காரணமாக உலகம் முழுவதும் உணவு உற்பத்தி மற்றும் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்து வருகின்றன.
- மேற்கு ஆசியாவில் நிலவும் மோதல்கள் விநியோகத் தடைகளையும், விலை ஏற்ற இறக்கங்களையும் ஏற்படுத்துகின்றன.
- அதிகரித்து வரும் எரிசக்தி செலவுகள் உலகளாவிய உணவுப் பணவீக்கத்திற்கும், உணவுப் பாதுகாப்பின்மைக்கும் வழிவகுக்கின்றன.
- இறக்குமதியை அதிகம் நம்பியிருக்கும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.
- இந்த நாடுகள் அதிக கடன் சுமையையும், விலை உயர்வைக்கட்டுப்படுத்தும் வரையறுக்கப் பட்ட திறனையும் கொண்டுள்ளன.
- உணவு நெருக்கடியைத் தவிர்க்க உலகளாவிய முகமைகள் நிலைமையைக் கண்காணித்து ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

## வெளியுறவுக் கொள்கையில் மேட்மேன் கோட்பாடு

- சமீபத்திய சர்வதேச நெருக்கடிகள் காரணமாக, உலகளாவிய அரசியலில் 'மேட்மேன் கோட்பாடு' மீண்டும் விவாதிக்கப்பட்டு வருகிறது.
- இது ஒரு வெளியுறவுக் கொள்கை மற்றும் உத்திசார் கோட்பாடாகும், இதில் ஒரு தலைவர் வேண்டுமென்றே கணிக்க முடியாதவராகவோ, பகுத்தறிவு அற்றவராகவோ அல்லது தீவிர நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பவராகவோ காட்டிக் கொள்வார்.
- பனிப்போரின் போது ரிச்சர்ட் நிக்சன் மற்றும் அவரது ஆலோசகரான ஹென்றி கிஸ்ஸிஞ்சர் ஆகியோருடன் இந்தக் கோட்பாடு நெருக்கமாக தொடர்புடையது.
- இது முக்கியமாக வியட்நாம் போரின் பின்னணியில் பயன்படுத்தப் பட்டது.
- போர் போன்ற தீவிர நடவடிக்கைகளின் மீதான அச்சத்தை உருவாக்குவதன் மூலம் எதிரிகளை பின்வாங்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.
- இது உளவியல் அழுத்தத்தை நம்பியுள்ளது மற்றும் குறுகிய கால நன்மையை அளிக்கக் கூடும் ஆனால் நீண்ட கால நம்பிக்கையை குறைக்கிறது.

## அமெரிக்க அரசியலமைப்பின் 25வது திருத்தம்

- அமெரிக்க அரசியலமைப்பின் 25-வது திருத்தம், தலைமைத்துவம் மற்றும் இயலாமை தொடர்பான விவாதங்களின் பின்னணியில் தற்போது விவாதிக்கப்படுகிறது.
- இது அதிபரின் பதவி மாற்றம் குறித்து தெளிவுபடுத்துவதற்காக, ஜான் எஃப். கென்னடி படுகொலை செய்யப்பட்ட பிறகு 1967-ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது.
- இது அதிபர் இறந்துவிட்டாலோ, ராஜினாமா செய்தாலோ அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டாலோ துணை அதிபர் , அடுத்த அதிபராக பதவியேற்பார் என்று கூறுகிறது.
- அதிபரின் இயலாமையைக் கையாள்வதற்கும், காலியாக உள்ள துணை அதிபர் பதவியை நிரப்புவதற்குமான விதிகளையும் இது வழங்குகிறது.
- இதன் 4வது பிரிவு, துணை அதிபர் மற்றும் அமைச்சரவையின் பெரும்பான்மையினர் இணைந்து, அதிபர் தனது கடமைகளைச் செய்ய இயலாதவர் என அறிவிக்க அனுமதிக்கிறது.
- இதுபோன்ற சூழ்நிலையில், துணை ஜனாதிபதி தற்காலிக ஜனாதிபதியாக மாறுவார்; ஆனால் இதனை அதிபர் எதிர்த்து முறையீடுசெய்தால், காங்கிரஸ் இப்பிரச்சினை குறித்து (அமெரிக்க நாடாளுமன்றம்) மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் முடிவெடுக்கலாம்.

## ஹங்கேரி தேர்தல் மற்றும் ஆர்பனின் ஆட்சி

- விக்டர் ஆர்பனின் 16 ஆண்டு கால ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரக் கூடிய தேர்தல் ஹங்கேரியில் நடைபெற்றது.
- 16 ஆண்டுகள் பிரதமராகப் பணியாற்றிய ஆர்பன் வலுவான பெரும்பான்மையுடன் தொடர்ந்து நான்கு தேர்தல்களில் வெற்றி பெற்றார்.
- அவரது ஆட்சியின் போது, ஊடகங்கள், நீதித்துறை மற்றும் முக்கிய நிறுவனங்கள் மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாடு அதிகரித்தது.

- ❖ அவர் தேசியவாதக் கொள்கைகளைப் பின்பற்றினார், மேலும் ரஷ்யா மற்றும் விளாடிமிர் புடினுடன் நெருக்கமான உறவைப் பேணினார்.
- ❖ உக்ரைனுக்கான உதவி உட்பட பல முடிவுகளைத் தடுக்க ஐரோப்பிய ஒன்றியத்தில் தனது வீட்டோ அதிகாரத்தை அவர் பயன்படுத்தினார்.
- ❖ ஜனநாயக உரிமை மற்றும் ஆளுகை ஆகியவை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் பதட்டங்கள் ஏற்பட அவரது 16 ஆண்டு கால ஆட்சி வழி வகுத்தது.

## எதிர்கால COP-இன் தொலைநோக்கு மாநாடு

- ❖ COP31 பருவநிலை உச்சிமாநாட்டிற்கான "COP of the Future" என்ற புதிய தொலைநோக்கு திட்டத்தை துருக்கி அறிவித்துள்ளது.
- ❖ COP31 (பங்குதாரர் மாநாடு) ஆனது, ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றம் குறித்த கட்டமைப்பு மாநாட்டின் (UNFCCC) கீழ் துருக்கியின் அண்டல்யாவில் நடைபெறும்.
- ❖ துருக்கி இந்த மாநாட்டைத் தொகுத்து வழங்கி, செயல் திட்டத்தை வழிநடத்தும்; அதே வேளையில் ஆஸ்திரேலியா பேச்சுவார்த்தைகளைக் கையாளும்.
- ❖ இந்த தொலைநோக்கு உரையாடல், ஒருமித்த கருத்து மற்றும் செயல் ஆகிய கொள்கைகளுடன் செயல்படுத்துதல், அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- ❖ சுத்தமான ஆற்றல், நிலையான விவசாயம், பருவநிலையைத் தாங்கும் உள்கட்டமைப்பு மற்றும் கடல் பாதுகாப்பு ஆகியவை இதன் முக்கியப் பகுதிகளாகும்.
- ❖ இது பருவநிலை நிதி, தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கான ஆதரவை வலியுறுத்துகிறது.

## முதல் BRICS சுகாதார செயற்குழு கூட்டம் 2026

- ❖ உலகளாவிய சுகாதார ஒத்துழைப்பு குறித்து விவாதிப்பதற்காக முதல் BRICS சுகாதார செயற்குழு கூட்டத்தை இந்தியா புது தில்லியில் நடத்தியது.
- ❖ சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், BRICS (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா) கட்டமைப்பின் கீழ் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்தது.
- ❖ மக்களை மையப்படுத்திய சுகாதாரப் பராமரிப்பில் கவனம் செலுத்தும் வகையில், "Building for Resilience, Innovation, Cooperation and Sustainability" என்பது இதன் கருத்துருவாக இருந்தது.
- ❖ பெருந்தொற்றுத் தயார்நிலை, சுகாதாரத் தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு (UHC) ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை இக்கூட்டம் நோக்கமாகக் கொண்டிருந்தது.
- ❖ ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் மற்றும் மனநலம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் போன்ற புதிய கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளை இந்தியா அறிமுகப் படுத்தியது.

- காசநோய் (TB) ஆராய்ச்சி, டிஜிட்டல் சுகாதாரம், பாரம்பரிய மருத்துவம், முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளுக்கான அணுகல் ஆகியவை முக்கியப் பகுதிகளில் அடங்கும்.

## பாக்ஸ் சிலிக்கா முன்னெடுப்பு – பிலிப்பைன்ஸ்

- உலகளாவிய குறைக்கடத்தி மற்றும் தொழில்நுட்ப விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதற்காக, அமெரிக்கா தலைமையிலான 'பாக்ஸ் சிலிக்கா' முன்னெடுப்பில் பிலிப்பைன்ஸ் இணைந்துள்ளது.
- மூலப்பொருட்கள் முதல் அதிநவீன சில்லு உற்பத்தி வரையிலான முழுமையான தொழில்நுட்ப விநியோகச் சங்கிலியைப் பாதுகாப்பதற்காக அமெரிக்காவால் இந்த முன்னெடுப்பு வழிநடத்தப்படுகிறது.
- பிலிப்பைன்ஸில் உள்ள லுசான் பொருளாதார வழித்தடத்தில் 4,000 ஏக்கர் பரப்பளவிலான ஒரு தொழில்துறை மையம் உருவாக்கப்படும்.
- இந்த மையம் குறைக்கடத்திகள், மின்னணு சாதனங்கள் மற்றும் நிக்கல், கோபால்ட் மற்றும் தாமிரம் போன்ற முக்கியமான கனிமங்களை பதப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- இந்தியா, தென் கொரியா, சிங்கப்பூர், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுடன் இணைந்து, இந்த முன்னெடுப்பின் 13வது உறுப்பு நாடாக பிலிப்பைன்ஸ் மாறியுள்ளது.
- இந்தத் திட்டம் சீனா மீதான சார்பைக் குறைப்பதற்கும், நட்பு நாடுகளின் விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதற்கும் ஃபிரெண்ட்-ஷோரிங்/நட்பு நாடுகளுடன் இணைந்து விநியோக வலையமைப்பை உருவாக்குதல் முறையை ஊக்குவிக்கிறது.

## கடன் வாங்குவோர் தளம்

- 2026 ஆம் ஆண்டிற்கான IMF-உலக வங்கி வசந்த கால கூட்டங்களில் வளரும் நாடுகள் முதன்முறையாக 'கடன் வாங்குவோர் தளத்தை' தொடங்கின.
- ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதையும், கடன் பிரச்சனைகளில் கடன் வாங்கும் நாடுகளுக்கு ஒரு கூட்டுக்குரலை வழங்குவதையும் இத்தளம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD) இதன் செயலகமாகச் செயல்பட்டு ஆதரவளிக்கும்.
- நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் அறிவையும் தீர்வுகளையும் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு மன்றத்தை இது வழங்குகிறது.
- வளரும் நாடுகள் அதிக கடனை எதிர்கொள்கின்றன; அவற்றின் வெளிநாட்டுக் கடன் சுமார் 11.7 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக இருப்பதோடு, திருப்பிச் செலுத்தும் சுமையையும் அதிகரித்து வருகிறது.

## உலகளாவிய கடல்சார் பாதுகாப்பு முன்னெடுப்பு

- இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் மற்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் ஆகியோர் ஹார்முஸ் நீர்ச்சந்திக்கான உலகளாவிய கடல்சார் பாதுகாப்பு முன்னெடுப்பைத் தொடங்கினர்.
- கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்தை உறுதி செய்வதையும், முக்கிய உலகளாவிய கப்பல் வழித்தடங்களைப் பாதுகாப்பதையும் இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தக் காணொளி கூட்டத்தில் இந்தியா உட்பட சுமார் 40 நாடுகள் பங்கேற்றன.
- பெர்சிய வளைகுடாவை உலகளாவிய சந்தைகளுடன் இணைக்கும் ஹார்முஸ் நீர்ச்சந்தி, உலகளாவிய எண்ணெய் மற்றும் எரிவாயு வர்த்தகத்திற்கு மிகவும் முக்கியமானது.
- பிராந்தியப் பதற்றங்களுக்கு மத்தியில் வணிக கப்பல் போக்குவரத்தைப் பாதுகாப்பதிலும், உலகளாவிய எரிசக்தி விநியோகச் சங்கிலிகளை நிலைப் படுத்துவதிலும் இந்த முன்னெடுப்பு கவனம் செலுத்துகிறது.

## AZEC Plus கூட்டம்

- எரிசக்தி விநியோகத் தடங்கல்கள் மற்றும் விநியோகச் சங்கிலி பின்னடைவுத் திறன் குறித்து விவாதிக்க ஜப்பானால் கூட்டப்பட்டு, இணைய வழியில் நடைபெற்ற AZEC Plus கூட்டத்தில் இந்தியா பங்கேற்றது.
- இக்கூட்டம் எரிசக்திப் பாதுகாப்பு, கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்தல் மற்றும் விநியோகச் சங்கிலி பின்னடைவுத் திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- பாதுகாப்பான மற்றும் தடையற்ற கடல்வழிப் போக்குவரத்துப் பாதைகளின் அவசியத்தை இந்தியா வலியுறுத்தியது.
- இந்தத் தளமானது 2023 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆசிய பூஜ்ஜிய உமிழ்வு சமூகத்தின் (AZEC) ஒரு பகுதியாகும்.
- ஆசியாவில் நிலையான மற்றும் நீடித்த எரிசக்தி விநியோகத்திற்கான பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## RELOS ஒப்பந்தம்

- பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்தியாவும் ரஷ்யாவும் RELOS (பரஸ்பர தளவாடப் பரிமாற்ற ஒப்பந்தம்) ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன.
- இது போர் மற்றும் அமைதிக் காலங்களில் ஒருவருக்கொருவர் ராணுவத் தளங்கள், துறைமுகங்கள் மற்றும் விமான வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கிறது.
- இது ஒருவருக்கொருவர் எல்லைக்குள் 3,000 ராணுவ வீரர்கள், 5 போர்க்கப்பல்கள் மற்றும் 10 விமானங்களை நிறுத்த அனுமதிக்கிறது.
- எரிபொருள் நிரப்புதல், பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் உதிரிபாகங்கள் வழங்குதல் போன்ற தளவாட ஆதரவை இந்த ஒப்பந்தம் வழங்குகிறது.

- நேரடிப் பணப் பரிவர்த்தனைக்குப் பதிலாகப் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் செலவுகளைச் சரிசெய்ய முடியும்.
- இது கூட்டுப் பயிற்சிகள், பயிற்சி மற்றும் நீண்ட தூர ராணுவ நடவடிக்கைகளை மேம்படுத்துகிறது.
- ரஷ்யா இந்தியப் பெருங்கடலில் ஆதரவைப் பெறும் அதே வேளையில், இந்தியா ஆர்க்டிக் பகுதி உட்பட ரஷ்ய வசதிகளுக்கான அணுகலைப் பெறுகிறது.

## எதிர்காலத் தலைமுறையினருக்கான புகையிலைத் தடை - இங்கிலாந்து

- 2009 ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்தவர்கள் சட்டப் பூர்வமாகப் புகையிலை வாங்குவதைத் தடைசெய்யும் புகையிலை மற்றும் வேப்ஸ் / மின்-சிகரெட்டுகள் சட்டத்தை இங்கிலாந்து (UK) நிறைவேற்றியுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் சட்டக் கட்டுப்பாட்டைப் படிப்படியாக அதிகரிப்பதன் மூலம் "புகை இல்லாத தலைமுறையை" உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இங்கிலாந்தில் புகைப் பிடிப்பதால் ஆண்டுதோறும் சுமார் 64,000 இறப்புகள் ஏற்படுவதோடு இது தேசிய சுகாதார சேவைக்கு (NHS) பெரும் சுமையை ஏற்படுத்துகிறது.
- பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் போன்ற பொது இடங்களில் புகைப் பிடிப்பதற்கான தடையை விரிவுபடுத்துவதுடன், வேப்பிங்/மின்-சிகரெட் புகைத்தல் மீதான விதிகளையும் இச்சட்டம் கடுமையாக்குகிறது.
- இந்த மசோதா அரச ஒப்புதல் பெற்ற பிறகு சட்டமாக மாறும், இதன்மூலம் உலகளவில் மிகவும் கடுமையான புகையிலை எதிர்ப்புச் சட்டங்களில் ஒன்றாக இது அமையும்.

## ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தங்கள் - ஜோர்டான்

- ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தங்களில் ஜோர்டான் கையெழுத்திட்டுள்ளதன் மூலம் பொறுப்பான விண்வெளி ஆய்வுக்கான உலகளாவிய கட்டமைப்பில் இணையும் 63-வது நாடாக ஜோர்டான் ஆகியுள்ளது.
- அமைதியான, வெளிப்படையான மற்றும் நிலையான விண்வெளி ஆய்வுக்கான பொதுவான கொள்கைகளை நிறுவுவதற்காக, நாசா மற்றும் அதன் நட்பு நாடுகளால் இந்த ஒப்பந்தங்கள் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன.
- இதில் கையெழுத்திட்டதன் மூலம், அறிவியல் தரவுகளை வெளிப்படையாகப் பகிர்தல், அவசரகால உதவிகளை வழங்குதல், விண்வெளி நடவடிக்கைகளில் தலையிடாமல் இருப்பதை உறுதி செய்தல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிலவு மற்றும் விண்வெளிப் பாரம்பரியத் தளங்களைப் பாதுகாத்தல் போன்ற முக்கியக் கொள்கைகளுக்கு ஜோர்டான் உறுதியளிக்கிறது.
- மனிதர்களை மீண்டும் நிலவுக்கு அனுப்புதல், நிலவில் நீண்டகால இருப்பை உருவாக்குதல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புடன் செவ்வாய் கிரகத்தை நோக்கிய ஆய்வுகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஆர்ட்டெமிஸ் திட்டத்துடன் இந்த ஒப்பந்தம் இணைக்கப்பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## ஆரஞ்சு பொருளாதாரம்

- இந்தியாவின் ஆரஞ்சு பொருளாதாரத்தை (படைப்பாற்றல் பொருளாதாரம்) மேம்படுத்துவதற்காக தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் மூன்று முக்கிய முயற்சிகளைத் தொடங்கியுள்ளது.
- அவை தேசிய AI திறன் மேம்பாட்டு முன்னெடுப்பு, MyWAVES தளம் மற்றும் தொலைக் காட்சிகளில் உள்ளமைக்கப்பட்ட செயற்கைக்கோள் அலைவரிசை சீரமைப்பிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மின்னணு நிகழ்ச்சி வழிகாட்டி (EPG) ஆகியனவாகும்.
- தேசிய AI திறன் மேம்பாட்டு முன்னெடுப்பானது கூகுள் மற்றும் யூடியூப் ஆதரவுடன் AVGC (இயங்குபடம், காட்சி விளைவுகள், மின்னணு விளையாட்டு மற்றும் சித்திரக் கதைகள்) துறையில் 15,000 நிபுணர்களுக்குப் பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- MyWAVES தளமானது பயனர்களால் உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தை (UGC) ஊக்குவிப்பதுடன் பல மொழிகளில் இந்தியப் படைப்பாளர்களுக்கு ஆதரவளிக்கிறது.
- மேம்படுத்தப்பட்ட EPG ஆனது செட்-டாப் பாக்ஸ் இல்லாமலேயே DD Free Dish சேவையை அணுக அனுமதிப்பதன் மூலம் தொலைதூரப் பகுதிகளில் டிஜிட்டல் அணுகல் மேம்படும்.
- ஆரஞ்சு பொருளாதாரம் என்பது ஊடகம், திரைப்படங்கள், மின்னணு விளையாட்டு மற்றும் வடிவமைப்பு போன்ற படைப்பாற்றல், கலாச்சாரம் மற்றும் அறிவுசார் சொத்துரிமை சார்ந்த துறைகளைக் குறிக்கிறது.

## RBI - பணப்பரிமாற்றத் தொலைநோக்கு 2028

- வங்கிக் கணக்கு மாற்றத்தக்க தன்மையை மையமாகக் கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தனது 'பணப்பரிமாற்றத் தொலைநோக்கு 2028'-ஐ வெளியிட்டுள்ளது.
- இது சம்பளம், EMI மற்றும் கட்டணங்கள் போன்ற இணைக்கப்பட்ட சேவைகளைப் பாதிக்காமல், வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளை எளிதாக மாற்ற அனுமதிக்கிறது.
- அனைத்து கட்டண வழிமுறைகளையும் ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கு மாற்றுவதற்காக PaSS (பணம் செலுத்தல் பரிமாற்றச் சேவை) என்ற முறையை RBI பரிந்துரைத்துள்ளது.
- இது வாடிக்கையாளர்கள் ஒரே வங்கியில் முடங்கிக் கிடப்பதைக் குறைப்பதையும், வாடிக்கையாளர்களின் தேர்வுகள் மற்றும் வங்கிகளுக்கிடையிலான போட்டியை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- G20 இலக்குகளின் படி, வேகமான மற்றும் மலிவான எல்லை தாண்டிய பணப் பரிமாற்றங்களிலும் இந்த தொலைநோக்குத் திட்டம் கவனம் செலுத்துகிறது.

## வருமான வரிச் சட்டம் 2025

- 1961-ம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்ட வருமான வரிச் சட்டம் 2025 ஆனது, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வந்தது.

- வரிச் சட்டங்களை எளிமையாக்க, பிரிவுகளின் எண்ணிக்கை 819-லிருந்து 536 ஆகவும், விதிகளின் எண்ணிக்கை 511-லிருந்து 333 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.
- வரித் தாக்கல் செய்வதை எளிமையாகவும் வேகமாகவும் மாற்ற, மொத்த படிவங்களின் எண்ணிக்கை 390-லிருந்து 190 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- தாராளமயமாக்கப்பட்ட பணம் அனுப்பும் திட்டத்தின் (LRS) கீழ், கல்வி, மருத்துவம் மற்றும் சுற்றுலாப் பயணங்களுக்காக ₹10 லட்சத்திற்கு மேல் அனுப்பப்படும் பணத்திற்கான TCS (மூலத்திலேயே வசூலிக்கப்படும் வரி) 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- FAST-DS (சிறிய வரி செலுத்துவோருக்கான வெளிநாட்டு சொத்துக்கள் வெளிப்படுத்தும் திட்டம்) மூலம், சிறிய வரி செலுத்துவோர் தங்களின் வெளிநாட்டு சொத்துக்களைக் குறைந்த அபராதத்துடன் தானாக முன்வந்து அறிவிக்க அனுமதிக்கிறது.

## இரண்டு அடுக்கு அங்கீகார விதி - RBI

- பணப்பரிமாற்றப் பாதுகாப்பை மேம்படுத்த, ஏப்ரல் 1, 2026 முதல் அனைத்து டிஜிட்டல் பணப்பரிமாற்றங்களுக்கும் இரண்டு அடுக்கு அங்கீகாரத்தை (2FA) இந்திய ரிசர்வ் வங்கி கட்டாயமாக்கியுள்ளது.
- இரண்டு அடுக்கு அங்கீகாரம் என்பது PIN (ரகசிய எண்), OTP (ஒருமுறை பயன்படுத்தும் கடவுச்சொல்) அல்லது பயோமெட்ரிக்/உயிரியளவியல் (கைரேகை/முகம் அடையாளம் காணுதல்) போன்ற இரண்டு வெவ்வேறு சரிபார்ப்பு முறைகளைப் பயன்படுத்துவதைக் குறிக்கும்.
- குறைந்தபட்சம் ஒரு அங்கீகார முறையாவது OTP போன்ற மாறும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும், இது ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் மாறுபடுவதால் பாதுகாப்பை அதிகரிக்கிறது.
- இனி வரும் காலங்களில், PIN அல்லது OTP மட்டும் பயன்படுத்தும் ஒற்றை அடுக்கு அங்கீகார முறைகள் அனுமதிக்கப்படாது.
- இந்த விதி UPI, பற்று மற்றும் கடன் அட்டைகள் மற்றும் அலைபேசி பணப்பைகள் உட்பட அனைத்து டிஜிட்டல் பணப்பரிமாற்ற அமைப்புகளுக்கும் பொருந்தும்.
- அதிகரித்து வரும் டிஜிட்டல் பணப்பரிமாற்ற மோசடிகளைக் குறைப்பதும், சைபர் அச்சுறுத்தல்களிலிருந்து பயனர்களைப் பாதுகாப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

## காப்பீட்டுத் துறையில் Ind AS

- இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது (IRDAI), காப்பீட்டுத் துறையில் இந்திய கணக்கியல் தரநிலைகளை (Ind AS) அறிமுகப்படுத்தியுள்ளது.
- Ind AS என்பது 2015 ஆம் ஆண்டில் பெருநிறுவன விவகார அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்ட கணக்கியல் விதிகளாகும்.
- இவை சர்வதேச நிதி அறிக்கை தரநிலைகளுடன் (IFRS) ஒத்துப்போகின்றன.
- இந்தத் தரநிலைகள் நியாயமான மதிப்புக் கணக்கியல், சிறந்த வெளிப்படைத்தன்மை மற்றும் நிதி அறிக்கையிடலில் மேம்பட்ட நம்பகத்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன.

- இதற்கு முன்பு, இந்தியா 'இந்தியா பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளை' (Indian GAAP) பின்பற்றியது, மேலும் இது வரலாற்றுச் செலவு கணக்கியல் அடிப்படையில் 18 தரநிலைகளைக் கொண்டிருந்தது.
- IRDAI என்பது இந்தியாவின் காப்பீட்டுத் துறையை ஒழுங்குபடுத்தவும் மேம்படுத்தவும் IRDAI சட்டம், 1999-இன் கீழ் அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.

## முக்கியத்துவம் வாய்ந்த காப்பீட்டு நிறுவனங்கள்

- 2025–26 நிதியாண்டிற்கான உள்நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த காப்பீட்டு நிறுவனங்களாக (D-SII), LIC, GIC Re மற்றும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் ஆகியவற்றை இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) தக்க வைத்துள்ளது.
- இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்தியப் பொதுக் காப்பீட்டுக் கழகம் மற்றும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் ஆகியவை நாட்டின் நிதி நிலைத்தன்மைக்கு மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.
- அவற்றின் பிரம்மாண்டமான அளவு மற்றும் சந்தை முக்கியத்துவம் காரணமாக இந்த நிறுவனங்கள் "தோல்வியடைய முடியாத அளவுக்குப் பெரியவை" என்று அழைக்கப் படுகின்றன.
- இந்த நிறுவனங்களில் ஏதேனும் தோல்வி அடைந்தால் அது ஒட்டு மொத்த நிதி அமைப்பு மற்றும் பொருளாதாரத்தைப் பாதிக்கும்.
- எனவே, இவை கடுமையான விதிமுறைகள், சிறந்த நிர்வாகம் மற்றும் வலுவான இடர் மேலாண்மை நெறிமுறைகளுக்கு உட்பட்டவை.

## வங்கிகளில் CASA விகிதம் சரிவு

- 2025 ஆம் ஆண்டு டிசம்பரில் CASA (நடப்புக் கணக்கு மற்றும் சேமிப்புக் கணக்கு) விகிதம் 37.9% ஆகக் குறைந்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத மிகக்குறைந்த அளவை எட்டியுள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.
- CASA வைப்புத் தொகைகள் என்பது வங்கிகளில் நடப்புக் கணக்கு மற்றும் சேமிப்புக் கணக்குகளில் வைக்கப் படும் குறைந்த செலவிலான வைப்புத்தொகைகளாகும்.
- மக்கள் தங்களது பணத்தை பங்குகள், பரஸ்பர நிதிகள் மற்றும் தங்கம் போன்ற அதிக வருமானம் தரும் முதலீடுகளுக்கு மாற்றியதால் இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளது.
- சேமிப்புக் கணக்குகளின் பங்கு 28.9% ஆகக் குறைந்ததே ஒட்டுமொத்த CASA விகிதச் சரிவுக்கு முக்கியக் காரணமாக அமைந்தது.
- CASA விகிதம் குறைவது வங்கிகளின் நிதிச் செலவை அதிகரிக்கிறது, ஏனெனில் அவை அதிக வட்டி கொண்ட வைப்புத்தொகைகள் மற்றும் கடன்களையே அதிகம் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.
- இது வங்கிகளின் லாபத்தைக் குறைப்பதோடு, அவற்றின் கடன் வழங்கும் திறனையும் பாதிக்கலாம்.

## தெற்காசிய வளர்ச்சியில் இந்தியா முதன்மை

- தெற்காசியாவின் பொருளாதார வளர்ச்சியை இந்தியா முன்னின்று நடத்தும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.
- இந்தியாவின் பொருளாதாரமானது 2025 ஆம் நிதியாண்டில் (FY25) 7.1% லிருந்து 2026 ஆம் நிதியாண்டில் (FY26) 7.6% ஆக உயர்ந்து, வலுவான செயல்திறனை வெளிப்படுத்தி உள்ளது.
- 2027 ஆம் நிதியாண்டில் வளர்ச்சி 6.6% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இதன் மூலம் இப்பிராந்தியத்தில் மிக வேகமாக வளரும் முக்கியப் பொருளாதாரமாக இந்தியா திகழ்கிறது.
- வலுவான தனியார் நுகர்வு மற்றும் ஏற்றுமதி ஆகியவை பொருளாதார வளர்ச்சி மற்றும் தேவையை ஆதரிக்கின்றன.
- GST சீர்திருத்தங்கள் மற்றும் குறைந்த பணவீக்கம் ஆகியவை மக்களின் செலவிடும் திறனை அதிகரித்துள்ளன.
- கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றங்கள் விநியோகம் மற்றும் பணவீக்கத்தைப் பாதிக்கக் கூடிய அபாயங்களாகக் கருதப் படுகின்றன.
- உலகளாவிய நிச்சயமற்றத் தன்மைகளால் 2026ம் ஆண்டில் தெற்காசியாவின் ஒட்டு மொத்த வளர்ச்சி 6.3% ஆகக் குறையக் கூடும்.

## இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி வளர்ச்சி

- உலகளாவிய மீன் உற்பத்தியில் சுமார் 8% பங்களிப்புடன், சீனாவிற்கு அடுத்தபடியாக உலகின் 2-வது பெரிய மீன் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- இந்தியாவின் மீன்வளத் துறை சுமார் 30 மில்லியன் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்பாளர்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது.
- மீன் உற்பத்தி 141.64 லட்சம் டன்களில் (2019-20) இருந்து 197.75 லட்சம் டன்களாக (2024-25) அதிகரித்துள்ளது.
- உறைந்த இறால் மிகப்பெரிய ஏற்றுமதிப் பொருளாகவும், 350-க்கும் மேற்பட்ட கடல் உணவு வகைகள் சுமார் 130 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலமாகவும், இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி ₹62,408 கோடியைத் (2024-25) தாண்டியுள்ளது.
- அமெரிக்கா மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாக உள்ளது, அதைத் தொடர்ந்து சீனா, ஐரோப்பிய ஒன்றியம், தென்கிழக்கு ஆசியா, ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் உள்ளன.

## இந்தியாவில் சில்லறைப் பணவீக்கம் - மார்ச் 2026

- சில்லறைப் பணவீக்கம் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 3.21% ஆக இருந்து 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 3.4% ஆக அதிகரித்துள்ளது.
- இது குடும்பங்கள் நுகரும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் லேசான உயர்வைக் காட்டுகிறது.
- நுகர்வோர் விலை குறியீட்டைப் (CPI) பயன்படுத்தி அளவிடப்படும், இதில் உணவு, எரிபொருள், வீட்டுவசதி மற்றும் பிற அத்தியாவசிய சேவைகள் போன்ற பொருட்கள் அடங்கும்.

- குறிப்பாக காய்கறிகள், தேங்காய் மற்றும் தங்கம், வெள்ளி போன்ற சில விலை மதிப்பற்ற பொருட்களின் விலை உயர்வு காரணமாக ஏற்பட்ட அதிக உணவுப் பண வீக்கமே இந்த அதிகரிப்புக்கு முக்கியக் காரணமாகும்.
- 2024 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்ட புதிய CPI தொடரை அடிப்படையாகக் கொண்ட இந்தத் தரவு தற்போதைய நுகர்வு முறைகளை மிகவும் துல்லியமாகப் பிரதிபலிக்கிறது.
- மேற்காசியாவில் நிலவும் பதட்டங்கள் போன்ற உலகளாவிய காரணிகளும் விநியோகச் சங்கிலிகளைப் பாதித்து போக்குவரத்து மற்றும் பொருட்களின் விலையை அதிகரித்துள்ளன.
- உயர்வு இருந்த போதிலும், பணவீக்கம் இந்திய ரிசர்வ் வங்கியின் இலக்கு வரம்பிற்குள் (4% ± 2%) உள்ளதுடன் இது பணவீக்கம் மிதமாகவும் கட்டுப்பாட்டிலும் இருப்பதைக் குறிக்கிறது.

## RBI உட்கர்ஷ் 2029 கட்டமைப்பு

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2029 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான காலகட்டத்திற்கான தனது நடுத்தர கால உத்தியான "உட்கர்ஷ் 2029" என்பதைத் தொடங்கியுள்ளது.
- டிஜிட்டல் வளர்ச்சி மற்றும் நிதி நிலைத்தன்மையை மையமாகக் கொண்டு, உலகளாவிய முன்னணி மத்திய வங்கியான RBI-ஐ மேலும் வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம் (CBDC), ஒருங்கிணைந்த கடன் வழங்கும் இடைமுகம் (ULI) மற்றும் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகத்தின் (UPI) உலகளாவிய விரிவாக்கம் ஆகியவை முக்கிய முன்னெடுப்புகளில் அடங்கும்.
- இது இந்திய ரூபாயின் சர்வதேசமயமாக்கலையும், சிறந்த எல்லை தாண்டிய பணப் பரிவர்த்தனைகளையும் ஊக்குவிக்கிறது.
- ஒழுங்குமுறை, வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட சேவைகள், நிதிச் சந்தைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற தொழில்நுட்பம் ஆகியவை இதன் கவனக் குவிப்புப் பகுதிகளில் அடங்கும்.
- இந்தக் கட்டமைப்பு, கண்டுபிடிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் திறமையான வள ஒதுக்கீடு ஆகியவற்றையும் வலியுறுத்துகிறது.

## 6வது பெரிய பொருளாதாரம் - இந்தியா

- உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) தரவரிசையின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் இந்தியா 6வது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் (IMF) தெரிவித்துள்ளது.
- இந்தியாவின் GDP சுமார் 3.92 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும், மேலும் உலகளாவிய ஒப்பீட்டிற்காகத் தரவரிசைகள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுகின்றன.
- இந்தியா 5வது இடத்திலிருந்து சரிந்து இப்போது இங்கிலாந்து மற்றும் ஜப்பானுக்குப் பின்னால் உள்ளது; அதே வேளையில் அமெரிக்கா, சீனா மற்றும் ஜெர்மனி ஆகியவை முன்னிலையில் தொடர்கின்றன.

- இந்த மாற்றம் பலவீனமான உள்நாட்டு வளர்ச்சியால் அல்லாமல், முக்கியமாக இந்திய ரூபாயின் வீழ்ச்சி மற்றும் அமெரிக்க டாலரின் வலுவடைதல் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ளது.
- வலுவான பொருளாதாரச் செயல்திறனைக் காட்டும் வகையில், இந்தியா ரூபாய் மதிப்பில் சுமார் 9% பெயரளவு GDP வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

## 6வது மிகப்பெரிய பொருளாதாரம் - இந்தியா

- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) 2026 ஆம் ஆண்டிற்கான உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட (WEO) அறிக்கையில் இந்தியா உலகளவில் 6வது இடத்தைப் பிடித்து உள்ளது.
- அமெரிக்க டாலர் மதிப்பில் உள்ள பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் இந்த உலகளாவிய தரவரிசை வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் $4.15 டிரில்லியன் ஆகும், இது ஜப்பான் (~$4.38 டிரில்லியன்) மற்றும் இங்கிலாந்து (~$4.27 டிரில்லியன்) ஆகிய நாடுகளுக்குப் பின்னால் உள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் திருத்தம் (அடிப்படை ஆண்டு மாற்றம்) மற்றும் இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு ஆகிய காரணங்களால் இந்த தரவரிசை குறைந்துள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ₹357 லட்சம் கோடியிலிருந்து ₹345 லட்சம் கோடியாக திருத்தப்பட்டுள்ளது.
- இந்தியா 2027 ஆம் ஆண்டிற்குள் 4வது மிகப்பெரிய பொருளாதாரமாகவும், 2031 ஆம் ஆண்டிற்குள் 3வது மிகப்பெரிய பொருளாதாரமாகவும் மாறும் என IMF கணித்துள்ளது.

## மின்னணு வழி பணப்பிடித்தம் தொடர்பான விதிமுறைகள் 2026

- இந்திய ரிசர்வ் வங்கி புதிய டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான மின்னணு வழி பணப்பிடித்தம் தொடர்பான விதிமுறைகள் 2026-ஐ வெளியிட்டது.
- இந்தக் விதிமுறைகளானது, அட்டைகள், UPI மற்றும் முன்பணம் செலுத்தப்பட்ட கட்டணக் கருவிகள் மூலம் செய்யப்படும் தொடர்ச்சியான டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான விதிகளை தரப்படுத்துகிறது.
- வாடிக்கையாளர்கள் கூடுதல் அங்கீகார அமைப்புடன் (AFA) ஒரு முறை பதிவை முடிக்க வேண்டும்.
- ₹15,000 வரையிலான தொடர் கட்டணங்களை AFA இல்லாமல் செய்யலாம்; காப்பீடு, பரஸ்பர நிதிகள் மற்றும் கடன் அட்டைகளுக்கு இந்த வரம்பு ₹1 லட்சமாகும்.
- வங்கிகள் பரிவர்த்தனைக்கு 24 மணி நேரத்திற்கு முன்னதாகவே பணம் எடுக்கப்படும் என்ற அறிவிப்பை அனுப்ப வேண்டும் மற்றும் அதிலிருந்து விலகுவதற்கான விருப்பத்தையும் வழங்க வேண்டும்.
- மின்னணு வழி பணப்பிடித்தம் வசதியைப் பயன்படுத்துவதற்கு எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படாது என்பதோடு இது டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துகிறது.

## வங்கித் துறையில் AI அபாயங்களை மதிப்பிடுவதற்கான குழு

- ❖ மைத்தோஸ் என்ற செயற்கை நுண்ணறிவு (AI) தளத்தால் ஏற்படும் அபாயங்களை மதிப்பிடுவதற்காக இந்திய அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது.
- ❖ பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) தலைவர் சி.எஸ். செட்டி தலைமையிலான இந்தக் குழுவில் வங்கித் துறையைச் சேர்ந்தவர்களும் இடம்பெற்றுள்ளனர்.
- ❖ மேம்பட்ட AI அமைப்புகள் வங்கி வலையமைப்புகளில் பாதிப்புகளை ஏற்படுத்தி சைபர் தாக்குதல்களைத் தூண்டக்கூடும் என்ற உலகளாவிய கவலைகளுக்கு மத்தியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ❖ வங்கி அமைப்பில் ஏற்படக்கூடிய சாத்தியமான அபாயங்கள், தேவைப்படும் முதலீடுகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது குறித்து இக்குழு ஆய்வு செய்யும்.
- ❖ AI தொடர்பான அபாயங்களைக் குறைப்பதற்கும், வங்கிகளில் இணையப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை இது பரிந்துரைக்கும்.
- ❖ நிதித்துறையில் வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவால் தூண்டப்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள AI கருவிகளைப் பயன்படுத்துவது குறித்தும் இந்த முன்னெடுப்பு ஆராயும்.

## DPI@2047 திட்டம்

- ❖ இந்தியாவை ஒரு வளர்ந்த பொருளாதாரமாக மாற்றுவதற்கான 'DPI@2047' என்ற வழி காட்டுதல்களை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது.
- ❖ சுதந்திரத்தின் 100-வது ஆண்டைக் குறிக்கும் 2047-ஆம் ஆண்டிற்குள் $30 டிரில்லியன் பொருளாதாரம் மற்றும் $18,000 தனிநபர் வருமானம் என்ற இலக்கை இத்திட்டம் கொண்டுள்ளது.
- ❖ அனைத்து துறைகளிலும் உள்ளடக்கிய வளர்ச்சி, கண்டுபிடிப்பு, உற்பத்தித்திறன் மற்றும் பெரிய அளவிலான டிஜிட்டல் அதிகாரமளித்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பில் (DPI) இது கவனம் செலுத்துகிறது.
- ❖ இது டிஜிட்டல் அணுகல், திறன்கள் மற்றும் சேவைகளை விரிவுபடுத்துவதற்கான DPI 2.0 (2025-2035) மற்றும் கண்டுபிடிப்புகள் சார்ந்த பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான DPI 3.0 (2035-2047) என இரண்டு கட்டங்களைக் கொண்டுள்ளது.
- ❖ டிஜிட்டல் அடையாளம் மற்றும் பணப் பரிவர்த்தனைகளை மேம்படுத்திய ஆதார் மற்றும் UPI போன்ற வெற்றிகரமான தளங்களின் அடிப்படையில் இது கட்டமைக்கப் பட்டுள்ளது.
- ❖ சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs), விவசாயம், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உயிரி-கருப்புக்கீல் தொழில்நுட்பம்

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையானது (CSIR), பெரிய அளவிலான சாலை கட்டுமானத்திற்காக உயிரி-கருப்புக்கீல் தொழில்நுட்பத்தை மாற்றிக் கொடுத்துள்ளது.
- இத்தொழில்நுட்பம் CSIR-மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம் (CRRI) மற்றும் CSIR-இந்தியப் பெட்ரோலிய நிறுவனம் (IIP) ஆகியவற்றால் கூட்டாக உருவாக்கப்பட்டது.
- உயிரி-கருப்புக்கீல் என்பது வெப்ப வேதியியல் மாற்றத்தின் மூலம் பயிர் கழிவுகளில் (லிக்னோசெல்லுலோஸ் உயிரித்திரள்) இருந்து தயாரிக்கப்படுகிறது.
- இது பயிர்க் கழிவுகளை எரிப்பதைக் குறைக்கவும், சுழற்சி பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்கவும் மற்றும் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் அளிக்கவும் உதவுகிறது.
- இது தேசிய நெடுஞ்சாலைக் கட்டுமானத்திற்கு ஏற்ற குறைந்த கார்பன் மாற்றாகும் மற்றும் இந்தியாவின் 'நிகரப் பூஜ்ஜிய' இலக்குகளுக்கு உறுதுணையாக உள்ளது.

## செலஸ்டே செயற்கைக்கோள் திட்டம்

- நேவிகேஷன் அமைப்புகளை மேம்படுத்த ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் இரண்டு செலஸ்டே செயற்கைக்கோள்களை ஏவியது.
- செலஸ்டே IOD-1 மற்றும் IOD-2 எனப் பெயரிடப்பட்ட இந்த செயற்கைக்கோள்கள் நியூசிலாந்திலிருந்து எலக்ட்ரான் ஏவுகணை மூலம் ஏவப்பட்டன.
- இந்தத் திட்டம் ஐரோப்பாவின் கலிலியோ வழிசெலுத்தல் அமைப்புக்கு துணையாக இருக்கும்.
- புவியின் தாழ்வான சுற்றுப்பாதையில் (LEO) இயங்கும் இந்தச் செயற்கைக்கோள்கள் வலுவான சமிக்ஞைகளையும் சிறந்த துல்லியத்தையும் வழங்க உதவும்.
- இவை தகவல் தொடர்பு மற்றும் வழிசெலுத்தலுக்காக L-band மற்றும் S-band அதிர்வெண்களைப் பயன்படுத்துகின்றன.
- போக்குவரத்து, விமானப் போக்குவரத்து மற்றும் பேரிடர் மேலாண்மை போன்ற பயன்பாடுகளுக்காக 2027 ஆம் ஆண்டிற்குள் மேலும் பல செயற்கைக்கோள்கள் ஏவப் படும்.

## ஆர்டெமிஸ் II நிலவுப் பயணம்

- நாசா 50 ஆண்டுகளுக்கும் மேலான காலத்திற்குப் பிறகு, மனிதர்களுடன் கூடிய முதல் நிலவுப் பயணமான ஆர்டெமிஸ் II-க்கு தயாராகி வருகிறது.
- 1968-1972 காலக் கட்டத்தில் நாசாவால் நடத்தப்பட்ட அப்பல்லோ பயணங்களுக்குப் பிறகு நிலவுக்குச் செல்லும் முதல் மனிதப் பயணம் இதுவாகும்.
- இந்தப் பயணத்திற்கு விண்வெளி ஏவுதல் அமைப்பு(SLS) என்ற 32 மாடி உயர கனரக ஏவு வாகனம் மற்றும் ஓரியன் விண்கலம் பயன்படுத்தப்படும்.

- இந்த விண்கலம் முதலில் பூமியைச் சுற்றி வரும், பின்னர் நிலவில் தரையிறங்காமல் நிலவைச் சுற்றிப் பறந்து ஆய்வு செய்யும்.
- சுமார் 10 நாட்கள் நீடிக்கும் இந்தப் பயணம், பசிபிக் பெருங்கடலில் விண்கலம் விழுந்து நிறைவடையும்.
- இது விண்கலத்தின் முக்கிய அமைப்புகளைச் சோதிப்பதோடு, ஆர்டெமிஸ் திட்டத்தின் கீழ் எதிர்கால மனித நிலவுப் பயணங்களுக்கு அடித்தளமாக அமையும்.

## மித்ரா திட்டம்

- ககன்யான் திட்டத்திற்காக விண்வெளி வீரர்களைச் சோதிக்க இஸ்ரோ மித்ரா திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- மித்ரா திட்டமானது (பரஸ்பர இயங்குதன்மைக் கொண்ட பண்புகளின் வரைபடம் மற்றும் பதில் மதிப்பீடு) 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 முதல் 9 வரை லே பகுதியில் நடத்தப்படுகிறது.
- தீவிரமான சூழ்நிலைகளில் நான்கு விண்வெளி வீரர்களின் உடல், மன மற்றும் நடத்தை ரீதியான செயல்பாடுகள் சோதிக்கப்படும்.
- இத்திட்டம் குழுப்பணி, முடிவெடுத்தல், மன அழுத்தத்தைக் கையாளுதல் மற்றும் தகவல் தொடர்புத் திறன்களை ஆய்வு செய்கிறது.
- இது இஸ்ரோவின் மனித விண்வெளிப் பயண மையம் மற்றும் இந்திய விமானப் படையின் விண்வெளி மருத்துவக் கழகம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப் படுகிறது.
- விண்வெளிச் சூழலைப் போன்ற அதிக உயரம், குறைந்த ஆக்சிஜன் மற்றும் தீவிரப் பருவநிலை நிலவுவதால் லடாக் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

## மதராஸ் முள்ளெலி மரபணு ஆய்வு

- அறிவியலாளர்கள் முதன்முறையாக மதராஸ் முள்ளெலியின் இனம் குறித்த புதிய அறிவியல் தரவுகளை வழங்குகின்ற மைட்டோகாண்ட்ரியல் மரபணு பகுப்பாய்வை நிறைவு செய்துள்ளனர்.
- இந்த ஆய்வு அதன் மரபணு அமைப்பு மற்றும் பரிணாம வளர்ச்சியைப் புரிந்து கொள்ள உதவுகின்ற முழுமையான மைட்டோகாண்ட்ரியல் டிஎன்ஏ-வை பகுப்பாய்வு செய்துள்ளது.
- மெட்ராஸ் முள்ளெலி இனம், இந்திய முள்ளெலியுடன் நெருங்கிய தொடர்புடையது என்பதை இந்த ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது.
- தெற்காசியாவில் ஏற்பட்ட பெரிய பருவநிலை மாற்றங்களின் போது, சுமார் 3.69 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இந்த இரண்டு இனங்களும் தனித்தனியாகப் பிரிந்தன.
- இந்த மரபணுவில் 13 புரதக் குறியீட்டு மரபணுக்கள், 22 tRNA-க்கள் மற்றும் 2 ரிபோசோமல் rRNA-க்கள் உள்ளன.

## அசாதாரண சூரிய மண்டலம் கண்டுபிடிப்பு

- வானியலாளர்கள் பூமியில் இருந்து சுமார் 120 ஒளி ஆண்டுகள் தொலைவில் இரண்டு புவி போன்ற கோள்களைக் கொண்ட ஒரு புதிய கிரக அமைப்பைக் கண்டுபிடித்து உள்ளனர்.

- இந்தக் கோள்கள் பூமியை விட பெரியவை ஆனால் நெப்டியூனை விட சிறிய பாறை கோள்கள் ஆக இருப்பதால் Super-Earths என்று அழைக்கப்படுகின்றன.
- இந்த மண்டலம் நமது சூரிய மண்டலத்தைப் போலல்லாமல், வாயுப் பெருங் கோள்களுக்கு அப்பால் ஒரு பாறை கிரகம் அமைந்துள்ளது போல் அசாதாரண அமைப்பைக் கொண்டுள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்பு கிரக உருவாக்கம் குறித்த தற்போதைய கோட்பாடுகளுக்கு சவால் விடுவதோடு, கிரகங்களின் வெவ்வேறு பரிணாம வளர்ச்சிகளைப் பரிந்துரை செய்கிறது.
- இந்தக் கோள்களைக் கண்டறிய அறிவியலாளர்கள் TESS (கடந்து செல்லும் புறக்கோள் ஆய்வு செயற்கைக்கோள்) மற்றும் CHEOPS போன்ற விண்வெளி கலன்களைப் பயன்படுத்தினர்.

## PFBR செயல்பாட்டு நிலை

- தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் உள்ள இந்தியாவின் PFBR (முன்மாதிரி வேக உற்பத்தி உலை/வேக ஈனுலை) செயல்பாட்டு நிலையை அடைந்தது.
- செயல்பாட்டு நிலை என்பது உலையில் ஒரு தன்னிலை பேணும் அணுக்கரு பிளவுத் தொடர்வினை தொடங்குவதைக் குறிக்கிறது.
- PFBR என்பது புளூட்டோனியம் எரிபொருளைப் பயன்படுத்தும் 500 மெகாவாட் மின் திறன் கொண்ட, சோடியம் மூலம் குளிரூட்டப்படும் வேக உற்பத்தி உலை/வேக ஈனுலையாகும்.
- இது கல்பாக்கத்தில் உள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் (IGCAR), பாரதிய நபிகிய வித்யுத் நிகாம் லிமிடெட் (BHAVINI) மூலம் இயக்கப்படுகிறது.
- வேக உற்பத்தி உலைகள்/வேக ஈனுலைகள் அவை எடுத்துக் கொள்ளும் எரிபொருளை விட அதிக அளவிலான பிளவுறு எரிபொருளை உற்பத்தி செய்கின்றன.
- இது புளூட்டோனியம் மற்றும் பின்னர் தோரியத்தைப் பயன்படுத்தும் இந்தியாவின் மூன்று கட்ட அணுசக்தி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தைக் குறிக்கிறது.

## குவாண்டம் தகவல் தொடர்பு சாதனை

- தேசிய குவாண்டம் திட்டத்தின் கீழ் 1,000 கி.மீ தூரத்திற்கான குவாண்டம் தகவல் தொடர்பு வலையமைப்பை இந்தியா வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்டியுள்ளது.
- இத்திட்டமானது 2023-24 முதல் 2030-31 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கு ₹6,003 கோடி மதிப்பீட்டில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் (DST) தொடங்கப் பட்டது.
- குவாண்டம் தகவல் தொடர்பானது, மிகவும் பாதுகாப்பான தரவுப் பரிமாற்றத்தை வழங்க குவாண்டம் இயக்கவியலின் கொள்கைகளைப் பயன்படுத்துகிறது.
- குவாண்டம் தகவல் தொடர்பு மையமானது, தொலைத்தொடர்பு மேம்பாட்டு மையத்துடன் (C-DOT) இணைந்து மதராஸின் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தால் வழி நடத்தப் படுகிறது.

## விண்வெளிப் பயண தூரத்தில் சாதனை - ஆர்ட்டெமிஸ் II

- விண்வெளியில் மனிதர்கள் பயணித்த அதிகபட்ச தூரம் என்ற புதிய சாதனையை நாசாவின் ஆர்ட்டெமிஸ் II விண்வெளித் திட்டம் படைத்துள்ளது.
- பூமியிலிருந்து சுமார் 252,756 மைல்கள் தூரம் பயணித்து, அப்பல்லோ 13 திட்டத்தின் சாதனையை இது முறியடித்துள்ளது.
- 1972 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அப்பல்லோ 17 திட்டத்திற்குப் பிறகு மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் முதல் விண்வெளித் திட்டம் ஆர்ட்டெமிஸ் II ஆகும்.
- ஓரியன் விண்கலத்தில் கனடா விண்வெளி நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட நான்கு விண்வெளி வீரர்கள் இதில் பயணிக்கின்றனர்.
- இத்திட்டமானது நிலவைச் சுற்றியுள்ள தடையில்லா திரும்புதல் பாதையை பின்பற்றுவதோடு, நிலவின் இருண்ட பகுதியைக் கவனிப்பதையும் உள்ளடக்கியது.
- இது சூரிய கிரகணம் மற்றும் தற்காலிகத் தகவல் தொடர்பு துண்டிப்பு போன்ற நிகழ்வுகளையும் பதிவு செய்துள்ளது.

## ஆர்ட்டெமிஸ் II நிலவுத் திட்டம்

- வரலாற்றுச் சிறப்புமிக்க நிலவுப் பயணத்திற்குப் பிறகு ஆர்ட்டெமிஸ் II திட்ட விண்வெளி வீரர்கள் பாதுகாப்பாக பூமிக்கு திரும்பினர்.
- அப்பல்லோவிற்குப் பிறகு நாசாவால் மேற்கொள்ளப்பட்ட மனிதர்கள் சென்ற முதல் நிலவுப் பயணம் இதுவாகும்.
- ஓரியன் விண்கலம் தனது 10 நாள் பயணத்தை முடித்துக் கொண்டு பசிபிக் பெருங் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.
- இக்குழுவில் ரீட் வைஸ்மேன் (அமெரிக்கா), விக்டர் குளோவர் (அமெரிக்கா), கிறிஸ்டினா கோச் (அமெரிக்கா) மற்றும் ஜெரமி ஹான்சென் (கனடா) ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.
- இந்தத் திட்டம் ஆழ்-விண்வெளிப் பயணம், வளிமண்டலத்திற்குள் மீண்டும் நுழைதல் மற்றும் தகவல் தொடர்புத் தடை அமைப்புகளை சோதித்தது.

## பிரபஞ்ச விரிவாக்க அளவீட்டு முரண்பாடு

- பிரபஞ்சத்தின் விரிவாக்க விகிதத்தை அளவிடும் இரண்டு முக்கியத் முறைகளுக்கு இடையிலான "ஹப்பிள் பதற்றம்" ஒரு தவறான அளவீட்டினால் மட்டும் ஏற்படவில்லை என்பதை ஒரு புதிய ஆய்வு உறுதிப்படுத்துகிறது.
- பிரபஞ்சத்தின் விரிவாக்க விகிதம் ஹப்பிள் பதற்றம் எனப்படும் நீண்ட கால முரண்பாட்டைக் காட்டுகிறது.
- ஆரம்ப கால பிரபஞ்ச முறைகள் (காஸ்மிக் நுண் அலைப் பின்னணி மற்றும் பேரியான் ஒலியியல் அலைவுகள்) சுமார் 67 km/s/Mpc என்ற அளவைத் தருகின்றன.
- பிற்கால-பிரபஞ்ச தூர ஏணி முறைகள் (செபீட் நட்சத்திரங்கள் மற்றும் Type Ia சூப்பர் நோவாக்கள்) சுமார் 73 km/s/Mpc என்ற அளவைத் தருகின்றன.
- பல சுயாதீன நுட்பங்களைப் பயன்படுத்திய விரிவான குறுக்கு-சோதனையானது, எந்தவொரு ஒற்றை முறையையோ அல்லது அளவுத்திருத்தத்தையோ நீக்கிய பின்னரும் முடிவுகள் சீராக இருப்பதைக் காட்டுகிறது.

- "ஒரு மோசமான அளவீடு" இந்த முரண்பாட்டை விளக்க முடியாது என்று ஆய்வு முடிவு செய்கிறது.

## செயலற்ற கருந்துளை மீள்துவக்கம்

- சுமார் 100 மில்லியன் ஆண்டுகள் செயலற்ற நிலையில் இருந்த ஒரு மிகப்பெரிய கருந்துளை மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளதை அறிவியலாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- ஒரு விண்மீன் திரளின் மையத்தில் உள்ள மிகப்பெரிய கருந்துளை நீண்ட செயலற்ற கட்டத்திற்குப் பிறகு மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது.
- அது அருகிலுள்ள வாயு, தூசி மற்றும் நட்சத்திரப் பொருட்களை உட்கொள்ளத் தொடங்கி, கடுமையான கதிர்வீச்சையும் ஆற்றலையும் வெளியிடுகிறது.
- சக்திவாய்ந்த உயர்-ஆற்றல் ஜெட் கதிர்வீச்சுகள் காரணமாக இந்த திடீர் செயல்பாடு ஒரு "காஸ்மிக் வெடிப்பு" என்று ஒப்பிடப்படுகிறது.
- வானியல் துறையில் கருந்துளைகளின் சுறுசுறுப்பான கட்டங்கள் செயலில் உள்ள விண்மீன் கருக்கள் (AGN) என்று அழைக்கப்படுகின்றன.
- பால்வீதி உட்பட பெரும்பாலான விண்மீன் திரள்களின் மையத்தில் மிகப்பெரிய கருந்துளைகள் காணப்படுகின்றன.

## அமெரிக்காவின் விண்வெளி அணு உலைத் திட்டம்

- அமெரிக்கா 2028 ஆம் ஆண்டிற்குள் விண்வெளியிலும், 2030 ஆம் ஆண்டிற்குள் நிலவிலும் அணு உலைகளை நிலைநிறுத்த திட்டமிட்டுள்ளது.
- அமெரிக்காவின் விண்வெளித் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக வெளியிடப் பட்ட "அமெரிக்க விண்வெளி அணுசக்திக்கான தேசிய முன்னெடுப்பு" என்பதன் கீழ் இந்தத் திட்டம் உள்ளது.
- இந்த அணு உலை 20 கிலோவாட் (kW) மின்சாரத்தை உற்பத்தி செய்யும், இது சுற்றுப் பாதையில் 3 ஆண்டுகளுக்கும், நிலவு திட்டங்களுக்காக நிலவில் 5 ஆண்டுகளுக்கும் செயல்படும்.
- அமெரிக்க எரிசக்தித் துறை இதன் மேம்பாடு, சோதனை, போக்குவரத்து மற்றும் ஏவுதல் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கும்.
- இந்தத் திட்டம் எதிர்கால செவ்வாய் கிரகப் பயணங்களுக்கான அணுசக்தி உந்துதலுக்கும் ஆதரவளிப்பதோடு அமெரிக்க-சீன விண்வெளிப் போட்டியையும் பிரதிபலிக்கிறது.

## ஜீனோம் இந்தியா திட்டம்

- ஜீனோம் இந்தியா திட்டத்தின் (GIP) தரவுகள் சுமார் 44 மில்லியன் தனித்துவமான இந்திய மரபணு மாறுபாடுகளை வெளிப்படுத்தியுள்ளன.
- இந்த ஆய்வு இந்திய மக்களிடையே 129 மில்லியனுக்கும் அதிகமான மரபணு மாறுபாடுகளைக் கண்டறிந்துள்ளது.
- ஒரே சமூகத்திற்குள் திருமணம் செய்துகொள்வது (endogamy) தனித்துவமான மரபணுக் குழுக்களை உருவாக்கியுள்ளது என்பதை இது காட்டுகிறது.

- இத்திட்டம் 2020 ஆம் ஆண்டில் உயிரித் தொழில்நுட்பத் துறையால் (DBT) தொடங்கப் பட்டது.
- இது இந்தியா முழுவதும் உள்ள 83 மக்கள் குழுக்களைச் சேர்ந்த 10,000 நபர்களை ஆய்வு செய்தது.
- இது நோய்களைச் சிறப்பாகக் கணிக்கவும், குறிப்பிட்ட மக்களுக்கான சுகாதாரப் பராமரிப்பை மேம்படுத்தவும் உதவுகிறது.

## நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கி

- நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கி அதன் ஒருங்கிணைப்புப் பணிகளை முடித்து, 2026-ஆம் ஆண்டு விண்ணில் ஏவப்படுவதற்கு முன்னதாக இறுதிக் கட்ட சோதனையில் நுழைந்துள்ளது.
- நாசாவால் உருவாக்கப்பட்ட இந்த தொலைநோக்கியானது, ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி மற்றும் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கிக்குப் பிறகு அடுத்த முக்கிய தொலைநோக்கியாகக் கருதப்படுகிறது.
- இது 2.4 மீட்டர் கண்ணாடியைக் கொண்டுள்ளதுடன், ஹப்பிள் தொலைநோக்கியை விட 100 மடங்கு பெரிய விண்வெளிப் பகுதியை படம்பிடிக்கும் திறன் கொண்டது.
- இந்தத் திட்டம் கரும் ஆற்றல் மற்றும் கரும் பொருள் ஆகியவற்றை ஆய்வு செய்வதுடன், பிரபஞ்சத்தின் விரிவாக்கத்தைப் புரிந்து கொள்ளவும் உதவும்.
- இது புறக்கோள்களையும் கண்டறியும், மேலும் ஸ்பேஸ்எக்ஸ் ஃபால்கன் ஹெவி மூலம் விண்வெளியில் L2 எனப்படும் பகுதிக்கு இது ஏவப்படும்.

## நிலவில் புதிய கனிமம்

- சீன அறிவியலாளர்கள் இது வரை அடையாளம் காணப் பட்ட 11வது சந்திர கனிமமான சீரியம்-மக்னீசியம் சேஞ்ச்சைட் என்ற புதிய சந்திர கனிமத்தைக் கண்டுபிடித்து உள்ளனர்.
- சீனப் புவியியல் ஆய்வு மையத்தால் சீனாவில் சேகரிக்கப்பட்ட 44 கிராம் எடையுள்ள சந்திர விண்கல்லில் இந்தக் கனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.
- நிறமற்ற, ஒளிரக்கூடிய, மற்றும் உடையக்கூடிய இது 10 மைக்ரோமீட்டருக்கும் குறைவான படிகத் துகள்களுடன் தனித்துவமான ஒளிரும் தன்மையைக் காட்டுகிறது.
- சீரியம் என்பது விளக்குகள் மற்றும் மின்னணுவியலில் பயன்படுத்தப்படும் ஒரு அரிய பூமித் தனிமம் என்பதால், LED (ஒளி உமிழும் டையோடு) தொழில்நுட்பத்திற்கு இந்தக் கண்டுபிடிப்பு முக்கியமானது.
- இது அடுத்த தலைமுறை மின்னணு சாதனங்களில் ஆற்றல் திறன், பிரகாசம் மற்றும் ஆயுளை மேம்படுத்த உதவுகிறது.

## பின்லாந்தின் அணுக்கழிவு பெட்டகம்

- உலகின் முதல் நிரந்தர அணுக்கழிவு சேமிப்பு கிடங்கை செயல்பாட்டுக்கு கொண்டு வர பின்லாந்து தயாராகி வருகிறது.

- 'ஆன்கலோ' என்று அழைக்கப்படும் இந்த வசதி, ஓல்கிலுவோடோ (Olkiluoto) தீவில் அமைந்துள்ளது.
- இது பயன்படுத்தப்பட்ட அணு எரிபொருளை 100,000 ஆண்டுகள் வரை சேமித்து வைக்கும்.
- இது பல்-அடுக்கு பாதுகாப்பு அமைப்பைப் பயன்படுத்தி (உலோக குப்பிகள், செப்பு குப்பிகள், பெண்டோனைட் களிமண், பாறை அடுக்குகள்) நிலையான அடித்தளத்தில் 400-450 மீட்டர் நிலத்தடியில் கட்டப்பட்டுள்ளது.
- பெண்டோனைட் களிமண் தண்ணீருடன் தொடர்பு கொள்ளும்போது விரிவடைந்து, கதிரியக்கப் பொருள் கசிவதைத் தடுக்கிறது.
- இந்த சேமிப்பு கிடங்கு செயலற்றநிலை பாதுகாப்பிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது, அதாவது மனித பராமரிப்பு இல்லாமலேயே இது பாதுகாப்பாக இருக்கும்.
- உலகளவில் பாதுகாப்பாகவும் நீண்டகால அடிப்படையிலும் கழிவுகளை அகற்றுவதற்கான ஒரு மாதிரியை வழங்கும் வகையில் சுமார் 6,500 டன் அணுக் கழிவுகளை சேமிக்க பின்லாந்து திட்டமிட்டுள்ளது.

## காது கேளாமையை சரி செய்யும் முதல் மரபணு சிகிச்சை

- மரபணு ரீதியான காது கேளாமையை சரிசெய்யும் முதல் மரபணு சிகிச்சைக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) ஒப்புதல் அளித்துள்ளது.
- 'ஓடார்மெனி' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த சிகிச்சையானது, OTOF (ஓட்டோ ஃபெர்லின்) மரபணுவில் ஏற்படும் பிறழ்வுகளால் ஏற்படும் காது கேளாமையை சரி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது.
- உட்செவி (கோக்லியா) செல்களுக்குள் மரபணுவின் ஆரோக்கியமான நகலைச் செலுத்த, இது இரட்டை அடினோ-தொடர்புடைய வைரஸ் (AAV) கடத்திகளைப் பயன்படுத்துகிறது.
- இந்தச் சிகிச்சையானது 'ஓடோஃபெர்லின்' புரதத்தை மீட்டெடுக்கிறது, இதன் மூலம் காதில் இருந்து மூளைக்கு ஒலி சமிக்ஞைகள் சரியாகக் கடத்தப்படுவது சாத்தியமாகிறது.
- நேரடியாக உட்செவிக்குள் செலுத்தப்படும் ஒற்றை அறுவை சிகிச்சை முறையான இது மருத்துவப் பரிசோதனைகளில் கேட்கும் திறனை மேம்படுத்தி இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

## சீனாவின் தியாங்காங் விண்வெளித் திட்டம்

- சீனாவின் மனித விண்வெளிப் பயணத் திட்டத்தில் வெளிநாட்டு விண்வெளி வீரர்களை முதன்முறையாகச் சேர்க்கும் விதமாக, தியாங்காங் விண்வெளி நிலையத்திற்கான பயிற்சிக்காக பாகிஸ்தானைச் சேர்ந்த இரண்டு விண்ணப்ப தாரர்களை சீனா தேர்ந்தெடுத்துள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட முகமது ஜீஷன் அலி மற்றும் குர்ரம் தாவூத் ஆகியோர், இருதரப்பு விண்வெளி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக சீனாவில் முழுமையான பயிற்சி மற்றும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவார்கள்.
- இவர்களில் ஒருவர் எதிர்கால விண்வெளிப் பயணத்தில் பயனுறு சுமை நிபுணராகத் தேர்ந்தெடுக்கப்படலாம், இதன் மூலம் பூமியின் சுற்றுப்பாதையை அடையும் முதல் பாகிஸ்தானி என்ற பெருமையை அவர் பெறக்கூடும்.

- சீனாவின் மனித விண்வெளி முகமைக்கும் (CMSA), பாகிஸ்தானின் விண்வெளி மற்றும் வளிமண்டல மேல் அடுக்கு ஆராய்ச்சி ஆணையத்திற்கும் (SUPARCO) இடையிலான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

## வேலா மீப்பேரடைத் தொகுப்பு வரைபடமாக்கல்

- வானியலாளர்கள் முதன்முறையாக பிரம்மாண்டமான வேலா மீப்பேரடைத் தொகுப்பை (வேலா-பான்சி) வரைபடமாக்கியுள்ளனர்.
- சுமார் 300 மில்லியன் ஒளியாண்டுகள் பரப்பளவைக் கொண்டுள்ள இது பூமியிலிருந்து சுமார் 800 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இந்த அமைப்பு 'மறைக்கும் மண்டலத்தின்' பின்னால் அமைந்துள்ளதால், இதனை முன்னதாகக் கண்டறிவது கடினமாக இருந்தது.
- இது சுமார் 30 குவாட்ரில்லியன் சூரியன்களின் நிறை கொண்ட குறைந்தது 20 விண்மீன் திரள் தொகுப்புகளைக் கொண்டுள்ளது.
- தென்னாப்பிரிக்க பெரிய தொலைநோக்கி (SALT) மற்றும் மீர்காட் (MeerKAT) ரேடியோ தொலைநோக்கி ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்தக் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
- அறியப்பட்ட மிகப் பெரிய அமைப்புகளில் ஒன்றான இது, ஷாப்லி மீப்பேரடைத் தொகுப்புடன் ஒப்பிடக் கூடியது என்பதுடன் இது விண்மீன்களின் இயக்கத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

## பூஜ்ஜிய-உமிழ்வு நிலக்கரி எரிபொருள் மின்கலம்

- பூஜ்ஜியத்திற்கு நிகரான கார்பன் உமிழ்வுடன் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய, உலகின் முதல் நிலக்கரி அடிப்படையிலான எரிபொருள் மின்கலத்தை சீனா உருவாக்கியுள்ளது.
- இதில் நிலக்கரியை எரிப்பதற்குப் பதிலாக, அது பதப்படுத்தப்பட்டு எரிபொருள் மின்கலத்தின் உள்ளே பயன்படுத்தப்படுகிறது.
- இரசாயன ஆற்றலை நேரடியாக மின் ஆற்றலாக மாற்றும் ஒரு மின்வேதியியல் வினையின் மூலம் இதில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.
- இந்த முறை எரிதலைத் தவிர்க்கிறது, எனவே இது அதிக செயல்திறனை அளிப்பதோடு மாசுபாட்டையும் குறைக்கிறது.
- இங்கு உற்பத்தியாகும் கார்பன் டை ஆக்சைடு பிடிக்கப்பட்டு, தொகுப்பு வாயு அல்லது சோடியம் பைகார்பனேட் போன்ற பயனுள்ள பொருட்களாக மாற்றப் படுகிறது.
- இந்தத் தொழில்நுட்பம் நிலக்கரி ஆற்றலைத் தூய்மையாக்க உதவுவதோடு, குறைந்த கார்பன் ஆற்றல் பயன்பாட்டையும் ஆதரிக்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## குஜராத்தில் கானமயில்

- "ஜம்ப்ஸ்டார்ட்" பாதுகாப்பு அணுகுமுறையின் கீழ் ஒரு தசாப்தத்திற்குப் பிறகு குஜராத்தில் ஒரு கானமயில் (GIB) குஞ்சு பிறந்தது.
- கானமயில் (ஆர்டியோடிஸ் நிக்ரிசெப்ஸ்) IUCN அச்சுறுத்தப்பட்ட உயிரினங்களின் செந்நிறப் பட்டியலில் 'மிக அருகி வரும் இனம்' எனப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- மாநிலங்களுக்கு இடையேயான முதல் பாதுகாப்பு முன்னெடுப்பான இதில் ராஜஸ்தானில் இருந்து குஜராத்திற்கு 770 கி.மீ தூரம் கையடக்க அடைகாக்கும் கருவி மூலம் ஒரு கருவுற்ற முட்டை கொண்டு வரப்பட்டது.
- அந்த முட்டை ஒரு பெண் கானமயிலின் கூட்டில் வைக்கப் பட்டு வெற்றிகரமாக அடைகாத்து கட்ச் பகுதியில் உள்ள அதன் இயற்கை வாழ்விடத்திலேயே குஞ்சு பொரித்தது.
- இந்த முன்னெடுப்பு, சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் மற்றும் இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டம் GIB-இன் ஒரு பகுதியாகும்.

## திடக் கழிவு மேலாண்மை விதிகள், 2026

- அரசாங்கம் 'திடக் கழிவு மேலாண்மை விதிகள், 2026'-ஐ அறிவித்துள்ளது, இது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரும்.
- இந்த விதிகள் 2016-ஆம் ஆண்டின் விதிகளுக்கு மாற்றாக கொண்டு வரப்பட்டுள்ளன மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986'-இன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன.
- கழிவுகளை அதன் ஆதாரத்திலேயே நான்கு பிரிவுகளாக (ஈரமான, உலர்ந்த, சுகாதாரமான மற்றும் சிறப்புக் கழிவுகள்) பிரிப்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.
- இந்த விதிகள் வட்டப் பொருளாதாரம், நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR) மற்றும் 'மாசுபடுத்துபவரே பணம் செலுத்த வேண்டும்' போன்ற கொள்கைகளைப் பின்பற்றுகின்றன.
- விதிகளை மீறுவோருக்கு சுற்றுச்சூழல் இழப்பீடு விதிக்கப்படும்; இது மத்திய மற்றும் மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்களால் கண்காணிக்கப்படும்.
- அதிக அளவு கழிவுகளை உருவாக்குபவர்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு, கழிவுகளை முறையாகச் சேகரித்தல் மற்றும் அகற்றுவதற்குப் பொறுப்பாக்கப் பட்டு உள்ளனர்.
- கழிவுகள் உருவாக்கம் முதல் அகற்றப்படுவது வரையில் கண்காணிக்க ஒரு மையப் படுத்தப் பட்ட இணையவழித் தளம் உருவாக்கப்படும்.
- தொழிற்சாலைகளில் கழிவுகளிலிருந்து பெறப்படும் எரிபொருளை பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- குப்பைக் கிடங்குகளில் கழிவுகளைக் கொட்டுவதற்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளதுடன் பழைய குப்பைக் கிடங்குகளை உயிரிச் சுரங்கம் மற்றும் உயிரிச் சீரமைப்பு மூலம் சீரமைப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.

## புல்வெளிக் கழுகுகளுக்கான உலகளாவிய செயல்பாட்டுத் திட்டம் 2026-2035

- பிரேசிலில் நடைபெற்ற 'CMS COP15' மாநாட்டில் புல்வெளிக் கழுகுகளுக்கான உலகளாவியச் செயல்பாட்டுத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இது அழிந்து வரும் நிலையில் உள்ள புல்வெளிக் கழுகுகளை (அக்விலா நிபாலென்சிஸ்) பாதுகாப்பதற்கான ஒரு சர்வதேச பாதுகாப்புத் திட்டமாகும்.
- மின்சாரம் தாக்கி இறத்தல், சட்டவிரோத வேட்டை மற்றும் விஷம் வைத்தல் போன்ற காரணிகளைக் குறைப்பதன் மூலம் கழுகுகளின் எண்ணிக்கை குறைவதைத் தடுப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் வாழ்விட மறுசீரமைப்பு, ஆராய்ச்சி ஒத்துழைப்பு மற்றும் நாடுகளுக்கு இடையேயான சிறந்த அமலாக்க நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும்.
- இவை புல்வெளிகள் மற்றும் பகுதி வறண்டப் பகுதிகளில் காணப்படும் புலம்பெயரும் பறவைகளாகும்; இவை மத்திய ஆசிய வான்வழிப் பாதையை பின்பற்றுகின்றன.
- இந்தியாவில், ராஜஸ்தானின் பாலைவனத் தேசியப் பூங்கா மற்றும் ஜொர்பீர் பாதுகாப்பு காப்பகம் போன்றவை இவற்றின் முக்கிய வாழ்விடங்களாகும்.

## CMS COP15 – புதிய இனங்கள் பாதுகாப்பு

- பிரேசிலில் நடைபெற்ற CMS COP15 மாநாடு, அதிகரித்து வரும் அழிவு அபாயங்களின் காரணமாக, பாதுகாக்கப்பட்ட பட்டியலில் 40 புதிய வலசை போகும் உயிரினங்களைச் சேர்த்தது.
- புலம்பெயரும் இனங்கள் மீதான மாநாடு (CMS) என்பது தேசிய எல்லைகளைத் தாண்டி இடம்பெயரும் விலங்குகளைப் பாதுகாப்பதற்கான ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- சிவிங்கிப் புலி, வரி கழுதைப்புலி, பனி ஆந்தை, இராட்சத நீர்நாய் மற்றும் பெரிய சுத்தியல்தலை சுறா போன்றவை பாதுகாப்பிற்காகச் சேர்க்கப்பட்டுள்ளன.
- ஒரு சமீபத்திய உலகளாவிய அறிக்கையின்படி, சுமார் 49% புலம்பெயரும் இனங்கள் குறைந்து வரும் நிலையில் மேலும் 24% இனங்கள் அழியும் அபாயத்தை எதிர் கொள்கின்றன.
- வாழ்விட இழப்பு, பருவநிலை மாற்றம், மாசுபாடு, சட்டவிரோத வேட்டை, அதிகப் படியான மீன்பிடித்தல் மற்றும் புலம்பெயரும் பாதைகளில் ஏற்படும் இடையூறுகள் ஆகியவை முக்கிய அச்சுறுத்தல்களாகக் கருதப்படுகின்றன.
- பறவைகள், பாலூட்டிகள், ஊர்வன மற்றும் மீன்கள் என சுமார் 188 புலம்பெயரும் இனங்கள் தற்போது அழியும் நிலையில் உள்ளன.

## பவசாகரா பரிந்துரை மையம்

- 'பவசாகரா பரிந்துரை மையம்' ஆழ்கடல் விலங்கினங்களுக்கான தேசிய களஞ்சியமாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஆழ்கடல் பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சியை ஆதரிப்பதற்காக, 'உயிரியல் பன்முகத்தன்மை சட்டம், 2002'-இன் கீழ் இது நிறுவப்பட்டுள்ளது.
- இந்த மையம் முதுகெலும்பற்றவை மற்றும் முதுகெலும்புள்ளவை உட்பட 3,500-க்கும் மேற்பட்ட ஆழ்கடல் கடல்வாழ் உயிரின மாதிரிகளைச் சேமித்துப் பாதுகாக்கிறது.

- இது இந்தியாவின் கடல்சார் உயிரியல் வளங்களை ஆவணப்படுத்துதல், ஆய்வு செய்தல் மற்றும் பாதுகாப்பதற்கான ஒரு தேசிய அமைப்பாகச் செயல்படும்.
- இந்தியக் கடற்பரப்பில் புதிதாகக் கண்டறியப்பட்ட ஆழ்கடல் உயிரினங்களின் வகை மாதிரிகளும் இங்கு பாதுகாக்கப்படும்.

## ஐநா உடன்படிக்கையின் கீழ் பனி ஆந்தைக்கு பாதுகாப்பு

- வன விலங்குகளின் புலம்பெயர்ந்த இனங்களைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தத்தின் (CMS) கீழ் பனி ஆந்தைக்கு சர்வதேசப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
- பனி ஆந்தை (பூபோ ஸ்காண்டியாகஸ்) என்பது வட அமெரிக்கா மற்றும் யூரேசியாவின் ஆர்க்டிக் தூந்திரப் பகுதிகளில் காணப்படும் ஒரு பெரிய வெள்ளை நிறப் பறவையாகும்.
- பெரும்பாலான ஆந்தைகளைப் போலல்லாமல், இவை பகல் மற்றும் இரவு ஆகிய இரு நேரங்களிலும் சுறுசுறுப்பாக இயங்கும் தன்மை கொண்டவை.
- பருவநிலை மாற்றம் மற்றும் வாழ்விட இழப்பு காரணமாக, இவை IUCN செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம் எனப் பட்டியலிடப்பட்டுள்ளன.
- CMS பாதுகாப்பு வழங்கப்பட்டதன் மூலம், நாடுகள் ஒன்றிணைந்து இந்தப் புலம் பெயர்ந்த இனத்தைப் பாதுகாக்க சர்வதேச ஒத்துழைப்பு மேம்படும்.

## கௌராமி மீன் புதைபடிவங்கள் கண்டுபிடிப்பு

- டேராடூன் அருகிலுள்ள சிவாலிக் அடிவாரத்தில் கௌராமி உள்ளிட்ட நன்னீர் மீன் புதைபடிவங்கள் முதல்முறையாகக் கண்டறியப்பட்டன.
- வாடியா இமயமலை புவியியல் நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்களைச் சேர்ந்த அறிவியலாளர்களால் மோகண்ட் அருகே இந்தப் புதைபடிவங்கள் கண்டறியப்பட்டன.
- இந்தக் கண்டுபிடிப்பில் விரால் மீன், கோபி மற்றும் கௌராமி போன்ற மீன்களின் ஓட்டோலித்ஸ் (செவி எலும்புகள்) அடங்கும்.
- கௌராமிப் புதைபடிவமானது, இந்தியாவில் கண்டறியப்பட்ட முதல் பதிவாகவும், சுமத்ராவிற்குப் பிறகு உலகிலேயே இரண்டாவது பதிவாகவும் உள்ளது.
- இந்த புதைபடிவங்கள் சுமார் 4.5 மில்லியன் ஆண்டுகள் பழமையானவை மற்றும் பிளியோசீன் காலத்தைச் (சுமார் 5.3 முதல் 2.6 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு) சேர்ந்தவை.

## சத்தீஸ்கரில் கலைமான்களின் மீட்சி

- சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு சத்தீஸ்கரில் கலைமான்கள் மீண்டும் வந்துள்ளன, இப்போது சுமார் 130 விலங்குகள் காடுகளில் உள்ளன.
- கடைசியாக 1927 ஆம் ஆண்டில் காணப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த இனம் வாழ்விட இழப்பு மற்றும் வேட்டையாடுதல் காரணமாக மறைந்துவிட்டது.
- 2018 ஆம் ஆண்டு பர்னவாபாரா வனவிலங்கு சரணாலயத்தில் டெல்லி மற்றும் கானன் பெண்டாரி உயிரியல் பூங்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட 77 கலைமான்களுடன் மீண்டும் அறிமுகப்படுத்தும் பணி தொடங்கியது.

- இந்தப் பாதுகாப்புத் திட்டம் 1972 வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பழக்கப் படுத்துதல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி செயல்படுத்தப்படுகிறது.
- சுமார் 60 கலைமான்கள் இன்னும் அடைப்புகளில் உள்ள நிலையில் மேலும் பலவற்றை விடுவிக்க அரசு திட்டமிட்டுள்ளது, அத்துடன் சத்தீஸ்கரின் ராய்கர் மாவட்டத்தில் உள்ள கோமர்தா வனவிலங்கு சரணாலயத்திற்கும் இது விரிவு படுத்தப்பட உள்ளது.
- கலைமான் (ஆன்டிலோப் செர்விகாப்ரா) IUCN செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப் படக் கூடிய இனமாக பட்டியலிடப்பட்டுள்ளது.

## தார் பந்துகள் மேலாண்மை விதிகள் 2026

- கடலோரப் பகுதிகளைப் மாசுபாட்டிலிருந்து பாதுகாப்பதற்காக, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் தார் பந்துகள் மேலாண்மை விதிகள் (வரைவு), 2026-ஐ வெளியிட்டுள்ளது.
- தார் பந்துகள் என்பது கடலில் மிதக்கும் அல்லது கடற்கரைகளில் கரை ஒதுங்கும் சிறிய, ஒட்டும் தன்மையுடைய எண்ணெய் கட்டிகளாகும்.
- கடலில் சிந்தப்பட்ட கச்சா எண்ணெய் ஆவியாதல், நீருடன் கலத்தல் மற்றும் கடினமாதல் போன்ற இயற்கை சிதைவு செயல்முறைகளுக்கு உள்ளாகும்போது இவை உருவாகின்றன.
- தார் பந்துகளானது ஹைட்ரோகார்பன்கள், அஸ்பால்டீன்கள் மற்றும் மணல், நுண் நெகிழிகள் போன்ற கசடுகளைக் கொண்டுள்ளன.
- இவை மீன்கள், பறவைகள் மற்றும் ஆமைகள் போன்ற கடல்வாழ் உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிப்பதோடு, பவளப் பாறைகள் மற்றும் கடல் புல்வெளிகளையும் சேதப் படுத்தும்.

## ஜம்மு-காஷ்மீர் ஏரிகளின் சுற்றுச்சூழல் நெருக்கடி

- இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் (CAG) அறிக்கை ஆனது, ஜம்மு-காஷ்மீரில் ஏரிகள் பெரிய அளவில் அழிந்து வருவதைச் சுட்டிக் காட்டுகிறது.
- 1967 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சுமார் 1,537 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட 697 ஏரிகளில், சுமார் 315 ஏரிகள் முற்றிலும் மறைந்துவிட்டன.
- சுமார் 203 ஏரிகள் சுருங்கிவிட்டன என்பதோடு ஒட்டு மொத்தமாக 518 ஏரிகள் கிட்டத்தட்ட 2,851 ஹெக்டேர் நீர் பரப்பை இழந்துள்ளன.
- ஆக்கிரமிப்பு, மாசுபாடு, நிலப் பயன்பாட்டு மாற்றம், மோசமான கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் பலவீனமான கண்காணிப்பு ஆகியவை இந்த வீழ்ச்சிக்குக் காரணங்களாகும்.
- பாதுகாப்பு முயற்சிகள் தால் ஏரி மற்றும் வுலர் ஏரி உள்ளிட்ட ஆறு ஏரிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

## புதிய கடல்வாழ் நூற்புழு இனங்கள்

- இந்திய விலங்கியல் ஆய்வுத் துறை (ZSI) அறிவியலாளர்கள் தமிழகக் கடலோரத்தில் இரண்டு புதிய கடல்வாழ் உயிரினங்களைக் கண்டறிந்துள்ளனர்.

- இந்த இனங்களுக்கு கொரோனோநேமா த்ரிதி மற்றும் எபகாந்தியன் இன்டிகா என்று பெயரிடப்பட்டுள்ளது.
- கொரோனோநேமா த்ரிதி என்பது உலகில் அந்தப் பேரினத்தில் அறியப்பட்ட நான்காவது இனமாகும்; இது ZSI இயக்குநர் டாக்டர் த்ரிதி பானர்ஜியின் நினைவாகப் பெயரிடப்பட்டது.
- எபகாந்தியன் இன்டிகா என்பது சிறப்புத் தாடைகள் மற்றும் பல் போன்ற அமைப்புகளைக் கொண்ட ஒரு வேட்டையாடும் நூற்புழு ஆகும்.
- நெமடோடா தொகுதியைச் சேர்ந்த இவை, ஊட்டச்சத்து சுழற்சிக்கு உதவுகின்றன, கடல் ஆரோக்கியத்தைப் பராமரிக்கின்றன மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தின் உயிரியல் குறிகாட்டிகளாகச் செயல்படுகின்றன.

## ஆழ்கடல் விலங்கினங்களுக்கான தேசிய களஞ்சியம்

- உயிரியல் பன்முகத் தன்மை சட்டம் 2002-இன் கீழ், புதிய மையங்களை தேசிய களஞ்சியங்களாக இந்திய அரசு அறிவித்துள்ளது.
- கேரளாவில் உள்ள CMLRE (கடல் வாழ் வளங்கள் மற்றும் சூழலியல் மையம்) அமைப்பின் பவசாகரா பரிந்துரை மையம் தேசிய களஞ்சியமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிராவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி நிறுவனமும் தேசிய களஞ்சியமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த மையங்கள் ஆழ்கடல் விலங்குகள் மற்றும் உயிரியல் மாதிரிகளைச் சேமித்து பாதுகாக்கும்.
- இவை சான்று மாதிரிகள், டிஎன்ஏ தரவுகள் மற்றும் இந்தியக் கடற்பகுதியில் கண்டறியப் பட்ட புதிய இனங்களைப் பாதுகாக்கும் அமைப்பாகச் செயல்படும்.

## வெள்ளை உள்ளான் பறவை இடப்பெயர்வு

- நெடுந்தொலைவுப் பயணத்திற்குப் பிறகு, நர்கொண்டம் தீவில் வெள்ளை உள்ளான் பறவை ஒன்று காணப்பட்டது.
- தெற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து சுமார் 7,400 கி.மீ பயணம் செய்து இப்பறவை தனது வலுவான இடப்பெயர்வுத் திறனை வெளிப்படுத்தியுள்ளது.
- வெள்ளை உள்ளான் (காலிட்ரிஸ் ஆல்பை) என்பது மணல் நிறைந்த கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் ஒரு சிறிய, வேகமான கடற்கரைப் பறவையாகும்.
- இது இனப்பெருக்கப் பகுதியான ஆர்க்டிக் மண்டலத்திற்கும், குளிர்கால வாழிடங்களுக்கும் இடையே 3,000 முதல் 10,000 கி.மீ வரை இடம் பெயர்கிறது.
- IUCN செந்நிறப் பட்டியலில் இது தீவாய்ப்பு கவலை குறைந்த இனம் எனும் நிலையில் உள்ளது, இருப்பினும், வாழிட இழப்பு இதற்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

## அண்டார்டிக் உயிரினங்கள் மீதான பருவநிலை மாற்ற விளைவு

- பருவநிலை மாற்றம் காரணமாக முக்கிய அண்டார்டிக் உயிரினங்கள் அழிந்து வரும் நிலையில் உள்ளதாக IUCN தனது செந்நிறப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது.

- கடல் பனி உருகுவதால் 2080 ஆம் ஆண்டுகளில் எம்பரர் பென்குயின்களின் (ஆப்டெனோடைட்ஸ் ஃபோர்ஸ்டெரி) எண்ணிக்கை பாதியாக குறையும் என எதிர்பார்க்கப் படுவதால், அவை தற்போது அருகி வரும் இனம் என்ற நிலையில் உள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- உணவு (க்ரில்/இறால் போன்ற கணுக்காலிகள்) கிடைப்பது குறைந்துள்ளதால், 2000 ஆம் ஆண்டிலிருந்து அண்டார்டிக் ஃபர் சீல்களின் (ஆர்க்டோசெஃபாலஸ் கசெல்லா) எண்ணிக்கை 50%க்கும் மேல் குறைந்துள்ளது, எனவே, அவையும் அருகி வரும் இனம் என்ற நிலையில் உள்ளன.
- அதிக வீரியம் கொண்ட ஏவியன் இன்ஃப்ளூயன்ஸா (HPAI) போன்ற நோய் பரவலால், மேற்கத்திய எலிஃபண்ட் சீல் (மிரூங்கா லியோனினா) தற்போது எளிதில் பாதிக்கப் படக் கூடிய இனம் என்ற நிலையில் உள்ளது.
- கடல் பனி உருகுதல், பெருங்கடல் வெப்ப நிலை உயர்வு மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவை இவற்றின் இனப்பெருக்கம், உணவு மற்றும் உயிர்வாழ்வை பாதிக்கும் முக்கிய காரணிகளாகும்.
- பசுமைக்குடில் வாயு உமிழ்வைக் குறைக்கவும், பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாக்கவும் அவசர உலகளாவிய நடவடிக்கை தேவை என்பதை இந்தச் செந்நிறப் பட்டியல் உணர்த்துகிறது.

## தஞ்சாவூரில் வெண்கழுத்து நாரை

- தஞ்சாவூர் அருகே உள்ள நெல் வயல்களில் ஒரு அரிய வகை வெண்கழுத்து நாரை தென்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.
- வெண்கழுத்து நாரை (சிகோனியா எபிஸ்கோபஸ்) என்பது நாரைக் குடும்பத்தை சேர்ந்த (சிகோனியிடே) ஒரு பெரிய வகை நீர்ப்பறவையாகும்.
- ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா முழுவதும் காணப்படுகின்ற இந்த பறவையானது வெள்ளை கழுத்து நாரை அல்லது பிஷப் நாரை என்றும் அழைக்கப்படுகிறது.
- இவை தங்களுக்கு உணவு கிடைக்கும் ஈரநிலங்கள், ஆற்றங்கரைகள், குளங்கள், புல்வெளிகள் மற்றும் விவசாய நிலங்களை பெரிதும் விரும்புகின்றன.
- வாழ்விட இழப்பு மற்றும் ஈரநிலச் சீரழிவு காரணமாக IUCN-ஆல் இது அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாக உள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## வெண்முதுகு பிணந்தின்னிக் கழுகு பாதுகாப்பு

- தமிழ்நாட்டில் உள்ள முதுமலை புலிகள் காப்பகத்தில் வெண்முதுகு பிணந்தின்னிக் கழுகு ஒன்று கண்காணிக்கப் பட்டு வருகிறது.
- மகாராஷ்டிராவில் உள்ள தடோபா-அந்தாரி புலிகள் காப்பகத்தில் 2025 ஆம் ஆண்டு டிசம்பரில் பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கத்தால் (BNHS) இந்தப் பறவைக்கு ரேடியோ காலர் / ரேடியோ குறியீடு பொருத்தப்பட்டது.
- பின்னர் இது கர்நாடகாவுக்கு இடம்பெயர்ந்து, அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 அன்று வனத்துறை அதிகாரிகளால் மீண்டும் விடுவிக்கப்பட்டது.
- இக்கழுகு தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாயார் கிராமம் அருகே 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 அன்று காணப்பட்டது.

- முதுமலை-பந்திப்பூர்-வயநாடு பகுதிகளில் உள்ள மற்ற கழுகுகளுடன் இந்தப் பறவை இணைந்து பழகுவதற்கு உதவுவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

## முதல் வனவிலங்கு குற்ற வழக்கு

- மத்தியப் புலனாய்வுத் துறை (CBI) மூலம் வழக்காடப்பட்ட முதல் வனவிலங்கு குற்றமானது, வனவிலங்கு சட்ட அமலாக்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்தது.
- 1972 ஆம் ஆண்டின் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தை மீறி ஷாஹ்தூஷ் சால்வைகளைச் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்ததற்காக டெல்லி நீதிமன்றம் ஒருவருக்கு தண்டனை வழங்கியது.
- மத்தியப் புலனாய்வுத் துறை, வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டுப் பணியகம், சுங்கத் துறை மற்றும் இந்திய வனவிலங்கு நிறுவனம் ஆகியவை கூட்டாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டன.
- திபெத்திய மான் வகையின் அடிப்பகுதி ரோமங்களில் இருந்து ஷாஹ்தூஷ் கம்பளி பெறப் படுகிறது.
- பெரும்பாலான ஷாஹ்தூஷ் தயாரிப்புகள் ஜம்மு காஷ்மீரில் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.
- CITES ஒப்பந்தத்தின் கீழ் 1975 ஆம் ஆண்டு முதல், ஷாஹ்தூஷ் வர்த்தகம் உலகளவில் தடைசெய்யப்பட்டுள்ளது.
- சிரு என்று அழைக்கப்படும் இந்த மான் பந்தோலோப்ஸ் ஹோட்சோனி (*Pantholops hodgsonii*) என்ற அறிவியல் பெயரைக் கொண்டுள்ளது.
- இந்தியாவிற்கும் வலசை வரும் இது திபெத்தியப் பீடபூமி மற்றும் சீனாவின் சின்ஜியாங் மற்றும் கிங்காய் போன்ற குளிர்ச்சியான பகுதிகளில் வாழ்கிறது.
- வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அட்டவணை I மற்றும் IV, CITES-இன் கீழ் பின்னிணைப்பு I-இல் வைக்கப்பட்டுள்ள இது IUCN செந்நிறப் பட்டியலின் கீழ் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாக உள்ளது.
- சட்டவிரோத வேட்டையாடுதல், வாழ்விட இழப்பு மற்றும் கடுமையான சுற்றுச்சூழல் நிலைமைகள் ஆகியவை இதன் முக்கிய அச்சுறுத்தல்களில் அடங்கும்.

## இந்திய வௌவால்கள் அறிக்கை - 2024-25 நிலை

- "இந்திய வௌவால்களின் நிலை (2024-25)" என்ற முதல் தேசிய அறிக்கை, இந்தியாவில் உள்ள வௌவால் இனங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எடுத்துக்காட்டுகிறது.
- இது இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளை மற்றும் பன்னாட்டு வௌவால் பாதுகாப்பு அமைப்பு ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் சுமார் 135 வௌவால் இனங்கள் உள்ளன, இதில் 16 வட்டார உயிரினங்கள் (இந்தியாவில் மட்டுமே காணப்படுபவை) அடங்கும்.
- IUCN தரவுகளின்படி சுமார் 7 இனங்கள் அச்சுறுத்தல் நிலைக்கு உள்ளாகியுள்ளன, மேலும் 35 இனங்கள் குறித்த சரியான தரவுகள் இல்லை.
- வௌவால்கள் மகரந்தச் சேர்க்கை, விதைகளை பரப்புதல், பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரிக்க உதவுகின்றன.

- முக்கிய அச்சுறுத்தல்களில் நகரமயமாக்கல், காடழிப்பு, பருவநிலை மாற்றம் மற்றும் கோவிட்-19 க்குப் பிந்தைய எதிர்மறையான எண்ணம் ஆகியவை அடங்கும்.

## பல்லுயிர்த்தன்மை சட்டம் குறித்த NBA வழிகாட்டுதல்கள்

- தேசியப் பல்லுயிர்த்தன்மை ஆணையம் (NBA), அணுகல் மற்றும் பயன் பகிர்வு (ABS) நிதிகளின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக, 2002 ஆம் ஆண்டின் பல்லுயிர் சட்டத்தின் கீழ் திருத்தப் பட்ட வழிகாட்டுதல்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- உயிரியல் வளங்களிலிருந்து கிடைக்கும் நன்மைகளை உள்ளூர் சமூகங்களுடன் நியாயமாகப் பகிர்ந்துகொள்வதை உறுதிசெய்வதை இந்த வழிகாட்டுதல்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- ஆதாரம் தெரிந்தால், நிதியில் 60-75% உள்ளூர் சமூகங்களுக்கும், 25-40% நிறுவனங்களுக்கும் வழங்கப்படும்.
- ஆதாரம் தெரியாத போது, 70% நிதி NBA/மாநில பல்லுயிர் வாரியங்களுக்கும் (SBBs), 30% நிறுவனங்களுக்கும் வழங்கப்படும்.
- உயிரியல் வளங்களைக் கண்காணிக்க டிஜிட்டல் களஞ்சியங்கள் மற்றும் சரியான ஆவணப்படுத்தல் ஆகியவை ஊக்குவிக்கப்படுகின்றன.
- இந்த விதிகள் உயிரியல் வளத் திருட்டைத் தடுக்கவும் பல்லுயிர்ப் பாதுகாப்பை ஆதரிக்கவும் உதவுகின்றன.

## சல்வீன் நதியில் ஆர்சனிக் மாசுபாடு

- சீனாவில் நு நதி என்று அழைக்கப்படும் சல்வீன் நதியில் பாதுகாப்பான வரம்புகளுக்கு மேல் அதிக அளவு ஆர்சனிக் மாசுபாடு காணப்படுகிறது.
- ஆசியாவின் மிக நீளமான தடையின்றி பாயும் (அணைகள் கட்டப்படாத) நதியான சல்வீன் நதி சுமார் 3,300 கி.மீ தூரம் வரை நீண்டுள்ளது.
- ஆர்சனிக் அளவுகள் உலக சுகாதார அமைப்பின் பாதுகாப்பு வரம்பான ஒரு லிட்டருக்கு 0.01 மில்லிகிராம் (mg/L) என்பதைத் தாண்டி, சில பகுதிகளில் 0.554 மி.கி/லி வரை அடைகின்றன.
- இந்த மாசுபாடு முக்கியமாக மியான்மரின் ஷான் மாநிலத்தில் நடைபெறும் கட்டுப் பாடற்ற சுரங்க நடவடிக்கைகளாலேயே ஏற்படுகிறது.
- இந்த ஆற்றுப்படுகையில், அரிய வகை உலோகங்கள் மற்றும் தங்கச் சுரங்க செயல் பாடுகள் உட்பட சுமார் 127 சுரங்கத் தளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- மீத்தேன் மற்றும் கன உலோக மாசுபாடு, பல்லுயிர்த் தன்மையையும் இந்த நதியை நம்பியுள்ள உள்ளூர்ச் சமூகங்களையும் அச்சுறுத்துகிறது.

## ரந்தம்பூரில் அரிய வகை பெரும் பூனைகளின் சங்கமம்

- ராஜஸ்தானில் உள்ள ரந்தம்பூர் புலிகள் காப்பகத்தில் இந்தியாவில் நடந்த மிக அரிய வனவிலங்கு நிகழ்வான புலி, சிறுத்தை மற்றும் சிவிங்கிப் புலி ஆகியவை ஒன்றாகக் காணப் பட்டன.

- இந்த நிகழ்வு சாக்கல் நதிக்கு அருகிலுள்ள மண்டலம் 9-இல் இந்த மூன்று வேட்டையாடும் விலங்குகளும் ஒரே நேரத்தில் 1-2 கி.மீ சுற்றளவில் காணப்பட்டன.
- விலங்குகள் வெவ்வேறு வாழ்விடங்கள் மற்றும் வேட்டையாடும் நேரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தங்களுக்கு இடையேயான போட்டியைத் தவிர்க்கும் "வாழிடப் பகிர்வு" காரணமாக, இத்தகைய சகவாழ்வு அரிதானது என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.
- புலிகள் தங்களது எல்லை ஆதிக்கம் கொண்ட மாமிச உண்ணிகள், சிறுத்தைகள் எந்தச் சூழலிலும் வாழக்கூடியவை மற்றும் நேரடி மோதலைத் தவிர்க்கக் கூடியவை, அதே சமயம் சிவிங்கிப்புலிகள் திறந்த புல்வெளிகளை விரும்புவதோடு, வேட்டையாடுவதற்குத் தனது வேகத்தை மட்டுமே நம்பியுள்ளன.
- ராஜஸ்தானில் உள்ள ரந்தம்பூர் புலிகள் காப்பகம் சுமார் 70 புலிகள் மற்றும் வளமான வனவிலங்குப் பன்முகத்தன்மையைக் கொண்ட ஒரு முக்கியப் பல்லுயிர் பெருக்க மையமாகும்.

## டால்பின் நண்பர்கள் முன்னெடுப்பு

- அழிந்து வரும் கங்கை நதி டால்பினைப் பாதுகாக்கும் நோக்கில் 'டால்பின் நண்பர்கள்' என்ற தன்னார்வலர் வலையமைப்பை பிரயாக்ராஜில் உள்ள வனத்துறை தொடங்கி உள்ளது.
- இது நதிகளில் டால்பின்களின் நடமாட்டம், இனப்பெருக்கம் மற்றும் வாழ்விட நிலைமைகளை கண்காணிக்க கொண்டு வரப்பட்ட ஒரு சமூகம் சார்ந்த முன்னெடுப்பு ஆகும்.
- இனப்பெருக்க காலத்தின் போது (பருவமழை) டால்பின்களைப் பாதுகாப்பதும், உள்ளூர் மக்களின் பங்களிப்பு மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- அறிவியல்ரீதியான கண்காணிப்பில் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுடன், மீனவர்களும் படகோட்டிகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.
- இந்த முன்னெடுப்பு ஆனது டால்பின் திட்டம் போன்ற திட்டங்களை ஆதரிக்கிறது மற்றும் நதி சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தின் குறிகாட்டிகளாக டால்பின்களை முன்னிலைப் படுத்துகிறது.

## பாராசிங்கா வனவிலங்கு சரணாலயம் - சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலம்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் உத்தரப் பிரதேசத்தில் உள்ள பாராசிங்கா வனவிலங்கு சரணாலயத்தைச் சுற்றி சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தை (ESZ) அறிவிப்பதற்கான வரைவு அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட இந்த சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலம், செயல்பாடுகளை முறைப்படுத்தவும் சுற்றியுள்ள சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் சுமார் 307 கிராமங்கள் உட்பட 408.7 சதுர கி.மீ பரப்பளவை உள்ளடக்கும்.
- சூழல் உணர்திறன் மண்டலங்கள் (ESZs) என்பவை தேசியப் பூங்காக்கள் மற்றும் வன விலங்கு சரணாலயங்களைச் சுற்றியுள்ள இடைநிலை மண்டலங்களாகும், இவை வளர்ச்சி, தொழிற்சாலை நடவடிக்கைகள் மற்றும் நிலப் பயன்பாட்டு மாற்றங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் "அபாய தணிப்பான்களாக" செயல் படுகின்றன.

- இது மேற்கு உத்தரப் பிரதேசத்தில் ஒரு முக்கியமான வாழ்விடமாக உள்ள இந்தச் சரணாலயம் முசாபர்நகர், மீரட், ஹாபூர், பிஜ்னோர் மற்றும் அம்ரோஹா ஆகிய ஐந்து மாவட்டங்களில் பரவியுள்ளது.
- மனித நடவடிக்கைகளைக் குறைத்தல், பல்லுயிர்களைப் பாதுகாத்தல் மற்றும் இந்தப் பகுதியின் முக்கிய உயிரினமான பாராசிங்காவை (சதுப்பு நில மான்) பாதுகாக்கும் அதே வேளையில் நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதை இந்த அறிவிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு 2026

- நீலகிரி வரையாடு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாடுகளைக் கணக்கெடுக்கும் மூன்றாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு, மேற்கொள்ளப்பட்டது.
- மாநிலங்களுக்கு இடையே இடம்பெயரும் விலங்குகளை இருமுறை கணக்கிடுவதைத் தவிர்ப்பதற்காக, கேரள வனத்துறையுடன் இணைந்து மேற்குத் தொடர்ச்சி மலையில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- இது கன்னியாகுமரி முதல் கூடலூர் வரையிலான 3,100 கிலோமீட்டருக்கும் மேற்பட்ட பரப்பளவில் 14 வனக்கோட்டங்கள், 43 வனச்சரகங்கள், 124 வனப்பிரிவுகள் மற்றும் 177 கணக்கெடுப்புத் தொகுதிகளை உள்ளடக்கியது.
- நிகழ்நேரத் தரவுச் சேகரிப்பு, GPS கண்காணிப்பு மற்றும் தரவறிக்கைக்காக "வருடை" என்ற அலைபேசி செயலி பயன்படுத்தப்பட்டது.
- முந்தைய கணக்கெடுப்புகளில் 2024 ஆம் ஆண்டில் 1,031 நீலகிரி வரையாடுகளும், 2025 ஆம் ஆண்டில் 1,303 வரையாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இது இவற்றின் எண்ணிக்கை உயர்வு மற்றும் வாழ்விட மறுசீரமைப்பைக் காட்டுகிறது.

## பிச்சாவரம் சதுப்புநிலச் சூழலமைப்பு - நுண்நெகிழி மாசுபாடு

- பிச்சாவரம் சதுப்புநிலச் சூழலமைப்பில் உள்ள மீன்கள் மற்றும் ஓடுடைய நீர்வாழ் உயிரினங்களில் அதிக அளவில் நுண்நெகிழி மாசுபாடு இருப்பதாக சமீபத்திய ஆய்வொன்று தெரிவித்துள்ளது.
- பருவமழைக் காலங்களில் நெகிழிக் கழிவுகளை இப்பகுதிக்கு அடித்து வரும் அதிகப் படியான நீர்வரத்து காரணமாக, நுண்நெகிழி அளவு சுமார் 45% என மிக அதிகமாக காணப்பட்டது.
- மடவை மற்றும் கரிமீன் போன்ற மீன்களும், நீல நீச்சல் நண்டு மற்றும் சேற்று நண்டு போன்ற ஓடுடைய உயிரினங்களும் அதிக அளவிலான நுண்நெகிழிகளை உட்கொண்டுள்ளது தெரியவந்துள்ளது.
- இவற்றில் சுமார் 32% துகள்கள் 1 மில்லிமீட்டருக்கும் குறைவான மிகச் சிறிய அளவிலானவை என்பதோடு இவை பெரும்பாலும் பாலிஎதிலீன், பாலிப்ரொப்பிலீன் மற்றும் PET போன்ற பொதுவான பிளாஸ்டிக்குகளால் உருவாக்கப்பட்ட நீலம் மற்றும் சிவப்பு நிற இழைகளாகும்.
- சதுப்புநிலத் தாவரங்களின் வேர்கள் மற்றும் வண்டல் மண் இந்த நெகிழிகளைத் தடுத்து நிறுத்துவதால், இவை அங்கே தேங்கி உணவுச் சங்கிலிக்குள் நுழைந்து சுற்றுச்சூழல் அபாயங்களை உருவாக்குகிறது.

## அடிமட்ட அளவிலான பல்லுயிர் திட்டம்

- தமிழ்நாடு மற்றும் மேகாலயாவில் புதிய பல்லுயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை இந்திய அரசு தொடங்கியுள்ளது.
- தேசிய பல்லுயிர் ஆணையத்துடன் இணைந்து சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகத்தால் (MoEFCC) இத்திட்டம் வழிநடத்தப்படுகிறது.
- 2025-2030 ஆம் ஆண்டிற்கான 4.88 மில்லியன் டாலர் நிதியுதவியுடன் உலகளாவிய சுற்றுச் சூழல் வசதி (GEF) மற்றும் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் (UNDP) ஆகியவற்றால் இத்திட்டம் ஆதரிக்கப்படுகிறது.
- தமிழ்நாட்டில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள முதுமலைப் புலிகள் காப்பகம் ஆகியவற்றை இது உள்ளடக்கியுள்ளது.
- மேகாலயாவில், மேற்கு காரோ மலைப்பகுதி மாவட்டத்தில் உள்ள நோக்ரெக் உயிர்க் கோளக் காப்பகத்தை இது உள்ளடக்கியுள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துதல், சமூகப் பங்களிப்பை மேம்படுத்துதல் மற்றும் அணுகல் மற்றும் பலன் பகிர்வு (ABS) மற்றும் பெரு நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) ஆகியவற்றின் மூலமான நிதியுதவிக்கு ஆதரவளித்தல் ஆகியவற்றை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆமைகளின் வலசை

- தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆலிவ் ரிட்லி ஆமையானது, இலங்கை முகடு (Sri Lanka Dome) பகுதியை நோக்கி வலசை போயுள்ளது/இடம்பெயர்ந்துள்ளது.
- செயற்கைக்கோள் தொலை அளவியல் ஆய்வின் கீழ், ஆமைகளுக்கு அடையாள வில்லைகள் பொருத்தப்பட்டு சென்னை கடற்கரையில் விடுவிக்கப்பட்டன.
- ஆமைகளின் வலசை போதல், முட்டையிடுதல் மற்றும் அவற்றின் நகர்வு முறைகளைக் கண்காணிப்பதற்காக, இந்திய வனவிலங்கு நிறுவனத்துடன் இணைந்து இந்த ஆய்வு நடத்தப்படுகிறது.
- இலங்கை முகடு என்பது கடலடி நீர் மேலெழும்பும் பருவகாலப் பகுதியாகும், இது ஊட்டச்சத்துக்கள் நிறைந்த நீரைக் கொண்டு வருவதால், மிதவை உயிரினங்கள், மீன்கள், திமிங்கிலங்கள் மற்றும் ஆமைகளை ஈர்க்கிறது.
- இப்பகுதி மே மாதத்தில் உருவாகி, ஜூலை மாதத்தில் உச்சத்தை அடைந்து, செப்டம்பர் மாதத்திற்குள் குறைகிறது, இதனால் இது இந்தியப் பெருங்கடலில் உள்ள ஒரு முக்கிய உணவுப் பகுதியாகத் திகழ்கிறது.

## செர்னோபில் பேரழிவு - 40 ஆண்டுகள்

- செர்னோபில் பேரழிவின் 40-வது ஆண்டு நினைவு தினம் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 அன்று குறிக்கப்பட்டது.
- கதிரியக்கப் பொருட்கள் என்பவை அணுக்கள் உடையும்போது ஆற்றலை (கதிர்வீச்சை) வெளியிடும் நிலையற்ற பொருட்களாகும்; ஒரு உலைக்குள், யுரேனியம் அணுக்கள் பிளவுபட்டு (அணுக்கரு பிளவு) வெப்பம் மற்றும் ஆற்றலை உருவாக்குகின்றன.

- 1986 ஆம் ஆண்டில், செர்னோபில் அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட ஒரு வெடிவிபத்து கதிரியக்கத் துகள்களை காற்றில் கலக்கச் செய்தது, இது ஐரோப்பா முழுவதும் பரவி மில்லியன் கணக்கான மக்களைப் பாதித்தது.
- இந்தத் துகள்கள் தூசியாகவும் புகையாகவும் பயணித்து, நிலம், நீர் மற்றும் உயிரினங்களை மாசுபடுத்தி, புற்றுநோய் போன்ற நோய்களை ஏற்படுத்தின.
- அப்பகுதி ஒரு தடை செய்யப்பட்ட மண்டலமாக மாறியதுடன், தற்போது அது 'புதிய பாதுகாப்பான அடைக்கப்பட்ட கட்டுமானம்' எனப்படும் ஒரு பாதுகாப்புக் கட்டமைப்பால் மூடப் பட்டுள்ளது.
- ரஷ்யா-உக்ரைன் போரின் போது ஏற்பட்ட சமீபத்திய அபாயங்கள், குறிப்பாக ஜபோரிஜியா அணுமின் நிலையத்திற்கு அருகிலான சேதங்கள், புதிய பாதுகாப்பு கவலைகளை எழுப்பியுள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கை 2026

- நிலையான வளர்ச்சி இலக்கு 4 (SDG 4 - தரமான கல்வி) நோக்கிய முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய, யுனெஸ்கோ “Access and Equity: Countdown to 2030” என்ற தலைப்பில் 2026ம் ஆண்டிற்கான உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்டது.
- இது முன்-தொடக்கக் கல்வி முதல் உயர்நிலை வரை கல்வியைப் பெறுதல் மற்றும் சமத்துவத்தில் கவனம் செலுத்துகின்ற Countdown to 2030’ தொடரின் முதல் பாகமாகும்.
- சேர்க்கை விகிதத்தில் முன்னேற்றம் இருந்தபோதிலும், பாலினம், இருப்பிடம், செல்வம் மற்றும் மாற்றுத்திறன் சார்ந்த உலகளாவிய கல்வி ஏற்றத்தாழ்வுகளை இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.
- உலகம் முழுவதும் இன்னும் சுமார் 27 கோடிக்கும் அதிகமான குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதால், பல நாடுகள் 2030 இலக்குகளை அடைவதற்கான பாதையில் இருந்து விலகி இருப்பதாக இது எச்சரிக்கிறது.

## இந்தியாவில் சுகாதாரத்தின் மீது பருவநிலை மாற்றத்தின் தாக்கம்

- தாஸ்ரா அமைப்பினால் வெளியிடப்பட்ட “Under the Weather: India’s Climate-Health Intersections and Pathways to Resilience” என்ற புதிய அறிக்கை, இந்தியாவில் பருவநிலை மாற்றம் சுகாதார அமைப்புகளையும் நோய் பாதிப்புகளையும் எவ்வாறு மாற்றுகிறது என்பதைக் காட்டுகிறது.
- வெள்ளம், வெப்ப அலைகள் மற்றும் சூறாவளி போன்ற தீவிர வானிலை நிகழ்வுகளால் இந்தியாவில் சுமார் 40% மாவட்டங்கள் அதிக ஆபத்தில் உள்ளன.
- பருவநிலை மாற்றம் காரணமாக காலரா, ஹெபடைடிஸ் போன்ற நீர் மூலம் பரவும் நோய்களும், டெங்கு, மலேரியா போன்ற பூச்சிகள் மூலம் பரவும் நோய்களும் அதிகரித்து வருகின்றன.
- வெப்ப அலைகள் நீர்ச்சத்து குறைபாடு, வெப்பத்தாக்கம் மற்றும் இதயம் தொடர்பான நோய்களை ஏற்படுத்துகின்றன; காற்று மாசுபாடு சுவாச நோய்களுக்கு வழி வகுக்கிறது.

- ஏழைகள், கிராமப்புற மக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் போன்ற பாதிக்கப் படக் கூடிய பிரிவினர் இதனால் அதிகம் பாதிக்கப் படுகின்றனர்.

## பெண்களின் கடன் சந்தை குறித்த அறிக்கை

- நிதி ஆயோக், "From Borrowers to Builders: Women and India's Evolving Credit Market" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ஒட்டு மொத்தக் கடன் சந்தையில் பெண்களின் பங்கு ₹76 லட்சம் கோடியாக உள்ள நிலையில் இது மொத்தக் கடன் அளவீட்டில் 26% ஆகும்.
- 2017-ஆம் ஆண்டிலிருந்து 2025-ஆம் ஆண்டிற்குள் பெண்களின் கடன் அளவு 4.8 மடங்கு அதிகரித்துள்ளது அவர்களின் நிதிப் பங்களிப்பின் வளர்ச்சியைக் காட்டுகிறது.
- பெண்கள் மத்தியில் கடன் பெறுபவர்களின் விகிதம் 2017-ஆம் ஆண்டில் 19%-ஆக இருந்து 2025-ஆம் ஆண்டில் 36%-ஆக உயர்ந்துள்ளது.
- தொழில் கடன்களில் வளர்ச்சி வலுவாக உள்ள நிலையில் பெண் கடன் வாங்குபவர்கள் அதிகளவில் சில்லறை மற்றும் வணிகக் கடன்களுக்கு மாறி வருகின்றனர்.

## இந்தியாவில் நிலம் சார்ந்த சமத்துவமின்மை

- உலக சமத்துவமின்மை தரவுத்தளத்தின் அறிக்கையானது, கிராமப்புற இந்தியாவில் அதிக நிலப் பாகுபாடு இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளது.
- கிராமப்புறங்களில் சுமார் 46% குடும்பங்கள் நிலமற்றவர்களாக உள்ளனர், இது மிகவும் சமமற்ற நில விநியோகத்தைக் காட்டுகிறது.
- நிலப் பாகுபாடு கினி குறியீட்டில் (அளவு 0 முதல் 100 வரை) சுமார் 71 என்ற அளவில் மிக அதிகமாக உள்ளது.
- மேல்நிலை 10% குடும்பங்கள் சுமார் 44% நிலத்தையும், மேல்நிலை 5% குடும்பங்கள் 32% நிலத்தையும், மேல்நிலை 1% குடும்பங்கள் 18% நிலத்தையும் வைத்துள்ளனர்.
- சுமார் 2 லட்சத்து 70 ஆயிரம் கிராமங்கள் மற்றும் 650 மில்லியன் மக்களை உள்ளடக்கிய 2011-ஆம் ஆண்டின் சமூக-பொருளாதார மற்றும் சாதிவாரி கணக்கெடுப்பு (SECC) தரவுகளை இந்த ஆய்வு பயன்படுத்தியுள்ளது.
- சிறந்த விவசாய நிலைமைகள் மற்றும் காலனித்துவ நிலச்சுவான்தார் முறைகள் உள்ள பகுதிகளில் நிலம் குவிக்கப்பட்டிருப்பது அதிகமாக காணப்படுகிறது.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) போன்ற சமூக காரணிகளால் நிலமற்றோர் விகிதம் அதிகமாக உள்ளதுடன் சந்தை அணுகலானது சமத்துவமின்மையைக் குறைப்பதில் குறைந்த தாக்கத்தையே ஏற்படுத்துகிறது.

## உலகளாவிய மேம்பாட்டு நிதியளிப்பு அறிக்கை 2026

- மேம்பாட்டுக்கான உலகளாவிய நிதியளிப்புச் சவால்களை எடுத்துரைக்கும் இந்த அறிக்கையை ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை (UN DESA) வெளியிட்டுள்ளது.

- இது பலவீனமான உலகப் பொருளாதாரம், குறைந்த வருமான அளவுகள் மற்றும் வளரும் நாடுகளில் உள்ள அதிக கடன் வாங்கும் செலவுகள் போன்ற சிக்கல்களை சுட்டிக்காட்டுகிறது.
- இது நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான (SDGs) நிதியளிப்பில் $4 டிரில்லியன் டாலர் இடைவெளி இருப்பதை குறிப்பிடுகிறது.
- உள்நாட்டு நிதி, தனியார் துறை வளர்ச்சி மற்றும் மீள்திறன் கொண்ட நிதி அமைப்புகளை வலுப்படுத்துவதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.
- இது உலகளாவிய நிதியளிப்பை மேம்படுத்துவதற்காக என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட செவில்லா உறுதிப்பாட்டை சிறப்பித்துக் காட்டுகிறது.

## மத்திய கிழக்கு மோதலின் ஆசிய-பசிபிக் மீதான தாக்கங்கள்

- ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டமானது (UNDP), "Military Escalation in the Middle East: Human Development Impacts Across Asia and the Pacific" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது.
- மத்திய கிழக்கில் ஏற்படும் இராணுவ விரிவாக்கம் ஆசியா மற்றும் பசிபிக் முழுவதிலும் உள்ள மனித வளர்ச்சியைப் பாதிக்கிறது என்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- உயர்ந்து வரும் எரிபொருள் போக்குவரத்து மற்றும் உள்ளீட்டுச் செலவுகள் வாங்கும் திறனைக் குறைத்து உணவுப் பாதுகாப்பின்மையை அதிகரிக்கின்றன மற்றும் அரசாங்க வரவு செலவுத் திட்டங்களில் நெருக்கடியை ஏற்படுத்துகின்றன.
- பதற்றத்தைத் தணிக்கும் வகையில் பாகிஸ்தானின் ஆதரவுடனான போர்நிறுத்த ஒப்பந்தம் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 அன்று நடைமுறைக்கு வந்தது.
- ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் உற்பத்தி இழப்புகள் $97-299 பில்லியன் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3-0.8%) என மதிப்பிடப்பட்டுள்ளது, இதில் தெற்காசியா மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.
- சுமார் 8.8 மில்லியன் மக்கள் வறுமையில் தள்ளப்படலாம், ஈரானில் இதன் முக்கிய தாக்கம் இருக்கும்.
- குறைந்த திறன் கொண்ட தொழிலாளர்கள் அதிக வேலையின்மையை எதிர்கொள்ள நேரிடும் என எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் மோதல் தொடர்ந்தால் மனித வளர்ச்சி முன்னேற்றம் கணிசமாகக் குறையக் கூடும்.

## அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு குறித்த சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) அறிக்கை

- மாறிவரும் தொழிலாளர் சந்தைகளில் அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு வழங்குவது குறித்த அறிக்கையைச் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வெளியிட்டது.
- இந்த அறிக்கை "Universal social protection in changing labour markets: Protecting workers in all types of employment" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- சமூகப் பாதுகாப்பு என்பது சுகாதாரப் பராமரிப்பு, வேலையின்மைக்கான ஆதரவு, மகப்பேறு பலன்கள் மற்றும் ஓய்வூதியம் போன்ற பலன்களை உள்ளடக்கியதாகும்.

- வறுமையைக் குறைப்பது, பொருளாதார நிலைத்தன்மையை மேம்படுத்துவது மற்றும் பாலின ஏற்றத்தாழ்வுகளைக் களைவது ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- தற்காலிக ஒப்பந்தத் தொழிலாளர்கள், சுயதொழில் செய்வோர் மற்றும் அமைப்பு சாராத் தொழிலாளர்களைச் சமூகப் பாதுகாப்பு அமைப்புகளின் கீழ் கொண்டு வர வேண்டும் என இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

## ISSAR அறிக்கை 2025

- இந்திய விண்வெளிச் சூழ்நிலை விழிப்புணர்வு அறிக்கை (ISSAR) 2025 என்ற ஒரு அறிக்கையினை இஸ்ரோ வெளியிட்டது.
- இந்த அறிக்கை செயற்கைக்கோள்கள், விண்வெளி பயணங்கள் மற்றும் விண்வெளிச் சூழல் குறித்த வருடாந்திர தரவுகளை வழங்குகிறது.
- 2025 ஆம் ஆண்டில், உலகளவில் 315 வெற்றிகரமான ஏவுதல்கள் மூலம் 4,198 செயல் பாட்டுச் செயற்கைக்கோள்கள் நிலைநிறுத்தப்பட்டன.
- தாழ்வான புவி சுற்றுப்பாதையில் சுமார் 1.6 லட்சம் நெருக்கமான அணுகுமுறை எச்சரிக்கைகளுடன் அதிகரித்து வரும் விண்வெளி நெரிசலை இது எடுத்துக் காட்டுகிறது.
- இந்தியா 144 விண்கலங்கள் மற்றும் சந்திரயான்-2 உலாவி மற்றும் ஆதித்யா-L1 போன்ற செயலில் உள்ள பயணங்களைக் கொண்டுள்ளது.
- விண்வெளிப் பாதுகாப்பிற்கான நேத்ரா (விண்வெளிப் பொருட்களைக் கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதற்கான வலையமைப்பு) மற்றும் குப்பைகள் இல்லாத விண்வெளிப் பயணம் போன்ற இந்தியாவின் முயற்சிகளையும் இது குறிப்பிடுகிறது.

## உலகளாவிய மின்சார மதிப்பாய்வு 2026

- எம்பர் அறிக்கையானது, 2025 ஆம் ஆண்டின் முக்கிய உலகளாவிய மின்சாரப் போக்குகள் மற்றும் தூய்மையான ஆற்றல் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.
- 2025 ஆம் ஆண்டில் புதிய மின்சாரத் தேவையின் வளர்ச்சியினைப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முழுமையாகப் பூர்த்தி செய்ததோடு, புதைபடிவ எரிபொருள் உற்பத்தியின் அதிகரிப்பையும் தடுத்து நிறுத்தியது.
- சூரிய சக்தியானது 636 டெராவாட்-மணிநேரம் (TWh) அதிகரித்து 2,778 TWh ஆக உயர்ந்து உள்ளதோடு இது 849 TWh ஆக உயர்ந்த மின் தேவையில் 75%-ஐ பூர்த்தி செய்துள்ளது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் 33.8% பங்கினை எட்டியுள்ளதோடு இது கடந்த 100 ஆண்டுகளில் முதல் முறையாக நிலக்கரியை (33.0%) விஞ்சியுள்ளது.
- புதைபடிவ எரிபொருள் உற்பத்தி 38 TWh குறைந்துள்ளதோடு சீனா (-56 TWh) மற்றும் இந்தியாவில் (-52 TWh) பெரும் சரிவும் ஏற்பட்டுள்ளது.
- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி 98 TWh அதிகரித்துள்ளதோடு சூரிய சக்தி 53 TWh மற்றும் காற்று சக்தி 22 TWh இதில் பங்களித்துள்ளன.
- இந்தியாவின் மின் தேவை 49 TWh ஆக அதிகரித்துள்ள நிலையில், நிலக்கரி மூலம் மின்சார உற்பத்தி சுமார் 44 TWh குறைந்துள்ளது.

## அதிக மீத்தேன் வெளியிடும் குப்பைக்கிடங்குகள் 2025

- ❖ லாஸ் ஏஞ்சல்ஸின் கலிபோர்னியா பல்கலைக்கழகம், வெளியிட்ட "Spotlight on the Top 25 Methane Plumes in 2025: Landfills" என்ற அறிக்கை, உலக அளவில் அதிக மீத்தேன் வெளியிடும் கழிவுத் தளங்களை அடையாளம் கண்டுள்ளது.
- ❖ செயற்கைக்கோள் தரவுகளின் அடிப்படையில், அதிக மீத்தேன் உமிழ்வுகளைக் (மணிக்கு 3.6-7.6 டன்கள்) கொண்ட 18 நாடுகளில் உள்ள 25 குப்பைக்கிடங்குத் தளங்களை இந்த அறிக்கை பட்டியலிடுகிறது.
- ❖ தெலுங்கானாவில் உள்ள இந்தியாவின் ஜவகர் நகர் குப்பைக்கிடங்கு (மணிக்கு 5.9 டன்கள்) உலக அளவில் 4-வது இடத்தையும், மும்பையில் உள்ள கஞ்சூர்மார்க் குப்பைக் கிடங்கு (மணிக்கு 4.9 டன்கள்) 12-வது இடத்தையும் பிடித்துள்ளன.
- ❖ நாசா எமிட் மற்றும் கார்பன் மேப்பர் போன்ற செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தி 700-க்கும் மேற்பட்ட கழிவுத் தளங்களில் இருந்து சுமார் 3,000 மீத்தேன் வெளியேற்றங்களை இந்தத் தரவு பகுப்பாய்வு செய்தது.
- ❖ குப்பைக்கிடங்குகள் உலகளாவிய மீத்தேன் உமிழ்வுகளில் சுமார் 20% பங்களிப்பதுடன் இது பருவநிலை நடவடிக்கைகளுக்கான முக்கிய இலக்காக அவற்றை மாற்றுகிறது.
- ❖ கார்பன் டை ஆக்சைடை ($CO_2$) விட 86 மடங்கு அதிக வெப்பத்தை ஈர்த்துத் தக்க வைக்கும் தன்மை கொண்ட மீத்தேன் வாயு சமீபத்திய புவி வெப்பமடைதலில் 45% க்கும் அதிக காரணமாக உள்ளது.

## ஐ.நா ESCAP பொருளாதார ஆய்வு 2026

- ❖ ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (UN ESCAP) தனது 2026 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்ட நிலையில் அதில் அதிகரிக்கும் ஆற்றல் மற்றும் உணவுச் செலவுகள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன.
- ❖ ஆசியா-பசிபிக் பிராந்தியத்தில் பணவீக்கம் 2025 ஆம் ஆண்டில் 3.5% ஆக இருந்ததில் இருந்து 2026 ஆம் ஆண்டில் 4.6% ஆக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.
- ❖ வளரும் பொருளாதார நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 4.6%-லிருந்து 4.0% ஆக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ எரிசக்தி, எரிவாயு மற்றும் உரங்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ள நிலையில் எரிவாயு விலை சுமார் 55% மற்றும் யூரியா விலை சுமார் 35% அதிகரித்துள்ளது.
- ❖ இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி 2026 ஆம் ஆண்டில் 6.4% ஆகவும், பணவீக்கம் 4.4% ஆகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- ❖ அதிகரிக்கும் செலவுகள் வாங்கும் திறனைக் குறைக்கக் கூடும் என்பதோடு, இது குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை அதிகம் பாதிக்கும்.

## தீவிர வெப்பம் மற்றும் விவசாய அறிக்கை 2026

- ❖ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மற்றும் உலக வானிலை அமைப்பு (WMO) ஆகியவை இணைந்து ஏப்ரல் 22, 2026 அன்று (புவி தினம்) "தீவிர வெப்பம் மற்றும் விவசாயம்" என்ற அறிக்கையை வெளியிட்டன.
- ❖ இந்த நூற்றாண்டின் இறுதிக்குள், கடும் வெப்பம் காரணமாக ஆண்டிற்கு 250 நாட்கள் வரை விவசாயப் பணிகள் பாதுகாப்பற்றதாக மாறக்கூடும் என்று அந்த அறிக்கை எச்சரிக்கிறது.

- விவசாயத் தொழிலாளர்கள் வெப்பத்தின் பாதிப்பால் இறப்பதற்கான வாய்ப்பு 35 மடங்கு அதிகமாக உள்ளது, இதனால் ஆண்டுக்கு சுமார் 470 பில்லியன் வேலை நேரம் இழக்கப் படுகிறது.
- ஒவ்வொரு 1°C வெப்பநிலை உயர்விற்கும் 7.5% வரை இழப்பு ஏற்பட்டு வெப்பநிலை அதிகரிப்பால் பயிர் விளைச்சல் குறைகிறது.
- குறிப்பாக இந்தோ-கங்கை சமவெளி போன்ற பகுதிகளில் சுமார் 1 பில்லியன் மக்களின் வாழ்வாதாரம் ஆபத்தில் உள்ளது.
- "வெப்பப் பாதுகாப்பு வரம்பு" குறைதல் மற்றும் திடீர் வறட்சிகளின் அதிகரிப்பு ஆகியவற்றை சுட்டிக்காட்டும் இந்த அறிக்கை, விவசாய நெருக்கடி மற்றும் உற்பத்தித் திறன் மோசமடைவதையும் எடுத்துக்காட்டுகிறது.

# மாநிலச் செய்திகள்

## முதியோர் ஆதரவு மசோதா 2026 - தெலுங்கானா

- முதியோர்களான பெற்றோருக்கு நிதி உதவியை உறுதி செய்வதற்காக, 'தெலுங்கானா ஊழியர்கள் பொறுப்புக் கூறல் மற்றும் பெற்றோர் ஆதரவு கண்காணிப்பு மசோதா, 2026'-ஐ தெலுங்கானா அரசு நிறைவேற்றியுள்ளது.
- அரசு ஊழியர்கள், தனியார் ஊழியர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தங்கள் பெற்றோரை ஆதரிப்பதை இந்த மசோதா சட்டப்பூர்வமாக கட்டாயமாக்குகிறது.
- பெற்றோர் கவனிக்கப்படாமல் விடப்பட்டால், ஊழியரின் ஊதியத்தில் 15% வரை அல்லது ₹10,000 (எது குறைவோ அது) பிடிக்கப்பட்டு பெற்றோரிடம் வழங்கப்படும்.
- இது தனியார் ஊழியர்கள் போன்ற கூடுதல் பிரிவினரை உள்ளடக்குவதன் மூலம் 'பெற்றோர் மற்றும் முதியோர் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007'-ஐ விரிவு படுத்துகிறது.

## பலிராஜ்கர் அகழ்வாராய்ச்சி

- இந்திய தொல்லியல் ஆய்வு மையம் (ASI) வரலாற்றுச் சிறப்புமிக்க பலிராஜ்கர் தளத்தில் 2026-ஆம் ஆண்டில் புதிய அகழ்வாராய்ச்சிப் பணிகளைத் தொடங்கியுள்ளது.
- பீகாரின் மதுபானி மாவட்டத்தில் அமைந்துள்ள பலிராஜ்கர், பண்டைய விதேகப் பேரரசின் முக்கிய மையமாக இருந்தது.
- இந்தியப் புராணங்களில் இடம் பெறும் புகழ்பெற்ற மன்னர் பலியுடன் தொடர்புடைய இந்த தளம் அவருடைய தலைநகராக இருந்திருக்கக் கூடும் என கருதப்படுகிறது.
- இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் சுங்கர், குஷாணர், குப்தர் மற்றும் பால வம்ச காலத்தின் கலாச்சார எச்சங்களை வெளிப்படுத்தியுள்ளன.
- இது 1904-ஆம் ஆண்டின் பண்டைய நினைவுச்சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், 1938-இல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது.

## வர்க்கலா – பூஜ்ஜியக் கழிவு முன்னெடுப்பு

- நிலையான கழிவு மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மேற்கொண்டு வரும் தீவிர முயற்சிகளுக்காக, உலகளாவிய 'பூஜ்ஜியக் கழிவை நோக்கிய 20 நகரங்கள்' முன்னெடுப்பின் கீழ் வர்க்கலா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழல் நகர்ப்புற அமைப்புகளை ஊக்குவிக்கவும், கழிவு உருவாவதைக் குறைக்கவும் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) மற்றும் ஐக்கிய நாடுகள் மனிதக் குடியிருப்புகள் திட்டம் (UN-Habitat) ஆகியவற்றால் இந்த முன்னெடுப்பு முன்னெடுக்கப் படுகிறது.
- கழிவுகளை அதன் ஆதாரத்திலேயே குறைத்தல், மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாட்டை அதிகரித்தல் மற்றும் வளங்களை வீணாக்காமல் பயன்படுத்தும் வட்டப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் இது கவனம் செலுத்துகிறது.
- வர்க்கலாவின் புதுமையான கழிவு மேலாண்மை முறைகள், மேம்படுத்தப்பட்ட சுகாதார அமைப்புகள் மற்றும் குப்பை கிடங்குகளைக் குறைப்பதற்கான அதன் அர்ப்பணிப்பு ஆகியவற்றை இத்தேர்வு அங்கீகரிக்கிறது.
- இந்த முன்னெடுப்பானது நகரங்களுக்கு இடையே சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ள ஊக்குவிக்கிறது மற்றும் தூய்மையான சூழல் தொடர்பான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய உதவுகிறது.

## அமராவதி - தலைநகர் மசோதா

- ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு (திருத்த) மசோதா, 2026-ஐ மக்களவையில் அறிமுகப் படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- ஆந்திர மாநிலத்தின் ஒரே மற்றும் நிரந்தரத் தலைநகராக அமராவதியை அதிகாரப் பூர்வமாக அங்கீகரிப்பதே இந்த மசோதாவின் முக்கிய நோக்கமாகும்.
- இந்த மசோதா, 'ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம், 2014'-இல் திருத்தம் செய்ய முன்மொழிகிறது.
- முன்னதாக, மாநிலப் பிரிவினைக்குப் பிறகு 10 ஆண்டு காலத்திற்கு ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகிய இரு மாநிலங்களுக்கும் கூட்டுத் தலைநகராக ஐதராபாத் அறிவிக்கப் பட்டிருந்தது.
- அமராவதிக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்கக் கோரி, ஆந்திரப் பிரதேச சட்டப்பேரவை 2026 ஆம் ஆண்டு மார்ச் 28 அன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்ட பிறகு, அமராவதி சட்டப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தலைநகராக மாறும்.

## கிக் தொழிலாளர்கள் மசோதா 2026 - தெலங்கானா

- தெலங்கானா சட்டப்பேரவையானது, தெலங்கானா தளம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் (பதிவு, சமூக பாதுகாப்பு மற்றும் நலன்) மசோதா, 2026-ஐ நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதா விநியோகப் பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் போன்ற கிக் தொழிலாளர்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- தளம்சார் நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்களைப் பதிவு செய்யவும், பணப்பரிமாற்ற விவரங்களைத் தொடர்ந்து சமர்ப்பிக்கவும் இந்தச் சட்டம் கட்டாயமாக்குகிறது.
- இதே போன்ற சட்டங்கள் ஏற்கனவே கர்நாடகா, ராஜஸ்தான், ஜார்கண்ட் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## ஆந்திரப் பிரதேசத்தின் நிரந்தரத் தலைநகரம் – அமராவதி

- அமராவதியை ஆந்திரப் பிரதேசத்தின் ஒரே தலைநகராக அறிவிக்க ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு (திருத்த) மசோதா, 2026 மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதா, ஜூன் 2, 2024 முதல் அமராவதியை ஆந்திரப் பிரதேசத்தின் ஒரே மற்றும் நிரந்தரத் தலைநகராக அறிவிக்கிறது.
- ஏப்ரல் 1, 2026 அன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா, மாநிலங்களவைக்கும் பின்னர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கும் அனுப்பப்படும்.
- இது தலைநகர் குறித்த முடிவிற்கு சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழங்குவதோடு, எதிர்காலத்தில் இந்த முடிவை மாற்றும் எந்தவொரு முயற்சியையும் தடுக்கிறது.
- மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் இந்த மசோதாவைத் தாக்கல் செய்தார்.
- முன்னதாக, ஒய். எஸ். ஜெகன் மோகன் ரெட்டி மூன்று தலைநகரங்கள் மாதிரியை (விசாகப் பட்டினம் – நிர்வாகத் தலைநகரம், அமராவதி – சட்டமன்றத் தலைநகரம், கர்னூல் – நீதித்துறைத் தலைநகரம்) முன்மொழிந்திருந்தார்.
- ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒரு மாநிலத்தின் தலைநகராக நாடாளுமன்றம் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கும் முதல் நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகும்.
- இந்தத் திருத்தம் ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம், 2014-இல் மாற்றங்களைக் கொண்டு வருகிறது; அந்தச் சட்டத்தின்படி ஐதராபாத் 10 ஆண்டுகளுக்குத் தற்காலிக கூட்டுத் தலைநகராக இருந்தது.

## பதவி உயர்வுக்கான பரிசீலனை உரிமை - அடிப்படை உரிமை

- பொதுத்துறை வேலைவாய்ப்புகளில் பதவி உயர்வுக்காகப் பரிசீலிக்கப்படும் உரிமை ஒரு அடிப்படை உரிமை என்று பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.
- நிர்வாகத் தவறு காரணமாக துறைசார் பதவி உயர்வுக் குழு (DPC) கூட்டத்தில் சேர்க்கப்படாமல் விடுபட்ட ஒரு இளநிலைப் பொறியாளர் தொடர்பான வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
- அரசியலமைப்பின் 14 மற்றும் 16-வது சரத்துகளின் கீழ், தகுதியுள்ள ஊழியர்கள் பதவி உயர்வுக்காக நியாயமான முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது.
- பதவி உயர்வு என்பது உறுதி செய்யப்பட்ட உரிமை அல்ல, ஆனால் பதவி உயர்வுக்கான நியாயமான பரிசீலனை என்பது பாதுகாக்கப்பட்ட ஒரு உரிமை என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

- நீதிமன்றம் அந்த ஊழியருக்குப் பின்னோக்கிய தேதியிலிருந்து கருத்தியல் பதவி உயர்வு வழங்கியதோடு, பதவி உயர்வுக் குழுக்களின் கூட்டங்களைத் தவறாமல் நடத்தவும் உத்தரவிட்டது.
- இந்தக் கொள்கை இந்திய உச்ச நீதிமன்றத்தின் முந்தையத் தீர்ப்புகளைப் பின்பற்றி, அரசுப் பணிகளில் சமத்துவத்தை வலுப்படுத்துகிறது.

## நமோ ஆளில்லா விமான தீதி திட்டத்தின் கீழ் பெண் விமானிகள்

- நமோ ஆளில்லா விமான தீதி திட்டத்தின் கீழ், ஆளில்லா விமானத்தின் விமானிகளாகப் பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்ட சுய உதவிக் குழுக்கள் (SHGs) அதிக எண்ணிக்கையில் உள்ள மாநிலமாக கர்நாடகா முதலிடம் பிடித்துள்ளது.
- கர்நாடகாவில் மொத்தம் 145 சுய உதவிக் குழு பெண் உறுப்பினர்கள் ஆளில்லா விமானத்தின் விமானி பயிற்சி பெற்றுள்ள நிலையில் இது இந்தியாவிலேயே மிக அதிகமாகும்.
- இத்திட்டத்தின் மூலம் 2023-24 முதல் 2025-26 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில், பெண் சுய உதவிக் குழுக்களுக்கு 15,000 விவசாய ஆளில்லா விமானங்களை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இந்தியா முழுவதும் இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1,094 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஆளில்லா விமானத்தின் விமானி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைத் தெளிக்க ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்த பெண்களுக்கு உதவும் இந்தப் பயிற்சியானது, விவசாயத் திறன் மற்றும் பயிர் உற்பத்தியை மேம்படுத்துகிறது.

## பாதுகாப்பான சுத்திகரிக்கப்பட்ட நீர் மறுபயன்பாட்டுக் கொள்கை 2026

- கழிவுநீரை பெரிய அளவில் மறுபயன்பாட்டிற்கு கொண்டு வருவதை ஊக்குவிப்பதற்காக, உத்தரப்பிரதேச அமைச்சரவை 'பாதுகாப்பான சுத்திகரிக்கப் பட்ட நீர் மறுபயன்பாட்டுக் கொள்கை 2026'-க்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் (CSE) ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இக்கொள்கை, நீர் மேலாண்மையில் ஒரு சுழற்சிப் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2030-ஆம் ஆண்டிற்குள் 50% மறுபயன்பாடு; கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STPs) அமைந்துள்ள இடங்களில் பிந்தைய கட்டங்களில் 100% மறுபயன்பாடு மற்றும் செயல் பாட்டில் இல்லாத பகுதிகளில் 2045-ஆம் ஆண்டு வரையிலான படிப்படியான இலக்குகள் ஆகிய கட்ட வாரியான இலக்குகளை இது நிர்ணயிக்கிறது.
- நன்னீர் பயன்பாட்டையும் நிலத்தடி நீர் எடுப்பையும் குறைக்க உதவும் வகையில் சுத்திகரிக்கப் பட்ட நீர் விவசாயம், தொழில், கட்டுமானம் மற்றும் நகர்ப்புற நிலப்பரப்பு மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.
- இதற்காக 'நகர அளவிலான மறுபயன்பாட்டு செயல் திட்டங்கள்' (CLRAPs) தயாரிக்கப் படுகின்றன; ஆக்ரா மற்றும் பிரயாக்ராஜில் முறையே ₹93 கோடி மற்றும் ₹1,625 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

## மேகாலயா செயற்கைக்கோள் இணைய வசதி ஏற்பு

- செயற்கைக்கோள் இணைய சேவைகளை மேம்படுத்துவதற்காக மேகாலயா மாநில அரசானது ஸ்டார்லிங்க் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளது.
- மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தைத் தொடர்ந்து ஸ்டார்லிங்குடன் இணைந்த மூன்றாவது மாநிலமாக மேகாலயா உருவெடுத்துள்ளது.
- செயற்கைக்கோள்கள் மூலம் இணைய வசதியை வழங்க 2019 ஆம் ஆண்டில் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தால் ஸ்டார்லிங்க் தொடங்கப்பட்டது.
- செயற்கைக்கோள் இணையமானது பூமியின் தாழ்வான சுற்றுப்பாதையில் (LEO) உள்ள செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தி, கம்பிகள் இன்றி இணைப்பை வழங்குகிறது.
- இது தொலைதூரப் பகுதிகளை இணைக்கவும், பேரிடர் காலங்களில் தடையற்ற சேவையை வழங்கவும் உதவுகிறது.

## எலிஃபண்டா தீவில் 1500 ஆண்டுகள் பழமையான நீர்த்தேக்கம்

- மும்பைக்கு கிழக்கே உள்ள எலிஃபண்டா தீவில் 1,500 ஆண்டுகள் பழமையான படிக்கட்டுகளுடன் கூடிய நீர்த்தேக்கத்தை இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறை (ASI) கண்டுபிடித்துள்ளது.
- பண்டைய மக்களின் மேம்பட்ட நீர் மேலாண்மையைக் காட்டுகின்ற இந்த நீர்த் தேக்கம் T-வடிவத்தில் 20 கல் படிகளுடன் உள்ளது.
- காலச்சூரி வம்சத்தின் மன்னரான கிருஷ்ணராஜாவின் நாணயங்கள் உட்பட சுமார் 60 நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- ரோம் மற்றும் மேற்கு ஆசியாவுடனான வர்த்தகத் தொடர்புகளைப் பற்றி ஆம்போரா மற்றும் ஜாடிகள் குறிப்பிடுகின்றன.
- மணிகள், வளையல்கள் மற்றும் சுட்டமண் பொருட்கள் போன்ற கலைப்பொருட்கள் கலாச்சார மற்றும் கைவினைச் செயல்பாடுகளைக் காட்டுகின்றன.
- இத்தீவு பல துறைமுகங்களைக் கொண்ட ஒரு முக்கியமான பண்டைய வர்த்தக மையமாக இருந்துள்ளது.

## அறிவிக்கப்பட வேண்டிய நோய் - புற்றுநோய்

- ஒரு புதிய அரசாணையின் மூலம் புற்றுநோயை 'அறிவிக்கப்பட வேண்டிய நோயாக' தெலுங்கானா அரசு அறிவித்துள்ளது.
- அனைத்து மருத்துவமனைகள், சிகிச்சையகங்கள், ஆயுஷ் (AYUSH - ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) மையங்கள் மற்றும் ஆய்வகங்கள் ஆகியன புற்றுநோய் பாதிப்புகள் மற்றும் இறப்புகளை ஒரு மாதத்திற்குள் அரசுக்குக் கட்டாயம் தெரிவிக்க வேண்டும்.
- முறையான பதிவுகளைப் பராமரிப்பதற்காக மையப்படுத்தப்பட்ட இணைய வழித் தளம் மூலம் தரவுகள் சேகரிக்கப்படும்.
- தேசியப் புற்றுநோய் பதிவேட்டிற்குத் தரவுகளை அனுப்புவதற்கு முன்பு, MNJ புற்றுநோயியல் நிறுவனம் அதனைச் சரிபார்க்கும்.

- இந்நோயை ஆரம்பத்திலேயே கண்டறிதல், சிறந்த சிகிச்சை அளித்தல் மற்றும் சுகாதாரத் திட்டமிடலை மேம்படுத்துதல் ஆகியவையே இதன் முக்கிய நோக்கமாகும்.

## புதுச்சேரி தேர்தல் 2026 - 'நிலா'

- வாக்காளர்களைக் கவருவதற்காக 2026 புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலின் போது தனித்துவமான வாக்குச்சாவடிகளும், 'நிலா' என்ற மனித உருவ ரோபோவும் பயன்படுத்தப் பட்டன.
- குறிப்பிட்ட கருத்துருக்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் தமிழ் கலைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வரலாற்றை வெளிப்படுத்தின.
- வ.உ. சிதம்பரனார் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில், 'நிலா' ரோபோ வாக்காளர்களை வரவேற்று அவர்களுக்கு உதவியது.
- 1954-ஆம் ஆண்டு பிரெஞ்சுப் பகுதிகளை இந்தியாவுடன் இணைப்பதற்கான பொது வாக்கெடுப்பில் கீழூர் வாக்குச்சாவடி ஆற்றிய பங்கு சிறப்பித்துக் காட்டப்பட்டது.
- வாக்காளர்களுக்குப் பாரம்பரிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன, மேலும் முதல்முறையாக வாக்களித்தவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.
- இந்த முன்னெடுப்பானது வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் தேர்தலில் அவர்களின் பங்களிப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

## சிக்கிமின் முதல் சமூக வானொலி

- இந்திய ராணுவம் சிக்கிம் மாநிலத்தின் முதல் எல்லைப்புற கிராம சமூக வானொலி நிலையத்தை "சிக்கிம் சுந்தரி" என்ற பெயரில் தொடங்கியது.
- தொலைதூர எல்லைப் பகுதிகளில் தகவல் தொடர்பை மேம்படுத்தும் நோக்கில் சிக்கிமில் உள்ள திரிசக்தி கார்ப்ஸ் இந்த முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது.
- இந்த வானொலியானது உள்ளூர் செய்திகள், வானிலை அறிவிப்புகள் மற்றும் அரசுத் திட்டங்களை ஒலிபரப்பும்.
- இது உள்ளூர் கலாச்சாரம் மற்றும் சமூகப் பங்கேற்பை ஊக்குவிக்கும்.
- சிக்கிமின் உயரமான மலைப் பகுதிகளில் அமைந்துள்ள எல்லைப்புறக் கிராமங்களில் தொடர்பை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அமராவதி திட்டத்திற்கு உலக வங்கி நிதி

- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள அமராவதியின் முதற்கட்டப் பணிகளுக்காக உலக வங்கி 340 மில்லியன் டாலர்களை விடுவித்தது.
- ஏப்ரல் 2026 ஆம் ஆண்டில் கூடுதலாக 130-150 மில்லியன் டாலர்கள் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தத் திட்டம் உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் கூட்டு ஆதரவுடன் 1.6 பில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த நிதி உறுதிப்பாட்டுடன் செயல்படுத்தப் படுகிறது.

- இந்திய அரசும் இத்திட்டத்திற்காக சுமார் ₹15,000 கோடியை வழங்க ஒப்புதல் அளித்து உள்ளது.
- இது முடிவுகளுக்கான திட்ட (PforR) மாதிரியைப் பயன்படுத்தி அமராவதி ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் (AIUDP) கீழ் செயல்படுத்தப் படுகிறது.

## லாஞ்சியா சௌரா சமூகம்

- லாஞ்சியா சௌரா சமூகம் பாரம்பரிய உலோகக் காதணிகள் அணிதல், இசை, நடனம், இயற்கையை அடிப்படையாகக் கொண்ட மத நம்பிக்கைகள் மற்றும் பச்சை குத்துதல் போன்ற அதன் தனித்துவமான காட்சி மரபுகளைப் பாதுகாத்து வரும் அதே வேளையில் நவீன வாழ்க்கை முறைக்கும் ஏற்ப மாறி வருகிறது.
- இவர்கள் ஒடிசாவின் காடுகள் நிறைந்த மலைகளில், குறிப்பாக ராயகடா மற்றும் கஜபதி மாவட்டங்களில் முக்கியமாகக் காணப்படும் ஒரு 'குறிப்பாக பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினர் குழு' (PVTG) ஆவர்.
- இவர்கள் 'இடிடல்' எனப்படும் சௌரா ஓவியங்களுக்காக அறியப்படுகிறார்கள், இவை சடங்கு மற்றும் ஆன்மீக தொடர்புக்குப் பயன்படுத்தப்படும் சுவர் ஓவியங்களாகும்.
- இவர்களது வாழ்க்கை முறையானது மாற்றுச் சாகுபடி, காடு சார்ந்த வாழ்வாதாரம் மற்றும் வலுவான சமூக வாழ்க்கை ஆகியவற்றை உள்ளடக்கியது.

## கர்நாடகாவின் மாதவிடாய் விடுப்புக் கொள்கை

- மாதவிடாய் விடுப்புக் கொள்கையைச் சரத்து 21-இன் (வாழ்வதற்கான உரிமை) கீழ் அங்கீகரித்து, அனைத்துத் துறைகளிலும் அதனைக் கண்டிப்பாகச் செயல்படுத்துமாறு கர்நாடக உயர் நீதிமன்றம் மாநில அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.
- பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் 18-52 வயதுடைய பெண்களுக்கு மாதம் ஒரு நாள் மாதவிடாய் விடுப்பு வழங்குவதை இக்கொள்கை கட்டாயமாக்குகிறது.
- அமைப்புசார்ந்த மற்றும் அமைப்புசாராத் துறைகள் என இரண்டிலும் இக்கொள்கை சீராகச் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதல்களை வெளியிடுமாறு நீதிமன்றம் மாநில அரசுக்கு உத்தரவிட்டது.
- உயிரியல் வேறுபாடுகளை அங்கீகரிப்பது சரத்து 14-இன் கீழ் சமத்துவத்தை மீறுவதாகாது என்றும், மாறாக அது கண்ணியத்தையும் ஆரோக்கியத்தையும் ஆதரிக்கிறது என்றும் நீதிமன்றம் கூறியது.
- முன்மொழியப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டின் கர்நாடக மாதவிடாய் விடுப்பு மற்றும் சுகாதார மசோதா இக்கொள்கையை முறைப்படுத்தும்; மேலும், இது சட்டமாக்கப்பட்ட பிறகு தாமதமின்றி இதற்கான விதிகள் வகுக்கப்பட வேண்டும்.
- தொழிற்சாலைகள் சட்டம், கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், தோட்டத் தொழிலாளர் சட்டம், பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் வரும் தொழிலாளர்களுக்குத் தற்போதைக்கு இக்கொள்கை பொருந்தும்.

## விளையாட்டிற்கான மரபணு திட்டம்

- 2030 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னதாக, விளையாட்டு வீரர்களுக்கான மரபணு தரவுத் தளத்தை உருவாக்குவதற்காக குஜராத் மாநிலம் விளையாட்டு மரபணு திட்டத்தை தொடங்கியுள்ளது.
- மரபணு, உடலியல் மற்றும் செயல்திறன் தரவுகளை இணைத்து குஜராத் விளையாட்டு வீரர்களின் மரபணு தரவுத் தளத்தை உருவாக்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வேகம், சகிப்புத்தன்மை மற்றும் வலிமை போன்ற பண்புகளின் அடிப்படையில் திறமைகளை முன்கூட்டியே கண்டறிவதில் இது கவனம் செலுத்துகிறது.
- தடகளச் செயல்திறனில் மரபணுக் காரணிகள் 66% வரை பங்களிப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- காயங்களைத் தடுத்தல், தனிப் பயனாக்கப்பட்ட பயிற்சி மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு இது துணைபுரிகிறது.
- மரபணுப் பாகுபாடு, தனியுரிமைப் பிரச்சினைகள் மற்றும் விளையாட்டு வீரர்களின் தரவுகளை அறநெறிப் படி பயன்படுத்துதல் ஆகியவை இது தொடர்பான கவலைகள் ஆகும்.

## அதிகாரப்பூர்வ மொழிகள் அவசரச் சட்டம்- மேகாலயா

- மேகாலயா அதிகாரப்பூர்வ மொழிகள் அவசரச் சட்டம், 2026-க்கு, மேகாலய அரசு ஏப்ரல் 16 அன்று ஒப்புதல் அளித்தது.
- இது ஆங்கிலத்துடன் காசி மற்றும் காரோ மொழிகளுக்கும் அதிகாரப்பூர்வ மொழி அந்தஸ்தை வழங்குகிறது.
- முன்னதாக, 2005 ஆம் ஆண்டின் மேகாலயா மாநில மொழிச் சட்டத்தின் கீழ் ஆங்கிலம் மட்டுமே அதிகாரப்பூர்வ மொழியாக இருந்தது.
- இந்த அவசரச் சட்டம் அரசுப் பணிகள் மற்றும் அறிவிப்புகளை காசி, காரோ மற்றும் ஆங்கிலத்தில் வெளியிட அனுமதிக்கிறது.
- இது நிர்வாகத்திற்கான அணுகலை மேம்படுத்துவதோடு, உள்ளூர் மொழிகளில் தேர்வுகள் மற்றும் ஆள்சேர்ப்பையும் அனுமதிக்கக்கூடும்.
- இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் காசி மற்றும் காரோ மொழிகளை சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை இது ஆதரிக்கிறது.

## ஒன்றியப் பிரதேசங்களில் மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டம்

- ஜம்மு காஷ்மீர் மற்றும் புதுச்சேரி ஆகிய ஒன்றியப் பிரதேசங்களில் மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டம் 2026 ஆம் ஆண்டு 17 ஏப்ரல் முதல் அமலுக்கு வந்தது.
- அரசியலமைப்பு (106வது திருத்தம்) சட்டம், 2023, மக்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றங்களில் பெண்களுக்கு 1/3 இட ஒதுக்கீட்டை வழங்குகிறது.
- 2023 ஆம் ஆண்டில் தனித்தனி திருத்தச் சட்டங்கள் மூலம் ஜம்மு காஷ்மீர் மற்றும் புதுச்சேரிக்கும் இதே போன்ற விதிகள் உருவாக்கப்பட்டன.

- இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கான அரசிதழ் அறிவிப்பை மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) வெளியிட்டது.
- 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலான தொகுதி மறு சீரமைப்புக்குப் பிறகு இந்த இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வரும்.

## நீர் நடுநிலை ரயில்வே பணிமனை

- அகமதாபாத்தில் உள்ள கங்காரியா ரயில்பெட்டி பராமரிப்புப் பணிமனையானது, இந்தியாவின் முதல் நீர் நடுநிலை ரயில்வே பணிமனையாக மாறியுள்ளது.
- இது மறுபயன்பாடு மற்றும் சுத்திகரிப்பு அமைப்புகள் மூலம் தினமும் சுமார் 1.60 லட்சம் லிட்டர் தண்ணீரைச் சேமிக்கிறது.
- இந்தப் பணிமனை தாவரங்களைப் பயன்படுத்தி தண்ணீரைச் சுத்தப்படுத்தும் இயற்கையான செயல்முறையான தாவர வழிச் சுத்திகரிப்பு முறையைப் பயன்படுத்தி கழிவுநீரைச் சுத்திகரிக்கிறது.
- ரயில்வே செயல்பாடுகளில் மீண்டும் பயன்படுத்துவதற்காக, வடிகட்டுதல் மற்றும் புறஊதா கதிர் கிருமி நீக்கம் மூலம் தண்ணீர் மேலும் சுத்திகரிக்கப்படுகிறது.
- இந்த முன்னெடுப்பு நீர் பாதுகாப்பிற்கு ஆதரவளிக்கிறது, நன்னீர் பயன்பாட்டைக் குறைத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த ரயில்வே செயல்பாடுகளை ஊக்குவிக்கிறது.

## கர்நாடகா ரோஹித் வெமுலா மசோதா 2026

- கர்நாடக அமைச்சரவை ரோஹித் வெமுலா (பாகுபாடு, ஒதுக்குதல் அல்லது அநீதி தடுப்பு) (கல்வி மற்றும் கண்ணியத்திற்கான உரிமை) மசோதா, 2026-க்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியின (ST) மாணவர்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாப்பதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கர்நாடகாவில் உள்ள பொது, தனியார், தொண்டு மற்றும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களை உள்ளடக்கியது.
- மாணவர் சேர்க்கை மறுப்பு, சாதிய ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் நிதி ரீதியான துன்புறுத்தல் உட்பட சுமார் 30 வகையான பாகுபாடுகளை இந்த மசோதா பட்டியலிடுகிறது.
- விதிமீறல்களுக்கு சிறைத்தண்டனை மற்றும் ₹10 லட்சம் வரையிலான அபராதம் உள்ளிட்ட தண்டனைகளை இது வழங்குகிறது.
- கல்வி நிறுவனங்களில் நடக்கும் பாகுபாடு தொடர்பான புகார்களுக்குத் தீர்வு காண விசாரணை மற்றும் மேல்முறையீட்டு வழிமுறைகளையும் இந்தச் சட்டம் நிறுவுகிறது.

## பஞ்சாப் சமய அவமதிப்புத் தடுப்புச் சட்டம் 2026

- ஜாகத் ஜோத் ஸ்ரீ குரு கிரந்த் சாஹிப் சத்கார் (திருத்த) மசோதா, 2026க்கு பஞ்சாப் ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார்.

- இந்த மசோதா 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று பஞ்சாப் சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- இது ஸ்ரீ குரு கிரந்த் சாஹிப்பை அவமதிப்பதை கடுமையான சட்டக் கட்டமைப்பின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாக்குகிறது.
- இத்தகையக் குற்றங்களுக்கு ஆயுள் தண்டனை மற்றும் ₹25 லட்சம் வரை அபராதம் உள்ளிட்ட தண்டனைகளை இது வழங்குகிறது.
- இந்தச் சட்டம் முந்தைய ஜாகத் ஜோத் ஸ்ரீ குரு கிரந்த் சாஹிப் சத்கார் சட்டம், 2008-ஐ வலுப்படுத்துகிறது.
- அவமதிப்புச் சம்பவங்களைத் தடுப்பதையும், ஸ்ரீ குரு கிரந்த் சாஹிப்பின் சமய புனிதத்தைப் பாதுகாப்பதை உறுதி செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஒடிசாவில் 3D சில்லு பேக்கேஜிங்/பொதிகட்டுதல் அலகு

- இந்தியாவின் முதல் மேம்பட்ட 3D குறைக்கடத்தி சில்லு பேக்கேஜிங்/பொதிகட்டுதல் அலகிற்கான அடிக்கல் நாட்டு விழா ஒடிசாவில் நடைபெறவுள்ளது.
- இந்த அலகு புவனேஸ்வரில் கண்ணாடியின் அடி மூலக்கூறு அடிப்படையிலான மேம்பட்ட பேக்கேஜிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமைக்கப்படவுள்ளது.
- இது இந்தியாவில் 3D பன்முக ஒருங்கிணைப்பை (மேம்பட்ட சில்லு அடுக்கல் தொழில் நுட்பம்) அறிமுகப்படுத்தும்.
- குறைக்கடத்தி உற்பத்தி மற்றும் மேம்பட்ட பேக்கேஜிங்/பொதிகட்டுதல் அலகுகள் ஆகிய இரண்டையும் கொண்ட இந்தியாவின் முதல் மாநிலமாக ஒடிசா திகழ்கிறது.

## தங்கச் சுரங்கத் திட்டம்

- இந்தியாவின் முதல் பெரிய அளவிலான தனியார் தங்கச் சுரங்கத் திட்டமானது 2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆந்திரப் பிரதேசத்தில் தனது செயல்பாடுகளைத் தொடங்கவுள்ளது.
- இந்த ஜொன்னகிரி தங்கத் சுரங்கத் திட்டமானது கர்னூல் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இது தனியார் துறைப் பங்குதாரர்களின் ஆதரவுடன் ஜியோமைசூர் சர்வீசஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.
- அடுத்த 15 ஆண்டுகளுக்கு வருடத்திற்கு சுமார் 1,000 கிலோகிராம் தங்கத்தை இது உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்தில் சுமார் 13.1 டன் தங்க வளங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, மேலும் இது 42.5 டன் வரை கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது.

## சந்தை தலையீட்டுத் திட்டம் - உருளைக்கிழங்கு கொள்முதல்

- 2025-26 ஆம் ஆண்டிற்கான சந்தை தலையீட்டுத் திட்டத்தின் (MIS) கீழ் உத்தரப் பிரதேச மாநிலத்தில் உருளைக்கிழங்கு கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

- உருளைக்கிழங்கிற்கான கொள்முதல் விலை கிலோவுக்கு ₹6.5 ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இம்மாநிலத்தில் சுமார் 20 லட்சம் மெட்ரிக் டன் உருளைக்கிழங்கு கொள்முதல் செய்யப்படவுள்ளது.
- இந்திய அரசு இதற்கு சுமார் ₹203.15 கோடி நிதியுதவி வழங்கும்.
- அதிகப்படியான விநியோகம் அல்லது பிற காரணிகளால் சந்தை விலைகள் வீழ்ச்சி அடையும் போது விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தில் கொண்டைக்கடலை மற்றும் கர்நாடகாவில் துவரம் பருப்பு கொள்முதல் செய்வதும் இதில் அடங்கும்.

## ஒடிசாவில் கடல்சார் இடஞ்சார்ந்த திட்டம்

- கடல்சார் இடஞ்சார்ந்த திட்டத்தை (MSP) தொடங்கிய முதல் மாநிலமாக ஒடிசா உருவெடுத்துள்ளது.
- MSP என்பது மீன்பிடித்தல், சுற்றுலா மற்றும் பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளுக்காக கடல் பகுதிகளை வரைபடமாக்கி நிர்வகிப்பதற்கான ஒரு கருவியாகும்.
- இத்திட்டம் பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை சமநிலைப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாநில அரசு, புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய கடலோர ஆராய்ச்சி மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இது நிலையான கடல் மேலாண்மை குறித்த இந்தியா-நார்வே ஒத்துழைப்பின் ஒரு பகுதியாகும்.

## எழுச்சிமிகு கிராமங்கள் திட்டம்-II - கதுவா கிராமங்கள்

- ஜம்மு காஷ்மீரின் கதுவாவில் உள்ள ஆறு எல்லைக் கிராமங்கள் துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.
- சர்வதேச எல்லையில் அமைந்துள்ள போபியா, கத்யலா, கஜ்னால், கரோல் கிருஷ்ணா, ரத்துவா மற்றும் குஜ்ஜர் சக் ஆகியவையே தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களாகும்.
- இப்பகுதிகளில் சாலைகள், சுகாதாரம், கல்வி, மின்சாரம் மற்றும் குடிநீர் போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நலத்திட்டங்கள் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைவதையும், தகுதியான அனைத்து குடும்பங்களுக்கும் முழுமையாகக் கிடைப்பதையும் இது நோக்கமாக / மையமாகக் கொண்டுள்ளது.
- தொலைதூர மற்றும் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த எல்லைக் கிராமங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசால் நிதியுதவி செய்யப்படும் திட்டம் இதுவாகும்.
- இது ஜம்மு காஷ்மீரில் மக்கள் இடம்பெயர்வதைக் குறைக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் உதவுகிறது.

### காளான் உற்பத்தித் திட்டம் 2026

- ஆந்திரப் பிரதேச மாநிலமானது ₹13,000 கோடி முதலீட்டில் தனது முதல் காளான் உற்பத்தித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- அம்மாநிலத்தை இந்தியாவின் மிகப்பெரிய காளான் உற்பத்தியாளராக மாற்றுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பீகாரின் தற்போதைய உற்பத்தியை விட அதிகமாக, ஆண்டுக்கு 67,500 டன் உற்பத்தியை எட்ட இது இலக்காகக் கொண்டுள்ளது.
- மாநிலம் முழுவதும் சுமார் 1.62 லட்சம் காளான் வளர்ப்பு மையங்கள் அமைக்கப்பட உள்ளன.
- வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காகச் சிறு விவசாயிகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் (SHGs) மீது இத்திட்டம் கவனம் செலுத்துகிறது.
- இத்திட்டத்தில் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காக, அரசாங்கம் சுமார் 40% மானிய ஆதரவை வழங்கும்.

### விர்லி கண்டார் அகழ்வாராய்ச்சி

- விர்லி கண்டாரில் நடைபெற்ற ஒரு புதிய அகழ்வாராய்ச்சியானது தனித்துவமான அடக்கக் கட்டமைப்புகள் மற்றும் தொல்பொருட்களை வெளிப்படுத்தியுள்ளது.
- இது மகாராஷ்டிராவின் பண்டாரா மாவட்டத்தில் அமைந்துள்ள 2,500 ஆண்டுகள் பழமையான பெருங்கற்கால அடக்கத் தளமாகும்.
- கற்திட்டைகளில் நடைபெறும் அடக்க முறைகளில் இருந்து வேறுபட்டதாக இந்த அகழ்வாராய்ச்சியில் கல் வட்டங்கள் மற்றும் நடுகற்கள் கொண்ட கலப்பு கட்டமைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- நிலைத்தன்மைக்காக கருப்பு/கரிசல் மண்ணின் மீது ஒரு முறையான வரிசையில் பானைகள் தலைகீழாக வைக்கப்பட்டிருந்தன.
- செப்புக் கழுத்தணி, இரும்புக் கருவிகள், கார்னிலியன் மணிகள், தங்கக் காதணி மற்றும் எலும்பு எச்சங்கள் ஆகியவை இங்கு கிடைத்த தொல்பொருட்களில் அடங்கும்.
- கி.மு. 500-ஐச் சேர்ந்ததாகக் கருதப்படும் இந்த இடத்தில், கி.மு. 1000 முதல் கி.பி. 300 வரையிலான காலகட்டத்தின் கலாச்சாரச் சான்றுகள் கிடைத்துள்ளன.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### முதல் பால் புதுமையரான நாடாளுமன்ற உறுப்பினர் - மேனகா குருசாமி

- இந்தியாவின் முதல் வெளிப்படையான பால் புதுமையர் நாடாளுமன்ற உறுப்பினராக (MP) மேனகா குருசாமி ஆகியுள்ளார்.
- இவர் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 அன்று மாநிலங்களவை உறுப்பினராகப் பதவி ஏற்றார்.
- மேற்கு வங்காளத்தில் இருந்து அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் (AITC) ஆதரவுடன் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவர் இந்திய உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் ஆவார்.
- 2018-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 377-ஐ ரத்து செய்து, ஓரினச் சேர்க்கையை குற்றமற்றதாக்கிய சட்டக் குழுவில் இவர் இடம் பெற்றிருந்தார்.

## மொஹ்சினா கித்வாய் மறைவு

- மூத்த காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான மொஹ்சினா கித்வாய், தனது 94-வது வயதில் நொய்டாவில் காலமானார்.
- இவர் தொழிலாளர் நலன், சுகாதாரம் மற்றும் குடும்ப நலன், ஊரக வளர்ச்சி, போக்குவரத்து மற்றும் நகர்ப்புற வளர்ச்சி போன்ற துறைகளில் மத்திய அமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.
- 1960 ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேச சட்ட மேலவை உறுப்பினராகத் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய இவர், பின்னர் மாநில அமைச்சராகவும் பதவி வகித்தார்.
- 1978 ஆம் ஆண்டில் ஆசம்கர் தொகுதியிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார் என்பதோடு மேலும் மாநிலங்களவை உறுப்பினராகவும் அவர் பணியாற்றி உள்ளார்.
- இந்தியத் தேசிய காங்கிரஸின் மூத்த தலைவரான இவர், காங்கிரஸ் செயற்குழு (CWC) மற்றும் மத்திய தேர்தல் குழு ஆகியவற்றில் உறுப்பினராக இருந்தார்.
- சட்ட மேலவை, சட்டப்பேரவை, மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய நான்கு அவைகளிலும் பணியாற்றிய ஒரு சில தலைவர்களில் இவரும் ஒருவராவார்.

## பாடகி ஆஷா போஸ்லே மறைவு

- ஆஷா போஸ்லே தனது 92-வது வயதில் மும்பையில் காலமானார்.
- அவர் 20-க்கும் மேற்பட்ட மொழிகளில் 12,000-க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியதன் மூலம் உலகின் மிக அதிகப் பாடல்களைப் பாடிய பாடகர்களில் ஒருவராக அவர் திகழ்கிறார்.
- பன்முகத்தன்மைக்கு பெயர் பெற்ற அவர், கிளாசிக்கல், பாப், கேபரே மற்றும் கசல்
- இசைத்துறைக்கு அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக அவருக்கு பத்ம விபூஷன் மற்றும் தாதாசாஹேப் பால்கே விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

## மாநிலங்களவை துணைத் தலைவர் – ஹரிவன்ஷ்

- பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த (BJP) ஹரிவன்ஷ், 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 அன்று தொடர்ந்து மூன்றாவது முறையாக மாநிலங்களவையின் துணைத் தலைவராக போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- முதல்முறையாக, ஒரு நியமன நாடாளுமன்ற உறுப்பினர் இந்தப் பதவியை வகிக்கிறார்.
- மாநிலங்களவையில் ஒரு அரிய ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இவரது தேர்தல் போட்டியின்றி அமைந்தது.

## சம்ரித் கிராம் முன்னெடுப்பு – WSIS விருது

- சம்ரித் கிராம் முன்னெடுப்பானது 2026 ஆம் ஆண்டிற்கான தகவல் சமூகத்திற்கான உலக உச்சி மாநாட்டின் (WSIS) விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- இது தொலைத்தொடர்புத் துறையால் (DoT) பாரத்நெட் அகலப்பட்டை சேவையைப் பயன்படுத்தி தொடங்கப்பட்டது.

- ❖ இது கிராமப்புறங்களில் உள்ள சம்ரித்தி கேந்திரங்கள் மூலமாக அனைத்து டிஜிட்டல் சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்குகிறது.
- ❖ தொலைதூர மருத்துவம், கல்வி, மின்-ஆளுமை மற்றும் திறன்மிகு வேளாண்மை ஆகியவை இச்சேவைகளில் அடங்கும்.
- ❖ இது கிராமப்புற டிஜிட்டல் இடைவெளியைக் குறைப்பதையும், கிராமப்புற சேவைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்ப (ICT) திட்டங்களுக்காக சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியத்தால் (ITU) WSIS விருதுகள் வழங்கப்படுகின்றன.

## பிரேக் த்ரூ விருதுகள் 2026

- ❖ "அறிவியலின் ஆஸ்கார்" என்று அழைக்கப்படும் 2026 ஆம் ஆண்டிற்கான பிரேக் த்ரூ விருதுகளை, பிரேக் த்ரூ பரிசு அறக்கட்டளை அறிவித்துள்ளது.
- ❖ செர்ஜி பிரின் மற்றும் மார்க் ஜுக்கர்பெர்க் போன்ற தொழில்நுட்பத் தலைவர்களால் இந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டது.
- ❖ வாழ்க்கை அறிவியல் பிரிவில் ஜீன் பென்னட், கேத்தரின் ஏ. ஹை, ஆல்பர்ட் மாகுவேர், ஸ்டூவர்ட் ஓர்கின் மற்றும் ஸ்வீ லே தீன்; ரோசா ராட்மேக்கர்ஸ் மற்றும் பிரையன் ட்ரேனர் ஆகியோர் விருது வென்றுள்ளனர்.
- ❖ கணிதத்திற்கான விருது ஃபிராங்க் மெர்லிற்கும்; இயற்பியலுக்கான விருது CERN புரூக்ஹேவன் மற்றும் ஃபெர்மிலாப் ஆய்வகத்தில் உள்ள Muon g-2 குழுக்களுக்கும் வழங்கப்பட்டது.
- ❖ அமெரிக்காவின் சாண்டா மோனிகாவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சிறப்புப் பரிசானது டேவிட் கிராஷிற்கு வழங்கப்பட்டது.

## கோல்ட்மேன் சுற்றுச்சூழல் விருது 2026

- ❖ கோல்ட்மேன் சுற்றுச்சூழல் அறக்கட்டளையானது 2026 ஆம் ஆண்டிற்கான கோல்ட் மேன் சுற்றுச்சூழல் விருதை முதல் முறையாக முழுவதும் பெண்களைக் கொண்ட குழுவிற்கு வழங்கியுள்ளது.
- ❖ "பசுமை நோபல் பரிசு" என்று அழைக்கப்படும் இந்த விருது, 1989 ஆம் ஆண்டு கோல்ட்மேன் சுற்றுச்சூழல் அறக்கட்டளையால் தொடங்கப்பட்டது.
- ❖ இந்த விருது உலகின் ஆறு பிராந்தியங்களைச் சேர்ந்த அடிமட்டச் சுற்றுச்சூழல் ஆர்வலர்களைக் கௌரவிக்கிறது.
- ❖ இரோரோ டான்ஷி (நைஜீரியா), போரிம் கிம் (தென் கொரியா), சாரா ஃபின்ச் (ஐக்கிய பேரரசு), தியோனிலா ரோகா மேட்போப் (பப்புவா நியூ கினியா), அலன்னா அக்காக் ஹர்லி (அமெரிக்கா) மற்றும் யுவெலிஸ் மோரல்ஸ் பிளாங்கோ (கொலம்பியா) ஆகிய ஆறு பெண்கள் இந்த விருதை வென்றுள்ளனர்.
- ❖ பருவநிலை மாற்றம், பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பழங்குடியினரின் உரிமைகளைப் பாதுகாப்பது ஆகிய தளங்களில் இவர்கள் ஆற்றிய பணிகளை இவ்விருது அங்கீகரிக்கிறது.

## நாதெண்ட்லா பாஸ்கர் ராவ் மறைவு

- நாதெண்ட்லா பாஸ்கர் ராவ் தனது 90வது வயதில் ஹைதராபாத்தில் காலமானார்.
- ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்த அவர் 1984 ஆம் ஆண்டில் சிறிது காலம் அப்பதவியில் பணியாற்றினார்.
- அவர் 1982 ஆம் ஆண்டில் என்.டி. ராமராவ் தலைமையிலான தெலுங்கு தேசக் கட்சியின் (TDP) ஸ்தாபன உறுப்பினராக இருந்தார்.
- அவர் தெலுங்கானாவின் கம்மம் தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினர் (MLA), அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் (MP) ஆகவும் பணியாற்றினார்.
- 1984 ஆம் ஆண்டில் இவரது பதவிக் காலம் பெரும் அரசியல் மற்றும் அரசியலமைப்பு நெருக்கடிக்கு வழி வகுத்ததோடு அதன் பிறகு என்.டி. ராமராவ் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

## UNIDO GEM விருது - குண்டூர்

- குண்டூர் மாநகராட்சி (GMC) 2026 ஆம் ஆண்டிற்கான 4-வது பாலின சமத்துவ அணி திரட்டல் (GEM) விருதை வென்றுள்ளது.
- இந்த விருதினை வியன்னாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம் (UNIDO) வழங்கியது.
- குப்பைகளைச் சேகரிப்பதற்காக 200-க்கும் மேற்பட்ட பெண்களை மின்சார ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணியமர்த்திய குண்டூர் மாநகராட்சியின் முன்னெடுப்பை இந்த விருது அங்கீகரித்துள்ளது.
- சுற்றுச்சூழலுக்கு மாசில்லாத (பூஜ்ஜிய உமிழ்வு) கழிவு மேலாண்மையை ஊக்குவிக்கும் வகையில், 'நிலையான நகரங்கள் ஒருங்கிணைந்த அணுகுமுறை முன்னோடித் திட்டத்தின்' (SCIAP) கீழ் இது செயல்படுத்தப்படுகிறது.
- மேலும், 2025-26 ஆம் ஆண்டில் சிறந்த முறையில் சொத்துவரி வசூல் செய்ததற்காக குண்டூர் மாநகராட்சி மாநில அளவிலான பாராட்டையும் பெற்றுள்ளது.

## உலகளாவிய அங்கீகாரம் - இந்திய சீஸ்/பாலாடைக்கட்டி

- சாவ் பாலோவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான முண்டியல் டோ குய்ஜோ டோ பிரேசில் போட்டியில் விருதுகளை வென்ற இந்திய சீஸ்/பாலாடைக்கட்டி தயாரிப்பாளர்களுக்கு இந்தியப் பிரதமர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.
- இப்போட்டியில் இந்தியா 1 சூப்பர் தங்கம், 2 தங்கம் மற்றும் 1 வெள்ளிப் பதக்கங்களை வென்று சிறப்பான தொடக்கத்தைப் பதிவு செய்துள்ளது.
- உயரிய விருதான சூப்பர் தங்கத்தை எலிஃப்தெரியா குல்மார்க் வென்றது, அதேசமயம் லடாக்கின் யாக் சுர்பி-சாஃப்ட் மற்றும் எலிஃப்தெரியா ப்ளூனோஸ்ட் ஆகியவை தங்கத்தையும், எலிஃப்தெரியா காளி மிரி வெள்ளியையும் வென்றன.
- 30க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்துகொண்ட இந்தப் போட்டியில், சர்வதேச நிபுணர்களால் சுவை, அமைப்பு, நறுமணம் மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடுகள் செய்யப்பட்டன.

# விளையாட்டுச் செய்திகள்

## 2025-ஆம் ஆண்டின் சிறந்த பாரா வில்வித்தை வீராங்கனை

- சீத்தல் தேவி தனது சிறந்த செயல்பாட்டிற்காக உலக வில்வித்தை அமைப்பால் 2025-ஆம் ஆண்டின் சிறந்த பாரா வில்வித்தை வீராங்கனையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- இவர் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த 19 வயது வில்வித்தை வீராங்கனை ஆவார்.
- தென் கொரியாவின் குவாங்ஜுவில் நடைபெற்ற உலக பாரா வில்வித்தை சாம்பியன் ஷிப்பில் தங்கம் வென்ற கைகளற்ற முதல் பெண் வில்வித்தை வீராங்கனை என்ற பெருமையை இவர் பெற்றார்.
- ஒரே சாம்பியன்ஷிப்பில் மூன்று பதக்கங்களை (தங்கம், வெள்ளி, வெண்கலம்) வென்று சர்வதேச அளவில் தனது நிலையான திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.
- இவர் பாரிஸ் பாராலிம்பிக்கில் வெண்கலப் பதக்கத்தையும், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களையும் வென்றுள்ளார்.

## கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகள் 2026

- சத்தீஸ்கரில் நடைபெற்ற 'கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகளின்' பதக்கப் பட்டியலில் கர்நாடகா ஒட்டுமொத்த சாம்பியனாக உருவெடுத்தது.
- பழங்குடியினச் சமூகங்களிடையே விளையாட்டை ஊக்குவிக்கவும், இந்தியா முழுவதிலும் உள்ள பூர்வீக விளையாட்டுத் திறமைகளை அடையாளம் கண்டு வெளிப் படுத்தவும் இப்போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- கர்நாடகா 23 தங்கம், 8 வெள்ளி மற்றும் 7 வெண்கலப் பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது.
- ஒடிசா 21 தங்கம், 15 வெள்ளி மற்றும் 21 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தையும், ஜார்க்கண்ட் 16 தங்கப் பதக்கங்களுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

## ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் 2026

- கிர்கிஸ்தான் நாட்டின் பிஷ்கெக்கில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் ஈரான் முதலிடத்தைப் பிடித்த நிலையில் இந்தியா 17 பதக்கங்களுடன் 5வது இடத்தைப் பிடித்தது.
- சாம்பியன்ஷிப் போட்டியின் 22-வது பதிப்பு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 முதல் 12 வரை நடைபெற்றது.
- இந்தியா மொத்தம் 2 தங்கம், 7 வெள்ளி மற்றும் 8 வெண்கலப் பதக்கங்களை வென்றது.
- சுஜீத் கல்கல் மற்றும் அபிமன்யு மாண்ட்வால் ஆகியோர் ஆண்கள் ஃப்ரீஸ்டைல் 65 கிலோ மற்றும் 70 கிலோ எடைப்பிரிவுகளில் தங்கம் வென்றனர்.
- ஆண்கள் ஃப்ரீஸ்டைல் அணி 7 பதக்கங்களையும், கிரிகோ-ரோமன் அணி 5 பதக்கங்களையும், மகளிர் அணி 5 பதக்கங்களையும் வென்றன.

## ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் 2026

- ❖ மங்கோலியாவின் உலான்பாதரில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான ஆசிய குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 16 பதக்கங்களுடன் 2-வது இடத்தைப் பிடித்த நிலையில் கஜகஸ்தான் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.
- ❖ இந்தியா மொத்தம் 5 தங்கம், 3 வெள்ளி மற்றும் 8 வெண்கலப் பதக்கங்களை வென்றது.
- ❖ ஆடவருக்கான 50 கிலோ எடைப்பிரிவில் விஸ்வநாத் சுரேஷ் தங்கம் வென்றார், இதன் மூலம் ஆடவர் ஆசியப் பட்டத்திற்கான இந்தியாவின் 5 ஆண்டு கால காத்திருப்பு முடிவுக்கு வந்தது.
- ❖ ஆடவருக்கான 60 கிலோ எடைப்பிரிவில் சச்சின் சிவாச் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- ❖ இந்திய வீராங்கனைகள் 4 தங்கம் உட்பட 10 பதக்கங்களை வென்றனர்.
- ❖ இந்தியா அதிக மொத்தப் பதக்கங்களை வென்றிருந்தாலும், கஜகஸ்தானை விட குறைவான தங்கப் பதக்கங்களை வென்றதால் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

## OmegaBall விளையாட்டு அறிமுகம்

- ❖ சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT Madras), 2026 ஆம் ஆண்டில் மூன்று அணிகள் விளையாடும் புதிய கால்பந்து வடிவமான OmegaBall விளையாட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்தியாவில் தேசிய அளவிலான ஒமேகாபால் கிளப்பை உருவாக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
- ❖ OmegaBall என்பது மூன்று இலக்குகளைக் கொண்ட ஒரு வட்ட வடிவ மைதானத்தில், மூன்று அணிகள் இணைந்து விளையாடும் ஒரு கால்பந்து விளையாட்டாகும்.
- ❖ ஒவ்வொரு அணியும் ஒரே நேரத்தில் இரண்டு இலக்குகளைத் தாக்கி, ஒரு இலக்கைப் பாதுகாக்கும்.
- ❖ இந்த வடிவம் விளையாட்டின் வேகம், கோல் அடிப்பதற்கான வாய்ப்புகள் மற்றும் தொடர்ச்சியான ஆட்டம் ஆகியவற்றை அதிகரிக்கிறது.
- ❖ அமெரிக்கா, பிரேசில் மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகள் போன்ற நாடுகளில் OmegaBall ஏற்கனவே விளையாடப்பட்டு வருகிறது.

## லாரியஸ் உலக விளையாட்டுப் போட்டிக்கான விருதுகள் 2026

- ❖ 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சிறந்த விளையாட்டுப் போட்டிகளின் சிறப்புகளைக் கௌரவிப்பதற்காக, 2026 ஆம் ஆண்டிற்கான லாரியஸ் உலக விளையாட்டுப் போட்டிக்கான விருதுகள் ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நடைபெற்றன.
- ❖ கார்லோஸ் அல்காரஸ் (டென்னிஸ்) 'சிறந்த விளையாட்டு வீரர்' விருதையும், அரினா சபலென்கா (டென்னிஸ்) 'சிறந்த விளையாட்டு வீராங்கனை' விருதையும், பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன் (கால்பந்து கிளப்) 'சிறந்த அணி' விருதையும் வென்றன.
- ❖ லாண்டோ நோரிஸ் (F1) 'இந்த ஆண்டின் சிறந்த திருப்புமுனை' வீரர் (Breakthrough of the Year) விருதையும், ரோரி மெக்லிராய் (கோல்ஃப்) 'சிறந்த மறுபிரவேசம்' (Comeback of the Year) விருதையும் வென்றனர்.

- லாமைன் யமல் (கால்பந்து) 'சிறந்த இளம் விளையாட்டு வீரர்' விருதையும், சோலி கிம் (ஸ்னோபோர்டிங்) 'சிறந்த ஆக்‌ஷன் விளையாட்டு வீரர்' விருதையும் வென்றனர்.
- கேப்ரியல் அரௌஜோ 'மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்' விருதையும், டோனி குரூஸ் 'விளையாட்டு உத்வேகம்' விருதையும், நதியா கொமனெசி 'வாழ்நாள் சாதனையாளர்' விருதையும் பெற்றனர்.
- இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 'சிறந்த அணி' விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் விருது கிடைக்கவில்லை .

### ISSF ஜூனியர் உலகக் கோப்பை 2026

- எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்ற ISSF ஜூனியர் உலகக் கோப்பை 2026 போட்டியில் பதக்கப்பட்டியலில் இந்தியா முதலிடத்தைப் பிடித்தது.
- இந்தியா 5 தங்கம், 6 வெள்ளி மற்றும் 5 வெண்கலம் என மொத்தம் 16 பதக்கங்களை வென்றது.
- 50 மீட்டர் ரைபிள் 3 நிலைகள் பிரிவில் ஹேமந்த் பர்மன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- டிராப் கலப்பு அணிகள் பிரிவிலும் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.
- அடுத்த முக்கிய நிகழ்வான ISSF ஜூனியர் உலக சாம்பியன்ஷிப் போட்டி 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சுல் (Suhl) நகரில் நடைபெற உள்ளது.

## முக்கிய தினங்கள்

### சர்வதேச கழிவுகளற்ற தினம் 2026 – மார்ச் 30

- சிறந்த கழிவு மேலாண்மையை ஊக்குவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) மற்றும் UN-Habitat ஆகியவற்றால் இந்த தினம் ஏற்பாடு செய்யப் பட்டு உள்ளது.
- கழிவு உற்பத்தியைக் குறைப்பதையும், நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதையும் இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும், உலகம் சுமார் 2.1 முதல் 2.3 பில்லியன் டன் வரை நகர்புற திடக் கழிவுகளை உற்பத்தி செய்யும் நிலையில் இது 2050-ஆம் ஆண்டிற்குள் 3.8 பில்லியன் டன்களாக உயரக்கூடும்.
- 2022-ஆம் ஆண்டில் சுமார் 1 பில்லியன் டன் உணவு வீணானது என்பதோடு இது மொத்த உணவில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்காகும்.
- உணவு வீணாதல் உலகளாவியப் பசுமை இல்ல வாயு (GHG) வெளியேற்றத்தில் 10% வரையிலும், மீத்தேன் வெளியேற்றத்தில் சுமார் 14% வரையிலும் காரணமாகிறது.

### உத்கல் திவாஸ் 2026 - ஏப்ரல் 01

- ஒடிசா மாநிலம் உருவானதைக் குறிக்கும் வகையில் உத்கல் திவாஸ் எனும் ஒடிசா நிறுவன தினம் கொண்டாடப்படுகிறது.
- பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த பல்வேறு மாகாணங்களில் இருந்து ஒடியா மொழி பேசும் பகுதிகளைப் பிரித்து, 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று ஒடிசா உருவாக்கப்பட்டது.

- ஒடியா மொழி மற்றும் கலாச்சார அடையாளத்தைப் பாதுகாப்பதற்காக, இந்தியாவில் மொழியியல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட முதல் மாநிலம் இதுவாகும்.
- தனி மாநிலத்திற்கான இந்த இயக்கத்தை மதுசூதன் தாஸ் மற்றும் கோபாபந்து தாஸ் போன்ற தலைவர்கள் முன்னெடுத்தனர்.
- தொடக்கத்தில், இம்மாநிலத்தில் கட்டக், பூரி, பாலேஸ்வர், சம்பல்பூர், கோராபுட் மற்றும் கஞ்சாம் ஆகிய ஆறு மாவட்டங்கள் மட்டுமே இருந்தன.

## இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நிறுவன தினம் 2026 - ஏப்ரல் 01

- இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934-இன் கீழ் 1935 ஆம் ஆண்டு இது நிறுவப்பட்டது.
- இது பணவீக்கம், பண விநியோகம் மற்றும் வங்கி அமைப்பை நிர்வகிக்கும் இந்தியாவின் மத்திய வங்கியாகும்.
- இதன் தலைமையகம் 1937-இல் கொல்கத்தாவிலிருந்து மும்பைக்கு மாற்றப்பட்டது மற்றும் 1949-இல் இது தேசியமயமாக்கப்பட்டது.
- இது பணவியல் கொள்கை, நாணய வெளியீடு மற்றும் அந்நியச் செலாவணி மேலாண்மை (FEMA - அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம்) போன்ற பணிகளைச் செய்கிறது.
- மோசடிகளைக் கண்டறிவதற்காக இது மின்னணு காசோலைகள் மற்றும் MuleHunter.AI ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

## சர்வதேச கண்ணிவெடி விழிப்புணர்வு தினம் 2026 - ஏப்ரல் 04

- இந்தத் தினம் 2005 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அறிவிக்கப் பட்டு, 2006 ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
- நிலக் கண்ணிவெடிகளின் ஆபத்துகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதும், மக்களைப் பாதுகாப்பதற்காக அவற்றை அகற்றுவதற்கு ஆதரவளிப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.
- 'கண்ணிவெடி நடவடிக்கை' என்பது கண்ணிவெடிகளைக் கண்டறிந்து அகற்றுதல், பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவுதல் மற்றும் நிலத்தைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்தல் போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கியது.
- கண்ணிவெடிகள், வெடிக்காத வெடிபொருட்கள் (UXO) மற்றும் மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் கருவிகள் (IEDs) போன்றவை மிகவும் ஆபத்தானவை; இவை போர்கள் முடிந்த பின்னரும் பொதுமக்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடியவை அல்லது உயிரைப் பறிக்கக்கூடியவை.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Invest in Peace; Invest in Mine Action" என்பதாகும்.

## உலக சுகாதார தினம் 2026 - ஏப்ரல் 07

- இந்த நாள் அறிவியலில் நம்பிக்கையை மேம்படுத்துவதையும், சான்றுகள் அடிப்படையிலான சுகாதார முடிவுகளை எடுப்பதை ஊக்குவிப்பதையும், ஆரோக்கியமான எதிர்காலத்திற்காக அறிவியல் சார்ந்த தீர்வுகளை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பால் (WHO) ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நாள், ஆரோக்கியத்திற்கான அறிவியல் ஒத்துழைப்பை மேம்படுத்தும் ஒரு வருடம் நீடிக்கும் உலகளாவியப் பிரச்சாரத்தைத் தொடங்கியது.

- இந்த பிரச்சாரம் மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் மற்றும் சுற்றுச்சூழலின் ஆரோக்கியத்தை இணைக்கும் "One Health approach" என்பதில் கவனம் செலுத்துகிறது.
- சர்வதேச ஒரே ஆரோக்கிய உச்சி மாநாடு (G7 தலைமையின் கீழ் பிரான்ஸால் நடத்தப் படுகிறது) மற்றும் உலக சுகாதார அமைப்பு ஒத்துழைப்பு மையங்களின் உலகளாவிய மன்றம் (2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 முதல் 9 வரை) ஆகிய இரண்டு முக்கிய நிகழ்வுகள் இப்பிரச்சாரத்தை ஆதரிக்கின்றன.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Together for health. Stand with science" என்பதாகும்.

## 1994 ருவாண்டா இனப்படுகொலை குறித்த சர்வதேச நினைவு நாள் 2026 - ஏப்ரல் 07

- இந்த நாள் பலியானவர்களை நினைவு கூர்வது, கல்வி மற்றும் உரையாடல் மூலம் அமைதியை மேம்படுத்துவது மற்றும் எதிர்கால இனப் படுகொலைகளைத் தடுப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ருவாண்டாவில் 1994 ஆம் ஆண்டில் நடந்த இனப்படுகொலையில் பலியானவர்களை நினைவு கூரும் வகையில் 2003 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் (UNGA) இந்த நாள் நிறுவப்பட்டது.
- இந்த இனப்படுகொலையானது 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 அன்று ஹுட்டு இன தலைமையிலான அரசாங்கத்தால் சிறுபான்மையினரான டுட்சி மக்கள் இலக்கு வைக்கப் பட்ட போது தொடங்கியது.
- சுமார் 100 நாட்களில், சுமார் 1 மில்லியனுக்கும் அதிகமான டுட்சி மக்கள், மிதவாத ஹுட்டுக்கள் மற்றும் வன்முறையை எதிர்த்த மற்றவர்களுடன் சேர்த்து கொல்லப் பட்டனர்.
- விழிப்புணர்வைப் பரப்பவும், பாகுபாடு மற்றும் வன்முறையைத் தடுக்கவும் இனப் படு கொலை குறித்த கல்வியை யுனெஸ்கோ ஊக்குவிக்கிறது.

## கண் பார்வை இழப்பு தடுப்பு வாரம் 2026 - ஏப்ரல் 1-7

- கண் ஆரோக்கியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பார்வை இழப்பைத் தடுக்கவும் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் முதல் வாரத்தில் இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- விழிப்புணர்வு மற்றும் முன்கூட்டியே கண்டறிதல் மூலம் தவிர்க்கக்கூடிய கண் பார்வையின்மையைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.
- நிரந்தர கண் பார்வையின்மைக்கு முக்கியக் காரணமாக இருக்கும் கிளௌகோமா, "பார்வையின் அமைதியான திருடன்" என்று அழைக்கப்படுகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Uniting for a Glaucoma-Free World" என்பதாகும்.

## இராணுவ மருத்துவப் படை ஸ்தாபன தினம் 2026 – ஏப்ரல் 03

- 1943 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 அன்று இராணுவ மருத்துவப் படை உருவானதை இந்த நாள் குறிக்கிறது.

- இந்திய மருத்துவச் சேவை (IMS), இந்திய மருத்துவத் துறை (IMD) மற்றும் இந்திய மருத்துவமனைப் படை (IHC) ஆகியவற்றை இணைத்ததன் மூலம் இது உருவாக்கப் பட்டது.
- இப்படை போர் மற்றும் அமைதிக் காலங்களில் ஆயுதப் படைகளுக்கு மருத்துவச் சேவைகளை வழங்குகிறது.
- இதன் குறிக்கோள் "சர்வே சந்து நிராமயா" (அனைவரும் நோயற்ற வாழ்வு வாழட்டும்) என்பதாகும்.

## CRPF வீர தினம் 2026 - ஏப்ரல் 09

- 1965-ஆம் ஆண்டு கட்ச் வளைகுடா போரில் CRPF வீரர்களின் வீரத்தை நினைவு கூறும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- மத்திய சேமக் காவல் படையின் (CRPF) இரண்டு கம்பெனிகள், பாகிஸ்தான் இராணுவத்தின் படைப்பிரிவு அளவிலான தாக்குதலுக்கு எதிராகத் தற்காத்துப் போரிட்டன.
- CRPF 1939-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது மற்றும் 1949 ஆம் ஆண்டு CRPF சட்டத்தின் கீழ் ஒரு சட்டப்பூர்வப் படையாக மாறியது.
- சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல், கிளர்ச்சி எதிர்ப்பு மற்றும் இந்தியாவில் தேர்தல்களை நடத்துதல் ஆகியவற்றில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.

## சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம் 2026 - ஏப்ரல் 12

- 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 அன்று, சோவியத் ஒன்றியத்தின் யூரி ககாரின் விண்வெளிக்குச் சென்று பூமியைச் சுற்றி வந்த முதல் மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.
- இந்த நாளை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை 2011 ஆம் ஆண்டில் அறிவித்தது.
- நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்கும் மனித வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துரைக்கிறது.

## தேசிய பாதுகாப்பான தாய்மை தினம் 2026 - ஏப்ரல் 11

- மருத்துவ வசதிகளை எளிதில் பெறுதல் மற்றும் விழிப்புணர்வை மேம்படுத்துவதன் மூலம் தாய் மற்றும் சிசு மரணங்களைக் குறைப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கஸ்தூரிபா காந்தியின் பிறந்தநாளன்று கொண்டாடப் படுகிறது.
- இந்த தினம் ஒயிட் ரிப்பன் அலையன்ஸ் இந்தியா எனும் அமைப்பால் முன்மொழியப் பட்டு, 2003-ஆம் ஆண்டு இந்திய அரசால் அங்கீகரித்து அறிவிக்கப்பட்டது.
- இது பாதுகாப்பான கர்ப்பம், திறமையான மகப்பேறு பராமரிப்பு, பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய சேவைகள் ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்துகிறது.
- 2026ம் ஆண்டிற்கான இதன் கருத்துரு "Equity in Maternal Healthcare: Leaving No Mother Behind" என்பதாகும்.

## ஜாலியன் வாலாபாக் படுகொலை தினம் 2026 - ஏப்ரல் 13

- பிரிட்டிஷ் ஆட்சியின் போது 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று ஜாலியன் வாலா பாக்கில் இந்தப் படுகொலை நிகழ்ந்தது.
- ரௌலட் சட்டத்திற்கு எதிராக அமைதியான முறையில் போராட்டம் நடத்த மக்கள் அங்கு கூடியிருந்தனர்.
- ஆயுதமற்ற பொதுமக்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்த பிரிட்டிஷ் அதிகாரி ரெஜினால்ட் டயர் துருப்புக்களுக்கு உத்தரவிட்டார்.
- இந்தச் சம்பவம் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்ததுடன், மகாத்மா காந்தியால் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப் படுவதற்கும் வழி வகுத்தது.
- இந்தச் சம்பவத்தை விசாரிக்க ஹண்டர் கமிஷன் அமைக்கப்பட்டது ஆனால் அது டயருக்கு கடுமையான தண்டனை வழங்கவில்லை.

## சமத்துவ தினம்/ பீம் ஜெயந்தி 2026 - ஏப்ரல் 14

- இந்திய அரசியலமைப்பின் சிற்பி என்று அழைக்கப்படும் பி.ஆர். அம்பேத்கரின் பிறந்த நாளை இது குறிக்கிறது.
- சாதி, மதம், பாலினம் பாராமல் அனைத்து மக்களிடையேயும் சமத்துவத்தை ஊக்குவிப்பதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- தமிழ்நாட்டில் ஏப்ரல் 14-ஆம் தேதியை "சமத்துவ நாள்" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2022 ஆம் ஆண்டில் அறிவித்தார்.
- சமூக நீதிக்காகப் பாடுபட் டாக்டர் அம்பேத்கர் இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றினார்.
- வரைவுக் குழுவின் தலைவராக இருந்த அவர் இந்திய அரசியலமைப்பின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
- மூன்று வட்டமேஜை மாநாடுகளிலும் பங்கேற்ற அவர் மற்றும் M.K காந்தியுடன் பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.
- அவருக்கு 1990-ஆம் ஆண்டில் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

## இமாச்சல தினம் 2026 - ஏப்ரல் 15

- இந்த தினமானது 1948 ஆம் ஆண்டில் இமாச்சலப் பிரதேசம் உருவானதைக் குறிக்கும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாளில், சுமார் 28 முதல் 30 சுதேச அரசுகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே நிர்வாக அலகாக உருவாக்கப்பட்டது.
- இது முதன்முதலில் 1948 ஆம் ஆண்டில் தலைமை ஆணையரின் மாகாணமாக உருவாக்கப் பட்டு, 1950 ஆம் ஆண்டில் ஒன்றியப் பிரதேசமாக மாறியது.
- 1971 ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று இந்தியாவின் 18-வது மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் முழு மாநில அந்தஸ்தைப் பெற்றது.
- ஒரு காலத்தில் ஆங்கிலேய இந்தியாவின் கோடைகாலத் தலைநகராக இருந்த சிம்லா இதன் தலைநகரமாகும்.

## உலக இரத்த உறையாமை பாதிப்பு தினம் 2026 - ஏப்ரல் 17

- இரத்தக் கசிவு கோளாறுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நோயறிதல் மற்றும் பராமரிப்பை மேம்படுத்தவும் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது உலக இரத்த உறையாமைக் கூட்டமைப்பு (WFH) மூலம் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- ஹீமோபிலியா என்பது இரத்தம் உறைதல் காரணிகளான VIII (வகை A) அல்லது IX (வகை B) ஆகியவற்றின் குறைபாட்டால் ஏற்படும் ஒரு மரபணு கோளாறு ஆகும், இது நீடித்த இரத்தக் கசிவுக்கு வழிவகுக்கிறது.
- உலகளவில் 75% க்கும் அதிகமான நோயாளிகள் கண்டறியப்படாமலேயே உள்ளனர் என்பதை எடுத்துக்காட்டும் வகையில், 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Diagnosis: First Step to Care" என்பதாகும்.

## சியாச்சின் தினம் 2026 – ஏப்ரல் 13

- உலகின் மிக உயரமான போர்க்களமான சியாச்சின் பனிப்பாறையைப் பாதுகாப்பதற்காக 1984 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மேகதூத் நடவடிக்கையை இந்த நாள் நினைவு கூருகிறது.
- இப்பகுதியில் உள்ள முக்கிய உயரமான இடங்களை ஆக்கிரமிப்பதற்கான பாகிஸ்தானின் நடவடிக்கைகளை முன்கூட்டியே தடுப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.
- -50°C க்கும் குறைவான வெப்பநிலை மற்றும் அதிக உயரமான நிலப்பரப்பைக் கொண்ட கடுமையான சூழ்நிலைகளில் வீரர்கள் பணியாற்றுகின்றனர்.
- இந்தப் பனிப்பாறையைப் பாதுகாக்கும் வீரர்களின் தைரியம், தியாகம் மற்றும் சகிப்புத் தன்மையை இந்த நாள் கௌரவிக்கிறது.

## உலக இரத்த ஒட்டுண்ணி நோய் தினம் 2026 – ஏப்ரல் 14

- இரத்த ஒட்டுண்ணி நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக சுகாதார அமைப்பால் இந்த நாள் குறிக்கப்படுகிறது.
- இரத்த ஒட்டுண்ணி நோயானது ட்ரைபனோசோமா க்ரூஸி என்ற ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது; மேலும் இது முக்கியமாக ட்ரைடோமைன் பூச்சி கடித்தல் அல்லது அசுத்தமான உணவு மூலம் பரவுகிறது.
- உலகளவில் சுமார் 8 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், மேலும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10,000 இறப்புகள் நிகழ்கின்றன.
- தாயிடமிருந்து குழந்தைக்கு நோய் பரவும் அபாயம் இருப்பதால், குறிப்பாக குழந்தைப் பேறு வயதில் உள்ள பெண்கள் முக்கியக் கவனத்தைப் பெறுகின்றனர்.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Women at the Heart: Protecting the Next Generation from Chagas Disease" என்பதாகும்.

## தேசிய தீயணைப்பு சேவை தினம் 2026 – ஏப்ரல் 14

- 1944 ஆம் ஆண்டு மும்பை துறைமுகத் தீ விபத்தில் உயிரிழந்த தீயணைப்பு வீரர்களை இந்த நாள் கௌரவிக்கிறது.

- ❖ 1944 ஆம் ஆண்டில் மும்பையில் உள்ள விக்டோரியா துறைமுகத்தில் நடந்த தீ விபத்து மற்றும் வெடிப்புகளை இது நினைவுகூருகிறது.
- ❖ ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14 முதல் ஏப்ரல் 20 வரை தீயணைப்பு சேவை வாரம் கடைபிடிக்கப்படுகிறது.
- ❖ இது தீ தடுப்பு, பாதுகாப்பு விதிகள் மற்றும் உயிர் மற்றும் உடைமை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை பரப்புகிறது.
- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Safe School, Safe Hospital & Fire Safety Aware Society Together For Fire Prevention" என்பதாகும்.

## உலகப் பாரம்பரிய தினம் 2026 – ஏப்ரல் 18

- ❖ இது நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களுக்கான சர்வதேச தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- ❖ நினைவுச்சின்னங்கள் மற்றும் தளங்களுக்கான பன்னாட்டு மன்றத்தின் (ICOMOS) முன் மொழிவுக்குப் பிறகு 1983 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவால் இந்த தினம் நிறுவப்பட்டது.
- ❖ நினைவுச் சின்னங்கள், கலாச்சாரத் தளங்கள் மற்றும் மரபுகளை சேதம் மற்றும் பேரழிவுகளிலிருந்து பாதுகாப்பதை இந்த நாள் ஊக்குவிக்கிறது.
- ❖ கலாச்சாரப் பாரம்பரியம், இயற்கை பாரம்பரியம், நினைவுச் சின்னங்கள் மற்றும் வரலாற்று இடங்களின் பாதுகாப்பை இது எடுத்துக்காட்டுகிறது.
- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Emergency Response for Living Heritage in Contexts of Conflicts and Disasters" என்பதாகும்.

## உலக கல்லீரல் தினம் 2026 - ஏப்ரல் 19

- ❖ கல்லீரல் ஆரோக்கியம் மற்றும் கல்லீரல் நோய்களைத் தடுப்பது குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ விழிப்புணர்வு, தற்காப்பு மற்றும் உரிய நேரத்தில் நோய் கண்டறிதல் ஆகியவற்றின் மூலம் உலகளாவிய கல்லீரல் நோய்களின் சுமையைக் குறைப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது மனித உடலில் நச்சு நீக்கம், வளர்சிதை மாற்றம் மற்றும் செரிமானம் போன்ற செயல்பாடுகளில் கல்லீரலின் முக்கியத்துவத்தை மையமாகக் கொண்ட வருடாந்திர உலகளாவிய சுகாதார விழிப்புணர்வு தினமாகும்.
- ❖ 500-க்கும் மேற்பட்ட செயல்பாடுகளைச் செய்யும் கல்லீரல் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் இயற்கையான திறனைக் கொண்டுள்ளது ஆனால் நோய் அறிகுறிகள் பெரும்பாலும் தாமதமாகவே வெளிப்படுகின்றன.
- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Solid Habits, Strong Liver" என்பதாகும்.

## குடிமைப் பணிகள் தினம் - ஏப்ரல் 21

- ❖ நிர்வாகம் மற்றும் தேசத்தைக் கட்டமைப்பதில் அரசு அதிகாரிகளின் பங்களிப்பைக் கௌரவிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இந்த தினம் 1947 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 அன்று டெல்லி மெட்காஃப் ஹவுஸில் சர்தார் வல்லபாய் படேல் ஆற்றிய உரையுடன் தொடர்புடையது என்பதோடு அங்கு அவர் அரசு அதிகாரிகளை "இந்தியாவின் எஃகுச் சட்டகம்" என்று அழைத்தார்.

- இந்த நாள் இந்திய அரசால் 2006 ஆம் ஆண்டு புதுதில்லியில் உள்ள விக்யான் பவனில் முதன்முதலாக அதிகாரப்பூர்வமாக அனுசரிக்கப்பட்டது.
- நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைகள் தீர்ப்புத் துறையால் (DARPG) இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது என்பதோடு மேலும் இதில் பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்குபவர்களுக்கான பிரதமரின் விருதுகளும் அடங்கும்.
- குடிமைப் பணிகள் இந்தியா முழுவதும் கொள்கை அமலாக்கம், சட்டம் ஒழுங்கு, பேரிடர் மேலாண்மை மற்றும் அரசுச் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை ஆதரிக்கின்றன.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Holistic Development – Saturation of Government Schemes" என்பதாகும்.

## உலகப் புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம் 2026

- உலகளாவிய அளவில் வாசிப்பு, பதிப்பகம் மற்றும் பதிப்புரிமை குறித்த விழிப்பு உணர்வை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்காக 1995 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவால் இந்த நாள் நிறுவப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டிற்கான உலகப் புத்தகத் தலைநகராக ரபாத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளது.
- ஏப்ரல் 23 ஆம் தேதியானது வில்லியம் ஷேக்ஸ்பியர் மற்றும் மிகுவல் டி செர்வாண்டஸ் போன்ற புகழ்பெற்ற எழுத்தாளர்களுடன் தொடர்புடையதாகும்.
- இந்த நாள் பன்மொழி கற்றல் மற்றும் அனைவருக்கும் புத்தகங்கள் கிடைப்பதன் மூலம் எழுத்தறிவை முன்னிலைப்படுத்துகிறது.

## ஆய்வக விலங்குகளுக்கான உலக தினம் 2026 - ஏப்ரல் 24

- ஆய்வகங்களில் விலங்குகளைப் பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், விலங்குகள் அல்லாத மாற்று வழிகளை ஊக்குவிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- நோய்கள் மற்றும் சிகிச்சைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி, மருந்து பரிசோதனை மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்தியில் ஆய்வக விலங்குகள் பயன்படுத்தப்படுகின்றன.
- எலிகள் போன்ற விலங்குகள் மனிதர்களுடன் 98%க்கும் மேற்பட்ட மரபணுக்களைப் (DNA) பகிர்ந்துகொள்வதால் அவை ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படுகின்றன.
- விலங்குகளுக்குப் பதிலாக கணினி வழிமுறைகள், சில்லு-உறுப்புகள் மற்றும் மைக்ரோடோசிங் உத்திகள் ஆகியவை மாற்று முறைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

## தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் 2026 - ஏப்ரல் 24

- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கிய 73-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 1992 அமல்படுத்தப்பட்டதை இந்த நாள் குறிக்கிறது.
- இந்தத் திருத்தம் ஏப்ரல் 24, 1993 அன்று நடைமுறைக்கு வந்தது, இதன் மூலம் இந்திய அரசியலமைப்பில் பகுதி IX (சரத்துகள் 243 முதல் 243O வரை) சேர்க்கப்பட்டது.

- இது கிராம பஞ்சாயத்து (கிராமம்), பஞ்சாயத்து சமிதி (வட்டம்) மற்றும் ஜிலா பரிஷத் (மாவட்டம்) என்ற மூன்றடுக்கு அமைப்பின் மூலம் உள்ளாட்சி அரசாங்கத்தை மேம்படுத்துகிறது.
- இது உள்ளாட்சி அமைப்புகளில் பெண்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு (ST) இட ஒதுக்கீட்டை உறுதி செய்கிறது.

### உலக மலேரியா தினம் 2026 - ஏப்ரல் 25

- உலகளாவிய அளவில் மலேரியா தடுப்பு, நோயறிதல் மற்றும் சிகிச்சையை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மலேரியா என்பது ஒட்டுண்ணிகளால் ஏற்படும் மற்றும் பாதிக்கப்பட்ட கொசுக் கடியால் பரவும் உயிருக்கு ஆபத்தான ஒரு நோயாகும்.
- 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Driven to End Malaria: Now We Can. Now We Must" என்பதாகும்.

### தொழில்துறையில் பெண்களுக்கான சர்வதேச தினம் 2026 - ஏப்ரல் 21

- தொழில்துறையில் பெண்களுக்கான சர்வதேச தினத்தின் முதல் உலகளாவிய கொண்டாட்டமானது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 அன்று நடைபெற்றது.
- சவூதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் தொழில்துறை மேம்பாட்டு அமைப்பின் (UNIDO) 21-வது பொது மாநாட்டின் போது இந்த தினம் அறிவிக்கப்பட்டது.
- அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சிக்காகத் தொழில்துறைகளில் பெண்களின் பங்கேற்பு மற்றும் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Celebrating Women's Leadership in Industrial Development" என்பதாகும்.

## இதரச் செய்திகள்

### கிரேக்கத்தில் 200 பழங்காலத் தளங்கள்

- கிரேக்கத்தில் உள்ள எவியாவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய தொல்பொருள் ஆய்வில், 6,000 ஆண்டுகால மனித வரலாற்றை வெளிப்படுத்தும் 200க்கும் மேற்பட்ட பழங்காலத் தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- இந்த ஆய்வானது கிரேக்கத்தில் உள்ள சுவிஸ் தொல்பொருள் பள்ளியால் 30 சதுர கிலோ மீட்டருக்கும் அதிகமான நிலப்பரப்பில் நடத்தப்பட்டது.
- பண்டைய நகரமான எரீட்ரியாவுடன் தொடர்புடைய பண்ணைகள், குடியிருப்புகள், குவாரிகள் மற்றும் சாலைகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- புதைந்துள்ள சுவர்கள் மற்றும் பாதைகள் போன்ற மறைக்கப்பட்ட கட்டமைப்புகளைக் கண்டறிய LiDAR (ஒளி கண்டறிதல் மற்றும் வரம்பு நிர்ணயம்) தொழில்நுட்பம் பயன்படுத்தப் பட்டது.

- இப்பகுதியில் விவசாயம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்த டெம்ஸ் (கிராமப்புற நிர்வாக அலகுகள்) இருந்துள்ளன.

## மகாத்மா ஜோதிராவ் பூலே - 200வது பிறந்தநாள்

- 2026 ஆம் ஆண்டிற்கான ஜோதிராவ் பூலேயின் 200வது பிறந்தநாள் கொண்டாட்டம் தொடங்கியுள்ளது.
- 1827 ஆம் ஆண்டு மகாராஷ்டிராவில் பிறந்த அவர் இந்திய சமூகப் புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
- சாதியப் பாகுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்காக 1873 ஆம் ஆண்டில் சத்யசோதக் சமாஜத்தை அவர் நிறுவினார்.
- பெண்களின் கல்விக்காகப் பாடுபட்ட அவர், 1848 ஆம் ஆண்டில் புனேவில் பெண்களுக்கான முதல் பள்ளியைத் திறந்தார்.
- அவர் சூத்திரர்கள், அதி-சூத்திரர்கள் மற்றும் விவசாயிகளின் உரிமைகளை ஆதரித்தார் மற்றும் சமூகச் சமத்துவமின்மையை கடுமையாக எதிர்த்தார்.
- சமூக நீதியை மையமாகக் கொண்ட குலாம்கிரி மற்றும் ஷேத்கர்யாச்சா அசூத் ஆகியவை இவரது புகழ்பெற்ற படைப்புகளாகும்.

## 9,000 ஆண்டுகள் பழமையான நீருக்கடியில் உள்ள தளம் கண்டுபிடிப்பு

- வட அமெரிக்காவின் ஹூரான் ஏரியின் அடியில் 9,000 ஆண்டுகள் பழமையான, நீரில் மூழ்கிய மனிதக் குடியிருப்பினைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.
- வேட்டையாடும் குழிகள், விலங்குகளைத் துரத்திச் செல்லும் பாதைகள் மற்றும் கருவிகள் சேமித்து வைக்கும் இடங்கள் போன்ற கல் அமைப்புகள் இந்தக் கண்டுபிடிப்பில் அடங்கும்.
- இது கிரேட் லேக்ஸ் பகுதியில் மனிதச் செயல்பாடுகளுக்கான மிக ஆரம்பகாலச் சான்றாகக் கருதப்படுகிறது.
- பழங்காலக் கரீபோ வேட்டை நடைமுறைகளுடன் தொடர்புடைய சுமார் 80 தளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இந்தத் தளமானது தற்போது நீருக்கடியில் உள்ள பழங்கால நிலப்பாலமான அல்பேனா-ஆம்பர்லி முகட்டில் அமைந்துள்ளது.
- ஏரியின் தெளிவான மற்றும் குறைந்த வண்டல் படிவுகள் உள்ள நிலைமைகள் காரணமாக இந்த அமைப்புகள் அப்படியே பாதுகாக்கப்பட்டுள்ளன.
- பனி யுகத்திற்குப் பிறகு ஆரம்பகால மனிதர்களின் உயிர்வாழ்வு மற்றும் தகவமைப்பு பற்றிய நுண்ணறிவுகளை இந்தக் கண்டுபிடிப்புகள் வழங்குகின்றன.

## முதல் பானிபட் போரின் 500 ஆண்டுகள் நிறைவு

- இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வான முதல் பானிபட் போர் நடைபெற்று, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் தேதியுடன் 500 ஆண்டுகள் நிறைவடைகின்றன.
- முதல் பானிபட் போர் 1526 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 அன்று, தற்போதைய இந்தியாவின் ஹரியானாவில் உள்ள பானிபட்டில் நடைபெற்றது.

- இது முகலாயப் பேரரசை நிறுவிய பாபருக்கும், டெல்லி சுல்தானகத்தின் கடைசி சுல்தானான இப்ராகிம் லோடிக்கும் இடையே நடைபெற்றது.
- பாபர் மேம்பட்ட துலுக்மா தந்திரோபாயங்களையும் (பக்கவாட்டு நகர்வு), பீரங்கிகள் மற்றும் துப்பாக்கிகள் உள்ளிட்ட களப் பீரங்கிகளையும் பயன்படுத்தினார், இது அவருக்கு ஒரு பெரிய பலனைக்க் கொடுத்தது.
- இதில் பாபரின் கட்டுப்பாடான படை, லோடியின் பெரிய படையைத் தோற்கடித்ததுடன் இப்ராகிம் லோடியும் இப்போரில் கொல்லப்பட்டார்.
- இந்த வெற்றியானது டெல்லி சுல்தானகத்தின் முடிவிற்கும், இந்தியாவில் முகலாயப் பேரரசு நிறுவப்படுவதற்கும் வழிவகுத்தது.

## பனிக்கால 'ஜாம்பி' புழு உயிர்ப்பு

- சைபீரிய உறைபனிப் பகுதியிலிருந்து 24,000 ஆண்டுகள் பழமையான நுண்ணிய உயிரினத்தை அறிவியலாளர்கள் மீண்டும் உயிர்ப்பித்ததுடன் அது இனப்பெருக்கம் செய்வதையும் கண்டறிந்துள்ளனர்.
- ஊடகங்களில் "ஜாம்பி புழு" என்று பரவலாக அழைக்கப்படுகின்ற இந்த உயிரினம் 'டெலாய்ட் ரோட்டிஃபர்' (ஒரு பல செல் நன்னீர் விலங்கு) ஆகும்.
- இது சைபீரியாவில் உள்ள அலசேயா நதிக்கு அருகே கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் கதிரியக்கக் கரிமக் காலக்கணிப்பு முறையைப் பயன்படுத்தி இது பிந்தைய பிளீஸ்டோசீன் காலத்தைச் சேர்ந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக சுமார் -20°C வெப்பநிலையில் யெடோமா உறைபனியில் (பனி நிறைந்த நிரந்தரமாக உறைந்த மண்) உறைந்த நிலையில் இருந்தது.
- இது 'கிரிப்டோபயாசிஸ்' (வாழ்க்கை செயல்முறைகள் கிட்டத்தட்ட நின்று விடுவதோடு பூஜ்ஜியத்திற்கு நிகரான வளர்சிதை மாற்ற நிலை) மூலம் உயிர் பிழைத்து உள்ளது.
- ஆய்வக நிலைகளில் பனி உருகிய பிறகு, இது நகர்தல் மற்றும் உணவளித்தல் போன்ற செயல்களை மீண்டும் தொடங்கியதோடு பாலிலா முறையில் இனப் பெருக்கம் செய்து தனது குளோன்களை உருவாக்கியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★